கல்கி

KALKI
5.8.2001
ரூ. 5.00

கல்கி-60



சிவகாமியின் சபதம்

ஆரம்பம்



கடல் நடுவே...!



பிள்ளை(யை)ப் பிடிக்கப் போறாங்களாமே!



வைரவிழா நாயகி

வாரம் ஒரு பட்டுப் புடைவை

-பரிசுப் போட்டி

இலவச இணைப்பைக் கேட்டு வாங்குங்கள்!

உப்பு என்றாலே கிரிஸ்டல்தான்!





கல்கி
வைர விழா, வாசகர் திருவிழா!


கல்கி - B. M. SILK SAREES

இணைந்து வழங்கும்

பட்டுப் புடைவை பரிசுப் போட்டி – 1

எண்ணிப் பாருங்கள் வைரங்களை!

வாசகர்கள் செய்ய வேண்டியது மிக எளிமையான வேலை: கீழேயுள்ள படத்தில் எத்தனை வைரங்கள் உள்ளன என்று கவனமாக எண்ணிப் பார்த்து, இந்தப் பக்கத்தில் வெளியாகியுள்ள கூப்பனில், உரிய இடத்தில் பூர்த்தி செய்து உங்கள் பெயர் விலாசத்



துடன் எங்களுக்கு அனுப்ப வேண்டியது தான்!

சரியான விடை எழுதும் ஒரு நபருக்கு ரூ. **2500/-** மதிப்புள்ள பட்டுப்புடைவை பரிசு. பலர் சரியான விடை எழுதினால் குலுக்கல் முறையில் ஒருவர் தேர்வு செய்யப்படுவார். கூப்பன்கள் வந்து சேர கடைசித் தேதி: **13.8.2001.** உறை மேல் 'பட்டுப் புடைவை பரிசுப் போட்டி-1' என்று குறிப்பிட்டு கல்கி அலுவலக முகவரிக்கு அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

அட்டையில் : **காயத்ரி ரகுராம்**

பட்டுப் புடைவை பரிசுப் போட்டி – 1

வைரங்களின் எண்ணிக்கை : ....

என் பெயர் : ....


முகவரி : ....

....

....

....

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com   ஈ மெயில் : kalkiweekly@vsnl.com




இறந்துவிட்டாரா?

'பைசல்டு ஹெரால்டு' என்ற முதல் தொகுப்பு வெளிவந்த கணமே உலகப் புகழ் பெற்றுவிட்டார் கவிஞர் பைரன். I awoke one morning and found myself famous என்பது அவர் கூறிய வாக்கியம். அதுபோல முதல் படமான 'பராசக்தி' வெளி வந்த அன்றைக்கே நடிகர் திலகம் பட்டத்தைப் பிடித்துவிட்டார் சிவாஜி. பிற்காலத்தில் அல்ல. இப்படியொரு மகத்தான இறுதி ஊர்வலம் இதற்கு முன்பு தமிழ்நாட்டில் எவருக்கேனும் கிடைத்ததுண்டா என்று பிரமிக்கப் பண்ணியது சன் டீவியின் நேரடி ஒளிபரப்பு. வரிசையை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்த ஒரு போலீஸ்காரர், கதறியழுத ஒரு மூதாட்டியை அமைதிப் படுத்தி, தானும் கண்ணைத் துடைத்துக் கொண்டது மறக்க முடியாத காட்சி.

இடையிடையே நடந்த இரங்கல் பேட்டிகளில் இரண்டைக் குறிப்பிட வேண்டும். ஒன்று, டி.எம்.எஸ் சொன்னது. "நான் பாடிய பாட்டை அவர் பாடுவதாகத் திரையில் பார்க்கும் போதெல்லாம் எனக்கே சந்தேகம் வரும். ஒரு வேளை அவரே தான் பாடினாரோ என்று நினைப்பேன்" என்றார்.



• சித்து




• நிர்மலா

இன்னொருவர் சிவகுமார். "கண்ணாடிப் பெட்டியில் சிவாஜியின் சடலத்தைப் பார்த்தபோது நிஜமாக அவர் இறந்துவிட்டாரா அல்லது இறந்ததுபோல் நடிக்கிறாரா என்று தோன்றியது. மரணத்தை அத்தனை தத்ரூபமாகக் காட்டக் கூடியவர் அவர்" என்றார்.

சொத்து சொத்து என்று மட்டையால் தரையைக் கொத்திக் கொண்டிருக்கும் பேட்ஸ்மேனைச் சுத்தமாய்ப் பிடிக்காது நவ்ஜோத் சித்துவுக்கு. அடித்து விளையாட வேண்டும் என்பதை அடித்துச் சொல்பவர் அவர். ஆகவே கொழும்பில் நடைபெறும் கோகோகோலா கோப்பை இரண்டாவது சுற்றின்போது, நேரடி வர்ணனை செய்து கொண்டிருந்த அவருக்கு நியூஸிலாந்தும் ஸ்ரீலங்காவும் பவுண்டரியும் சிக்ஸர்களுமாய் வெளுத்துக் கட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்து மகா ஆனந்தம். நியூஸிலாந்து ஆட்டக்காரர் ஒருவரின் பேட்டில் பந்து ஸிக்ஸருக்குப் பறந்த போது சித்து உதிர்த்த பொன்மொழியாவது: One man with courage makes a majority.

ஜெயா டீவியின் 'வெள்ளித் திரை'க்குப் பேட்டி கொடுத்த வெண்ணிற ஆடை நிர்மலா, எந்தப் பெண்ணும் கைவசம் ஒரு career வைத்திருக்க வேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னார்.



இல்லாவிட்டால், கட்டியவனிடம் கொடுமைப்பட நேரிடுகிறது என்று கணவன்மார்கள் சமுதாயத்தை ஒட்டுமொத்தமாக வறுத்தெடுத்தார். அவர் கல்யாணம் செய்து கொள்ளாமல் இருக்கும் காரணமும் அது தானாம். இனிமேலும் செய்து கொள்ளும் உத்தேசம் கிடையாது என்று உறுதிபடச் சொன்னார்.

அடுப்பை மூட்டியபடி, கோஸ் நறுக்கியபடி, மாணவிகளுக்கு நாட்டியம் கற்பித்தபடி, வீணை வாசித்தபடி அவர் பேசிக் கொண்டிருந்தது லட்சுமிகரமான முகத்துக்குப் பாந்தமாக இருந்தது. போனஸாகப் பரந்த புன்சிரிப்பு. Beauty is power and a smile is its sword.

'தில்லானா மோகனாம்பாள்' தொடர்கதையாக வந்து கொண்டிருந்தபோது அதை யாரேனும் படமாக்கினால், தாம் கதாநாயகியாக நடிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டாராம். (பத்மினி பறித்துக்கொண்டுவிட்டார் அநியாயமாய்.)

எத்தனையோ சின்ன சின்ன ஆசைகள் தன்னிடம் உண்டு என்று கூறியவர், குறிப்பிட்டு ஒன்றைச் சொன்னார். அது, சூடான ரசத்தில் வடையைத் தோய்த்துச் சாப்பிடுவது.

இறந்ததுபோல் நடிக்கிறாரா?

**தயாராகிக் கொண்டிருக்கும் படங்களிலிருந்து சில காட்சிகளை 'பால்கனி'யிலிருந்து பார்த்து நமக்கும் காட்டி வருகிறது விஜய். (காட்டியதையே திரும்பத் திரும்பக் காட்டிக் கொண்டிருக்கிறார்களோ என்ற சந்தேகமும் ஏற்படுகிறது. இருந்தாலும் ஒரு கெட்டிக்கார வியாபாரி சொன்னது போல, Most sales are made after the customer has said 'no' half a dozen times.

'சாக்லேட்' படத்தில் வரும் 'சக் சக் சக் சாக்லேட்' ஆடத் தெரியாதவரையும் ஆடத் தூண்டும் தாள வேகத்துடன் இருந்தது. ஆனால், பிரசாந்த்துடன் சேர்ந்து ஆடுகிற அத்தனை பேருக்கும் சாக்லேட் வழங்குவதானால் லாரியில் தான் சாக்லேட்டுகள் கொண்டு வர வேண்டும்.

அடுத்து, குட்டி படத்திலிருந்து ஒரு

வினோத்

கட்டம். இதில் துள்ளல் கிடையாது. துயரம் நிறைய. வீட்டு வேலைக்காக வைத்திருக்கும் இரண்டும்கெட்டான் சிறுமியை வைத்துப் பின்னப்பட்ட கதை என்று வசனத்திலிருந்து தெரிகிறது. 'மூணு வேளை சோறு போட்டு, துணியெல்லாம் கொடுத்து, நல்லா பாத்துக்கறேன்னு சொன்னாங்க' என்று அந்த ஏழைப் பெண் தன் தாயிடம் சொல்லும்போது, அதன் கள்ளம் கபடமற்ற முகம் இதயத்தில் கனம் சேர்க்கிறது.



• 'சாக்லேட்'

கடல் நடுவே..!

மங்கலாய் சஞ்சரித்துக் கொண்டிருந்த நிலவை, திடுமெனச் சூழ்ந்த கருமேகங்கள் மூடிக் கொண்டன. கண்ணுக்கெட்டிய தூரம்வரை அமைதியாய்க் கிடந்த கடலை அப்பிக் கொண்டது இருள். கரையிலிருந்து சுமார் இருநூற்று ஐம்பது கிலோ மீட்டர் தொலைவில், நடுக் கடலில் வலை விரித்திருந்த 'ரேணுகாதேவி' படகில் யோகேஷ் உட்பட ஐந்து தமிழக மீனவர்கள். இவர்களுக்கு இருள் புதிதல்ல என்றாலும், இந்தத் திடீர் இருள் எதையோ எச்சரிக்கையாய் உணர்த்தியது. கொஞ்ச நேரத்தில் அவர்களது படகை நோக்கி இரண்டு வெளிச்சப் புள்ளிகள் முன்னேறி வந்து முற்றுகையிட்டன. அவை இன்னுமிரு விசைப்படகுகள். அந்தப் படகுகளில் வந்த இருபதுபேர், இவர்களின் படகிற்குள் தபதபவென குதித்து, ஐந்து பேரையும் கண்மண் தெரியாமல் தாக்கினார்கள்.



வந்தவர்களில் ஒருவருக்குக்கூட தமிழ் தெரியாது. யோகேஷ் கூட்டாளிகள் இரண்டு நாட்களாய்ச் சிந்திய வியர்வையில் கிடைத்த எல்லா மீன்களையும், வந்த கூட்டம் கைப்பற்றிக் கொள்கிறது. கையோடு ரேணுகாதேவி படகையும், மீனவர்களையும், கைது செய்து கடத்திப்போன கும்பல், மீனவர்களை மீட்டுப் போக பணத்தோடு வரும்படி தகவல் அனுப்புகிறது.

இது இலங்கை கடற்படையிடம் சிக்கிக் கொண்ட தமிழக மீனவர்களைப்பற்றிய சம்பவமல்ல... அண்டை மாநில ஆந்திர மீனவர்களின் பிடியில் அடிக்கடிச் சிக்கிக் கொள்ளும் தமிழ் மீனவர்களின் தலைவிதி!

கடந்த பதினைந்து வருடங்களாக, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள், இருநூறு முதல் முந்நூறு கிலோ மீட்டர் தூரம் வடகிழக்கே பயணித்து, வங்கக் கடலில் மீன் பிடித்து வருகிறார்கள். காரணம் சென்னையை ஒட்டிய கடல் பகுதியில் முகத்துவாரங்கள் அடைபட்டு, மாசு அதிகம் கலப்பதால், இங்கே மீன் வளம் அடியோடு அழிந்துவிட்ட சூழ்நிலை. இப்படிச் செல்லும் மீனவர்கள் அங்கே மீன் பிடித்து வரும், ஆந்திர மீனவர்களின் வலைகளை எதிர்பாராமல் சேதப்படுத்திவிட்டால், அதற்குரிய இழப்பீட்டைக் கொடுத்துவிடுவது வழக்கம். ஆனால் சமீப காலமாக தமிழக மீனவர்களைக் கடத்திச் சென்று, அவர்களின் மீன் அறுவடை முழுவதையும் பிடுங்கிக் கொண்டு, ஒரு படகு அல்லது ஒரு மீனவரின் தலைக்கு ரூபாய் பத்தாயிரம் முதல் முப்பதாயிரம் வரை பணயத் தொகையாக வசூலிக்கும் கொடுமையைக் குற்றவுணர்ச்சியில்லாமல் செய்து வருகிறார்கள் ஆந்திர கடற் கரையோரம் வசித்து வரும் மீனவர்கள்.



* கபிலன்

இதற்கு, கடந்த ஒரு மாத காலத்தில் மீட்டு வரப்பட்ட நூற்றி ஐம்பது மீனவர்களே சாட்சி. அவர்களில் ஒருவர்தான் யோகேஷ்.

"எங்களைப் பிடிச்சவுடனேயே அடிக்கிறாங்க. கொதிக்கிற மோட்டார் சைலன்சர்லே கட்டி வெச்சி உதைக்கிறாங்க. சோறு கூட சரியாப் போடுறதில்லே. அவங்க கொடுக்குற சாப்பாட்டைத் தின்னா, வாந்தி, வயித்துப்

போக்குன்னு ஆயிடுது. அவங்க அடிச்சதுல, வலது கண் பார்வை மங்கிப் போச்சு" என்று வீங்கிய கண்களைக் காட்டுகிறார் யோகேஷ்.

நாடுகளுக்கு என்று கடல் எல்லை வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரே நாட்டுக்குள் மாநிலங்களுக்கு இடையே கடல் எல்லை உண்டா? ஏன் அண்டை மாநிலத்திலேயே தமிழர்களுக்கு இந்த அநீதி.. சென்னை காஞ்சிபுரம் மாவட்ட விசைப்படகு மீனவர் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் செல்வகுமார் சொல்கிறார் :

"ஒரு முறை கடலுக்குப் புறப்பட்டால், ஒரு வாரம் தங்கியிருந்துதான் மீன் பிடித்து வருவோம். இதற்குத் தேவையான டீசல், ஐஸ் கட்டிகள், உணவுப் பொருட்கள் என்று குறைந்தது முப்பதாயிரம் ரூபாய் முதலீடு தேவை. திரும்பி வரும்போது ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மீன் பிடித்தால்தான், மீனவர் கூலிப்பணம் போக, படகுக்காரருக்குப் பத்தாயிரம் ரூபாயாவது மிஞ்சும். ஆனால் இப்போது லாபத்திற்கெல்லாம் உத்தரவாதம் இல்லாமல் போய்விட்டது. ஆந்திர மீனவர்கள், பத்துப் பதினைந்து படகுகளை ஒன்றாகப் பிடித்துக் கொண்டு போய்விடுகிறார்கள். அப்படிப் பிடித்துச் செல்லும் படகுகளை, கரையிலிருந்து ஒரு சில கிலோ மீட்டர் தொலைவில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்திவிட்டு, மீனவர்களை அவர்களின் கிராமங்களில் பிடித்து அடைத்து வைக்கிறார்கள். இப்படி நங்கூரம் போடப்படும் படகுகளை



* செல்வக்குமார்



* குப்பன்



* யோகேஷ்

எவ்வளவு சீக்கிரம் மீட்கிறோமோ. அவ்வளவு நல்லது. இல்லையென்றால் நங்கூரம் கழன்று, தரை தட்டி உடைந்து மூழ்கி விடும். ஒரு படகின் விலை பத்து லட்சம் ரூபாய். படகிற்கு இன்சூரன்ஸ் கட்ட வசதியில்லை என்பதால், முடிந்தவரை தலையை அடமானம் வைத்தாவது படகையும், மீனவர்களையும் மீட்டு வருகிறோம். இன்னொரு பக்கம்... படகு இருந்தால் தான்... கிடைக்கிற சொற்ப லாபத்தில், படகு வாங்கிய கடனை வங்கிக்குத் திரும்பச் செலுத்த முடியும்.

இந்த பலவீனத்தைப் புரிந்து கொண்டிருக்கும் அவர்கள், உழைக்க விரும்பாமல் இப்படியொரு இழி தொழிலில் இறங்கிவிட்டார்கள். இரு மாநில முதலமைச்சர்கள் நேரடியாக இதில் தலையிட்டால்தான் மூழ்கிக் கொண்டிருக்கும் நாங்கள் கரைசேர முடியும்" என்கிறார்கள்.

"கடந்த ஒருவருட காலமாக ஆந்திர மீனவர்கள் அமைதியாகத்தான் இருந்தார்கள். அதற்குக் காரணம் அவர்களின் கடத்தல் வெறிக்கு நாங்கள் கொடுத்த உயிர்ப் பலி" என்கிறார் இதே சங்கத்தின் செயலாளர் கபிலன்.

"கடந்த வருடம் ஜனவரி முப்பதாம் தேதி கொத்தப்பட்டினத்திற்கு நேர் கிழக்கே முப்பது மைல் தொலைவில் மீன் பிடித்துக் கொண்டிருந்த காசி மேடு மீனவர் ராஜாவையும் அவருடன் இருந்தவர்களையும் பயங்கர ஆயுதங்களால் தாக்கி, கடலில் வீசிவிட்டார்கள். இதில் ராஜா தவிர எஞ்சியவர்களை மற்றப் படகுக்காரர்கள் பார்த்துக் காப்பாற்றி, அழைத்து வந்தார்கள். ராஜாவின் உடல் கடைசிவரை கிடைக்கவே இல்லை. அவருக்குத் திருமணமாகி ஒரு குழந்தையும் இருக்கிறது. ராஜா பலியான பிறகு அறுபதாயிரம் ரூபாய் இழப்பீடு கொடுத்த அவர்கள், இனிமேல் தமிழக படகுகளைப் பிடிக்க மாட்டோம்; தாக்கமாட்டோம்



என்று ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இப்போது அதை மதிக்காமல் மறுபடியும் உயிர்ப்பலி கேட்கிறார்கள்!" என்கிறார்.

எப்போது எப்படிக் கடத்துவார்கள் என்று பயந்தபடி வலை விரித்து வரும், சென்னை மீனவர்களுக்கு, இப்போது இதை விட பூதாகாரமான பிரச்னையொன்று கிளம்பி, பிழைப்பையே கேள்விக் குறியாக்கியிருக்கிறது. "கஷ்டப்பட்டு மீன் பிடிச்சுக் கொண்டு வந்தா, இங்கே எங்க மீனை விக்க முடியலே. ஆளுங் கட்சி ஆசியோட வெளி மாநில மீன்களைச் சென்னைக்குக் கொண்டு வந்து, மூர்மார்க்கெட் பக்கத்தில் இருக்கிற அல்லிக்குளத்தில் வைத்து விற்கிறார்கள். எந்த முதலீடும் இல்லாமல், கமிஷன் அடிப்படையில் மீன்களை வரவழைத்து விற்று வரும் நான் கைந்து வியாபாரிகளுக்கு அ.தி.மு.க. ஆட்சி துணையாக இருக்கிறது. அந்த நான்கைந்து பேருக்காக ஒரு லட்சம் மீனவ குடும்பங்கள் நடுத் தெருவுக்கு வந்தாலும் அரசாங்கம் கவலைப்படாது போலிருக்கிறது" என்கிறார்கள் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்ட விசைப்படகு மீனவர் சங்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகள்.

சென்னை எல்லைக்குள் வெளி மாநில மீன்களை விற்பனை செய்யக் கூடாது என்று 1998ம் ஆண்டு ஹைகோர்ட் தீர்ப்பளித்தும் அதைக் காற்றில் பறக்க விட்டு விட்ட அந்த வியாபாரிகள், முதல்வர் ஜெயலலிதாவின் படத்தைப் போட்டு 'சில்லறை மீன் வியாபாரிகள் சங்கம்' என்ற பலகையை வைத்துக் கொண்டு, கொடுக்க வேண்டியதை வட சென்னை அமைச்சர் ஒருவருக்கும் அதிகாரிகளுக்கும் கொடுத்துவிட்டு லாபத்தை அள்ளுகிறார்களாம்.

இன்னொரு சோகத்தையும் தைரியமாகப் பகிர்ந்து கொண்டார்கள் இந்தச் சங்கத்தின் நிர்வாகிகள். "சென்னை, காஞ்சிபுரம் திருவள்ளூர் மாவட்ட விசைப்படகு மீனவர் சங்கத்தில் முந்நூற்று ஐம்பது பேர் உறுப்பினர்களாக இருக்கிறோம். முறைப்படி தேர்தல் நடத்தி, நிர்வாகிகளை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் தலைக்கு மேல் கத்தியாகத் தொங்கும் இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதை விட்டுவிட்டு, மின்சாரத்துறை அமைச்சர் டி.ஜெயக்குமார், இந்த சங்கத்தை அவருக்கு நெருக்கமானவர்களிடம் கொடுத்துவிட்டுப் போகச் சொல்கிறார். சங்கத்தை எப்படியாவது தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட வேண்டும் என்று எங்களைக் கூப்பிட்டு மிரட்டுகிறார். வடசென்னை துணைக் கமிஷனர் வரதராஜுவும் ''ஆட்சி மாறிடுச்சி! மரியாதையா சங்கத்தைக் கொடுத்துட்டு ஒடுங்க என்று மிரட்டுகிறார்" எனக் குமுறும் சங்கத் தலைவர் குப்புசாமி, செயலர் கபிலன் போன்ற பெரும்பாலான சங்க நிர்வாகிகள் அ.தி.மு.க. உறுப்பினர்கள் என்பதுதான் ஆச்சர்யமான விஷயம்.

ஆனால் இதை மறுக்கிறார் முன்னாள் விசைப்படகு சங்கத் தலைவரும், வடசென்னை மாவட்ட அ.தி.மு.க. மீனவர் பிரிவு செயலாளருமான பி. குப்பன்.

"பல படகு உரிமையாளர் சங்கங்கள் கட்சி வாரியாக இருந்ததை 1978ம் ஆண்டு ஒன்றாக இணைத்தோம். அதன்பிறகு எந்தக் கட்சி ஆட்சிக்கு வருகிறதோ, அந்த கட்சியைச் சேர்ந்தவர்தான் தலைவராக வேண்டும். அப்போதுதான் தொழில் அமைதி ஏற்படும் என்பதைக் கடந்த இருபது வருடமாக மரபாகவே பின்பற்றி வருகிறோம். இது எப்படித் தவறாகும்" என்கிறார். எப்படியிருந்தாலும், சென்னை மீனவர்களுக்குச் சவாலாகக் கிளம்பியிருக்கும் இந்தப் பிரச்னைகளை அ.தி.மு.க. அரசு கண்டு கொள்ளாவிட்டால், கைக்கு வந்த வட சென்னையை அடுத்த தேர்தலில் கைகழுவ வேண்டியதுதான் என்கிறார்கள்.

- ஜெயந்த்

படங்கள் : ராஜன்


என் மரணம் யாருக்குத் தெரியும்?




"சந்தனக் கடத்தல் வீரப்பனுக்குப் பொது மன்னிப்பு வழங்குவது குறித்து கேட்டபோது 'அவர் முதலில் சரணடையட்டும்' என்றார் பூலான் தேவி. பிறகு தமது பழைய வாழ்க்கை பற்றிப் பேசிய அவர், "நான் சரணடைந்த போது என்னைத் தூக்கிலிடமாட்டேன் என்று அரசு உறுதி அளித்தது. ஒரு முறை மரணத்திலிருந்து தப்பித்துவிட்டேன். ஆனால் எல்லாரும் ஒரு நாள் மரணமடையத்தானே வேண்டும். என் மரணம் என்றைக்கு, எப்படி நிகழும் என்பது யாருக்குத் தெரியும்?" - சில ஆண்டுகளுக்குமுன் சென்னை வந்த பூலான் தேவி பேசியது.

- மௌலி

உ



அருள்மிகு கைலாசநாதர் சேவார்த்திகள் சங்கம்,
மாதவரம், சென்னை – 600 060



பழம்பெரும் மாதவரம் கைலாசநாதர் திருக்கோயில் கும்பாபிஷேக கட்டிடப் பணிக்கு நிதி உதவி வேண்டி விண்ணப்பித்தல்

சென்னைக்கு அருகே வடக்கே 10கி.மீ. தொலைவில் அமைந்துள்ள புறநகர் பகுதியான மாதவரம் என்று அழைக்கப்படுகின்ற மகாதவபுரத்தில் எழுந்தருளியுள்ள **அருள்மிகு "கற்பகாம்பாள் உடனுறை கைலாசநாதர் திருக்கோயில்"**, தொண்டைவள நாட்டில் உள்ள முக்கிய சிவாலயங்களில் ஒன்று. இத்திருக்கோயில் கி.பி.676ம் ஆண்டு இரண்டாம் நந்திவர்மனால் கட்டப்பட்டது. வடுகர்கள் எனப்படும் கொள்ளைக் கூட்டத்தினரை அடக்கி புறமுதுகு காட்டி ஓடச் செய்த நந்திவர்ம பல்லவன் சோலைவனமாக விளங்கிய இவ்விடத்தில் தங்கும்போது சுயம்புவாக எழுந்தருளியுள்ள சிவலிங்கத்தை கண்டான். அதன்பின் இச்சிவலிங்கத்தை வைத்து **"கைலாசநாதர்"** எனும் திருப்பெயரில் மாதவரத்தில் கோயிலை எழுப்பியதாக வரலாறு. இக்கோயில் சிவலிங்கம் 4½ அடி உயரமும், 16¼ அடி சுற்றளவும் கொண்ட அபூர்வ சக்திவாய்ந்த லிங்கமாகும். வியாச முனிவர் மந்தாரவனம் என்று அழைக்கப்பட்ட இந்த இடத்தில் கடும் தவம் புரிந்ததால் மகாதவபுரம் என்றும் இவ்வூர் அழைக்கப்படுகிறது. இச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இச்சிவாலயத்தில் தற்சமயம் கும்பாபிஷேகக் கட்டுமானப் பணி நடந்து வருகிறது. மேலும், கோயில் மஹாமண்டபம், உட்பிரகாரப் பணிகள், மூலவர் விமானம், அம்பாள் கோயில் விமானம், சுற்றுக் கோயில் சன்னதிகள், துஜஸ்தம்பம் மற்றும் 12 ஜோதிர்லிங்க சன்னதிகள் போன்ற கட்டுமானப் பணிகள் நடைபெற பொருளுதவி அவசியம் தேவைப்படுகிறது. பக்தகோடிகள், ஆன்மீக அன்பர்கள் கொடுக்கும் நன்கொடைகளை வைத்துதான் மேற்கண்ட பணிகளை முடிக்க திட்டமிட்டுள்ளோம். கோயில் **கும்பாபிஷேகம்** வருகிற **2002ம் ஆண்டு ஜூன் மாதத்தில்** நடத்த திட்டமிட்டுள்ளோம். இவ் வேண்டுகோளை கண்ணுறும் அன்பர்கள் தங்களால் இயன்ற நிதியுதவியை கீழ்கண்ட முகவரிக்கு நேரடியாகவோ, மணியார்டராகவோ, வழங்கலாம். டிராப்ட்டாகவோ, காசோலையாகவோ அனுப்ப விரும்பும் அன்பர்கள் **கைலாசநாதர் சேவார்த்திகள் சங்கம் A/C (Kailasanathar Sevarthigal Sangam A/C)**என்ற பெயரில் அனுப்பி எல்லாம் வல்ல ஈஸ்வரனின் கிருபைக்கு பாத்திரர்களாகும்படி வேண்டுகிறோம்.

நிதி அனுப்ப வேண்டிய முகவரி

திரு. R. சுப்ரமணிய ஐயர்,
செயலர்,
கைலாசநாதர் சேவார்த்திகள் சங்கம்,
228/341, மாதவரம் ஹைரோடு,
சென்னை – 600 060.
போன்: 5584683 / 5531683

R. திருமால் — **தலைவர்**

S.K. சங்கரன் — **பொருளாளர்**

மற்றும் உறுப்பினர்கள்

வண்டி வண்டியாய்ப் பாரம்!

* ஜானகி விஸ்வநாதன்

எல்லா சினிமாக்களையும் போல, இதுவும் இரண்டரைமணி நேரம்தான் ஓடுகிறது. ஆனால் படம் முடிந்து திரையரங்கைவிட்டு, வெளியே வரும்போது, மனம் முழுக்க, வண்டி வண்டியாய்ப் பாரம்! அத்தனைச் சீக்கிரம் இறக்கிவைத்துவிட முடியாத, ஆழ்மனக்குள் ஊடுருவிவிட்ட பாரம். பாதிப்பு என்று கூடச் சொல்லலாம்.

ஹீரோ, ஹீரோயின் என்று யாருமில்லாத அந்தப் படம் 'குட்டி'. கண்முன்னே நாம் பார்த்துக் கொண்டிருக்கும் இரத்தமும் சதையுமான, நிகழ்கால நிஜப் பாத்திரங்கள். அதில் பத்து வயது பெண் குழந்தைத் தொழிலாளியான கண்ணம்மா பாத்திரம் மீது, திணிக்கப்பட்ட வாழ்க்கையை, யதார்த்தமாய்ப் பகிரங்கப்படுத்தி யிருக்கும் விதம், சினிமா பார்க்கும் உணர்விலிருந்து மீட்டு, நம்மை குட்டியின் உலகத்திற்குக் கூட்டிப் போகிறது.

குழந்தைத் தொழிலாளி என்ற வார்த்தையைக் கேட்டாலே, சிவகாசியையும், வேலூரையும் நினைத்துக் கொள்கிற நமக்கு, நம் அருகிலேயே இப்படிக் குழந்தைகளை அடிமையாய் வைத்



* குட்டி படத்தில்



திருக்கிறோம் என்று உணர்த்துகிற இந்தப் படத்தை, நீங்கள் கலைப்படம் என்று நினைத்துக் கொண்டால் அது தவறு.

தமிழ் வெகுஜன சினிமாவின், பிரதான அம்சமாக இருக்கிற இசை, ஒரு பாத்திரமாகி, படம் நெடுகிலும் பயணிக்கிறது. சிக்கலில்லாத திரைக்கதையை, ஒரு சில நிமிடங்கள்கூட தொய்யவிட்டுவிடாத படத்தொகுப்பு. கண்களில் ஒற்றிக் கொள்வது மாதிரியான படப்பிடிப்பு. நாசர், கௌசல்யா, விவேக் என்று ரசிகர்கள் மத்தியில் பிரபலமான முகங்கள். ஒரு நல்ல சினிமாவிற்கான அத்தனை அம்சங்களோடு உருவாக்கப்பட்டிருக்கும் இந்தப்படம், கலை சினிமாவுக்கும் வெகுஜன சினிமாவுக்குமான இடைவெளியை உடைத்து விட்டது என்று சொன்னால் அது நிஜம்.

அட! யார் இந்தப் படத்தின் இயக்குனர் என்று உங்களுக்குள் கொப்பளிக்கும் அந்தக் கேள்விக்கான பதில் : ஜானகி விஸ்வநாதன்!

"சினிமா இயக்கினால் என்ன என்ற எண்ணம், எனக்கு இரண்டு வருடத்திற்கு முன்னால்தான் வந்தது. மற்றபடி அது இலட்சியமெல்லாம் இல்லை" என்று சொல்லும் இவர், யாரிடமும் உதவியாளராகச் சேர்ந்து சினிமா கற்றுக் கொள்ளாத இயக்குனர்.

"சென்னை பல்கலைக் கழகத்தில் 'இதழியல் மற்றும் மக்கள் தொடர்பு' முதுகலை பட்டம் முடித்தேன். அப்போது இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில், எழுதும் வாய்ப்புக்கிடைத்தது. பெண்களை, சினிமாப் பாடல்களில் எப்படி கொச்சைப் படுத்துகிறார்கள் என்ற விஷயம், ஒரு பெண் என்ற முறையில் என்னைப் பாதித்தது. அதைத்தான் முதலில்



"நாட்ல கொடும்பாவி கலாசாரம் வேகமா பரவிட்டு வருது. ரெண்டு கொடும்பாவி வாங்கினா அரை லிட்டர் பெட்ரோல் இலவசம்னு விளம்பரம் வந்திருக்கு பாருங்க!"

- புளியரை கணேசன்

எழுதினேன். பிறகு ஏ.என்.ஐ. செய்தி நிறுவனத்திலும், டீ.வி. டுடே பத்திரிகையிலும் கொஞ்ச நாட்கள். அப்புறம் டாகுமெண்டரி, டெலிபிலிம் தயாரிப்பு என்று அடிப்படையில், மக்களோடு நெருங்கிப் பழகுகிற ஒரு ஜர்னலிஸ்ட்டாக ஊறிவிட்டேன். இதுதான் என்னைச் சினிமாவிற்கு இழுத்துக் கொண்டு வந்தது என்றால் உங்களால் நம்ப முடிகிறதா?" என்று கேட்டு விட்டுத் தொடரும் ஜானகி விஸ்வநாதனுக்கு முப்பதே வயது.

"அடிப்படையில் ஒரு பொழுதுபோக்கு விஷயமாக சினிமா இங்கே இருக்கிறது. அதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதைத்தாண்டி அது மிகப்பெரிய தகவல் தொடர்பு சாதனம். இதை எல்லோரும் மறந்துவிட்டார்கள். பத்திரிகையை விட பல மடங்கு வீச்சு அதிகமுள்ள சினிமா, படித்தவர், படிக்காதவர் எல்லோரையும், கலபமாகப் போய்ச் சேரும்போது, அதை மூளை மழுங்க அடிக்கிற ஒரு பரிமாணத்திலேயே வைத்திருப்பதில், ஒரு ஜர்னலிஸ்ட் என்ற முறையில் எனக்கு உடன்பாடு இல்லை.

"எனது குடும்ப நண்பர், எம்.ஜி.ஆர். படம் பார்த்துதான் தாயை மதிக்கவே கற்றுக் கொண்டேன் என்று சொல்கிறார். ஜெயப்பிரகாஷ் சினிமா பார்த்துதான் கொலை செய்தேன் என்று சொல்லியிருக்கிறார். இதிலிருந்தே சினிமாவைக் கையாளும் முறையில்தான் அதனுடைய தாக்கம் எப்படியிருக்கும் என்று முடிவு செய்ய முடியும். இப்படிப்பட்ட சூழ்நிலையில், சினிமாவைக் கையாளும் படைப்பாளியின் பொறுப்பு அதிகமாகி விடுகிறது. அதற்காக வெகுஜன சினிமாவுக்கே உரிய விஷயங்கள் எல்லாவற்றையும் தலை முழுகிவிட்டு படம் எடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. குருப்டான்ஸோ, ஃபைட் சீக்வன்ஸ்சோ குட்டி மாதிரி எடுக்கப்படும் படத்தில் வைக்காதீங்கன்னு சொல்றேன்."

இப்படித் தீர்க்கமாய்ப் பேசும் ஜானகி, இளையராஜா, சிவசங்கரி, தங்கர்பச்சான், எடிட்டர் ஸ்ரீகர்பிரசாத், கலை இயக்குனர் கிருஷ்ண மூர்த்தி என்று முதல் படத்திலேயே பெரிய கலைஞர்களோடு பணியாற்றியதில் நிறையக் கற்றுக் கொண்டிருக்கிறேன் என்கிறார்.

"இனி குழந்தைகளை வேலைக்கு அனுப்பக் கூடாது, அமர்த்தவும் கூடாது என்று ஐந்து கோடி பேரில் ஐம்பது லட்சம் பேரையாவது முடிவு எடுக்க வைக்கிற படமாக 'குட்டி' இருப்பாள்" என்று நம்புகிற இந்த இயக்குனர், நிர்வாகத் தயாரிப்பாளர் ரமேஷ் எஸ். அருணாசலத்துடன் இணைந்து, குழந்தைத் தொழிலாளர்கள் கூடாது என்று தீவிர கையெழுத்து இயக்கத்தைத் தமிழகம் முழுவதும் நடத்திக் கொண்டிருக்கிறார்.

— ஆர். சி. ஜெயந்தன்

படங்கள்: ராஜன்

உ

ஸ்ரீ உமாமஹேஸ்வராப்யாம் நம:



ஸனாதன தர்ம பரிபாலன சபா

17 B, T.L. ரகுபதி தெரு,
சுபாஷ் நகர், குரோம்பேட்டை,
சென்னை – 44.

ஸ்ரீ அதிருத்ர மஹாயக்ஞம்,
ஸ்ரீ சதசண்டீ மஹாயக்ஞம்

பேரன்புடையீர்!

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யாள் அனுக்ரஹத்தை முன்னிட்டு ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி, ஸ்ரீ பார்வதி பரமேஸ்வராளுடைய பரிபூர்ண க்ருபா கடாக்ஷத்தால் உலகத்தில் ஸகல மஹா ஜனங்களும் ஸகல ஜீவராசிகளும் பரமச்ரேயஸ்ஸை அடையவும் பகவத் ப்ரீதிக்காகவும் நிகழும் ஸ்வஸ்திஸ்ரீ விஷு வருஷம் ஆடி மாதம் 21ம் தேதி (6.8.2001) திங்கள் முதல் ஆடி மாதம் 27ம் தேதி (12.8.2001) ஞாயிறு வரை சுமார் 170 வேத வித்வான்களை கொண்டு ஸ்ரீ அதிருத்ர மஹாயக்ஞம், ஸ்ரீ சதசண்டீ மஹாயக்ஞம் சதுர்வேத பாராயணம் மற்றும் ப்ரதி தினம் விசேஷ காம்யார்த்த ஹோமங்களும் சென்னை 44, குரோம்பேட்டை, ராதா நகர் மெயின் ரோடு (3– இந்திராகாந்தி குறுக்குத் தெரு) ஸ்ரீ காமாக்ஷி கம்யூனிட்டி ஹாலில் நடைபெறுவதால் ஆஸ்திக பக்த ஜனங்கள் யாவரும் மேற்படி மஹாயக்ஞங்களில் கலந்து கொண்டு த்ரவ்யோபகாரம் செய்து சிறந்த முறையில் ஒத்துழைத்து மேற்படி ஸத் கார்யத்தை நடத்தி வைத்து, ஸ்ரீ சண்டிகாபரமேஸ்வரி ஸ்ரீ பார்வதி பரமேஸ்வராளுடைய அனுக்ரஹத்திற்குப் பாத்திரர்களாகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்
SDP சபாவினர்

பின்குறிப்பு: நன்கொடைகள் பொருளாகவோ, பணமாகவோ (காசோலை) மேற்படி சபாவின் பெயரில் அனுப்ப வேண்டுகிறோம்.



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. Tel : 237 6129.

E-mail: sspeetam@md3.vsnl.net.in, sspeetam@hotmail.com

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

● காலை சிற்றுண்டி (150 பேருக்கு)	ரூ.	1,000/-
● மதிய உணவு	ரூ.	2,000/-
● இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
● மாலை சிற்றுண்டி	ரூ.	1,000/-
● ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
● ஒரு மாணவனுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி (ஓராண்டிற்கு)	ரூ.	3,000/-
● ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
● குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-



-: விவேகானந்தர் தேசீய இயக்கம் :-

ஸ்ரீ சாரதா சக்தி பீடத்தின் சார்பில் "விவேகானந்தர் தேசீய இயக்கம்" என்ற அமைப்பு கிராமபுறத்தில் உள்ள ஏழை மாணவ, மாணவியர்களின் கல்வி, மத நல்லிணக்கம், மனித நேயம், சமய சமரசம் மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.


இதன்மூலம் 504 கிராமங்களில் சுமார் 17,500 ஏழை மாணவ, மாணவியர்களுக்கு மாலை நேரத்தில் இலவச சிறப்புக் கல்வியும், (டியுஷன்) ஆன்மீக பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இந்த மேலான தொண்டுகள் சிறப்பாக நடைபெற தங்களின் அன்பையும், உதவியையும் நாடுகிறோம்.


ஒரு மையத்தின் (கிராமத்தின்) ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு (பௌர்ணமி அன்று சிறப்பு விருந்து உட்பட)	ரூ.	1,500/–
ஒரு மையத்தின் ஓராண்டிற்கு பராமரிப்புத் தொகை (12 மாதம் பௌர்ணமி சிறப்பு விருந்து உட்பட)	ரூ.	18,000/–

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி
வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்





2001 ஆகஸ்ட் 5
விஷு ஆடி 20
மலர் : 60
இதழ் : 1

கல்கி


தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



புதிய மதுபரப்புக் கொள்கை!

பெயருக்குத்தான் தமிழ்நாட்டில் மதுவிலக்கு கொள்கை அமுலில் இருக்கிறது. கள்ளு, சாராயக் கடைகள் கிடையாது என்றாலும் கள்ளச் சாராயம் தாராளமாகக் கிடைக்கிறது. அது தவிர, இந்தியாவில் உற்பத்தியான அயல்நாட்டு மதுவகைகளும் அரசாங்க அனுமதியுடன் விற்கப்படுகின்றன. இந்த மதுக்கடைகள் இதுவரையில் ஆண்டுதோறும் ஏலத்தில் விடப்பட்டு வந்தன. ஆனால், கடைகளை ஏலத்தில் எடுப்பதில் அரசியல் கட்சிப் பாகுபாடுகளைக் கடந்த ஒரு 'கூட்டணி' செயல்பட்டு, ஏலத்தொகையைக் குறைத்து நிர்ணயித்து, அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தி வந்தது. இந்த நிலைமையை மாற்றக் கருதிதான் ஏல முறையை ஒழித்துவிட்டு, அதனிடத்தில் லைசென்ஸ் முறையை அறிமுகப்படுத்தியது ஜெயலலிதா அரசு.

ஆனால், ஏலத்தில் கடைகளைப் பிடிப்பதில் நடந்த தில்லுமுல்லுகள், மதுக்கடை லைசென்ஸ் பெறும் முயற்சியிலும் தொடர்ந்ததாகத் தெரிகிறது. ஒரே பகுதியில் லைசென்ஸ் பெற பலர் மனு செய்ய, குலுக்கலில் உரிமத்தை வழங்க வேண்டிய நிலை. இதை அறிந்து, ஒரே நபரின் பினாமிகள் பலர்



அவ்விடத்தில் விண்ணப்பங்களைக் குவித்தனர்.


அது மட்டுமல்ல, ஏல முறையினால் அரசுக்கு வருமானம் அதிகரிப்பதற்குப் பதிலாகக் குறையும் என்கிற நிலை உருவாயிற்று. இதனால் இருநூறு கோடி ரூபாய் நஷ்டம்! இந்த நஷ்டத்தை ஈடு செய்து, வருமானத்தை மேலும் அதிகரிக்கும் முகமாக மற்றொரு காரியமும் செய்தது அரசு :

மதுக்கடை லைசென்ஸைத் தக்கவைத்துக் கொள்ளவும், புதுப்பித்துக் கொள்ளவும் சில நிபந்தனைகளை அறிமுகப்படுத்தியது.

லைசென்ஸ் பெறும் கடைக்காரர் குறைந்த பட்சமாக விற்றாக வேண்டிய மதுவின் அளவை அரசே நிர்ணயித்தது. அந்த குறைந்தபட்ச அளவை விற்கத் தவறினால், லைசென்ஸ் பெற்றவர் அபராதம் செலுத்தியாக வேண்டும்! தொடர்ந்து இரண்டு மாதங்களுக்குக் குறைந்தபட்ச விற்பனை இலக்கை எட்டாதுபோனால் லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டுவிடும்.

இந்தப் புதிய விதிகள், அரசுக்கு மது விற்பனை மூலம் கிட்டும் எக்சைஸ் வருமானம் பெருக வேண்டும் என்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் இவ்விதிகள் முற்றிலும் சமூக விரோதமானவை என்பதுடன் அரசின் 'மதுவிலக்கு'க் கொள்கையைச் சிரிப்புக்கிடமாக்குகின்றன.

அனைத்து மதுக்கடைகளுக்குமே இந்தப் புதுவிதியால் சவால்கள் அதிகரிக்கும். இதன் பக்க விளைவாக, மதுக்கடைகளையொட்டி 'பார்'கள் இயங்குவது பெருகியே தீரும். ஏற்கெனவே இப்பிரச்னை தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. இனி அது மேலும் தீவிரம் அடையும் வாய்ப்புகள் மிக



அதிகம்.

மதுக் கடைகள், லைசென்ஸைக் காப்பாற்றிக் கொள்ளவே விற்பனைக் குறியீடுகளை நோக்கித் தலைதெறிக்க ஓட ஆரம்பிக்கும். அவற்றுக்கு லாபம், அரசுக்கு வருமானம். கள்ளத்தனமாக பார்கள் நடத்துவதால் காவல் துறைக்குக் கையூட்டு...

ஆனால், மது வகைகளை வாங்கிப் பருகும் சராசரி தமிழனுக்குப் படிப்படியாக மரணம்! ஒவ்வொரு துளி மது மூலமும் நெருங்கி வரும் மரணம்!

இந்த அழகில், மதுவிலக்குக் கொள்கை தமிழகத்தில் அமுலில் இருப்பதாக நாம் எவ்வாறு சொல்லிக் கொள்வது.

கலால் வரி மூலம் அரசுக்குக் கிடைக்கிற வருமானத்துள் தொண்ணூறு சதவிகிதம் மதுபான உற்பத்தியிலிருந்துதான் பெறப்படுகிறது என்பது செய்தி. அந்த வருமானத்தைப் பெருக்குவதற்காக, லைசென்ஸ் பெற்ற மதுக் கடைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் முடிவு செய்திருக்கிறது அரசு. சென்ற ஆண்டு 4193 கடைகள் ஏலம் விடப்பட்டன. இவ்வாண்டு ஆறாயிரம் கடைகளுக்கு உரிமம் வழங்க முன் வந்துள்ளது அரசு! சென்ற ஆண்டு மது விற்பனையில் கலால் வரி வருமானம் 3373 கோடி. இந்த ஆண்டு 4200 கோடியாக அது உயரும் என்கிறார் அமைச்சர் பன்னீர்செல்வம். அப்படியானால் எத்தனை பாட்டில்கள் பீரும் விஸ்கியும் ரம்மும் விற்றுத் தீர வேண்டும் என்று கணக்கிட்டுப் பாருங்கள். அதிர்ச்சி ஏற்படும்!

புதிய மதுவிலக்கு கொள்கை என்பது அதிவேகமாகப் புதிய மது பரப்புக் கொள்கையாக மாறிக் கொண்டிருக்கிறது.

சேது 'ச்சியான்' மாதிரி கலைச்சேவை செய்து கொண்டிருந்தால், பிழைக்க முடியாது என்று ஆக்ஷனில் குதித்திருக்கிறார் விக்ரம். சும்மா சொல்லக் கூடாது.



மனிதர் முறுக்கிய நரம்புகள் புடைக்க, தோள்களில் தெனாவெட் தெறிக்க, வில்லனைப் பந்தாடுகிற தருணங்களில் தில்லாகவே தெரிகிறார்.

கதை என்னவோ பழைய போலீஸ் பிராண்ட்தான் என்றாலும், அதைக் காட்சி அமைப்புகள் மூலம் புதுசு மாதிரி, நகாசு வேலைகள் செய்து அசத்தியிருக்கிறார் அறிமுக இயக்குனர் தரணி.

மனித உரிமைகளை, காவல்துறை மதிப்பதில்லை என்ற நடப்பு தேதியின் குற்றச்சாட்டுக்கு, முன் மாதிரியாக வந்து மிரட்டுகிறார் வில்லன் ஆசிஷ்வித்தியார்த்தி. சலித்து விடாத ரெடிமேட் சிரிப்போடு வளைய வரும் லைலாவின் குழைவு, கொஞ்சல்களுக்குத் தியேட்டரில் விசில் மழை பொழிகிறது.

சின்னத் திரையில் சாபக்கேடு என்று தந்தைகுலம் தைரியமாய்ச் சபிக்கும் மெகா சீரியல்களை, முடிந்தவரை கிண்டல் பண்ணியிருக்கும் விவேக்கிற்கு, ஸ்பெஷல் தேங்ஸ் சொல்லியே ஆக வேண்டும்.

அய்யா டைரக்டரே, புள்ளைத்தாச்சிப் பொம்பளை தீபா வெங்கட்டை, வில்லன் சவுக்குக் கட்டையால் தாக்குவது போன்ற, பினாயில் ஊற்றிக் கழுவ வேண்டிய சென்டிமென்ட்களை எத்தனை காலத்திற்குப் பிடித்துத் தொங்கப் போகிறீர்கள்... புதுசா சிந்திங்க சாமி...!

'உன் சமையலறையில் நான் உப்பா? சர்க்கரையா?' என்ற கபிலனின் பாடலுக்கு, இனிமையான ட்யூன் போட்டு, காதில் தேன் பாய்ச்சியிருக்கும் வித்யாசாகரைத் தமிழ்ச் சினிமா இன்னும் கண்டுகொள்ளாதது ஏன் என்று தில்லாகக் கேள்வி கேட்கலாம்.

என்னதான் இயக்குனர் இன்ச் டை இன்ச் செதுக்கியிருந்தாலும் ஒரு தெலுங்கு ஆக்ஷன் படம் பார்த்துவிட்டு வந்த உணர்வைத் தவிர்க்க முடியவில்லை, ஸாரி...!


• அபவ் ஆவெரெஜ்

— விஷுவல்தாஸன்



K. வீரமணியின்
தெய்வீகக் குரலில்

சக்தி தரிசனத்திற்குப் புகழ் மாலை





பூமாலை சூடும் அம்மனுக்கு
பாமாலையாகும் இசை அஞ்சலி

மற்ற அம்மன் பாடல் வெளியீடுகள்

மாவிளக்கு–பித்துக்குளி முருகதாஸ், அம்மன் அருள் வாக்கு–*L.R.* ஈஸ்வரி, ஆத்தா கண்திறந்தா–*L.R.* ஈஸ்வரி, அம்மன் அலங்காரம்–*L.R.* ஈஸ்வரி, ஜெய சக்தி–*T.M.* சௌந்தரராஜன், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி–வாணி ஜெயராம், பக்திப் பாமாலை–*Dr.* சீர்காழி *S.* கோவிந்தராஜன், ஆடி பொறந்திருக்கு–சித்ரா

AVM audio *Available on* sony nād



★ இயான் தோர்பே

அலர்ஜிக்கு வந்த அலர்ஜி!

பிரபல ஆஸ்திரேலிய நீச்சல் வீரரான இயான் தோர்பே சமீபத்தில் ஃபுகுனோகோவில் நடைபெற்ற சர்வதேச நீச்சல் பந்தயங்களில் உலக சாதனை படைத்திருக்கிறார். நான்கு தங்கங்கள் அவருக்கு.

தம் சொந்த ஊரில் நடைபெற்ற ஒலிம்பிக்ஸில் 400 மீட்டர் நீச்சல் போட்டியில் தங்கத்தைப் பெற்றதைவிட (சிட்னிதான் இவரது வசிப்பிடம்), இப்போதைய இவரது சாதனை குறிப்பிடத்தக்கது. காரணம் இரண்டாவது முறையாக உலக சாம்பியனாக வந்திருக்கிறார் என்பதோடு மிகச் சிறிய வயதில் இந்த அங்கீகாரம் பெற்றவர் இவர்தான்.

17 வயது மாணவரான இயான் தோர்பே இன்னொரு வகையிலும் வித்தியாசமானவர். மிகச் சிறந்த பள்ளி மாணவராகவும் விளங்குகிறார். தொடர்ந்து ஐந்து ராங்க்கிற்குள் வாங்குவதுதான் இவரது வழக்கம்.

ஒரு வேடிக்கை - 'குளோரின் என்றாலே அலர்ஜி உங்கள் பையனுக்கு. எனவே அவனுக்கு நீச்சல் வேண்டாமே' என்று சிறு வயதில் டாக்டர் எச்சரிக்கை செய்திருக்கிறார். ஆனால் அலர்ஜி ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று நீச்சல் பயிற்சியைத் தொடர்ந்தார், இவர். முகத்தில் பாதிப்பு வரக்கூடாதென்பதற்காக தண்ணீர் மட்டத்துக்கு மேலேயே முகம் இருக்கும்படி ஆரம்ப கட்டத்தில் பார்த்துக் கொள்வாராம். அலர்ஜிக்கே இவரது பிடிவாதத்தைக் கண்டு அலர்ஜி ஏற்பட்டு ஓடி விட்டது.

ஏற்கெனவே ஒரு பேட்டியில் 'எனக்கு ஜப்பானிய உணவு வகைகள் மிகவும் பிடிக்கும்' என்று கூறியவர் தோர்பே. இம்முறை அது அவருக்கு மேலும் பிடித்துப் போகலாம். ஃபுகுனோகோ ஒரு ஜப்பானிய நகரம்.

இயான் தோர்பேவின் சாதனைகளைப் படித்தவுடன் உங்களுக்கும் நீச்சலடிக்க வேண்டும் என்ற உத்வேகம் உண்டாகியிருக்கலாம். ஆனால் தோர்பே போன்றவர்கள் பங்கெடுத்துக் கொள்ளும் நீச்சல் குளங்கள் பளிங்கு போல பராமரிக்கப்படுபவை.

நம் உள்ளூர் நீச்சல் குளங்களில் குதிப்பதற்குமுன், சில விஷயங்களை மனத்தில் கொள்வது நல்லது என்று எச்சரிக்கிறது ஒரு சர்வதேச வார இதழ்.

முதலில் நீரின் நிறத்தையும், அது தெளிவாக இருக்கிறதா? என்பதையும் நன்கு கவனியுங்கள். சுமார் பத்தடி ஆழத்தில் உள்ள பொருள்களாவது தெளிவாகத் தெரியவேண்டும்.

கரையோரமாக வந்துசேரும் நீரில் அதிகமான நுரையிருந்தால் கொஞ்சம் எச்சரிக்கை தேவை. பாக்டீரியா கிருமிகள் நீரில் அதிகம் கலந்திருக்க வாய்ப்பு அதிகம்.

நீச்சலடிக்கும்போது வாயைத் திறந்து கொள்வதும், தண்ணீரை வாய்க்குள் கொப்பளித்துத் துப்புவதும் சிலரது வழக்கம். வேண்டாம் இது. தண்ணீரில் கலந்திருக்கும் மிகச்சிறு உயிரினங்கள் உங்கள் வயிற்றுக்குள் போய்விடலாம்.

சற்றே குளிர்ச்சியான நீரைவிட, வெப்பமான நீர் உங்களுக்கு இதமானதாகத் தெரியலாம். ஆனால் நீர்வாழ் உயிரினங்களுக்கும் அதுதான் பல்கிப் பெருகுவதற்கு இதமான சூழல். எனவே கதகதப்பான நீச்சல் குளமென்றால் மேலும் அதிக எச்சரிக்கை தேவை!

- குல்லூ

தேசிய நெடுஞ்சாலையில் சீரிய தொழில் நுட்ப கல்வி

பாவை பொறியியல் கல்லூரி

PAAVAI ENGINEERING COLLEGE

(CO-EDUCATION)

சேலம்-நாமக்கல் தேசிய நெடுஞ்சாலை (NH-7),
பாச்சல் 637018 நாமக்கல் தாலுக்கா, தமிழ்நாடு

Ph: 04286-43038, 04287-24408, 25308


(Approved by AICTE, F.No: 732-52-393(E) /2000)

COURSES OFFERED - 2001 - 2002

BE - Electronics and Communication Engineering

BE - Computer Science and Engineering

BE - Information Technology



(Main buildings on completion)





பாவை பொறியியல் கல்லூரி

சிறப்பு அம்சங்கள்:

* தேசிய நெடுஞ்சாலையில் சேலத்திலிருந்து 30 கி.மீ. தொலைவிலும் நாமக்கல்லிலிருந்து 18 கி.மீ. தொலைவிலும் கல்லூரி அமைந்துள்ளது.
* இயற்கையான சூழலில் சுமார் 48 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.
* துவங்கிய முதல் ஆண்டிலேயே அனைத்து வசதிகளும் கொடுக்கப்பட்டுள்ளன.
* Computer Lab with all 'WIPRO' System.
* Hign-Tech Laboratories.
* 4000 புத்தகங்கள் மற்றும் 50 இந்திய/ சர்வதேச journals / magazines கொண்ட நூலகம்.
* One to one attention and Tutor System.
* Separate Hostel for Boys and Girls.
* College Bus from Salem, Namakkal, Trichengode, Rasipuram and Attur.

உல்டா சிகிச்சை!

பத்திரிகை ஜோக்குகளில் படித்துக் கொண்டிருந்த ஆள் மாறாட்ட அறுவை சிகிச்சை நிஜத்தில் நடந்தால்...? 'நடந்தால்' என்ன, நடந்தே விட்டது - திண்டுக்கல் அரசு மருத்துவமனையில்!

தாராபுரத்தில் ஓட்டல் ஒன்றில் வேலை பார்க்கும் பாலசுப்பிரமணியன், தமது ஆறு வயது மகன் சதீஷ் குமாருக்குச் சிறுநீரகத்தில் கல் அடைத்துக் கொண்டதால் அறுவைச் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனையில்



சேர்த்திருக்கிறார்.

அதே வார்டில் திண்டுக்கல் அருகேயுள்ள ராஜக்காப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த கணவாய் பிச்சை என்பவரின் இரண்டு வயது மகன் முகமது அசேன் மலக்குடல் இறக்க நோய் அவஸ்தைக்காக சேர்க்கப்பட்டிருக்கிறான். அவனுக்கும் அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டும்.

இதில் சிறுநீரகப் பிரச்னைக்குச் செய்ய வேண்டிய அறுவை சிகிச்சையை இரண்டு வயது சிறுவனுக்கும், இரண்டு வயது சிறுவனுக்குச் செய்ய வேண்டிய அறுவை சிகிச்சையை ஆறு வயது சிறுவனுக்கும் 'வெற்றிகரமாக'ச் செய்து முடித்துள்ளனர் டாக்டர்கள். மயக்கம் தெளிந்து வார்டுக்கு கொண்டு வரப்பட்ட குழந்தைகளைப் பார்த்த பெற்றோர்களுக்கு ஷாக்! பதறிப்போய் இரண்டு சிறுவர்களின் பெற்றோர்களும் டாக்டர்களிடம் முறையிட்டுள்ளனர். அப்போதுதான் மருத்துவர்களுக்குத் தங்கள் தவறு புரிந்துள்ளது. உடனே மீண்டும் அவசர அவசரமாக அவரவர்க்கு உரித்தான அறுவை சிகிச்சைகளை மிகச் சரியாகச் செய்து முடித்துள்ளனர். ஒரே ஒரு ஆறுதலான விஷயம் - இரண்டு சிறுவர்களும் தற்போது நலமாக இருந்து வருவது தான்! ஆனால் இதன் பாதிப்புகள் ஏதேனும் எதிர்வரும் நாட்களில் எதிர் விளைவுகளைத் தருமா? என்பது தெரியவில்லை.

ராஜக்காப்பட்டி கிராமத்திற்குச் சென்று வந்தோம். முதலில் தவறான, பிறகு சரியான அறுவை சிகிச்சைக்கு ஆளான இரண்டு வயது முகமது அசேன் எதுவுமே நடக்காத மாதிரி விளையாடிக் கொண்டிருந்தான். "சரியோ, தப்போ எப்படியோ ஆபரேஷன் செஞ்சதுல எங்க மகன் பொழைச்சிக்கிட்டான். அது போதுங்க எங்களுக்கு!" எனச் சுருக்கமாகச் சொல்லிவிட்டுச் சென்றனர் அவனது பெற்றோர்கள்.

நலப்பணிகள் இணை இயக்குனர் டாக்டர் ஆர். புவனேந்திரனைச் சந்தித்தோம். "மாநில இணை இயக்குனர் டாக்டர் வி. முனுசாமி நேரில் வந்து விசாரணை செய்துவிட்டுச் சென்றுள்ளார்கள். அவர் தந்துள்ள அறிக்கையின் அடிப்படையில் சென்னை, மருத்துவம் மற்றும் ஊரகத் துறை இயக்குனர் நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள். விசாரணையில் இருப்பதால் தற்போது இதுபற்றி மேலும் வேறு விவரங்கள் எதுவும் என்னால் சொல்ல இயலாது!" என்று மறுத்துவிட்டார் அவர்.


ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு.

ஒரு நிமிடம்தான். ஆனால் அறுபது நொடிகளாயிற்றே. ஆனந்த்துக்குப் பொறுமை பறந்துபோக, அந்த இடத்தில் முற்றிய நிலைப் புற்று நோயாய்க் கோபம் பரவத் தொடங் கியது. "இது நம் கணவரின் கார் ஒலியா யிற்றே" என்றபடி துள்ளி வந்து வாசலைத் திறந்திருக்க வேண்டும். குறைந்தது அழைப்பு மணியை அழுத்திய மிகச் சில நொடி களிலாவது கதவைத் திறந்திருக்க வேண்டும். இரண்டும் இல்லை.

கதவைத் திறந்திருந்த உஷா 'ஒரே தலைசுற்றல்' என்றபடி திரும்பிச் சென் றாள். சற்றே தாமதமாக மனநலம்கூட இவளுக்குக் குறைவுதான்.

சிவப்ரியா அழகு. அறிவு மற்றும் உற்சாகத் தின் அற்புதக் கலவை. தான் அவளை இழந்திருக் கக்கூடாதோ?

எண்ணங்களைத் திசை மாற்றும் முயற்சியில் ஈடு பட்டான். "இன்னிக்கு ஏன் இவ்வளவு லேட் தெரி யுமா? கிளம்பும்போது ஒரு



மனம் மணமறிய ஆவல்...

கதவைத் திறந்ததற்கான விளக்கமா? அல்லது 'ஒரு டாக்டராய் லட்சணமாய் என் ஆரோக்கியக் குறைவை சரி செய்யுங்கள்' என்ற உத்தரவா? இரண்டில் அவள் எதைக் குறிப்பிட்டாள் என்பது அவனுக்கு விளங்க வில்லை. ஆனால் வேறொன்று விளங்கியது. அவன் அடிப்படையிலேயே ஒரு நோயாளி - உடல் நலம் மட்டுமல்ல. கலகலப்பான

அருண் சரண்யா

எமர்ஜென்ஸி கேஸ். ரொம்ப வித்தியாசமான நோய் அந்தம்மாவுக்கு."

"சாப்பிட வர்றீங்களா?" என்றாள் உஷா. 'உன் மருத்துவ அறிவை என் அசதியைப் போக்குவதற்குப் பயன்படுத்து. மற்றபடி நீ சிகிச்சை செய்யும் நோயாளிகளைப் பற்றிய விவரங்களை என் மேல் திணிக்காதே' என்ற செய்தி தெளிவாகவே புரிந்தது.

சிவப்ரியாவாக இருந்தால் இன்றைய கேஸ் குறித்து பல்வேறு கோணங்களில் விவா தித்திருக்கலாம். குறைந்த அனுபவத்தை ஈடுகட்டுகிற மாதிரி பல்வேறு இடங்களி

விருந்து மருத்துவச் செய்திகளைப் பெரும் தாகத்தோடு அறிந்து கொண்டு விரல் நுனியில் வைத்திருப்பான். தப்பு செய்து விட்டோமோ? அந்தச் சினிமா வாய்ப்பு சனியன் அவளுக்கு ஏன் வந்து தொலைக்க வேண்டும்?

பரிமாறியபோது ஒரு குறிப்பிட்ட கோணத்தில் உஷா கூட கவர்ச்சியாகத்தான் தெரிந்தாள். 'எதிலும் ஒரு நல்லது உண்டு. இவளால் எனக்கு ஒரு போதும் தாழ்வு மனப்பான்மை ஏற்படாது.'

"நீ ரொம்ப ஸ்வீட்டாயிருக்கே" என்றான். "இன்னிக்கு எனக்குத் தெம்பில்லே" என்ற அவள் பதில் சாட்டையாய் விழுந்தது. மனை வியை ரசித்தாலே கட்டில்தான் இலக்கா?

சிவப்ரியா சென்ட்ரல் ரயில் நிலையத்தில் எதிர்பாராதவிதத்தில், தன் கையைப் பற்றிய காட்சி மனத்தில் ஓடியது மீண்டும் மீண்டும். 'ஒரே ஸ்பரிசத்தில் எத்தனை நம்பிக்கையை



எனக்குள் புகுத்தினான். இல்லற வாழ்வைப் பொறுத்தவரை இனி தன் நீண்ட நாள் கனவுகள் நிறைவேற வாய்ப்பில்லை, உஷா மனைவியாக இருப்பதால். அதாவது உஷா உயிருடன் இருக்கும்வரை. அதாவது...' தனது சிந்தனை செல்லும் திசை குறித்து ஆனந்துக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. வேக மாக விழுங்க முயன்றான், உணவையும்.

"டாக்டர், இமயமலையை யாரு உங்க தோளிலேயிருந்து நகர்த்தினாங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?'' என்று கேட்டாள் கோகிலவாணி. வேலை நேரம் முடிந்து விட்டதால் நர்ஸ் சீருடையைக் களைந்து விட்டுப் புடவைக்கு மாறியிருந்தாள். உடை மாற்றத்தில் கொஞ்சம் கம்பீரம் காற்றில் கலைந்து போனதுபோல சிவப்ரியாவுக்குத் தோன்றியது.

"உங்களைத்தான் கேட்டேன் டாக்டர்."

"காதிலே விழுந்தது. ஆனால் கேள்வி விளங்கினாதானே பதில் சொல்ல முடியும்" என்றாள் சிவப்ரியா. அப்போது அவளது கைவிரல்கள் தன்னையும் அறியாமல் மேஜையின்மீது தாளமிட்டுக் கொண்டிருந்தன. அதைச் சுட்டிக் காட்டினாள் கோகிலவாணி, "இதைத்தான் சொன்னேன். ரெண்டு நாளா சுரத்தில்லாம இருந்தீங்க. யாரோ உங்க தோளிலே பெரிய பாரத்தைச் சுமத்தின மாதிரியும், அதைத் தாங்க முடியாமல் தள்ளாடுற மாதிரியும் இருந்தது. ஒரு ரெண்டு மணிநேரமா பழையபடி கலகலப்பாயிட்டீங்க."

"அதுவா? ஒரு ஸ்பெஷல் டானிக் மார்க்கெட்டிலே வந்திருக்கு. கலகலப்பு ப்ளஸ்ன்னு பேரு. அதிலே ரெண்டு டீஸ்பூன் சாப்பிட்டேன்."

"நல்ல உடான்ஸ்" என்றபடி கோகிலவாணி கிளம்பிவிட்டாள். தன் கேள்விக்கு நேரடி பதில் வரவில்லையே என்ற வருத்தமெல்லாம் அவளுக்கு இல்லை. தூக்கம் கண்ணைச் சுழற்றிக் கொண்டிருந்தது. உடனே வீட்டுக்குப் போய் தற்காலிகமாகக் கண்மூட வேண்டும்.

கலகலப்பு ப்ளஸ் மருந்து சிவப்ரியாவுக்கு அன்று ஈ-மெயிலில் வந்திருந்தது. லண்டனிலிருந்து டாக்டர் மேகியின் கடிதம்.

தனது மனவருத்தங்களைச் சிவப்ரியா அவளிடம் ஓரளவு பகிர்ந்து கொண்டிருக்க, அதற்கான பதில்தான்.

"கவலைகள் அப்பப்போ நம்ம தலையிலே உட்காரத்தான் செய்யும் ப்ரியா. கண்டுக்காதே. வரவேற்காத வீட்டுக்கு விருந்தாளிங்க வருவாங்களா? வந்தாலும் சீக்கிரமே கிளம்பிடுவாங்க இல்லே? அதே மாதிரி கவலைகளைக் கண்டுக்காமல் விட்டா அதுங்க தானா போயிடும். தியரி இல்லே. ப்ராக்டிகலா செய்து பார்த்துட்டுதான் சொல்றேன். டேவிட் நினைவை அழிக்க முடியாதுன்னாலும், அவரது மறைவு இப்போதெல்லாம் எனக்குப் பெரிய வருத்தத்தைத் தரவில்லை. அதே சமயம் கவலைகளை விரட்டியடிக்கணும்னு முயற்சி செய்யாதே. தானா உனக்குப் பிடிச்ச விஷயங்களில் கவனத்தைத் செலுத்து. எல்லாம் சரியாயிடும். முடிந்தால் நீ நடித்த படத்தின் சிடியை அனுப்பேன். இங்கே அது கிடைக்கவில்லை. அப்புறம், சென்ற கடிதத்தில் நீ ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்டிருந்தாய். இதே கேள்விதான் எனக்கும் போன மாசம் எழுந்தது. க்ரேட் விமன் திங்க் அலைக்! என் சீனியரிடம் கேட்டப்போ அவர் என்ன சொன்னார் தெரியுமா?..."

தொடர்ந்தது மிக நீண்ட, அறிவுபூர்வமான விளக்கம்.

அன்று அந்த இளைஞன் டிஸ்சார்ஜாக இருந்தான். அவன் பாட்டி சிவப்ரியாவின் கைகளைப் பற்றியபடி "எப்படியோ என் பேரனின் ஹிரண்யாவை நல்லபடி குணப்படுத்திட்டே" என்றாள்.

சிவப்ரியா கஷ்டப்பட்டு சிரிப்பை மறைத்

"ரமேஷ்! நாம் டில்லிக்கு ஓடிப் போகப் போவது எங்க அப்பாவுக்குத் தெரிஞ்சு போச்சுன்னு நினைக்கிறேன்."

"எப்படி சொல்ற?"

"'முப்பதே நாட்களில் ஹிந்தி கற்றுக் கொள்வது எப்படி?'ங்கிற புத்தகத்தை வாங்கிக் கொடுத்துப் படிக்கச் சொல்றார்."

- க. சரவணக்குமார்



துக் கொண்டாள். "கிஷ்னாயில் கிஷ்னாயில்" என்று கத்தியபடி தெருவில் தினமும் ஒருவன் மண்ணெண்ணெய் வண்டியோடு செல்வதைச் சிறு வயதில் தினமும் பார்த்திருக்கிறாள். கிருஷ்ணருக்கும் மண்ணெண்ணெய்க்கும் என்ன தொடர்பு? இந்தக் கேள்விக்கு விடை ஒரு வருடம் கழித்துதான் கிடைத்தது. கெரஸின் ஆயில் கிஷ்னாயில் ஆனதுபோல், ஹெர்னியா ஹிரண்யாவாகிவிட்டது. ஒரு வேளை குணமாகிவிட்டதால் ஹிரண்யா, பிரகலாதாவாகவும் மாறிவிடுமோ!

தலையை இலேசாக உதறிக் கொண்டாள். பாட்டி சொன்னதை மறுக்கும் விதமாகவும், கேலிப் போக்கை மாற்றிக் கொள்ளும் விதமாகவும். "எல்லாப் பாராட்டையும் எனக்கே கொடுத்துடாதீங்க. ஒரு குழுவே வேலை செய்திருக்கு இந்த வெற்றிக்கு" என்றாள்.

அந்த இளைஞன் குறுக்கிட்டு "ஓ.கே. அந்தக் குழுவின் பிரதிநிதியா உங்களைப் பாராட்டறோம்னு வச்சுக்குங்க. ஆனா உங்கக் க்ளினிக்கை வேறாரு விஷயத்திலே பாராட்ட முடியலே."


என்ன சொல்கிறான் இவன்? படபடப்போடு சிவப்ரியா காத்திருக்க, "ரொம்ப அதிகமா பணம் வாங்கறீங்க" என்றான்.

மையமாகச் சிரித்துவிட்டு நகர்ந்தாள் சிவப்ரியா. ஆனால் அவன் டிஸ்சார்ஜாகிச் சென்றபிறகும், அவனது குற்றச்சாட்டு அவள் மனத்தைவிட்டு வெளியேறவில்லை. இவனுக்கு மட்டுமல்ல, வேறு சில நோயாளிகளுக்கும் இதே போன்ற எண்ணம் உள்ளது என்பது அவளுக்குத் தெரியும். இது குறித்து டாக்டர் ராம்ஷேகரிடம் பேசிப்பார்த்தால் என்ன? தள்ளிப் போடாமல் அந்த முயற்சியை இப்போதே தொடங்கலாமே.

அனுமதி பெற்று ராம்ஷேகரின் எதிரில் உள்ள இருக்கையில் சிவப்ரியா உட்கார்ந்த அடுத்தகணமே தொலைபேசி ஒலித்தது. "சொல்லு கல்பகம்" என்ற அவரது வாக்கியத்திலிருந்தே, மறுமுனையில் இருப்பது மாமிதான் என்பது புரிந்தது.

அதே நேரம் வாசலில் ஒரு பரபரப்பு. அந்த அமைதியான சூழலையே மாற்றும்படியான அலறல்கள்.

டாக்டர் முகர்ஜி ஒரு நாகரிகத்துக்காகக் கூட "உள்ளே வரலாமா?" என்று கேட்காமல் அறைக்குள் நுழைந்தார். "மிகவும் சிக்கலான நிலையிலே ஒரு பேஷண்ட் வந்திருக்கார். உங்க ஒபினியன் வேணும். டாக்டர் பிரசாந்த்



"உங்க அம்மாவைக் கொஞ்சம் கண்டிச்சு வைங்க!"

"ஏன் விமலா?"

"இன்னிக்குக் காபி குடுக்க கொஞ்சம் லேட் ஆயிட்டது. அதுக்குப் போய் மனித உரிமை கமிஷன்ல புகார் குடுக்கப் போறாங்களாம்!"

- புளியரை கணேசன்

அவரை அட்டெண்ட் செய்துக்கிட்டிருக்கார்."

இது போன்ற சூழல்களில்கூட பதற்றப்படாமல்தான் டாக்டர்கள் இயங்கவேண்டும். அது மருத்துவத்தின் பால பாடம். இதை மிக நன்றாகக் கடைப்பிடிப்பவர்தான் ராம்ஷேகர். என்றாலும் இப்போது அவர் முகத்தில் பெரும் பரபரப்பு. நாற்காலியை வேகமாகப் பின்னுக்குத் தள்ளிவிட்டு எழுந்தார். "நீங்க மேனேஜ் செய்யுங்க முகர்ஜி. சிவப்ரியா அஸிஸ்ட் செய்வாங்க. நான் கொஞ்சம் அவசரமா வீட்டுக்குப் போகணும்."

அடுத்த நிமிடத்தில் அவரது கார் கிளம்பும் ஓசை. "டாக்டர் முகர்ஜி, நான் இப்பவே வரேன். நீங்க வந்தவரை அட்டெண்ட் செய்துக்கிட்டிருங்க" என்று வேண்டுகோளாகக் கூறிவிட்டு ராம்ஷேகரின் வீட்டுத் தொலைபேசி எண்ணை வேகமாகத் தொடர்பு கொண்டாள் சிவப்ரியா.

"அனுவுக்கு வலது கண்ணிலே இலேசா அடிபட்டது. அதைச் சொன்னேன். அவ்வளவுதான். மத்தபடி உடனடியா அவர் வர அளவுக்கு எதுவும் இல்லையே?" என்றாள் மாமி.

அனுவின் கண்ணில் அடி. அதுவும் வலது கண்ணில்! சிவப்ரியாவால் ராம்ஷேகரின் தவிப்பைப் புரிந்து கொள்ள முடிந்தது.

(தொடரும்)



தன்ராஜ் பிள்ளையைத் தெரியும்தானே? 'பன்னிரண்டு வருடங்களாக இந்திய ஹாக்கி அணியில் விளையாடிக் கொண்டிருப்பவர். முன்னாள் கேப்டன்; மூன்று ஒலிம்பிக்குகளைச் சந்தித்தவர்... அவர்தானே' என்கிறீர்களா? அது பழைய கதை.

நாம் சந்திக்கப்போவது ஒரு கடத்தல் கதையின் கதாநாயகனான தன்ராஜ் பிள்ளையை. லஷ்கர்-இ-தோய்பாக்காரர்கள் ஹிட்லிஸ்டில் இவர் இடம் பெற்றிருப்பதாகவும், இவரை 'கிட்நாப்' செய்யப் போவதாகவும் ஒரே கலக்கல்ஸ். ஐயோ... இது எங்கவீட்டுப் 'பிள்ளை'யாயிற்றே. (தமிழ்க்காரருங்க) என்னவோ ஏதோ என்று அவரைப் பிடிக்க யத்தனித்தோம். எக்கச்சக்க செக்யூரிட்டிக்கு இடையில் அவரைக் கண்டு பிடித்ததே தனிக் கதை. (அதெல்லாம் இங்கே எதற்கு?) காதும் காதும் வைத்தார்போல் நடந்த பேட்டியை உங்கள் காதில் போடாவிட்டால் நமக்குத் தலை வெடித்துவிடாதா? இதோ... தன்ராஜ் பற்றி...

திருச்சிக்காரரான இவர், பிறந்து வளர்ந்ததெல்லாம் புனேவில்.

"எங்கள் குடும்பமே ஹாக்கி குடும்பம்தான். அப்பா புனேவிலுள்ள 'கர்கியன்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப்'பிற்கு விளையாடிக் கொண்டிருந்தார். பெரியண்ணன் ரமேஷ், இந்திய அணிக்காக 1985ல் ஆம்ஸ்டர்டாமில் விளையாடினார். கணேஷ், விஜய் என்ற அடுத்த இரண்டு

பிள்ளை(யை



ப் பிடிக்கப் போறாங்களாமே?

அண்ணன்களும் மஹாராஷ்ட்ரா அணியில் இடம் பெற்றவர்கள். 1980ல் நானும் 'கிர ஸென்ஸ் க்ளப்'புக்காகத்தான் ஆட ஆரம் பித்தேன்." என்று ஆரம்பித்தவர், "என் தாய் ஆண்டாளம்மாதான் என்னை ஊக்குவித்து இந்த நிலைக்கு உயர்த்தியவர். என் குடும் பத்தின் ஒட்டு மொத்த உழைப்பும் என் உயர்வில் அடங்கியுள்ளது" என்றார் நன்றிப் பெருக்குடன்.

இவரது நீண்ட கால ஹாக்கி வாழ்வில், 1998ல் பாங்காக்கில் நடந்த ஏஷியன் கேம்ஸில் பெற்ற வெற்றிதான் மறக்க முடியாததாம். '32 ஆண்டுகளுக்குப்பின் இந்தியாவுக்குத் தங்கத்தை ஜெயித்து வந்த அந்த நேரம் பொன்னான'தாம். மிகவும் 'சவாலா'ன மாட்ச், சென்னை ராதா கிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடந்த 'எஸ்.ஏ.எப். கேம்ஸ்'ஸாம். 'என் தாய் மண்ணில், 40,000 ஹாக்கிப் பிரியர்கள் அதைப் படபடப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்களே?' என்று காரணம் சொல்கிறார்.

குணம் காணும் இடத்தில் கோபத்தைக் காணாதிருக்க முடியுமா? 'பிள்ளை'வாளுக்கு முன்பெல்லாம் மூக்கிற்குமேல் கோபம் வருமாம். "என் திறமையை முழுமையாகக் காட்ட முடியாதபோது எரிச்சலடைந்து கோபப்படுவேன். அணியில் மற்றவர்கள் சரியாக விளையாடவில்லை என்றாலும் கோபம் பொத்துக் கொண்டு வரும். இதனால் பாதிப்படைவது இந்திய வெற்றி ஆயிற்றே?" என்கிறார், கோபப்படாமல். நீண்டகால அனுபவம், ஓரளவு சாந்தப்படுத்தி, அடக்கி வாசிக்கக் கற்றுக் கொடுத்துவிட்டதாம்.

"உலகக் கோப்பைக்கு (எடின்பரோ) உங்களை செலக்ட் செய்யாதவர்கள், மலேசிய கோப்பைக்கு (ஆசியான் ஷா கப்) மட்டும் தேர்ந்தெடுத்ததன் மர்மம் என்ன? கேப்டன் பதவிக்கும் அதற்கும் ஏதாவது சம்பந்தம்...?" என்று நாம் சந்தேகப்பட்டபோது 'மர்ம மெதுவு மில்லை' என்றார் சலனமில்லாமல். 'பெங்களூர் டோர்னமெண்ட்'டில் முட்டியில் அடிபட்ட தால், உலகக் கோப்பை தேர்வு லிஸ்டில் இடம் பெற முடியவில்லை. மலேசிய கோப்பைத் தேர்வின்போது நான் 'ஃபிட்'டாக இருந்தேன். அவ்வளவே கேப்டன் பதவிக்கும் இதற்கும் முடிச்சுப் போடாதீர்கள்' என்றார் ஆணித் தரமாக.

ஹாங்... அப்புறம்... அந்தக் கிட்நாப் கதை...

"எனக்கோ என் குடும்பத்தாருக்கோ லக்ஷர்-இ-தோய்பாவிலிருந்தோ வேறு யாரிடமிருந்தோ எந்தவித மிரட்டலும் வரவில்லை. மராத்திய போலீஸ்தான், என் பெயர் அவர்கள் ஹிட் லிஸ்ட்டில் இருப்ப தாகத் தெரிவித்து, இருபத்து நான்கு மணி நேர பாதுகாப் பளித்திருக்கிறார்கள். தாணாவில் கைதாகிய நாலு நபர்களிடமிருந்து இந்தத் தகவல் அவர்களுக்குக் கிடைத்ததாகச் சொன் னார்கள்" என்று பிள்ளையார் சுழி போட்டார்.

ஆனால் போலீஸ் கமிஷனர் எம்.என்.சிங் இது பற்றித் தமக்கு ஒன்றுமே தெரியாதென் றும், பிள்ளை தன்னை நாடுவதற்கு முன் மீடியாவை நாடியதாகவும் சொல்லி ஒருபுதுக் குழப்பத்தை ஏற்படுத்தினார். பிள்ளையோ தனக்குப் பப்ளிசிடி தேவையே இல்லை என்றும், பன்னிரண்டு வருடங்களாக விளை யாடிக் கொண்டிருக்கும் ஹாக்கி அதை நிறையவே வாரி வழங்கியிருக்கிறதென்றும் மறுதளித்தார். சிங் ஏன ஆட்சேபிக்கிறார் என்ற கேள்விக்கு, "அதை உங்கள் வாசகர்களின் ஊகத்துக்கே விட்டு விடுங்கள்" என்ற சாமர்த்திய பதில் வந்தது!

மும்பை அண்டர்வர்ல்டிடமிருந்து ஏதாவது மிரட்டல் உண்டா? என்று நாம் கவலைப் பட்டதற்கு, "ஐயோ நான் ரொம்ப நல்ல பிள்ளைங்க, எனக்கு அண்டர்வர்ல்ட் தொடர் பெல்லாம் ஒன்றும் கிடையாது' என்கிறார்.

அது சரி.. செக்யூரிட்டியுடன் கூடிய வாழ்வு எப்படியிருக்கிறதாம்..?

"இரண்டு மாதங்களாக எனக்கு செக்யூ ரிட்டி அளிக்கப்பட்டு வருகிறது. அது தேவை என்று நான் நினைக்கவில்லை. ஆனால் மும்பை போலீஸ், 'தேவை' என்று நினைக்கும் வரை பாதுகாப்பு தொடரும்.

"அதற்காக நான் வீட்டில் முடங்கிக் கிடக்க வில்லை. அங்கேயும் இங்கேயும் பயணித்துக் கொண்டுதான் இருக்கிறேன். போனவாரம் கூட பெங்களூர் போய் வந்தேன். ஆனால் முன்பெல்லாம் வாரத்தில் மூன்று நாள் என் கார் புனே - மும்பை ஹைவேயில் பறந்து கொண்டிருக்கும். இப்போது அது குறைந்து

விட்டது. செம்பூரில் அண்ணன் வசிக்கிறார். சகோதரியும் மும்பை வாசிதான். ஆனால் இங்கெல்லாம் முன்பு போல் அடிக்கடி போக முடியவில்லை. என் ஃப்ளாட்டில் நான் மட்டுமே இருக்கிறேன். (இன்னும் கல்யாணம் ஆகலீங்க. காதலியும் இருக்கறதாச் சொல்ல லீங்க. லேடி ஃபான்ஸ் கவனிங்க.) தானே சமைத்துக் கொள்ள போரடிக்கும்போது, ஹோட்டல் சாப்பாடுதான். பொழுதுபோக, இருக்கவே இருக்கிறது ஸ்போர்ட்ஸ் மாக ஸீன்ஸ், சினிமா பத்திரிகைகள்..."

'தன்ராஜைக் கடத்தும் எண்ணமே எங்களுக்கிருந்ததில்லை. ஒழுங்கான இந்தியப் பிரஜைகளைத் துன்புறுத்தவே மாட்டோம்' என்ற ரீதியில் ல-இ-தோ அறிக்கை விட்டிருக்கிறதே? இது பற்றி தன்ராஜ் என்ன நினைக்கிறார்.

'அவரவர் உயிர்க்கு ஆபத்து எனும்போது ஜாக்ரதையாக இருக்கத்தான் தோன்றும். அந்த விதத்தில் நான் மராத்திய போலீசை நம்பவே விரும்புகிறேன். ஆனால் ல-இ-தோ அறிக்கையை முழுமனத்துடன் வரவேற்கவே செய்கிறேன்' என்றார்.

எதிர்காலத் திட்டம்?

மும்பையிலும் பெங்களூரிலும் பயிற்சிப் பள்ளி நிறுவி (ஹாக்கி அகாடமி) கோச்சிங் கொடுக்க திட்டமிடுகிறாராம். ஹாக்கியை 'ப்ரொஃபஷனல்'லாக 'மார்கெட்' செய்தால், இந்தியாவில், கிரிக்கெட்டின் இடத்தை அது நிச்சயம் பிடிக்கும் என்கிறார்.

அரசியல்..? ஊஹூம்... அதில் நுழையும் எண்ணமே இல்லையாம். "அதுதான் வேண்டிய அளவுக்கு ஹாக்கியிலேயே நுழைந்திருக்கிறதே?" என்று கொக்கிபோடுகிறார்

அப்புறம்... தமிழ்ப் படங்கள் பார்ப்பதுண்டாம். ஃபேவரிட் மூவி ரத்தக் கண்ணீராம்! அதில் எம்.ஆர். ராதாவின் நடிப்பாம். பிடித்த நடிகர் சிவாஜிதானாம். 'அவர் இன்று இல்லை என்றாலும், என்றும் என் மனதில் வாழ்வார்' எனறார் உணர்ச்சிப் பெருக்குடன்.

அதுசரி... கிரிக்கெட்டை வைத்து ஒரு படம்வந்து ஹிட்டாகிவிட்டது. இனி ஹாக்கி, ஃபுட்பால், பாஸ்கெட் பால், கிட்டிப்புள் என்ற தொடரை எதிர்பார்க்க வேண்டியதுதானே... அப்படியே ஹாக்கியை மையமாகக் கொண்டு ஒரு படம் தயாரிக்கப்பட்டால், தன்ராஜுக்கு நடிக்க ஆசையா என்றால், "ஒய் நாட்?" என்கிறார். ஹாக்கி ப்ளேயராக ரொம்ப 'கம்ஃபர்டபிளாக' நடிப்பேன் என்று சத்தியம் செய்கிறார். தமிழ்த் திரை உலகத் தயாரிப்பாளர்களே... அவர் ரெடி... நீங்க ரெடியா?

- ஜெயஸ்ரீ ராஜ்



என் இளமையின்
ரகசியம்....
15 கிலோ வெயிட்டு
குறைஞ்சு போச்சு!
... தன்னம்பிக்கை
வந்துடுச்சு!!
இதே போல் உங்கள்
உடல் எடை குறைய
தொடர்பு கொள்ளுங்கள்
ஹேர் ட்ரீட்மெண்ட்
இந்த முறையின் மூலம்
30 கிலோ வரை
எடை குறைக்கலாம்
BODY FOCUS
105, ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு, சென்னை – 31. போன் : 8220044, 8220055
www.bodyfocus.org

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி-2001

முடிவுகள்:



• பாம்பே கண்ணன்



• ஞாநி



• எஸ். சங்கரநாராயணன்



• ஏ. நடராஜன்

ஆயிரக்கணக்கான வாசக எழுத்தாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்த இவ்வாண்டு சிறுகதைப் போட்டிக்கு, எழுத்தாளர்கள் ஞாநி, எஸ்.சங்கரநாராயணன், பாம்பே கண்ணன், ஏ. நடராஜன் ஆகியோர் நடுவர்களாக இருந்தனர். இவர்களுடன் கல்கி ஆசிரியரும் இணைந்து, இறுதிச் சுற்றுக் கதைகளைப் பரிசீலித்ததில் கீழ்க்கண்ட சிறுகதைகள் பரிசுக்குரியனவாகத் தேர்வாயின:

முதல் பரிசு : ரூ. 5000

'உளர்ச்சோறு'

அபிமானி. (இ.மணி)
49, டைப் II, பாரதி நகர்,
துறைமுகம், தூத்துக்குடி - 4

இரண்டாவது பரிசு : ரூ. 3000

'மாறுதல்'

சாம்பவி

201 - K, சுந்தர்நகர்,
திருநகர், மதுரை - 6

மூன்றாவது பரிசு : ரூ. 2000

'சென்ற நேரத்தில்'

வி. மணி
43, ரயில்வே காலனி,
சீக் ரோடு, செகந்திராபாத் - 26

(இரண்டு) ஆறுதல் பரிசுகள்

தலா : ரூ. 1000

'இராப் பாடம்'

வே. குருநாதன்,
ஆ. லட்சுமிபுரம்,
TNL ஆலங்குளம்,
626 127

'கிராமத்தில் சில மாஞ்செடிகள்'


படுதலம் சுகுமாரன்,
80, சீனிவாச நகர்,
அஸ்தினாபுரம்,
சென்னை - 64



- முதல் பரிசுக் கதை இந்த இதழில் வெளியாகிறது.
- பிரசுரத்துக்குத் தேர்வான பிற கதைகளின் பட்டியல் அடுத்த இதழில்.
- பரிசு பெற்றோருக்கு வாழ்த்துகள். கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி.

— ஆசிரியர்

வாழ்வில் முடிவெடுத்த அந்தத் தருணம் என்றும் பசுமையானது...



அதற்கு ஈடான மற்றொரு தருணம் நீங்கள் யெஸ்டி அஸோஸியேடட் பில்டர்ஸிடம் இல்லம் வாங்கும் இனிய தருணம்தான்!



அண்ணா நகர், தி. நகர், நங்கநல்லூர், வேளச்சேரி, முகப்பேர் (கிழக்கு) மற்றும் பிற இடங்களில் அழகிய தரமான டீலக்ஸ் ஃபிளாட்டுகள் மற்றும் தனி வீடுகள் வாங்க

அணுகுங்கள்

CREATORS
NOT JUST BUILDERS

YESDE ASSOCIATED BUILDERS LTD.

(FLAT PROMOTERS & PROPERTY DEVELOPERS)

402, "Challamall" 17, Thyagaraya Road, (Pondy Bazaar),T. Nagar,
Chennai - 600 017. Phone: 4340224/4333636/4342667 Fax: 044-4340210

E.Mail:yesde@md3.vsnl.net.in Web:www.yesde-builders.com

பட்டம்

பறக்கிறாய்
சந்தோஷத்தில்.
பட்டத்துடன்
மரக்கிளையில்
சிக்கச் செய்யும்
கீழ்க்காற்று
என் அதட்டல்.
சுற்றப்பட்ட நூலுடனும்
சுருட்டி வைக்கப்பட்ட வாலுடனும்
எனக்குத் தெரியாதென
புத்தகப் பையின்
அடியில் மறைத்துவிட்டு
தூங்கிக் கொண்டிருக்கும்
உன் முகத்தில்
தோன்றி மறையும்
புன்னகைக்கான கனவு
அதட்டாத அம்மாவைப் பற்றியும்
பட்டத்திற்கு மேலே
பறந்து செல்லும்
பறவைகள் பற்றியும்
இருக்கலாம்.

இளம்பிறை





நாட்பட்ட எக்ஸிமா, சொரியாஸிஸ், வெண்சர்ம நோய், கடி, தோல்புற்றுநோய் - போன்றவைகளுக்கு தெய்வீக மூலிகை மருத்துவத்தின் அற்புதம்!



[illegible] பல வருட அனுபவத்தின் பயனாக, உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவால் சில வகை பொருட்களை கூட [illegible] ஏற்படும் ஒவ்வாமையினால் தோலில் சிறிய கொப்புளங்கள் தோன்றுதல், அரிப்பு, கொப்புளங்களில் இருந்து நீர் வடிதல், தோல் சிவந்து இருத்தல், தடிப்புடன் காணப்படுதல் போன்ற எக்ஸிமா தோல்நோய்க்கும், செதில் செதிலாக காணப்படும் தோல், கால் பாதங்களில் வெடிப்பு தோலின் மேல் பகுதி வறட்சியாக காணப்படுதல் கொப்புளங்களை கிள்ளினால் ரத்தம் வருதல், தோல் சிவந்து காணப்படுதல், கை, கால், இடுப்பு, கழுத்து போன்ற இடங்களில் உள்ள மூட்டுகளில் வலி ஏற்படுதல், உடலின் மடிப்பு பகுதிகளில் அரிப்பு கொப்புளங்கள் தோன்றுதல் போன்ற அறிகுறிகள் கொண்ட சொரியாஸிஸ் என்கின்ற தோல் நோய்க்கும், உதடு, கை விரல்களின் நுனி, முகம், நெற்றி, முன்கை, உடலின் நடுபகுதி, இன பெருக்க உறுப்புகள் போன்ற பகுதிகளில் வெண்புள்ளிகள் தோன்றுதல், மேலும் உடல் முழுவதும், வெண்படையாக மாறும் வெண்குஷ்டத்திற்கும், தோல்புற்று நோய் மற்றும் குஷ்டத்திற்கும் எவ்வித பின் விளைவுகளும் இல்லாத தெய்வீக மூலிகைகளான வேப்பிலை, வில்வம் துளசி, அத்தி, அருகம்புல், கடுக்காய், பூவரசன், குப்பைமேனி, தும்பை, ஆவாரை, பறங்கிப்பட்டை, நெல்லி, ஆவாரம்பூ, செம்பருத்தி போன்ற மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மருந்துகள் மற்றும் மேல் பூச்சு மருந்துகள் மூலமும், எல்லோராலும் எளிதில் பின்பற்றக் கூடிய உணவு முறை மாற்றத்தாலும் & எளிய உடற்பயிற்சியாலும் விரைவான பலன் பெற ஆலோசனைகளும் & சிகிச்சைகளும் பெறலாம்.

மற்றும் ஆஸ்த்துமா, சர்க்கரை வியாதி, இதய நோய், சிறுநீரகக் கோளாறு, புற்றுநோய், அல்சர், ஆண்மைக் குறைவு, மூட்டுவலி, குழந்தையின்மை குறை போன்ற நோய்களுக்கும் ஆலோசனை பெற தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : **Dr. M.குருபரன் & Dr. M. சபாபதி, Dr. M.சிவசக்தி, S/O. Dr. C.K.மாணிக்கவாசகம்**

P.B. NO. 30, 3,[illegible] நகர் (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர், வேலூர் **DT 635601 ✆ : 04179-20469, 22769**

சென்னை கிளை : **115,** புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - **600 010. ✆ : 044-6424285, 6427638.**

இரு முகவரிகளிலும் ஆலோசனை நேரம் காலை **10.00-1.00 P.M.** மாலை **5.00-7.00 P.M.**

ஒவ்வொரு மாதமும் வெளியூர்களில் டாக்டரை நேரில் சந்திக்க

வேலூர் [illegible] ✆ : [illegible]	**காஞ்சிபுரம்** [illegible] ✆ : [illegible]	**கடலூர் (S.A. DT)** [illegible] ✆ : [illegible]	**விழுப்புரம்** [illegible] ✆ : [illegible]	**திருவண்ணாமலை** [illegible] ✆ : [illegible]
மும்பை 7 & 8-ந்தேதி-10 A.M. TO 6 P.M. The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga (C.R.), PH : [illegible]	**பெங்களூர்** [illegible] ✆ : [illegible]	**ஓசூர்** [illegible] ✆ : [illegible]	**சேலம்** [illegible] ✆ : [illegible]	**ஈரோடு** [illegible] ✆ : [illegible]
கோயம்புத்தூர் [illegible] ✆ : [illegible]	**மதுரை** [illegible] ✆ : [illegible]	**தஞ்சாவூர்** [illegible] ✆ : [illegible]	**திருச்சி** [illegible] ✆ : [illegible]	**நாமக்கல்** [illegible] ✆ : [illegible]
நியூடெல்லி [illegible] A.M. TO [illegible] P.M. South Indian Hotel, [illegible], Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh ✆ : [illegible]	**தர்மபுரி** [illegible] ✆ : [illegible]	**திருப்பூர்** [illegible]-2 P.M. TO 3 P.M. [illegible] ✆ : [illegible]	**உடுமலைபேட்டை** [illegible] ✆ : [illegible]	**திண்டுக்கல்** [illegible] ✆ : [illegible]
தூத்துக்குடி [illegible] ✆ : [illegible]	**திருநெல்வேலி** [illegible] ✆ : [illegible]	**நாகர்கோவில்** [illegible] ✆ : [illegible]	**விருதுநகர்** [illegible] ✆ : [illegible]	**கரூர்** [illegible] ✆ : [illegible]

தகவல் : **SUN, RAJ, VIJAY, D.D T.V.** களில் எமது பேட்டியை காணத்தவறியவர்கள். டாக்டரின் மூலிகைகள் பற்றிய 27 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய **"எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்"** இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய **"என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்"** என்ற இரு புத்தகத்தையும் பதிவுத் தபாலில் பெற ரூ. 130/-மேற்கண்ட முகவரிக்கு **D.D.** அல்லது **M.O.** அனுப்பவும்.

கானல்

பாரதிபாலன்

"எட்டு ரூபாயா எளநீ?" அம்மாவின் முகம் கண்டிப் போயிற்று. சட்டென்று விலகி ஒதுங்கினாள். மெல்ல நகர்ந்து சுவரைப் பிடித்துக் கொண்டு நின்றாள். பால்பாண்டி இளநீரை உள்ளங்கையில் சுமந்து கொண்டு நடந்தான். 'வேண்டாம் வேண்டாம்' என்று கையை விசிறி மாதிரி உதறினாள். அவன் எவ்வளவோ சொல்லியும் மறுத்துவிட்டாள்.

"எட்டு ரூபானா மனசு கேக்குமா? நம்ம சுப்பையா நாடார் தோப்புல சீண்டுவாரில்லாம கெடக்கும். ரெண்டு ரூவா துட்ட நீட்டினா கும்பிட்டு வாங்கிட்டுப் போவாரு."

"அது அந்தக் காலம்மா."

"இப்பவும் தாண்டாப்பா."

வெயிலின் ஏற்றம் கூடிற்று! பஸ் நிறுத்தத்தில் நல்ல கூட்டம். நிற்கக் கூட இடமில்லை. மனுஷப் புழுக்கம் வேறு. கண்களில் பஞ்சலை எழும்பிற்று. அம்மா பஸ் நிறுத்த நடைமேடையில் உட்கார்ந்து விட்டாள். பாண்டி பஸ் வருகிறதா? என்று பார்த்தான். கழுத்தை உயர்த்தி உயர்த்திப் பார்த்தான். முகமெல்லாம் வியர்வை. சைதாப்பேட்டை போக வேண்டும். அங்கிருந்து ஆதம்பாக்கம் பஸ் பிடிக்க வேண்டும். எப்படியும் ஒரு மணியோ ரெண்டு மணியோ! பிற்பாடு ஆபீஸ் போக முடியுமா? வெயில் தணலாய்க் கொட்டிக் கொண்டிருந்தது. உடம்பெல்லாம் பிசுபிசுப்பு ஊறிற்று. வருகின்ற பஸ்ஸெல்லாம் பிதுங்கிக் கொண்டுதான் வருகிறது. ஒருக்களித்துத்தான் நிற்கிறது. அம்மாவால் இதில் ஏறி ஒதுங்க முடியுமா? தூரத்தில் சாலையில் கானல் நீர் தெரிந்தது. மினு மினுவென்று மின்னல் சிதறிக் கொண்டிருந்தது. நாக்கெல்லாம் வறட்சி. அம்மாவைப் பார்த்தான். வாடிப் போய் விட்டாள்.

"ஆட்டோ பிடிக்கட்டுமாம்மா?"

"வேண்டாம். வேண்டாம்' என்று சமிக்ஞை காட்டினாள்.

"சாப்பிடவும் இல்லை. போகலாம்?"

"வேண்டாம்ப்பா.'

"காசப் பார்க்க வேண்டாம்."

பால்பாண்டி எட்டிப் பார்த்தான். ஒரு பஸ் தெரிந்தது. வருகிறதா? போகிறதா? குழப்பமாயிற்று!

"டாக்டர் என்ன சொன்னார்?"

"ஒரு மாசமாவது வைத்தியம் பார்க்கணுமாம்."

"ஊர்லே போய்ப் பாக்குறேன்."

"ஏம்மா?"

"அவளுக்கும் கஷ்டம்பா. எத்தனை பேருக்குத்தேன் பாப்பா. மானாங்கன்னியா செலவாகுதேடா.."

"ப்ச, அத வுடுமா...!"

"வர்றதும் தெரியலெ, போறதும் தெரியலெ."

"ஒரு சிரமமும் இல்லை."

"அவளும் பாவம்டா. நாலுமணிக்கு எந்திரிக்கிறா. அன்னியப் பண்ணி பொன்னியப் பண்ணி உச்சிப் பொழுது ஆயிடுதுடா வேலை. ஒய்வு ஒழிசலுனு இல்லாம என்னடா வேலை. நீயும் வெந்ததையும் வேகாததையும் தின்னுட்டு ஓடுரே... இதுலெ எனக்கு வேற பண்டுவம் பார்க்கணும்."

"சித்திரைக் கழியவும் போகலாம்."

"வெசாளக் கெழமை வாக்குலெ பஸ் ஏத்திவிடு. அங்குனக்குன்ன போயி பாத்துகிடுதேன். ரெண்டு ஊசியைப் போட்டா கேக்கும்."

"இதுவேற. ஈஸிஜி. எல்லாம் எடுத்திருக்கு."

"இங்க எல்லாம் பக்கமாவாடா இருக்கு. தூரம் தொலைவு பயணமாவுள்ள இருக்கு."

"........"

"உங்க ஒடம்புகளெ பாத்துக்கங்கப்பா. ஒய்வு ஒழிசல் இல்லாம இது என்னடா பொழப்பு!"

பால்பாண்டி கானல் தெறிப்பையே பார்த்துக் கொண்டிருந்தான்.

பவானி வெளி ஹாலில் படுத்துக்கிடந்தாள். தலை வாசல்பக்கம் இருந்தது. இதமான காற்று. தத்தித்தத்தி வரும் காற்று. திடுமென தடதடவென்று ஓடிவரும். அப்படிப்படுக்க அவளுக்குப் பிடிக்கும். அலையலையாய் வரும் காற்று சுகம். உடல் அசதி போய்விடும். பால்பாண்டியும் அம்மாவும் கறுத்துப் போய் வந்தார்கள்.

"ஆட்டோ பிடிச்சு வர வேண்டியதுதானே!"

"கொன்னையிலெ போறவன், இங்குனகுன்னர வர மூப்பது கேக்கான்."

"அப்படித்தான் இங்க."

"எதுக்கு' கூட மூப்பது போட்டா ஊருக்கே



போயிடலாம்'' என்றாள் அம்மா.

''என்னங்க நீங்க, அவங்கதான் புரியாம பேசுனா...''

"கேட்டாத்தானே..."

"சரி. உக்காருங்க. சாப்பிடலாம்."

"முதலெ தண்ணி கொண்டா..."

அவன் அடுப்பறைக்குள் ஓடினான். அம்மா தரையில் காலை நீட்டி உட்கார்ந்தாள். தலைக்கு மேலே சூடான ஃபேன் காற்று! அவளுக்கு அப்படியே கண்ணைக் கட்டிக் கொண்டு வந்திற்று. சேலை முந்தானையைத் தரையில் விரித்துவிட்டு சாய்ந்து விட்டாள்.

"இந்தாங்க தண்ணி..."

மடக்மடக்கென்று குடித்துவிட்டுச் செம்பைத் தரையில் வைத்தாள். "இந்தத் தண்ணிக்குத் தாகம் அடங்காது. கொஞ்சூண்டு நீச்சத் தண்ணி இருக்குதாம்மா?" என்றாள்.

"இல்லையே..."

"சூஸ் குடிக்கிறியாமா. ஏய் ஒரு எழுமிச்சம் பழத்தைப் பிழிஞ்சு கொடு."

"தாட்டாங்கத்தே..."
"வேண்டாம்மா..."
"சாப்பிடுறீங்களா..."
"முதலெ அவன் சாப்பிடட்டும்மா.."
"சாப்பிடுவாரு. நீங்களும் உட்காருங்க.."
"அம்மா காலையிலையும் சாப்பிடலெ..."
"எதுவும் வாங்கிக் கொடுக்கலை?"
"வேண்டாமுன்னுடுச்சு.."
"அடக் கொடுமையே! வாங்க..."

"இந்தப் பய ஊர்லெதேன் தொட்டதுக் கெல்லாம் துட்டுங்கிறானே" என்று அம்மா முகத்தைக் கோணலாக வைத்துக் கொண்டாள். மூக்கை மலர்த்தி உதட்டைச் சுழித்தாள். இது அம்மாவின் சுபாவம்.

சில நாட்களுக்கு முன்பு அம்மாவிடமிருந்து ஒரு கடிதம். அம்மா எழுதிய கடிதம். அப்படியென்றால் எழுத்து அம்மாவுடையது அல்ல. வார்த்தை மட்டும் அம்மாவுடையது. ஒரு வரி வாசித்த உடனே புரிந்திற்று. இதை எழுத அவள் பட்ட கஷ்டம். எழுத ஆள்தேடி அலைந்திருப்பாள். இதற்கெல்லாம் தோதான ஆள் வேண்டும். இந்தக் கடிதத்தை எங்கு உட்கார்ந்து எழுதியிருப்பாள்!

வீட்டிற்குப் பக்கம் ஒரு மரம். வேலியை ஒட்டி நின்றிருக்கும். அதன் நிழல், வீடு முழுக்க நிறைந்து கிடக்கும். மதிய நேரம் திண்ணை முழுக்க பொட்டுப் பொட்டாய் வெயில் உதிர்ந்து கிடக்கும். திண்ணைத் தூணில் சாய்ந்து உட்கார்ந்து கொள்வாள். டெய்லர் ஆறுமுகமோ, கப்பு பண்டாரம் மவன் பவுன் ராஜோதான் கடிதம் எழுதுவது. அம்மா சொல்லச் சொல்ல எழுத வேண்டும். அடிக்கொரு தரம் "என்ன எழுதியிருக்க ஒருக்கா படிச்சுக் காட்டு" என்று கேட்பாள்.

அம்மாவின் மனசைப் படித்து எழுத வேண்டும். பட்பட்டென்று வார்த்தைகள் வராது. அவளுக்கு எதையும் மிதித்துவிடக் கூடாது. எதிலும் இடறிவிடக்கூடாது. இருள் நடையாகத்தான் வார்த்தைகள் வரும்.

கால்வலி, நெஞ்சுவலி என்று உசிரை உழுக்குகிறது. முன்பு மாதிரி வந்து பார்க்க உனக்குத் தோதுபடுவதில்லை. உன்னையும் பிள்ளைகளையும் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது. அப்படியே அங்கு டாக்டரிடம் காட்ட தோதுப்படுமா? சின்னவனுக்கு வியாபாரம் சரியில்லை. நடுவுள்ளவனுக்குப் பரவாயில்லை. கைக்கும் வாய்க்கும் சரியாக இருக்கிறது. நம்ம வூட்டுத் திண்ணையிலே பொங்கிச் சாப்பிடுகிறேன். நல்லது பொல்லாது செய்தால் இருவருமே கொடுத்து விடுவார்கள். சந்தோஷமாகத்தான் இருக்கிறேன்.

உனக்கு வசதிப்படும் என்றால் கிளம்பு இறேன். என்னால் தூரம் தொலைவு விவரமாக வரத் தெரியாது-மொக்கையா வாத்தியார் மவனுக்கு மெட்ராஸ்லெ ஒரு ஜோலி இருக்காம். அவனுக்கும் பஸ் சார்ஜ் போடணும்-திரும்பும்போது அவன் பார்த்துக்கிறானாம். விவரமாக எழுதினால் நலம்.

அம்மா சட்டென்று இப்படிக் கிளம்பியிருக்க மாட்டாள். ஊரில் ஊதியிருப்பார்கள். பரமசிவம்பிள்ளையும் செல்லப்ப நாடாரும் செய்த வேலையாகத்தான் இருக்கும். இருவருக்கும் வாய் அகலம். எதையாவது ஊதிப் பெரிசாக்க வேண்டும்.

"ஏன் சின்னமா இப்படி இருக்கிய. பெரிய மவன்கிட்டப் போய்க் கொஞ்ச நாள் இருந்துட்டு வரலாமுல்லெ..."
"அதுக ஜோலி தொந்தரவு எப்படியோ..."
"சர்க்கார் உத்தியோகம். இப்பத்தான் மடமடன்னு சம்பளத்தைக் கூட்டிப் போட்டானே. அங்க இல்லாத வசதியா?" என்று தூண்டியிருப்பார்கள்.

"அந்த ஆபீஸ்ல வஞ்சம் தர்றவங்களுக்கெல்லாம் ஒரு கூப்பன் கொடுக்கறாங்களே, எதுக்கு?"
"மாசக் கடைசில எல்லா கூப்பனையும் குலுக்கிப்போட்டு மூணு பேருக்கு மெகா பரிசு தரப்போறாங்களாம்...!"
– சீர்காழி ரேவதி

காலை நாலு மணிக்கெல்லாம் விளக்கு விழித்துக்கொள்ளும். பவானி தான் முதல் படுக்கையைச் சுருட்டுவாள். அடுப்பறையில் புகுந்து கொண்டு எலி மாதிரி உருட்டிக் கொண்டிருப்பாள். குக்கர் இணறித் இணறி மூச்சு விடும். ஐந்து மணிக்குக் கிழிந்த லுங்கியைக் கட்டிக் கொண்டு பாண்டி, படியிறங்கி விடுவான். பால் பாக்கெட்டையும் பேப்பரையும் சுமந்து கொண்டு திரும்புவான். குழந்தைகளை ஒவ்வொன்றாய் எழுப்புவான்.

பவானி அடுப்பறைக்கும், உள் அறைக்கும் ஹாலுக்கும் நடையெடுத்துக் கொண்டிருப்பாள். முள் எட்டைத் தொடுவதுதான் தாமதம். ஒவ்வொன்றாய்ப் படியிறங்கிவிடும். வெந்ததையும் வேகாததையும் தின்றுவிட்டுக் கிளம்பும்.

எல்லோரும் தெருவைத் தாண்டிய உடன் பவானி நாற்காலியில் போய்ப் பொத்தென்று விழுவாள். உடம்பெல்லாம் பிசுபிசுவென்று

இருக்கும். தலைமுடிகள் கட்டுக்கடங்காமல் சிதறிக் கிடக்கும். டீ.வி. பெட்டியைத் திருகிவிடுவாள். இரைச்சல். என்ன காட்சி, என்ன ஒலி ஒன்றும் மனத்தில் விழாது. பார்வை மட்டும் பெட்டியில் இருக்கும். அப்படிச் சிறிது நேரம்.

பத்து பத்தரைக்குத்தான் காலை டிபன். எல்லாம் முடித்து தட்டுகளை எல்லாம் தூக்கிப் போட பதினொன்றாகிவிடும். பிற்பாடு மார்க்கெட் கிளம்புவாள். மார்க்கெட் இல்லாத நாட்களில் மளிகைக் கடைக்கு நடக்கும்படி இருக்கும். வீடு திரும்ப பன்னிரண்டாகிவிடும்.

வந்ததும் காப்பியைச் சுட வைத்துக் குடிப்பாள். குடித்ததும் அன்றைய அழுக்குளை அள்ளிக் குளிப்பாள். ஒவ்வொன்றாய்ச் சோப்புப் போட்டு அலசி எடுக்க, போதும் போதும்



என்றாகிவிடும். நூல் மாதிரி தண்ணீர் ஒழுகும்.

மதியச் சாப்பாட்டிற்குத் தட்டுப் போடுவாள். தடமுடாவென்று சப்தம் கிளம்பும். தெருவே நிறைந்துவிடும். இடக் கோடியில் இருந்து வடக் கோடிக்குக் கூட்டம் ஓடும். இத்தனைக் கூட்டமும் இதுவரை எங்கிருந்தது? எலிப் பொந்தில் மண் வெட்டி இறங்கியதும் எழும் எலிக் கூட்டம் மாதிரிக் கூட்டம். கீச் மூச்சென்று குரலெழுப்பிக் கொண்டு ஓடும் கூட்டம். தண்ணீர் லாரி வருவதுதான் தாமதம். அந்த வாசனை எப்படித்தான் தெரியுமோ? பவானியும் பிளாஸ்டிக் குடங்களைத் திரட்டிக் கொண்டு ஓடுவாள். இரண்டு மூன்று நடை. உடம்பு நனைந்து, வாய் உளறிக் கொண்டே திரும்புவாள். அம்மாவுக்குச் சங்கடமாக இருக்கும். என்ன செய்ய முடியும்? அவளுக்கு நடப்பதே சிரமம்.

ஒத்தாசையாக இருக்க முடியவில்லையே என்று வருத்தம். நான் செய்கிறேன்.... நான் செய்கிறேன் என்று போவாள். பவானி விட மாட்டாள். "நீங்கள் போய் உக்காருங்கள்" என்று விரட்டி விட்டுவிடுவாள். மதியம் மாவாட்டுகிறேன். பழசெல்லாம் சுட வைக்கிறேன் என்று பொழுது சுருங்கிவிடும். முன் வெயில் மறைகிறவரை வேலை இருக்கும். பின்பு ஒவ்வொருவராய்த் திரும்புவார்கள். உழுது களைத்துத் திரும்பும் காளைகள் போல் வரும். புத்தக மூட்டைகளை டொப் டொப் பென்று இறக்கிப் போட்டுவிட்டுச் சிறிது இளைப்பாறும். அதுகளுக்குத் தீனி ஏதாவது தயார் பண்ணிக் கொடுக்க வேண்டும். முகம் கழுவி பவுடர் போட்டு டியூஷனுக்குக் கிளம்பி விடுங்கள். வீடு வெறிச்சென்றிருக்கும்.

பால்பாண்டி திரும்ப இரவாகிவிடும். பாவமாக இருக்கும். உயிர் இல்லாமல் திரும்புவான். பிள்ளைகள் ஏதேதோ சொல்லும். மேலே விழும். எழும். அவன் உயிர் இல்லாமல்தான் பேசுவான். பாண்டி நல்ல நிறம். வாய்க்காலில் குளித்துவிட்டுத் திரும்பும்போது எப்படி இருப்பான். மினுமினுவென்று ஒரு நிறம். அப்படி என்ன உத்தியோகமோ? அம்மா அவனைப் பார்த்துப் பார்த்து வேதனைப் பட்டாள்.

சம்பாதிக்கிறான் என்றுதான் பேர். அம்மா பார்த்துக் கொண்டுதானே இருக்கிறாள். கைக்கு எட்டியது வாய்க்கு மிஞ்சுவதில்லை. பாண்டி ஆபீஸர்தான். சம்பளத்திற்கு மட்டும்தான் கை நீட்டுவான். சுத்தமான ஆள் என்று ஆபீஸில் பேர். வீட்டில் அழுக்காக அலையும்படிதான் இருக்கிறது. வீட்டு வாடகை, மூவாயிரத்தை முழுங்கி விடுகிறது! மளிகைச் சாமான்கள், ஸ்கூல் பீஸ், ரெண்டு பேருக்குக் கட்ட வேண்டும். பால், டெலிபோன் பில், எலெக்ட்ரிக் பில், கேபிள், காய்கறிகள், மருத்துவச் செலவு என்று இழுத்துக் கொண்டு ஓடுகிறது. பீச், சினிமா என்று படியிறங்கி விட்டால் அந்த மாதம் பள்ளம் விழுந்து விடுகிறது. இதில் இன்கம்டாக்ஸ், எல்.ஐ.சி. பாலிஸி பிரிமியம் என்று ஏதாவது ஒரு முள் குத்திக் கொண்டே இருக்கிறது. சட்டென்று எடுத்து எறிந்து விட முடியாத முள். ஒரு முள்ளை எடுக்க இன்னொரு முள்ளில் கைவைக்கும்படியாகி விடுகிறது. எத்தனை முள் குத்தினாலும் அவர்கள் முகம் சுழிப்பதில்லை. அதுதான் அம்மாவுக்கு ஆறுதலாக இருந்தது. ஆனாலும் அம்மா அவர்கள் வலியை அறியாதவளா? வலியை முழுங்கிய முகத்தினை படிக்கவா முடியாது? இத்தனை வருஷம் வாழ்ந்த மனுஷிக்கு அந்தப் பாடம் கூடவா தெரியாது. 'ஏதோ பிள்ளை உசத்தியா இருக்கான்னு நினைச்சுக்கிட்டாவது இருந்திருக்கலாமோவென்று பட்டது.' அம்மாவின் மனசு பயணத்திற்குத் தயாராகிவிட்டது. ○

வாழ்க்கையென்றால் ஆயிரம் இருக்கும். வாசல்தோறும் வேதனை இருக்கும்... ஆனால் சோதனைகளே வாழ்க்கையாகி, நெருக்கடியான தருணங்களில் தத்தளிக்கும் பலரையும் நாம் பார்த்திருக்கிறோம். கத்திமுனையில் நடப்பதுபோன்ற அந்த கால கட்டங்களை அவர்கள் எப்படிக் கடந்து வந்தார்கள் என்ற ஆச்சர்யக்குறி நம்மைக் கேள்விக்குறியாய் ஆக்கிரமித்துவிடுகிறது! அதற்கு விடையாக விரிகிறது இந்தச் சிறப்புப் பகுதி. 'வயிரமுடைய நெஞ்சு வேண்டும்' என்பதே பாரதியார் வாக்கு. கல்கி வைரவிழாவை முன்னிட்டு அதனை 'வைரமுடைய நெஞ்சு வேண்டும்' என்ற தலைப்பில் வழங்குகிறோம். தமிழ்ப் பத்திரிகையுலகில் மூத்த புகைப்படக் கலைஞர்களுள் ஒருவராக விளங்கும் சுபா சுந்தரத்தின் அனுபவத்தோடு தொடங்குகிறது.

எனக்கு அப்போது பதினைந்து வயது. பெரியார், ராஜாஜி, காமராஜ், அண்ணா போன்ற தலைவர்கள் உரையாற்றும் பொதுக் கூட்டங்களுக்கு ஆவலோடு செல்வேன். அங்கே மேடை முன்பாக அமர்ந்து, தலைவர்கள் பேசப்பேச, அதைக் குறித்துக் கொண் டிருப்பார்கள் சிலர். அவர்கள் யார், ஏன் அவர்களுக்கு இத்தனை முக்கியத்துவம் என்ற கேள்வியோடு அலைந்தேன். அவர்கள் பத்திரிகையாளர்கள் என்ற பதில் கிடைத்தது. அந்தக் கணமே நானும் பத்திரிகையாளனாக வேண்டும் என்பதை வாழ்க்கை லட்சியமாக வரித்துக் கொண்டேன்.

ஒரு செய்தியாளராக வாழ்க்கையைத் தொடங்கினேன். அதன் பின்னர் புகைப்படம் எடுக்கவும் கற்றுக் கொண்டேன். மெல்ல மெல்லப் புகைப்படம் எடுப்பதில் ஆர்வம் அதிகரித்தது. ஒரு முழு



• காமராஜருடன் சுபா சுந்தரம்

வைரமுடைய

நேர ஃபோட்டோ ஜர்னலிஸ்டாக மாறினேன்.

இராஜீவ்காந்தி படுகொலைச் சம்பவம் நடந்தபோது நான் ஏ.எஃப்.பி. என்ற பிரெஞ்சு நாட்டுப் பத்திரிகை புகைப்பட நிறுவனத்திற்கு, சென்னையிலிருந்து புகைப்படங்களை அனுப்பும் பணியைச் செய்து கொண்டிருந்தேன். தனிப்பட்ட முறையில் காங்கிரஸ் கட்சிக்குத் தேர்தல் பிரசார கேசட் தயாரித்துக் கொண்டிருந்தேன். படுகொலைச் சம்பவம் பற்றிக் கேள்விப் பட்டதும் துடித்துப் போனேன். காரணம் இயல்பாகவே ராஜீவ் காந்திமீது எனக்கிருந்த பற்று. அச்சம்பவம் நமது தமிழ் மண்ணில் நடந்து, தமிழர்களுக்குத் தீராத கறையை ஏற்படுத்திவிட்டதே என்ற வேதனை. இதைவிட எனக்குப் பயத்தைக் கொடுத்தது பணம் வராதே என்ற கவலைதான்!



தலைவரைப் பறிகொடுத்துவிட்டு எல்லோரும் துன்பத்தில் இருக்கும்போது பிரசாரக் கேசட்டிற்கு

நான் எப்படி பணம் கேட்பது?

இதற்கிடையில் பிரெஞ்சு புகைப்பட நிறுவனத்திலிருந்து, ராஜீவ் கொலைச் சம்பவம் தொடர்பான புகைப் படங்கள் கிடைக்குமானால் உடன் அனுப்பும்படி எனக்குத் தகவல் அனுப்பினார்கள்.

இத்தனை பரபரப்பான சூழ்நிலையில் படத்திற்கு என்ன செய்வது என்று யோசித் துக் கொண்டிருந்தபோது, அமெரிக்க புகைப் பட நிறுவனமான அசோசியேட் பிரஸ்ஸுக்குப் படமெடுக்கும் நண்பரும் சம்பவ இடத்தில் இருந்ததாகக் கேள்விப்பட்டேன். அவர் நிச் சயம் படமெடுத்திருப்பார் என்ற நம்பிக்கை யில் அவரைத் தொடர்பு கொள்ள முயற்சி செய்தேன். அவரையும் இன்னும் சில புகைப் படக்காரர்களையும், பூந்தமல்லி காவல் நிலையத்தில் வைத்திருப்பதாகத் தகவல் கிடைத்தது. உடன் காவல் நிலையத்திற்கே ஃபோன் செய்து, அவருடன் தொடர்பு கொண்டேன். இதைத் தொடர்ந்து என்மீது வழக்கு ஜோடிக்கப்பட்டது.

சி.பி.ஐ. போலீசாரில் ஒரு பிரிவினர், எனக்கு இந்த வழக்கில் தொடர்பில்லை என்றார்கள். மற்றொரு குழுவினர் அதை மறுத்தார்கள். தமிழகத்திற்கே, தடா என்றால் என்ன என்று தெரியாத தருணம். வழக்கில் சேர்க்கப்பட்ட பத்து பேரில் நானும் ஒருவனாய், தடா எஸ்.பி. முன்பு வாக்குமூலம் கொடுக்க நிறுத் தப்பட்டேன்.

நெஞ்சு வேண்டும்!

எஸ்.பி.யிடம் தரப்படும் வாக்கு மூலத்தை வைத்துக் கொண்டு, அவரே தண்டனை வழங்கிவிட முடியும். ஆனால் என்னிடம் வாக்குமூலம் எதுவும் அவர் வாங்க வில்லை. காரணம், வாக்குமூலம் கொடுக்க என்னிடம் எதுவுமே இல்லை.

> “எனது மனைவி அப்படி எனக்குக் கட்டிய பணம் இராஜீவ்காந்தியின் புகைப்படங்களை விற்றுக் கிடைத்ததுதான்.”

முதல் இரண்டு ஆண்டுகளுக்குச் சூரிய வெளிச்சத்தையே பார்க்க முடியாத இருட்டுச்சிறை. உற வினர்கள் தரும் உண வுப் பொருட்களுக்குக் கூடத் தடை. பற்பசை யைக் கூட சிறை அலுவலர்கள் முதலில் தேய்த்துப் பார்த்த பிறகே கொடுப்பார்கள். லுங்கி உட்பட வீட்டி



விருந்து தரப்படும் உடைகளை, இரண்டு நாட்கள் தண்ணீரில் ஊறவைத்து, பின்னர் அவர்களே காயவைத்துத்தான் கொடுப்பார்கள்.

சேலம் மத்திய சிறையிலிருந்து பூந்தமல்லி சிறைக்கு மாற்றப்பட்டோம். அங்கே சிறையோடு கூடிய நீதிமன்றம் எங்களுக்காகவே தொடங்கப்பட்டது. எனது மனைவி, பிள்ளைகளை நினைத்து மன அழுத்தம் அதிகரித்தது. ஆறுமாத காலம் தூக்கம் வராமல் நான் பட்ட அவதிகளைச் சொல்ல வார்த்தைகள் கிடையாது. உறவினர்கள் யாரும் மூன்று வருட காலம் எங்கள் வீட்டுப் பக்கமே வரவில்லை. ஒரு சில நெருங்கிய நண்பர்களைத் தவிர எல்லோரும் ஓடி ஒளிந்து விட்டார்கள்.

> "மாப்பிள்ளை கிரிக்கெட் வீரர்னு சொல்றியே... எப்படி?"
>
> "லட்டு கொடுத்தா பேண்ட்டுலே தேய்ச்சுக்கிறாரே!"
>
> - *தஞ்சை தாமு*

சிறையில் நான் மன அழுத்தத்தால் அவதிப்பட்டபோது, அதை எப்படிப் போக்கிக் கொள்வது என்று தெரியாமல் தவித்தேன். அப்போதுதான் சிறை நூலகம் எனக்குப் போதி மரமானது. அங்கே, தியானம், யோகா குறித்து ஏராளமான புத்தகங்கள் இருந்தன. அவற்றை ஈடுபாட்டுடன் படித்து, தினசரி தியானமும், யோகா முறைப்படி உடற்பயிற்சி செய்வதையும் வழக்கமாக்கிக் கொண்டேன்.

மனத்திற்குத் தெம்பு கிடைத்தது. என்றைக்காவது வெளியே போவோம் என்கிற உறுதி பிறந்தது.

'மரம் சாய்ந்துபோனால் நிலையாகலாம்,
மலை சாய்ந்துபோனால் சிலையாகலாம்'

என்ற பழைய சினிமா பாடலை அடிக்கடி வாய்விட்டுப் பாடுவேன். உடனே உற்சாகம் தொற்றிக் கொள்ளும்.

சிறை நூலகத்தில் இருந்த புத்தகங்களில் படிக்கப் படிக்க, மனத்தில் புதிது புதிதாய் எண்ணங்கள் தோன்றிக் கொண்டே இருந்தன.

அவற்றை நாம் ஏன் எழுதக் கூடாது என்ற எண்ணம் ஏற்பட்ட மறுநாளே எழுதத் தொடங்கினேன். ஆயிரக்கணக்கான பக்கங்கள் எழுதிக் குவித்தேன்.

ஒரு முறை இந்து பத்திரிகையில் செய்தியொன்று வெளியாகியிருந்தது. கேரள மாநிலம் கோழிக் கோட்டில் உள்ள சிறு குளமொன்றில் ஒரு பெண் குளித்துக் கொண்டிருந்தாள். அப்போது அவள் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியைக் கழற்றி, துவைக்கும் கல் மீது வைத்துவிட்டு குளிக்க, ஒரு தவளை அச்சங்கிலியை விழுங்கி விட்டது. உடனே ஊர்க்காரர்களிடம் சென்று, அவள் விவரத்தைச் சொன்னாள். குளத்தில் இருந்த தவளைகள் அனைத்தையும் மீன் வலை கொண்டு அடியோடு அரித்துப் பிடித்தனர். ஒவ்வொரு தவளையாக வயிறு கிழிக்கப்பட்டு, சோதனை செய்யப்பட, அறுபத்து ஒன்பதாவது தவளையின் வயிற்றில் தங்கச் சங்கிலி கிடைத்தது.

இந்தச் செய்தியைப் படித்ததும் என்னை நினைத்து எனக்கு அழுகை வந்துவிட, அமைதியாக இருந்த சிறை நூலகத்திலேயே வாய் விட்டு அழுதேன். எல்லோரும் என்னை நோக்கி ஓடிவந்தார்கள். நான் ஏன் அழுதேன் என்று அவர்களுக்கு எப்படிச் சொல்வது? உடன் அதை எனது நோட்டுப் புத்தகத்தில் இப்படி எழுதினேன்.

ஒரு தவளையால் ஒன்றுமே அறியாத மற்ற அப்பாவித் தவளைகளும் பலியாக வேண்டி வந்தது. இப்படி யாரால் யாருக்கு, எப்படி, எப்போது ஆபத்து வருமென்று யாருக்கும் தெரியாது. தவளை வாய்விட்டுப் பேச முடியாத, ஆறாவது அறிவற்ற உயிர். ஆனால் மனிதன் தன்னை நிரூபித்துக் கொள்ள முடியும். எனவே எத்தனை நெருக்கடியான தருணத்திலும் விதி என்று மனிதன் வீழ்ந்துவிடக் கூடாது. தவறிழைக்காத மனிதன் தெய்வத்திற்கேகூட பயப்படத் தேவையில்லை என்று எழுதினேன்.

இதைப் படித்த சிறை அதிகாரி என்னை தட்டிக் கொடுத்தார். உனது மன உறுதி என்னை வியக்க வைக்கிறது என்றார்.

எனது சிறை வாழ்க்கை குறித்து நான் கவலைப்படாவிட்டாலும், எனது மனைவி, பிள்ளைகள் எப்படிப் பிழைப்பார்கள் என்ற சந்தேகம் எழுந்தது. நல்ல வேளையாக எனது மனைவி நளினியை அடிக்கடி அலுவலகத்திற்கு அழைத்து ஸ்டூடியோ நிர்வாகம் பற்றிச் சொல்லிக் கொடுத்திருந்தேன். புகைப் படங்களைக் கலர் பிரிண்ட் போடவும்

கற்றுக் கொடுத்திருந்தேன். அது இந்த எட்டாண்டு காலமும் எனக்குக் கை கொடுத்தது. அவளே அலுவலகத்தைப் பராமரித்தாள். ஆனால் வாடிக்கையாளர்களில் பெரும்பகுதியினர் ஸ்டூடியோவைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. வருமானம் குறைந்து போனதால், எனது பிள்ளைகளை, பள்ளிப் படிப்பிற்குப் பிறகு கல்லூரிக்கு அனுப்ப முடியவில்லை. இத்தனை நெருக்கடியான சூழ்நிலையிலும், ஒவ்வொரு ஆண்டும் இராஜீவ்காந்தி நினைவு நாள் வந்தபோது இராஜீவின் புகைப் படங்கள் கேட்டு, கட்சிக்காரர்களும், பத்திரிகைகளும் எனது ஸ்டூடியோவிற்கு வந்து, வாங்கிப் போனதில் கொஞ்சம் பணம் கிடைத்திருக்கிறது. சிறையில் 'ப்ரிசனர்ஸ் கேஷ் ப்ராப்பர்ட்டி' என்ற பிரிவின் கீழ், சம்பந்தப்பட்ட சிறைவாசிக்கு உறவினர் பணம் கொடுத்தால், அதிலிருந்து நமக்குத் தேவையான பற்பசை, குளியல் சோப், போன்ற பொருட்களை வாங்கிக் கொடுப்பார்கள். எனது மனைவி அப்படி எனக்குக் கட்டிய பணம் இராஜீவ் காந்தியின் புகைப்படங்களை விற்றுக் கிடைத்ததுதான்.

சிறையிலிருந்து எனது மகனுக்கும், மகளுக்கும் வாரம் ஒரு கடிதம் எழுதுவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். சிறை வாழ்க்கையின் இறுக்கத்தைக் குறைத்துக் கொள்வதற்கு இதுவும் எனக்கு மாமருந்தாக இருந்தது என்றே சொல்ல வேண்டும். எனக்குப் பிறகு எனது மகன் அருண், துணிந்து புகைப்படம் எடுக்க வந்ததில் எனக்கு மகிழ்ச்சி. 'போயஸ் தோட்டத்திலிருந்து வெளியே வரும் முதல்வருக்காக கேமராவுடன் காத்திருந்த புகைப்படக்காரர்கள்' என்று அப்போது ஒரு படம் தினசரி பத்திரிகை ஒன்றில் வெளிவந்திருந்தது. அதில் ஓர் உயரமான கல்மீது ஏறி எனது மகன் கேமராவுடன் அமர்ந்திருந்ததைப் பார்த்ததும் சந்தோஷம். உடனே அவனுக்கொரு கடிதம் எழுதினேன். 'உனக்கென்று ஒரு தனியிடத்தைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் விதமே, உன்னை வேறுபடுத்திக் காட்டுகிறது' என்று எழுதினேன்.



எனது கடிதங்களைத் தணிக்கை செய்த சிறை அதிகாரி "உனது கடிதங்களை ஒரு புத்தகமாகவே போடலாம். கடித இலக்கியம் என்று சொல்லும்படி இருக்கிறது" என்று என்னை ஊக்கப்படுத்தினார். எத்தனை உற்சாகமாகக் கடிதம் எழுதினாலும், என்னை நினைத்து உருகிய எனது மகள் சித்ராவின் உடல்நிலை மிகவும் மோசமடைந்ததை மனைவி மூலம் அறிந்து, என்னால் கலங்காமல் இருக்க முடியவில்லை. இருந்தும் விரைவில் விடுதலையாகி விடுவோம் என்கிற நம்பிக்கையை மட்டும் நான் இழக்கவில்லை.

ஆனால் 1998 ஜனவரி 28ல் வழங்கப்பட்ட தீர்ப்பில் எனக்கும் சேர்த்து இருபத்தாறு பேருக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டபோது, என்னால் நம்பவே முடியவில்லை. எங்களோடு பழகிய போலீஸ்காரர்கள், சிறை அதிகாரிகள், ஏன் வக்கீல்கள்கூட அழுதனர். அவர்களை நான் தேற்ற வேண்டி வந்தது!

ஜெயிலுக்கு வெளியே, விடுதலையாகப் போகும் என் போன்றவர்களைப் படமெடுக்க என் மகனும் வந்து, அதிர்ச்சியுடனும், கலங்கிய கண்களுடனும் திரும்பிப் போனதை மறுநாள் பத்திரிகைகளில் புகைப்படச் செய்தியாகப் படித்தேன்.

எனது உறுதியும் தர்மத்தின் மீதிருந்த நம்பிக்கையும் எனக்கு 1999 மே 11 கிடைத்த தீர்ப்பில் விடுதலை வாங்கிக் கொடுத்தன. தாலிக் கொடியைக் கூட எங்களின் மேல் முறையீட்டு வழக்கிற்காகக் கொடுத்த உள்ளங்கள் அநேகம். விடுதலையாகி வெளியே வந்ததும் முதலில் அவர்களுக்குதான் நன்றி சொன்னேன்.

இன்று உற்சாகமும், உழைப்பும் கொஞ்சமும் குறைந்துவிடாத அதே சுபா சுந்தரமாக எனது பயணத்தைத் தொடங்கி விட்டேன். என்னை வாழ வைத்தது, இன்னும் வாழ வைத்துக் கொண்டிருப்பது, எனது தன்னம்பிக்கை. என்மீது மற்றவர்கள் வைத்திருந்த நம்பிக்கை.

- தொகுப்பு : **ஜெயந்தன்**

பூவரசம் வீடு

***"வா**ழ்வரசி வயிறெரிஞ்சா
காலுரசி மண்ணெடுத்தா
போனதிசை தூத்திவிட்டா
பூவரசு மொளைச்சதங்கே."*

பெருமாயிப்பாட்டி மூட்டு வலிக்கு ஏதோ ஒரு இலையை வதக்கிக் கட்டியபடி முனகிக் கொண்டிருந்தாள். பல்வேறு சந்தர்ப்பங்களில், புரண்டு படுக்கும் போதும், சோம்பல் முறிக்கும் போதும் அவள் எதையாவது முனகுவாள். முதுமை அவளுக்கு அளித்திருக்கிற அசௌகரியங்களைத் தளர்த்தி, தன்னைச் சௌகர்யப் படுத்திக் கொள்ளும் போதெல்லாம் அவளது வாயிலிருந்து இப்படி ஏதாவது உதிரும். அது பாட்டா, சொலவடையா, புலம்பலா என இனங்காண்பது கடினம். அவள் எது மாதிரியும் இல்லாத புது மாதிரி ஏற்ற இறக்கங்களுடன்தான் எல்லாவற்றையும் வெளிப் படுத்திக் கொண்டிருந்தாள்.

சரவணனுக்கு, 'பூவரசு முளைச்சது' என்பது மட்டும்தான் புரிந்தது. 'இந்த அரிய உண்மையை எதுக்குக் கிழவி புலம்புது?' என்று தோன்றியது அவனுக்கு. புரண்டு படுத்துப் பார்த்தான். வெயில் தாழ்ந்து கொண்டு இருந்தது. வெளியே கிளம்பலாமா? இல்லை இன்னுங் கொஞ்சநேரம் இப்படியே புரளலாமா? என்று குழப்பமாயிருந்தது. இருபத்தியோரு வயதில் கிராமத்தில் வேலையில்லாத இளைஞனாயிருப்பதில் வெட்டிப் பொழுது போக்குவதன் சந்தோஷமும், வெட்டியாகவே எல்லாப் பொழுதும் போகிறதே என்கிற சங்கடமும் ஒருசேர ஏற்படுகிறது. காலையில் எழுந்து கொண்டதுமே முழுசாக ஏகப்பட்ட மணி நேரங்கள், முன்னால் நின்று பயமுறுத்துகின்றன. பெருமாயிக் கிழவிக்குப் பிரச்னையில்லை. அவளது வயோதிகம் காரணமாக பெரும்பாலான நேரங்களில் கஞ்சா அடித்தது மாதிரி 'திம்'மென்று ஒரு அரைமயக்க நிலையில் இருக்கிறாள்.

'விசுக்'கென்று உலுப்பிக் கேட்டால் 'அந்த நந்தகோபாலசாமியை நெனைச்சுக்கிட்டிருந்தேன்' என்று தனது கோழித் தூக்கத்துக்குத் தெய்வீக அந்தஸ்து கொடுத்து விடுவாள்.

பெருமாயி புரண்டு புரண்டு படுக்கிற, அவ்வப்போது டி-ஷர்ட்டுக்குள் காற்றை ஊதிக் கொள்கிற பேரனைக் கவனித்தாள்...

''கழுதை அந்தக் கலருப் பனியனை அவுத்து எறிய வேண்டியதுதானடா?'' என்றாள்.

பொதுவாக சரவணன், பாட்டியின் அறிவுரைகளைச் செவி மடுப்பதில்லை. இப்போதும் அப்படியே... 'சும்மாரு கெழவி' என்றான்.

"நீ என்னைக்குத்தான் பெரியவக சொல் கேட்டிருக்க... இப்பக் கேக்கப் போற."

''ஏம்பாட்டிக் கொஞ்சமுன்னாடி ஒரு பாட்டு மாதிரி என்னமோ சொன்னியே... அடிக்கடிப் புலம்புறியே அது என்னா பாட்டு?''

கிழவிக்கு, படித்த பேரன் தன்னிடம் ஏதோ சந்தேகம் கேட்கிறான் எனத் தோன்றியதும்





பாஸ்கர் சக்தி

1

பெருமிதம் கூடி விட்டது. பல இசை ஆல்பங்களை வெளியிட்ட பாடகிக்குரிய அலட்டலான குழப்பத்துடன்,

"எந்தப் பாட்டையடா கேக்குற? பொறந்த பாட்டா? வளந்த பாட்டா? இருந்த பாட்டா! இழந்த பாட்டா? எதையின்னு சொல்லுவேன்! எதைக் கேக்குறவன் நீ? விவரமாக்கேளு சொல்றேன்."

சாதாரணமாகவே கிழவியிடம் பேசப் பொறுமை பற்றாதவன் சரவணன். அவன் மட்டுமில்லை. கலியுகத்தில் இளைஞர்களுக்குப் பெரிசுகளிடம் நின்று பேச நேரமெங்கே இருக்கிறது? சரவணனுக்கோ முழு நாளின் மொத்த மணிகளையும் பேசித் தீர்ப்பதற்கென்றே நண்பர்கள் இருக்கிறார்கள். கட்டம்போட்ட கைலியும், காட்டன் சட்டையும் அவர்களது சீருடையாக இருக்கிறது. தேநீர் அவர்களது தேசிய பானமாக இருக்கிறது. சிகரெட் அவர்களது சுவாசமாக இருக்கிறது. பெண்கள் அவர்களது கனவாக இருக்கிறார்கள்.

"எனக்கு நிறைய வேலையிருக்கு; உங்கிட்ட வெவரமாப் பேசிக்கிட்டிருக்க முடியாது" என்று உடலை உதறிக் கொண்டு எழுந்தான் சரவணன். மேற்கொண்டு கிழவியிடம் பேசும் எண்ணமற்று வீட்டுக்குள் போனான். மணி நாலரை ஆகிவிட்டிருந்தது. 'சட்'டென்று சரவணனைப் பரபரப்புத் தொற்றிக் கொண்டது. டி-ஷர்ட்டைக் கழற்றி எறிந்து விட்டு வாளியில் முகம் கழுவிக் கொண்டான். அவசர அவசரமாக முகத்தைத் துடைத்துக் கொண்டு வேறு சட்டை தேடினான்.

பார்வதி சமையல் அறையிலிருந்து மகனின் பதற்றத்தைக் கவனித்தாள்.

"சரவணா, காப்பியைக் குடிச்சுட்டுப் போயிர்றா."

சரவணனுக்கு, வேண்டாமே என்றிருந்தது. நண்பர்களின் ராஜ்ஜியத்துக்குப் போய்விட்டால் பத்து நிமிஷத்துக்கொரு டீ.

"வேணாம்மா... வெளில போறன்ல..."

"ஏண்டா...வீட்டுல போட்டுத் தர்ற காப்பித் தண்ணிய ஒரு வாய் ஊத்திட்டுப் போகக் கூடாதா?"

சரவணன் தலை சிலுப்பியபடியே பல்லை இறுகக் கடித்தான். அம்மா போடுகிற காபியை நினைவு தெரிந்து கடந்த பதினெட்டு வருடங்களாகக் குடித்து வருகிறான். சொந்தமான மலைத்தோட்டத்திலிருந்து காப்பிப் பழங்கள் வரும். அதனை வெயிலில் உலர்த்தி... காபிக் கொட்டை எடுப்பார்கள் அம்மாவும், பாட்டியும். பிறகு அதனை அவர்களே வறுப்பார்கள். அதனை வறுப்பதாகக் கூறுவது பிழை. வடைச்சட்டியில்போட்டு 'வறு வறு' என்று வறுத்துக் கருக்கியே விடுவார்கள். பிறகு அந்தக் கருகிப்போன காபிக் கொட்டையைப் பாட்டி, அம்மா, வீட்டு வேலை பார்க்கும் செல்லம்மா மூவருமாக முற்றத்திலிருக்கிற உரலில் போட்டு 'ஷிப்ட்' முறையில் இடித்து

காப்பித்தூளாக்குவார்கள். அது தூள் மாதிரியே இருக்காது. மணல் மணலாய்க் கருகிப் போன காப்பிக் கொட்டைத் துகள்கள். பிறகு அந்தத் தூளை ஒரு பெரிய பழங்கால பிஸ்கட் டின்னில் அடைத்து வைத்து விட்டால் ஒரு வருஷத்துக்குக் காபித்தூள் கவலையே இல்லை.

ஒரு வழியாகக் காப்பித்தூள் தயாராகி விட்டதா? இனி காப்பி தயாராக வேண்டும். சருவச் சட்டியில் தண்ணீர் ஊற்றி மடமடவென்று அடுப்பெரிப்பாள் அம்மா. தண்ணீர் கொதிக்கையில் மேற்படிக் காப்பித்தூளைப் பெரிய கரண்டியில் அள்ளிப்போட்டு, கூடவே சீனிபோட்டு (சில ஆண்டுகளாகத்தான் சீனி. அதற்குமுன்பு கருப்பட்டி) மேலும் ஆவேசமாக அடுப்பெரிப்பாள். சருவச் சட்டி கொதி கொதியென்று கொதிக்கும். யாராவது என்ன பண்ணுறே? என்று கேட்டால் 'காப்பி காய்ச்சுறேன்' என்பாள் அப்பாவியாக.... (கிட்டத்தட்ட கஞ்சி காய்ச்சுகிற மாதிரிதானே!)

கொதித்த அந்தக் காப்பியை ஒரு மகா வடிகட்டியில் வடித்து குண்டாச் சட்டியில் நிரப்புவாள்... இரண்டு பெரிய சொம்புகளில் பாலை அதில் ஊற்றுவாள். ஓ.கே. இப்போது மழை பெய்து ஓடையில் வருகிற புதுத் தண்ணீரின் நிறத்தில் அங்கங்கே காப்பிக் கொட்டை சிதறல்கள் மிதக்கும் காபி ரெடி... வீட்டிலே ஒரு முழ உயரத்துக்குக் கம்மியான தம்ளர்கள் கிடையாது.... அதில் வழிய வழிய காபி தருவாள். 'பத்தலைன்னா கேட்டு வாங்கிச் சாப்பிட்டுக்கலாம்' எனும் அன்பான வேண்டுகோளோடு.

சரவணன் ப்ளஸ் டூ படிக்கும் வரை தனது வீட்டில் குடிப்பதைத்தான் காப்பி என்று நம்பிக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் தற்செயலாக டவுனில் உடுப்பி ஓட்டலில் நண்பர்களோடு சேர்ந்து காப்பி குடிக்கும்படி ஆகி விட்டது.

வீட்டுக்கு வந்து, தான் நிஜமான காப்பி சாப்பிட்டதாகச் சொல்லி, இனிமேல் நம் வீட்டிலும் அதேபோலதான் காப்பி போட வேண்டும் என்று சரவணன் சொன்னதற்கு, 'உன்னைப் படிக்கவச்சதுதாண்டா பெரிய தப்பு' என்று அம்மா சொன்னாள்.

'இதுக்கும் படிப்புக்கும் என்ன சம்பந்தம்?' என்று சரவணன் குழம்பினான். அவனுக்கு வாழ்வின் சூட்சுமங்களோ, தர்க்கமோ புரியாததுதான் காரணம். மகனது ரசனை வேறுபாட்டுக்கு அவனது புதிதாய்ப் பெற்ற கல்விதான் காரணம் என்று அம்மா சுலபமாக முடிவு கட்டிவிட, படித்தவனான சரவணனுக்கோ, குழப்பமாக இருந்தது. படிப்பு எல்லாவற்றையும் புரியச் செய்து விடுவதில்லை என்று மட்டும் அவன் புரிந்து கொண்டான்.

முழ உயர டம்ளர் நீண்டது... ஏதேனும் விவாதித்தால் அம்மாவின் கோபத்துக்கு இலக்காக நேருமென்று பேசாது வாங்கிக் குடித்தான்.

"இன்னிக்கு எத்தனை மணிக்குடா வீட்டுக்கு வருவ? ராத்திரி பன்னண்டுதானா?"

"இல்லல்ல... கொஞ்சம் சீக்கிரமா வந்துர்றேன்."

"நெதமும் இப்படித்தேந் சொல்ற. ஒரு நாளாவது கரெட்டா வந்திருக்கயா நீயி? அப்படி என்னதாண்டா வேலை? நீயும் உன் கூட்டுக்காரங்களும் ஏன்டா சாமக்கோடாங்கி கணக்கா முழிச்சிட்டுக் கெடக்கிங்க?"

அம்மாவின் கேள்விகள் முடிவற்றவை. ஒருநாளும் சரவணன் பதில்களை ஏற்று அவள் அந்த விவாதத்தை முடித்துக் கொண்ட சரித்திரமே கிடையாது. ஏதாவது ஒரு கேள்வியின் நடுவில் சரவணன் கத்தரித்துக் கொண்டு கிளம்பி விடுவான்.

அம்மாவின் புலம்பல் பின்னாடி கேட்டுக் கொண்டிருக்க, செருப்பை மாட்டினான் சரவணன்.

"எங்க வீடு தங்குறான்? சாப்ட்டான்னா ஈரக்கையைக் கைலியில துடைச்சுக்கிட்டு, கால்ல மிதியடியைக் கோத்துக்கிட்டுக் கிளம்பிர்றான். என்னதான் பண்றானோ? 'நாய்க்கி வேலையில்லை, நிக்க நேரமில்லைங்கிற மாதிரித்தானிருக்கு."

இதைவிடக் கடுமையான பழமொழிகள் எல்லாம் பரிச்சயமாகி விட்டிருந்த சரவணன்- ஆசுவாச நண்பர்களை நாடிப் போனான். அரச மரமேடையிலோ, டெய்லர் கடையிலோ, டீக்கடையிலோ அவர்களைக் காணவில்லை.

"உங்க கட்சியை நீங்களே அழிக்கப்போறதா பேசிக்கிறாங்க..?"

"ஏன் அப்படிப் பேசறாங்க?"

"பின்னே, ஊழலை ஒழிப்பதே என் முதல் பணி'ன்னு அறிக்கை விட்டிருக்கீங்களே!"

சீர்காழி ரேவதி



மைதானம் பக்கம் போனான்.

மைதானத்தின் மத்தியில் பாலாவும், மணியும் இருந்தார்கள். வெயில் குறைந்து விட்டிருந்ததால் புல்திட்டில் வானம் பார்த்துப் படுத்திருந்தனர். சற்றுத் தள்ளி சுந்தர் டென்னிகாய்ட் பந்தை மேலெறிந்து பிடித்துக் கொண்டிருந்தான். கிடந்த கோலத்திலிருந்த பாலாவும், மணியும் புகை விட்டுக் கொண்டிருந்தனர்.

"என்ன சரவணா லேட்டு."

சரவணன் தானும் கால் நீட்டி அமர்ந்தான்.

"கொஞ்சம் தூங்கிட்டேன். கௌம்பலாம்னா எங்க அம்மா தன்னோட காபியைக் குடிச்சுட்டுத்தான் போகணும்னு அன்புத் தொல்லை."

"அது சரி, என்ன ஆபீஸ் உத்யோகமா... இப்படி மல்லாந்து படுத்து வானத்தைப் பாக்குறதுக்கு எப்ப வந்தா என்ன?" என்றான் ராஜா.

மணி, "அதென்ன மாப்ள அம்புட்டு ஈஸியாச் சொல்லிட்ட. நியூட்டன், புத்தர் இவங்க எல்லாம் கூட இதே மாதிரி சாவகாசமா இருக்கும்போதுதான் ஒருத்தருக்கு ஆப்பிள் விழுந்துச்சு. இன்னொருத்தருக்கு ஞானம் கெடைச்சுச்சு. அதனால இப்படி இருக்கறதைப் பத்தி நீ பாட்டுக்கு இலேசா எதையும் பேசிராத."

மூவரும் சந்தோஷம் பரவச் சிரித்தனர். இப்படியான சந்தோஷ நிமிடங்கள்தான் அவர்களைச் சோர்விலிருந்தும் விரக்தியிலிருந்தும் காப்பாற்றி வைத்திருக்கிறது. சின்னப்பட்டி சுமாரானதொரு கிராமம்... விவசாய மனிதர்கள், காடு கரைகளில் வேலை செய்து பிள்ளைகளைப் படிக்க வைத்து இரண்டு தலைமுறையாகக் கல்வி அந்த கிராமத்துக்கு அறிமுகமாகி விட்டது. சில இளைஞர்கள் பேண்ட் அணிந்து உலவத் துவங்கி விட்டனர். கிரிக்கெட்டும், இந்தி சினிமாவும் தெரிய ஆரம்பித்து விட்டது. மணி, பாலா, சுந்தர், சரவணன் எல்லோருமே காலேஜை முடித்துவிட்டு வேலைக்குப் போவது குறித்த சிந்தனையில் இருந்தார்கள். படிக்கும் வரையிலும் எப்படியோ பொழுது போய் விட்டது. படிக்கிறவர்கள் என்ற முத்திரை அவர்களுக்கு ஊருக்குள் பெருமை தருவதாகக் கூட இருந்தது. மூன்று ஆண்டுகள் பொற்காலம். 'சட்'டென்று ஒருநாள் படிப்பு முடிந்து விட்டது. தேர்வு எழுதி முடித்துவிட்டு வந்த ஓரிரு வாரத்திலேயே ஒரு பெரிசு இவர்களைக் கேட்டார்.

"ஒருவழியாப் படிச்சுப்புட்டிங்க... அப்புறம் என்ன சோலி பாக்குறதா இருக்கீங்க..?"

"வேலைக்குத்தாம் போகணும் பெரியய்யா."

"சட்டுப் புட்டுன்னு போற வழியைப் பாருங்க... வெட்டியா ஊருக்குள்ள அலையாதீங்க."



"ஆன்ட்டி! கழுத்த அறுக்க வந்துட்டீங்களா?"
"ஏன் பாப்பா இப்படிச் சொல்றே?"
"ஒவ்வொரு தடவையும் நீங்க வந்துட்டு போன பின் என் மம்மி அப்படித்தான் சொல்வாள்!"

– கு. அருணாசலம்

இவர்களுக்குச் 'சுருக்'கென்றது. நாளது வரையில் இவர்கள் அனுபவித்து வந்த சந்தோஷச் சலுகையில் முதன் முதலாக ஏதோ நெருடல். அதன் பின்னர் ஒரே மாதம். ஊரில் நிறையப் பேர் இவர்களைப் பார்க்கிற விதமே மாறி விட்டது.

காலை நேரத்தில் இவர்கள் டீக்கடைப் பக்கம் கூடும்போது தோட்டத்துக்குக் கால் நடையாகவும், டிராக்டரிலும், சைக்கிளிலும் ஆண்களும், பெண்களுமாகச் செல்வார்கள். பள்ளிப் பிள்ளைகளும், அடுத்த செட் விடலைகளும் அவர்களது படிப்புக்காக டவுன் பஸ்ஸுக்குக் காத்து நிற்பார்கள். இவர்களுக்குத் தாங்கள் மட்டும் தனித்து விடப்பட்ட உணர்வு பீடித்து அழுத்தும். இவர்களது நட்பை அந்தத் தனிமை உணர்வு மேலும் பிணைத்தது. பெரும்பாலான நேரம் பிரியாமல் சேர்ந்தே இருந்தார்கள். ஊரில் இவர்களில் யாரையாவது தனியாகப் பார்த்தால் "எங்க மிச்ச மூணு பேத்தையும் காணோம்?" என்று கேட்பது ஊராரின் வழக்கமாயிருந்தது.

"என்ன மாப்ள? ஒரே சிந்தனை?" என்றான் மணி. சுந்தர் டெனிகாய்ட் பந்தைக் கையில் சுழற்றியபடி அருகில் வந்து அமர்ந்தான்.

"கொஞ்சம் ஜாஸ்தியா போரடிக்க ஆரம்பிச்சுருச்சுடா லைஃப்" என்றான் சரவணன்.

மணி, "அப்படிச் சொல்ல முடியாது. இது சொகுசான வாழ்க்கைதான். நேரத்துக்குச் சாப்பாடு, கூடுதலோ, குறைச்சலோ வீட்லருந்து காசு, அரட்டை, தூக்கம், டென்ஷன் ஃப்ரீ லைஃப்டா நம்மளுது."

"அட... நீதான் மெச்சிக்கணும். ரொம்ப சொகுசான வாழ்க்கையும் ஒரு ஸ்டேஜ்ல போரடிக்கப் போயிடும்டா... ஏதாச்சும் வேலை

வேணும்" என்றான் சரவணன்.

சுந்தர் சற்றுத் தள்ளிப் பார்த்து கையாட்டினான்.

"இப்போதைக்குப் போரடிக்காம இருக்க ஒரு ஆளு வர்றாம் பாரு... இங்க வாங்க" என்று கூப்பிட்டான்.

அழைக்கப்பட்டவன் ஒரு ஜோசியக்காரன். குறிசொல்கிறவன். வளையல் விற்பவன் போல் ஒரு பெரும் துணி. முன்னும் பின்னும் பை போலத் தொங்கியது. சிவந்த வெற்றிலை வாய். அதே நிறத்தில் அகலக் குங்குமம். அங்கிருந்தபடியே கேட்டான்.

"என்னவாம்?"

"அட வாய்யா... ஜோசியம் பாக்கிற ஆளு தான நீ."

அவன் அருகே வந்தான்... "ம்... எளந்தாரிப் புள்ளைக எல்லாம் சோசியம் பாக்க ஆரம்பிச்சுட்டீங்களா?"

"ஒக்காருங்க மொதல்ல."

அவன் உட்கார்ந்தான். சம்மணம் கட்டி வெகு ஒழுங்காக அமர்ந்தான். முதுகுத் தண்டை நிமிர்த்தி, முழங்கால்களில் கை வைத்து கண்களை விரித்து இவர்களைப் பார்த்து மூச்சை ஆழமாக இழுத்து விட்டான்.



படுத்திருந்த பாலா எழுந்து கால் நீட்டி ஒருக்களித்து உட்கார்ந்து அவனைப் பார்த்தான்.

"ஏன் சாமி எப்பயுமே இப்படித் தேன் உக்காருவீங்களா?"

குறிகாரன் சிரித்தான்... "தம்பி உக்கார்ற வடிவத்திலியே உன் குணம் தெரிஞ்சுடும். நீ நல்லா உக்காரு முதல்ல. அந்தவங்களைப் பாக்காத... உன்னை முதல்ல பாத்துக்க..."

பாலா கொஞ்சம் நேராக அமர்ந்து காலை மடக்கிக் கொண்டான்.

"படிச்ச புள்ளைக மாதிரி தெரியுது."

"ஆமா..."

"என்ன பாக்கணும் உங்களுக்கு?"

இவர்கள் தமக்குள் குறுகுறுவென்று பார்த்துக் கொண்டனர்.

சுந்தர் இலேசான புன்னகையுடன் கேட்டான்..

"எங்களுக்கெல்லாம் எப்ப கல்யாணம் ஆகும்?"

குறிகாரன் சிரித்தான், "உத்யோகம் புருஷ லட்சணம். நீங்க எல்லாரும் முதல்ல வேலைக்குப் போகணும். சோம்பேறிகளுக்குப் பெண் தர்றதுக்கு யாரும் யோசிப்பாங்க."

பாலாவுக்குக் கோபம் வந்து விட்டது.

"குறி சொல்றவரே... உங்களுக்குச் சொல்ல முடியாதுன்னா பேசாமப் போங்க... இல்லாட்டி எனக்குக் குறி சொல்லத் தெரியாதுன்னு சொல்லுங்க... நீங்க என்னா எங்களை சோம்பேறிங்கறது."

குறிகாரன் சிரித்தான். "சரி சரி...கோச்சுக்காதீங்க, நான் மேற்கால கோயிலுக்குப் போறேன். ரெண்டு, மூணு நாளைக்கு இங்க தான் இருப்பேன்... நாளைக்கி வேணா உங்களுக்கு நாடி பாத்து விவரமாச் சொல்றேன்."

"ஒண்ணும் வேணாங்க சாமி, போய்ச் சேருங்க" என்றான் சுந்தர் அலுப்பான குரலில்.

குறிகாரன் சிரித்தபடியே எழுந்து நின்றான். அவனது பார்வை மைதானத்தின் தென்புறமாக நிலைத்தது. அவனது சிரிப்பு தேய்ந்து மறைந்தது. "அது யாரு வீடு தம்பி?"

தென்புறம் மைதானத்தை ஒட்டி அந்த வீடு இருந்தது. ஊரினுள் இல்லாது ஒற்றையாய்த் தள்ளி இருந்தது. சின்ன சுற்றுச் சுவருடன் கட்டப்பட்ட அடக்கமான ஓட்டு வீடு; வெகு காலமாய்ச் சுண்ணாம்பு பார்த்திராத சுவர்கள். பூட்டிக் கிடந்த அந்த வீட்டினை அடைகாப்பது போல் தனது கிளைகளைப் பரப்பி வளர்ந்திருந்தது ஒரு பூவரசம் மரம்.

மணி சொன்னான், "சரவணா உங்கப்பாவோட வீடுதானடா அது?"

சரவணன் தலையாட்டினான், "எங்க வீடுதான். ஆனா சும்மாவே பூட்டி வச்சிருக்கு. எதுக்குக் கேக்கிறீங்க?"

குறிகாரன் மிகவும் கவனமாக அந்த வீட்டைப் பார்த்தான். அவனது சுவாசம் முன்னிலும் ஆழமாகவும் நிதானமாகவும் இருப்பதை நண்பர்கள் மூவரும் உணர்ந்தார்கள்.

குறிகாரன் அந்த வீட்டை நோக்கிச் சென்றான். இவர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை.

காற்று நன்றாக வீசிக் கொண்டிருந்தது. சூரியன் மறையத் தொடங்கிவிட்டது. இலேசான இருள் பரவலினூடாக அவன் அந்த வீட்டை ஒருமுறை நிதானமாகச் சுற்றி வருவதை விலகி நின்று பார்த்தனர்.

சரவணனின் காதில் பாலா கிசுகிசுத்தான். "வேணும்னே ஏதோ பயங்காமிக்கிறான்டா."

குறிகாரன் சட்டென்று திரும்பினான். "சாபம்..சாபம்...!சபிக்கப்பட்ட வீடு இது..."

காற்று சற்றே அதிகரித்தது. பூவரச மரத்தின் அசைவு கூடி பல இலைகள் உதிர்ந்து வீழ்ந்தன.

(தொடரும்)

சிவகாமியின் சபதம்

முதல் பாகம்

பரஞ்சோதி யாத்திரை



அமரர் கல்கி

முதலாம் அத்தியாயம்

பிரயாணிகள்

இளவேனிற் காலத்தில் ஒரு நாள் மாலை, மகேந்திர தடாகத்தின் கரை வழியாகச் சென்ற இராஜ பாட்டையில், பிரயாணிகள் இருவர் காஞ்சிமா நகரை நோக்கி நடந்துகொண்டிருந்தனர்.

அவர்களில் ஒருவர் ஆறடி உயரத்துக்கு மேல் வளர்ந்திருந்த ஆஜானுபாகு; காவி வஸ்திரம் தரித்த பௌத்த சந்நியாசி. கடுமையான தவ விரத அனுஷ்டானங்களினாலோ, வேறு கடினமான காரியங்களில் ஈடுபட்டதனாலோ, அந்தப் புத்த பிக்ஷுவின் தேகமானது வறண்டு கெட்டிப்பட்டுக் கடினமாயிருந்தது. அவருடைய முகத் தோற்றமானது அன்பையோ, பக்தியையோ உண்டாக்குவதாயில்லை; ஒருவித அச்சத்தை ஊட்டுவதாயிருந்தது.

இன்னொரு பிரயாணி கூட்டமைந்த தேகமும், களை பொருந்திய முகமும் உடைய பதினெட்டுப் பிராயத்து இளம் பிள்ளை.

பிரயாணிகள் இருவரும் வெகுதூரம் வழி நடந்து களைப்புற்றவர்களாகக் காணப்பட்டார்கள்.

"தலைநகரம் இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது?" என்று வாலிபன் கேட்டான்.

"அதோ!" என்று சந்நியாசி சுட்டிக் காட்டிய திக்கில், அடர்ந்த மரங்களுக்கு இடை இடையே மாட மாளிகைகளின் விமானங்கள் காணப்பட்டன. இளம் பிரயாணி சற்று நேரம் அந்தக் காட்சியை உற்று நோக்கிக் கொண்டிருந்தான். பின்னர், புத்த பிக்ஷுவைப் பார்த்து, "இங்கிருந்து ஒரு நாழிகை தூரம் இருக்குமா?" என்று கேட்டான்.

"அவ்வளவுதான் இருக்கும்."

"அப்படியானால், நான் சற்று உட்கார்ந்துவிட்டு வருகிறேன். அவசரமானால் தாங்கள் முன்னால் போகலாம்!" என்று சொல்லி, வாலிபன் கையிலிருந்த மூட்டையையும் தடியையும் பாதை ஓரமாகக் கீழே வைத்துவிட்டு, ஏரியைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்தான்.

சந்நியாசியும் அவன் அருகில் மேற்குத் திசையைப் பார்த்துக்கொண்டு அமர்ந்தார்.

மேல் வானத்தின் அடிப்புறத்தில் தங்க நிறமான ஞாயிறு திருமாலின் சக்ராயுதத்தைப் போல் 'தகதக'வென்று சுழன்று கொண்டிருந்தது. அதன் செங்கிரணங்களினால் மேல் வானமெல்லாம் செக்கர் படர்ந்து, பயங்கரமான போரில் இரத்த வெள்ளம் ஓடிய யுத்த களத்தைப் போல் காட்சியளித்தது. ஆங்காங்கே காணப்பட்ட சிறு மேகக் கூட்டங்கள் தீப்பிடித்து எரிவது போல் தோன்றின.

சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்த திசையில், மகேந்திர தடாகத்தின் பளிங்கு போலத் தெளிந்த நீர், உருக்கிய பொன்னைப் போல் ஒளிர்ந்து கொண்டிருந்தது.

ஆனால், மேற்குத் திசையிலிருந்து சற்றுத் திரும்பி அந்த விசாலமான ஏரியின் வடகரையை நோக்கினால் முற்றும் மாறான வேறொரு காட்சி காணப்பட்டது. அந்தக் கரையில் ஏரிக்குக் காவலாக நின்ற சிறு குன்றுகளின் மாலை நேரத்து நெடிய நிழல் ஏரியின் மேல் விஸ்தாரமாகப் படர்ந்திருந்த படியால் ஏரி நீர் அங்கே கருநீலம் பெற்று விளங்கிற்று.



நிழல் படர்ந்த ஏரிக்கரை ஓரமாகச் சில இடங்களில் கண்ணைப் பறிக்கும் வெள்ளை நிறம் திட்டுத் திட்டாகத் திகழ்ந்தது. சிறிது கூர்ந்து கவனித்தால் அந்த இடங்களில் வெண் நாரைகள் ஒற்றைக் காலில் நின்று தவம் புரிகின்றன என்பதை அறிந்து கொள்ளலாம். சில சமயம் திடீரென்று ஒரு வெண்

நாரைக் கூட்டமானது ஜலக் கரையிலிருந்து கிளம்பி ஆகாசத்தில் மிதக்கத் தொடங்கும். ஆகா! அந்தக் காட்சியின் அழகை என்னவென்று சொல்வது? கீழே கரு நிறத் தண்ணீர்ப் பரப்பு; மேலே கருநீல வானம்; பின்னால் கரும் பசுமை நிறக் குன்றுகள். இவற்றின் மத்தியில் அந்தத் தாவள்யமான நாரைக் கூட்டம் வானவெளியில் மிதந்து செல்வது போல் நெருக்கமாய்ப் பறந்து செல்லும் காட்சி யாருக்குமே மனக் கிளர்ச்சியை உண்டாக்கும். இறைவனுடைய லீலாவிபூதிகளில் சிந்தை செலுத்தியவர்களோ மெய்ம் மறந்து பரவசமாகி விடுவார்கள்.

இவற்றையெல்லாம் சற்று நேரம் மௌனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்த வாலிபன் தனக்குத்தானே பேசிக் கொள்வது போல், "இந்தப் பிரம்மாண்டமான ஏரியை மகேந்திர தடாகம் என்று சொல்வது பொருத்தமில்லை; மகேந்திர சமுத்திரம் என்றுதான் இதைச் சொல்ல வேண்டும்!" என்றான்.

சந்நியாசி ஏரியை நோக்கிய வண்ணம், "இந்த மகேந்திர தடாகத்தில் இப்போது தண்ணீர் குறைந்து போயிருக்கிறது. ஐப்பசிக் கார்த்திகையில் மழை பெய்து ஏரி நிரம்பியிருக்கும்போது பார்த்தாயானால், பிரமித்துப் போவாய்! அப்போது நிஜசமுத்திரம் போலவே இருக்கும்!" என்று சொல்லிக்கொண்டே எழுந்தார்.

"புறப்பட்டு விட்டீர்களா, சுவாமி?" என்றான் வாலிபன்.

"ஆமாம், பரஞ்சோதி! என்னோடு வருவதற்குத்தான் உனக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறதே!" என்று சந்நியாசி கூறிவிட்டு நடக்கத் தொடங்கினார்.

பரஞ்சோதி என்ற அவ் வாலிபனும் மூட்டையையும் தடியையும் எடுத்துக் கொண்டு அவரைத் தொடர்ந்து நடக்கலானான்.

சாலையில் போவோர் வருவோர் கூட்டம் அதிகமாயிருந்தது. பிரயாணிகள் ஏறிய வண்டிகளும், நெல்லும் வைக்கோலும் ஏற்றிய வண்டிகளும் சாரி சாரியாய்ப் போய்க் கொண்டிருந்தன.

சாலைக்கு அப்புறத்தில் முதிர்ந்த கதிர்களையுடைய செந்நெல் வயல்கள் பரந்திருந்தன. கதிர்களின் பாரத்தினால் பயிர்கள் தலைசாய்ந்து விழுந்து கிடந்தன. ஆங்காங்கே சில வயல்களில் குடியானவர்கள் அறுவடையான கற்றைகளைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். வயல்களிலிருந்து புது நெல், புது வைக்கோலின் நறுமணம் 'கம்'மென்று வந்து கொண்டிருந்தது.

சற்றுத் தூரம் போனதும் ஓர் அழகிய கிராமம் தென்பட்டது.

அந்தக் கிராமத்தைத் தாண்டியதும் புதுநெல் மணத்துக்குப் பதிலாக மல்லிகை முல்லை மலர்களின் நறுமணம் சூழ்ந்தது. அந்த மணத்தை மூக்கினால் நுகர்வது மட்டுமின்றித் தேக முழுவதனாலும் ஸ்பரிசித்து அனுபவிக்கலாம் என்று தோன்றியது.

"ஆகா!" என்றான் வாலிபன்.

அவனுக்கெதிரே கண்ணுக்கெட்டிய தூரம் நந்தவனங்கள். மல்லிகை முல்லைப் புதர்களின் மீது வானத்து நட்சத்திரங்கள் வந்து படிந்தது போல் குண்டு மல்லிகைகளும் முத்து முல்லைகளும் 'கலீ'ரென்று பூத்துச் சிரித்துக்கொண்டிருந்தன.

இந்த வெண்மலர்ப் பரப்புக்கு இடை இடையே தங்க நிறச் செவ்வந்திப் பூக்களின் காடும் காணப்பட்டது.

"இவ்வளவு பூவையும் என்னதான் செய்வார்கள்?" என்று வாலிபன் கேட்டான்.

"இவற்றில் பாதி கோயில் தெய்வங்களுக்கு அர்ப்பணமாகும். மற்றப் பாதி காஞ்சி நகரத்துப் பெண் தெய்வங்களின் கூந்தலை அலங்கரிக்கும்... அதோ!" என்று சட்டென நின்றார் சந்நியாசி.

சரசரவென்று சாலையின் குறுக்கே ஒரு பாம்பு ஊர்ந்து சென்று நந்தவனத்துக்குள் புகுந்து மறைந்தது.

"இந்த மல்லிகை மணத்துக்குப் பாம்புகள் எங்கேயென்று காத்திருக்கும்!" என்றார் சந்நியாசி.

பாம்பு மறைந்ததும் இருவரும் மேலே சென்றார்கள். சற்று நேரம் மௌனம் குடிகொண்



டிருந்தது. பரஞ்சோதி 'களுக்'கென்று சிரித்தான்.

''எதை நினைத்துச் சிரிக்கிறாய்?'' என்றார் சந்நியாசி.

பரஞ்சோதி சற்றுநேரம் பேசாமல் இருந்துவிட்டு, ''இல்லை, அடிகளே! மத்தியானம் அந்தச் சர்ப்பத்தைக் கொன்று என்னைக் காப்பாற்றினீர்கள்? நீங்கள் புத்த பிக்ஷுவாயிற்றே? ஜீவஹத்தி செய்யலாமா என்று நினைத்துச் சிரித்தேன்!'' என்றான்.

''தன்னைக் கொல்ல வந்த பகவையும் கொல்லலாம் அல்லவா?'' என்றார் புத்த பிக்ஷு.

''ஆனால், பாம்பு தங்களைக் கொல்ல வரவில்லையே? என்னைத்தானே கொல்ல வந்தது?'' என்றான் பரஞ்சோதி ஏளனக் குரலில்.

''என் சிஷ்யனை நான் காப்பாற்ற வேண்டாமா!'' என்றார் பிக்ஷு.

''சிஷ்யனா? யாரைச் சொன்னீர்கள்?''

''ஆமாம், நீ என் உயிரை ஒரு சமயம் காப்பாற்றினாய்; அதற்குப் பிரதியாக...''

"தங்கள் உயிரை நான் காப்பாற்றினேனா! எப்போது?"

"முந்நூறு வருஷங்களுக்கு முன்னால்..."

"என்ன!"

"முன்னொரு ஜன்மத்தில்."

"ஓஹோ! தாங்கள் முக்காலமும் உணர்ந்த முனிவர் என்பது தெரியாமல் கேட்டு விட்டேன்; க்ஷமிக்க வேண்டும்."

சந்நியாசி மௌனமாக நடந்தார்.

மறுபடி பரஞ்சோதி, "சுவாமி! இனிமேல் வரப் போகிறது கூடத் தங்கள் ஞான திருஷ்டியில் தெரியுமல்லவா?" என்று கேட்டான்.

"வரப் போகிறது ஒன்றைச் சொல்லட்டுமா?"

"சொல்லுங்கள்."

"இந்த நாட்டுக்குப் பெரிய யுத்தம் வரப் போகிறது!"

"பெரிய யுத்தமா?"

"ஆமாம்; மகா பயங்கரமான யுத்தம். பாலாறு இரத்த ஆறாக ஓடப் போகிறது. மகேந்திர தடாகம் இரத்தத் தடாகம் ஆகப் போகிறது."

"ஐயோ! பயமாயிருக்கிறதே! போதும் அடிகளே!"

சற்றுப் பொறுத்து மறுபடியும் பரஞ்சோதி, "நாட்டின் சமாசாரம் எனக்கெதற்கு, சுவாமி? என் விஷயமாக ஏதாவது தெரிந்தால் சொல்லுங்கள்!" என்றான்.

"இன்று ராத்திரி உனக்கு ஒரு கஷ்டம் ஏற்படப் போகிறது."

"சிவ சிவா! நல்ல வாக்காக ஏதாவது சொல்லக் கூடாதா?"

"புத்த பகவானுடைய அருளால் அந்தக் கஷ்டம் நீங்கும்."

"நான் சைவன் ஆயிற்றே! புத்தர் எனக்கு அருள் செய்வாரா?"

"புத்தருடைய கருணை எல்லையற்றது."

"அதோ வருவது யார்?" என்று கேட்டான் பரஞ்சோதி.

மங்கிய மாலை வெளிச்சத்தில், ஓர் அபூர்வ உருவம் அவர்களுக்கெதிரே வந்துகொண்டிருந்தது தெரிந்தது.

"பார்த்தாலே தெரியவில்லையா? திகம்பர சமண முனிவர் வருகிறார்!" என்றார் புத்த பிக்ஷு.

"சமண முனிவர்கள் இன்னும் இங்கே இருக்கிறார்களா?" என்று பரஞ்சோதி கேட்டான்.

"முக்கால்வாசிப்பேர் பாண்டிய நாட்டுக்குப் போய்விட்டார்கள். மற்றவர்களும் சீக்கிரம் போய்விடுவார்கள்."

சமண முனிவர் அருகில் வந்தார். அவர் புத்த பிக்ஷுவைப் போல் உயர்ந்து வளர்ந்தவர் அல்ல. கட்டையாயும் குட்டையாயும் இருந்தார். கௌபீனம் ஒன்றுதான் அவருடைய ஆடை. ஒரு கையில் உறி கட்டித் தூக்கிய கமண்டலம் வைத்திருந்தார். இன்னொரு கையில் மயில் தோகை விசிறி; கக்கத்தில் சுருட்டிய சிறு பாய்.

அவர் அருகில் வந்ததும் புத்த பிக்ஷு, "புத்தம் சரணம் கச்சாமி!" என்றார். சமண முனிவர், "அருகர் தாள் போற்றி!" என்றார்.

"இருட்டுகிற சமயத்தில் அடிகள் எங்கே பிரயாணமோ?" என்று புத்த சந்நியாசி கேட்டார்.

அதற்குச் சமணர், "ஆகா! இந்த ருத்ர பூமியில் எனக்கு என்ன வேலை? தொண்டை மண்டலந்தான் சடையன் கூத்தாடும் சுடுகாடாகி விட்டதே, தெரியாதா? நான் பாண்டிய நாட்டுக்குப் போகிறேன்" என்றார்.

"இன்றைக்கு முக்கியமாக ஏதாவது விசேஷம் உண்டோ?" என்று புத்த பிக்ஷு கேட்க, சமண முனிவர், "உண்டு; விசேஷம் உண்டு. கோட்டைக் கதவுகளை அடைக்கப் போகிறார்களாம்!" என்று சொல்லிக்கொண்டே மேலே விரைந்து சென்றார்.

"ஒரு காலத்தில் இந்தப் பல்லவ ராஜ்யத்தில் சமணர்கள் வைத்ததே சட்டமாயிருந்தது. அவர்கள் கிழித்த கோடு தாண்டாமல் மகேந்திர சக்கரவர்த்தி நடந்து வந்தார். இப்போது..." என்று கூறிப் புத்த பிக்ஷு நிறுத்தினார்.

"இப்போது என்ன?" என்று பரஞ்சோதி கேட்டான்.

"இப்போது சைவ வைஷ்ணவர்களின்

பாடு இந்த நாட்டில் கொண்டாட்டமாயிருக்கிறது."

"ஓஹோ!" என்றான் பரஞ்சோதி. பிறகு, "ஏதோ கோட்டைக் கதவு சாத்துவதைப் பற்றிச் சமண முனிவர் சொன்னாரே, அது என்ன?" என்று கேட்டான்.

"அதோ பார்!" என்றார் சந்நியாசி.

சாலையில் அந்தச் சமயத்தில் ஒரு முடுக்குத் திரும்பினார்கள். எதிரே காஞ்சிமாநகரின் தெற்குக் கோட்டை வாசல் தெரிந்தது. கோட்டை வாசலின் பிரம்மாண்டமான கதவுகள் மூடியிருந்தன.



இரண்டாம் அத்தியாயம்

தலைநகரம்

கோட்டை மதிலைச் சேர்ந்தாற் போல் பெரிய அகழி இருந்தது. அதன் அகலம் சுமார் நூறு அடி இருக்கும். குனிந்து பார்த்தால் 'கிடு கிடு' பள்ளமாயிருந்தது. அடியில் இருண்ட நிறமுள்ள ஜலம் காணப்பட்டது.

நமது பிரயாணிகள் வந்த இராஜ பாதையானது அகழியின் அருகில் வந்ததும் இரண்டாகப் பிரிந்து ஒன்று வலப்புறமாகவும் ஒன்று இடப்புறமாகவும் கோட்டை மதிலைச் சுற்றி அகழிக் கரையோடு சென்றது. சாலையோடு வந்த வண்டிகளும், மனிதர்களும் இடப்புறமாகவோ வலப்புறமாகவோ மதிலைச் சுற்றிக் கொண்டு

போனார்கள்.

அகழியின் மேல் ஒரு குறுகலான மரப்பாலம் காணப்பட்டது. அது கோட்டை வாசல் வரை சென்றது.

புத்த பிக்ஷு பரஞ்சோதிக்குச் சைகை காட்டி விட்டு அந்தப் பாலத்தின் மேல் நடந்து சென்றார். பரஞ்சோதியும் அவரைப் பின் தொடர்ந்தான்.





"இதென்ன, இவ்வளவு சின்னப் பாலமாயிருக்கிறதே? கோட்டைக்குள் வண்டிகளும், வாகனங்களும் எப்படிப் போகும்?" என்று கேட்டான் பரஞ்சோதி.

"இந்த வாசல் வழியாகப் போக முடியாது. வடக்கு வாசலிலும் கிழக்கு வாசலிலும் பெரிய பாலங்கள் இருக்கின்றன. அவற்றில் யானைகள் கூடப் போகலாம்!" என்றார் சந்நியாசி.

பாலத்தைத் தாண்டிக் கோட்டை வாசலருகில் அவர்கள் வந்தார்கள். அங்கே ஒரு சேமக்கலம் கட்டித் தொங்கிற்று. பக்கத்தில் ஒரு கட்டையும் கிடந்தது. கட்டையை எடுத்துச் சேமக்கலத்தில் ஒரு தட்டுத் தட்டினார் சந்நியாசி.

மேலேயிருந்து, "யார் அங்கே?" என்று குரல் கேட்டது. கோட்டை வாசலின் மேல் மாடத்திலிருந்து ஒருவன் எட்டிப் பார்த்தான். இருட்டிவிட்டபடியால் அவன் முகம் தெரியவில்லை.

"மருதப்பா! நான்தான்!" என்று சாமியார் சொல்லவும், மேலேயிருந்து எட்டிப் பார்த்தவன், "தாங்களா? இதோ வந்துவிட்டேன். அடிகளே" என்று கூறிவிட்டு மறைந்தான்.

சற்று நேரத்துக்கெல்லாம் கோட்டைக் கதவின் தாள் திறக்கும் சத்தம் கேட்டது. கதவில் ஒரு மனிதர் உள்ளே புகக் கூடிய அளவு துவாரம் தோன்றியது.

புத்த சந்நியாசி அந்தத் துவாரத்திற்குள் புகுந்து சென்று பரஞ்சோதியையும் கையைப் பிடித்து உள்ளே அழைத்துக்கொண்டார். மறுபடி கதவின் துவாரம் அடைக்கப்பட்டது.

பரஞ்சோதி உள்ளே போனதும் நகரின் பக்கம் பார்வையைச் செலுத்தினான். எங்கே பார்த்தாலும் பிரகாசமான தீபங்களால் நகரம் ஒளிமயமாகக் காணப்பட்டது. ஆயிரக்கணக்கான மனிதர்கள் பேசுவதிலிருந்து உண்டாகும் 'கல்' என்ற ஓசை எழுந்தது.

பரஞ்சோதி இதுவரையில் அவ்வளவு பெரிய நகரத்தைப் பார்த்தது கிடையாது. எனவே, பார்த்தது பார்த்தபடி பிரமித்து நின்றான்.

புத்த சந்நியாசி கதவைத் திறந்த காவலனைப் பார்த்து, "மருதப்பா! நகரில் ஏன் கலகலப்புக் குறைவாயிருக்கிறது? கோட்டைக் கதவு இதற்குள் ஏன் சாத்தப்பட்டது? ஏதாவது விசேஷம் உண்டா?" என்று கேட்டார்.

"நன்றாகத் தெரியவில்லை சுவாமி! இன்று காலையிலிருந்து நகரம் ஒரே கோலாகலமாய்த்தானிருந்தது..." என் பதற்குள் பிக்ஷு குறுக்கிட்டார்.

"கோலாகலத்துக்குக் காரணம்?" என்று கேட்டார்.

"தங்களுக்குத் தெரியாதா? சிவகாமி அம்மையின் நடனம் இன்றைக்குச் சக்கரவர்த்தியின் சபையில் அரங்கேறுவதாக இருந்தது. அதனால்தான் ஜனங்களுக்கு அவ்வளவு கொண்டாட்டம்!"

"எந்தச் சிவகாமி அம்மை?" என்று சந்நியாசி கேட்டார்.

"வேறு யார்? ஆயனரின் மகள் சிவகாமிதான்...!"

இதுவரை பேச்சைக் கவனியாதிருந்த பரஞ்சோதி சட்டென்று திரும்பி, "யார், ஆயனச் சிற்பியாரா?" என்று கேட்டான்.

"ஆமாம்!" என்று காவலன் கூறிப் பரஞ்சோதியை உற்று நோக்கிவிட்டு, "அடிகளே! இந்தப் பிள்ளை யார்?" என்று பிக்ஷுவைப் பார்த்துக் கேட்டான்.

"இவன் என் சிஷ்யன். நீ மேலே சொல்லு. சிவகாமி அம்மையின் நடனம் அரங்கேறுவதாக இருந்தது. பிறகு?"

"சபை கூடி அரங்கேற்றம் நடந்து கொண்டிருந்ததாம். பாதி நடந்து கொண்டிருந்தபோது, யாரோ தூதுவர்கள் வெகு அவசரச் செய்தியுடன் வந்திருப்பதாகத் தெரிந்ததாம். சக்கரவர்த்தி சபையிலிருந்து சட்டென்று எழுந்து போனாராம். அப்புறம் திரும்பிச் சபைக்கு வரவேயில்லையாம். குமார சக்கரவர்த்தியும், மந்திரி மண்டலத்தாருங்கூட எழுந்து போய்விட்டார்களாம். நாட்டியம் நடுவில் நின்று போய்விட்டதாம். அஸ்தமித்ததும் கோட்டைக் கதவுகளை அடைக்கும்படி எனக்குக் கட்டளை வந்தது. அவ்வளவுதான் எனக்குத் தெரியும். என்னவாயிருக்கலாம், சுவாமி?



யுத்தம் ஏதாவது வரக்கூடுமா? ஆனால் காஞ்சி சக்கரவர்த்தியுடன் யுத்தம் செய்யக்கூடிய அரசன் இந்தப் பூமண்டலத்திலேயே இப்போது கிடையாதே?'' என்றான் மருதப்பன்.

"அப்படிச் சொல்லக் கூடாது, மருதப்பா! இன்றைக்கு மணி மகுடம் தரித்து மன்னாதி மன்னர்களாயிருப்பவர்கள் நாளைக்கு... ஆனால் அதைப் பற்றியெல்லாம் நாம் ஏன் பேச வேண்டும்? உன் மகன் சௌக்கியமா?'' என்று சந்நியாசி கேட்டார்.

"தங்கள் கிருபை சுவாமி, சௌக்கியமாயிருக்கிறான்!" என்றான் மருதப்பன்.

மருதப்பனுடைய மகனை ஒரு சமயம் பாம்பு தீண்டி அவன் உயிர் பிழைப்பதே துர்லபம் என்று தோன்றியது. அச்சமயம் இந்த புத்த பிக்ஷு மணிமந்திர ஔஷதங்களினால் அந்தப் பிள்ளையைக் குணப்படுத்தினார். அவரிடம் மருதப்பன் பக்தி கொண்டதற்கு இதுதான் காரணம்.

"என்னால் ஒன்றுமில்லை, மருதப்பா! எல்லாம் புத்த பகவானின் கருணை, நான் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு மேலே பிக்ஷு நடந்தார். பரஞ்சோதியும் அவருடன் சென்றான்.

"அடிகளே! கோட்டைக் கதவைச் சாத்தும்படி கட்டளை பிறந்திருக்கும்போது உங்களை மட்டும் காவலன் எப்படி விட்டான்?'' என்று பரஞ்சோதி கேட்டான்.

"எல்லாம் இந்தக் காவித் துணியின் மகிமைதான்!" என்றார் புத்த பிக்ஷு.

"ஓஹோ! பல்லவ சக்கரவர்த்தியின் இராஜ்யத்தில் காவித் துணிக்கு அவ்வளவு கௌரவமா? ஆனால் சமணர்கள் மட்டும் ஏன்...?"

"சமணர்கள் ராஜரீக விஷயங்களில்

தலையிட்டார்கள். நாங்கள் அந்த வழிக்கே போவதில்லை. இராஜ வம்சத்தினரின் முகத்தைக்கூடப் பார்ப்பதில்லையென்று வைத்துக் கொண்டிருக்கிறோம்... போகட்டும்; உன்னுடைய உத்தேசம் என்ன? என்னுடன் பௌத்த விஹாரத்துக்கு வரப் போகிறாயா?"

"இல்லை, சுவாமி! நாவுக்கரசர் மடத்துக்கே போய்விடுகிறேன். வேறு எங்கேயும் தங்க வேண்டாமென்று என் தாயாரின் கட்டளை."

"அப்படியானால் இந்த இடத்தில் நாம் பிரிய வேண்டியதுதான். போய் வருகிறாயா, தம்பி?"

"சுவாமி, நாவுக்கரசர் மடம் எங்கே இருக்கிறது? எப்படிப் போக வேண்டும்?" என்று பரஞ்சோதி கேட்டான்.

"ஏகாம்பரேசுவரர் கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கிறது. அதோ பார் கோயில் விமானத்தை!"

பரஞ்சோதி பார்த்தான். வெகு தூரத்துக்கு வெகுதூரம் பரவியிருந்த அந்த விசாலமான நகரில் எங்கே பார்த்தாலும் விமானங்கள் தெரிந்தன.

இந்த வரலாறு நிகழ்ந்த காலத்தில் – அதாவது ஏறக்குறைய * ஆயிரத்து முந்நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்னர் – தமிழகத்துக் கோயில்களின் முன்வாசல் கோபுரங்கள் இப்போது இருப்பது போல் உயரமாக அமைந்திருக்கவில்லை. கோயில் கர்ப்பக்கிருஹத்துக்கு மேலேதான் விமானங்கள் அமைப்பது வழக்கம். இவையும் அவ்வளவு உயரமாக இருப்பதில்லை. மேலும் சிவன் கோயில் விமானங்கள், சமணப் பள்ளிகளின் விமானங்கள், அரண்மனை விமானங்கள் எல்லாம் ஏறக்குறைய ஒரே மாதிரியாயிருக்கும்.

"எங்கே பார்த்தாலும் விமானமயமாகக் காணப்படுகிறதே! நீங்கள் எதைச் சொல்கிறீர்கள்?" என்று பரஞ்சோதி கேட்டான்.

"இங்கிருந்து அடையாளம் சொல்லுவது கஷ்டம். இந்த வீதியோடு நேரே போ! ஏகாம்பரர் கோயிலுக்கு வழி ஆங்கங்கே விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம். கோயில் சந்நிதியில் வாகீசர் மடம் இருக்கிறது. ஜாக்கிரதை, தம்பி! காலம் விபரீதமாகிக் கொண்டே வருகிறது!" என்று சொல்லிக் கொண்டே புத்த பிக்ஷு அங்கிருந்து பிரிந்து வேறொரு வீதி வழியாகச் சென்றார்.

வாலிபப் பிரயாணி நேரே பிக்ஷு காட்டிய திக்கை நோக்கிச் சென்றான். அக்காலத்தில் தென் தேசத்திலேயே மிகவும் பிரசித்தி பெற்று விளங்கியது காஞ்சிமா நகரம். அந்நகரின் வீதி ஒவ்வொன்றுமே தேரோடும் வீதியைப் போல் விசாலமாக அமைந்திருந்தது. வீடுகள் எல்லாம் மாளிகைகளாகவே இருந்தன. ஆங்காங்கே கல்லாலான தூண்களின்மேல் விசாலமான அகல்களில் தூங்கா விளக்குகள் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. வீதிகளில் 'ஜே ஜே' என்று 'போவோரும் வருவோருமாய் ஏகக் கூட்டமாயிருந்தது. கடைத் தெருக்களின் காட்சியையோ சொல்ல வேண்டாம். காசி முதல் கன்னியாகுமரி வரையில் பாரத கண்டத்தில் விளையும் பொருள்களெல்லாம் அந்தக் கடை வீதிகளில் கிடைக்கும். புஷ்பக் கடைகளாக ஒரு பக்கம்; பழக் கடைகளாக ஒரு பக்கம்; பட்சணக் கடைகளாக ஒரு பக்கம்; தானியக் கடைகள் ஒரு பக்கம். முத்து இரத்தின வியாபாரிகளின் கடைகள் இன்னொரு பக்கம் – இப்படிக் கடை வீதியானது எல்லையில்லாமல் வளர்ந்து கொண்டே போயிற்று.

பரஞ்சோதி அளவில்லா வியப்புடன் மேற்கூறிய வீதிக் காட்சிகளைப் பார்த்துக்



*** சிவகாமியின் சபதம் எழுதப்பட்ட ஆண்டு 1944.**

கொண்டு போனான். ஆங்காங்கே ஜனங்கள் கூட்டமாய் நின்ற இடங்களில் எல்லாம், சிவகாமி அம்மையின் நடன அரங்கேற்றம் நடுவில் நின்று போனதைப் பற்றியும், கோட்டைக் கதவுகளைச் சாத்தும்படி கட்டளை பிறந்திருப்பதைப் பற்றியுமே பேசிக்கொண்டிருந்ததை அவன் கேட்டுக் கொண்டு நடந்தான். சற்று நேரத்துக்கொரு தடவை அவன் எதிரே வந்தவர்களிடம், "ஏகாம்பரேசுவரர் கோயில் எது?" என்று கேட்டான். "அதோ!" என்று அவர்களும் சுட்டிக் காட்டிவிட்டுப் போனார்கள். ஆனாலும் ஏகாம்பரேசுவரர் கோயிலை அவன் அடைந்தபாடில்லை. புதிதுபுதிதாக ஒரு பெரிய நகரத்தைப் பார்க்கும் அதிசயத்தில் மூழ்கியிருந்தபடியால் பரஞ்சோதியும் கோயிலைச் சீக்கிரமாகக் கண்டு பிடிப்பதில் அவ்வளவு கவலையுள்ளவனாயில்லை.

இப்படி அவன் வீதி வலம் வந்து கொண்டிருக்கையில் திடீரென்று ஓரிடத்தில் ஏகக் கூச்சலும் குழப்பமும் உண்டாவதைப் பார்த்தான். ஜனங்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். "கோயில் யானைக்கு மதம் பிடித்துவிட்டது! ஓடுங்கள்! ஓடுங்கள்!" என்ற கூக்குரலோடு சேர்ந்து, குழந்தைகள் வீறிடும் சத்தம், ஸ்திரீகள் அலறும் சத்தம், குதிரைகள் கனைக்கும் சத்தம், வீட்டுக் கதவுகளைத் 'தடால் தடால்' என்று சாத்தும் சத்தம், மாடுகள் 'அம்மா' என்று கத்தும் சத்தம், கட்டை வண்டிகள் 'கடகட' வென்று உருண்டோடும் சத்தம் இவ்வளவும் சேர்ந்து சொல்ல முடியாத அல்லோலகல்லோலமாகிவிட்டது.



பரஞ்சோதி ஒரு கணம் திகைத்து நின்றான். தானும் ஓட வேண்டுமா, எந்தப் பக்கம் ஓடுவது என்று அவன் மனம் சிந்தித்துக் கொண்டிருந்தபோதே, அவனுக்கெதிரே நடந்த சம்பவங்களை அவனுடைய கண்கள் கவனித்தன. தெருவில் அவனுக்கு முன்னால் சற்றுத் தூரத்தில் ஒரு பல்லக்கு சென்றுகொண்டிருந்தது. அதில் சௌந்தர்ய தேவதை என்று சொல்லக் கூடிய ஓர் இளம் பெண்ணும் அவளுடைய தந்தையெனத் தோன்றிய பெரியவர் ஒருவரும் இருந்தார்கள். பல்லக்கைத் தூக்கிச் சென்றவர்கள் அவர்களுக்குப் பின்னால் எழுந்த கூச்சலையும் கோலாகலத்தையும் கேட்டுவிட்டு பல்லக்கைக் கீழே வைத்துவிட்டு நாலா பக்கமும் சிதறி ஓடினார்கள்.

அதேசமயத்தில் அவனுக்குப் பின்னால் வெகு சமீபத்தில் மதங் கொண்ட யானை ஒன்று பூமி அதிர ஓடி வந்தது.

இதையெல்லாம் கவனித்த பரஞ்சோதி ஒருகணம் தயங்கி நின்றான். அடுத்த கணத்தில் ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாய்ச் சட்டென்று கையிலிருந்த மூட்டையைக் கீழே வைத்து அவசரமாக அவிழ்த்தான். அதற்குள்ளிருந்த வேல் முனையை எடுத்துத் தன் கையில் வைத்திருந்த தடியின் முனையில் செருகிப் பொருத்தினான். பொருத்திய வேலை அவன் வலது கையில் தூக்கிப் பிடித்ததற்கும் மதங்கொண்ட யானை அவன் நின்ற இடத்திற்கு அருகே வருவதற்கும் சரியாயிருந்தது.

அவ்வளவுதான்! பரஞ்சோதி தன் முழு பலத்தையும் கொண்டு வேலை வீசினான். அது யானையின் இடது கண்ணுக் கருகில் பாய்ந்தது. யானையின் தடித்த தோலைப் பொத்துக்கொண்டு உள்ளேயே சென்றுவிட்டது. யானை பயங்கரமாக ஒருமுறை பிளிறிற்று. துதிக்கையால் வேலைப் பிடுங்கிக் காலின் கீழே போட்டு மிதித்தது. பின் வேலை எறிந்த வாலிபன் நின்ற பக்கம் திரும்பிற்று.


(தொடரும்)

நீங்கள் கேட்டவை — தராசு

● டி. சுப்பிரமணியன், மேலையூர்.

? மாநில அரசுக்கு எச்சரிக்கை விடுக்க மத்திய அரசுக்கு அதிகாரம் இல்லை என்று ஜெயலலிதா கூறுகிறாரே..?

! மத்திய அரசின் எச்சரிக்கை சர்க்காரியா சிபாரிசின் அடிப்படையில். அதற்கு என்ன அர்த்தம் என்றால், "356 பிரயோகிக்க வேண்டிய நிலை உள்ளது: ஆயினும் தன்னைத்தானே திருத்திக் கொள்ள மாநில அரசுக்கு ஒரு வாய்ப்பு தருகிறோம்" என்பதுதான். இதைப் புரிந்து கொள்ள மறுப்பவர்களை என்ன செய்ய...? தூங்குகிறவர்களைத்தானே எழுப்பலாம்!



• பெயரும்...



• ...புகழும்!

● மங்கதேவன், பைந்தர்.

? இந்திய டீம் மைனஸ் டெண்டுல்கர், வெற்றியைத் தழுவுமா...?

! ஸ்ரீலங்கா, நியூசிலாந்து இருவருக்கும் பிறகு தற்போது மூன்றாவது நிலையில் உள்ள இந்திய அணி வெற்றி பெற ஓர் இமாலய சாதனை புரிய வேண்டும். சந்தேகம்தான்.



• விருந்தும்...



• ...மருந்தும்!

● ஆர். கிருஷ்ணமூர்த்தி, தேவூர் அஞ்சல்.

? பர்வேஸ் முஷாரஃப் ஆக்ராவில் விருந்துண்டு தாஜ் மஹால் பார்த்து, காஷ்மீர் காஷ்மீர் என்று கூறிப்போனதற்கும் நம் பிரதமர் முன்பு லாகூர் சென்று ஒப்பந்தம் போட்டு வந்ததற்கும் என்ன வேறுபாடு...?

! அது பிரம்மசாரி விஸிட்; இது ஹனிமூன்!

● ஆர். விஸ்வநாதன், சென்னை – 4 ☐

? அரசியல்வாதிகளால் அரசு அதிகாரிகள் பழி வாங்கப்படும் நிலைமை உருவானால், அரசின் உயர் பதவிகளுக்கு வரவேண்டும் என்ற எண்ணமே யாருக்கும் வராது, இல்லையா...?

! அதெல்லாம் ஒன்றுமில்லை. தீமை தீமையைத் தான் வளர்க்கும். இருக்கிற குறைந்த காலத்தில் அதிகபட்சம் எவ்வளவு சுருட்டலாம் என்ற எண்ணம்தான் மேலோங்கும். இதற்குத் தான் அரசியல்வாதிகளின் பழிவாங்கல் நடவடிக்கை உதவும்.



• 'மைனஸ்' பாயின்ட்!

● கே. ராஜகோபால், பெங்களூர் – 95 ✱

? புற்றீசல்போல பெருகிவரும் (மெகா) சீரியல்கள் என்ன சொல்ல வருகின்றன...?

! மூளையைக் கழற்றிவைத்துவிட்டு, கடிகாரத்தை மறந்துவிட்டு, மசமசவென்று உட்கார்ந்திருங்கள்.



• அதற்கும் வருத்தம்!

● எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி

? இளங்கோவன்–செங்கோட்டையன் மோதலில் நீங்கள் யார் பக்கம்...?

! காமராஜர் பக்கம். காமராஜர் ஆட்சியை வரவேற்பது எனில் 'ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்' என்ற அவரது கருத்தைப் புறக்கணிக்க முடியாது. மாறி மாறி முதுகு

☐ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
ஆர். விஸ்வநாதன்,
D-3 சாந்தி அபார்ட்மென்ட்ஸ்,
4, அப்பு தெரு, மயிலாப்பூர்,
சென்னை – 600 004.

✱ ரூ. 50/- பரிசு பெறுபவர்:
கே. ராஜகோபால்,
ஃப்ளெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ்,
443, I-B கிராஸ்,
ஏழாவது பிளாக், கோரமங்களா,
பெங்களூர் – 560 095



• குட்டையும்...



• ...மட்டையும்!

சவாரி செய்தால் காமராஜர் கனவை நிறை வேற்றவும் முடியாது.

● வசந்தாகாந்த், கருப்பம்புலம்.

? "விமானத்தில் ஃப்ரீ டிக்கெட், ரயிலில் ஃப்ரீ டிக்கெட்- எம்.ஏ., பி.ஏ. படித்தவனுக் குக்கூட கிடையாது; ஆனால் எம்.பி.க்கு உண்டு. படிப்பு வாங்கித் தராத வசதியை பொறுப்பு வாங்கித் தந்துவிட்டதே" என்று எஸ்.எஸ். சந்திரன் பெருமைப்படுகிறாரே..?

! அந்தப் பொறுப்பை நல்லபடியாக நிறை வேற்றி வைக்கத்தான் ஃப்ரீ டிக்கெட்டே தவிர அபத்தமான பொன்மொழிகளை உதிர்ப்பதற் கல்ல.

● எஸ். நாரம்பு நாதன், விழுப்புரம்.

? முஷாரஃப் அஞ்சலி செலுத்திய காந்தி சமாதியில் சிவசேனா தொண்டர்கள் கங்கை நீர் தெளித்தது பற்றி...?

! கங்கை நீரைக் களங்கப்படுத்திவிட்டனர்.

● கு. அருணாசலம், தென்காசி.

? 33 ஆண்டுகாலம் ஆட்சியில் இல்லை என் றாலும் காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் உற் சாகமாகவும் உயிரோட்டமாகவும் உள்ளது என்று தமிழக காங்கிரஸ் தலைவர் இளங் கோவன் கூறியுள்ளது பற்றி...?

! ஆமாம். உற்சாகமான உட்கட்சிப் பூசல்களுக் கும் உயிரோட்டமான தாக்குதல் அறிக் கைகளுக்கும் குறைவில்லை!

● ப. இராம் முருகன், சென்னை - 68.

? "234 தொகுதிகளிலும் டெபாசிட் இழந்த ஒரே வேட்பாளர் தமிழ்நாட்டு மக்கள் தான்"- என்ற 'நரசிம்மா' பட வசனம் குறித்து...?

! 'நரசிம்மா' படம் டெபாசிட் இழக்காமல் ஓடிக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்க, தமிழர்கள் அந்த வசனத்தை ஒப்புக் கொண்டி ருக்கிறார்கள் என்று தெரிகிறதல்லவா!

● எஸ். இராஜேந்திரன், கபிஸ்தலம்.

? பணம் இருந்தால் சட்டத்தையே வளைக்க முடியும் என்பதற்குக் கண்முன்னாலேயே பல சம்பவங்கள் வரிசையாக அணி வகுத்து நிற்கும் நிலையில், சட்டத்தின் மீது சாதா ரண மனிதனுக்கு எப்படி நம்பிக்கை நீடிக் கும்...?

! சட்டத்தில் நம்பிக்கை போய்விடும் என்ப தோடு, பணத்தைப் பெற என்ன வேண்டு மானாலும் செய்யலாம் என்ற துணிவும் பிறக் கும். இந்த இரண்டு போக்குகளின் சேர்க்கை ஒரு சமுதாயத்தின் சீரழிவை விரைவு படுத் தும்.

● ரேவதி சங்கர், சென்னை - 13.

? ஒரிசாவில் வெள்ளம், இங்கே தண்ணாட்டம்... நதிகளை தேசிய மயமாக்கி யிருந்தால் தவிப் போமோ...?

! தேசியமயமாக்கி விட்டால் ஆற்று நீர் திசை திரும்பி தமிழகத்தில் பாயுமா என்ன...! அதற்கு நதி களை இணைத்து, செயல்திட்டம் நிறைவேற்றி னால்தான் உண்டு. நமது அரசுகளுக்கும் எதிர்க் கட்சிகளுக்கும் அதில் ஏது அக்கறை? நாடாளு மன்றத்தில் சண்டைபோடவும் பதவி நாற் காலியைக் காப்பாற்றிக் கொள்ளவும்தான் பொழுது இருக்கிறது.



'நரசிம்மா' வசனம் குறித்து?

● கே. கணேசன், சென்னை - 16.

? சிவாஜியின் உடலுக்கு அஞ்சலி செலுத்த ரஜினி வந்தபோது கூட, 'சூப்பர் ஸ்டார் வாழ்க!' என்று அவரது ரசிகர்கள் கோஷம் போட்டிருக்கிறார்களே...?

! அநாகரிகம்தான். ரஜினி நிச்சயம் இதற்கும் சேர்த்து வருந்தியிருப்பார்.

● ஏ. முத்து, மதுரை - 16.

? அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ், தாம் வளர்க்கும் பூனைக்கு இந்தியா எனப் பெயரிட்டுள்ளாராமே...?

! கல்கி காரியாலயத்தில் வளைய வந்த பூனைக்கு 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி, 'சர்ச்சில்' என்று பெயரிட்டு, எழுதவும் செய்தார். நீங்கள் உங்கள் வீட்டுப் பூனைக்கு 'புஷ்' என்றோ 'அமெரிக்கா' என்றோ பெயர் சூட்டி மகிழுங்களேன்!

விபத்து பயம் வேண்டாம் இனி!

காக்கும் கவசமாக

2 மயில்வாகன

யந்திரங்கள்!

ஓம்


சரவணபவ

மாதமிருமுறை வெளிவரும்
ஒரே ஆன்மீக இதழ்

லேமினேட் செய்த ஸ்ரீவிஸ்வ பிரம்ம பகவான் வண்ணப்படம்


இலவசம்!

வாங்கிவிட்டீர்களா!



சிக்கல் 65

நீங்கள் தான் கிரிக்கெட் கேப்டன் சௌரவ் கங்குலி என்று நினைத்துக் கொள்ளுங்கள். ஆஸ்திரேலிய அணியோடு நமது இந்திய அணி கிரிக்கெட் ஆடப் போகிறது. அதற்கு முன் கேப்டனாகிய நீங்கள் பேட்டிங் ஆர்டரைத் தீர்மானிக்க வேண்டும். அதாவது யாரை ஓப்பனிங் பேட்ஸ்மேனாக இறக்குவது. அந்த இருவரில் ஒருவர் அவுட் ஆனவுடன் ஒன் டவுன் என்ற நிலையில் பேட் செய்யப் போவது யார்? அடுத்த விக்கெட் விழுந்தவுடன் யார் கையில் பேட்டைக் கொடுப்பது? - இதைத் தீர்மானிப்பதுதான் பேட்டிங் ஆர்டர்.




அதை விட்டுவிடுவோம். நீங்கள் பேட்டிங் ஆர்டரைத் தீர்மானிக்க வேண்டிய நேரம் டீமில் உள்ளவர்களைக் கலந்தாலோசித்துத் தான் முடிவெடுக்கப் போகிறீர்கள். ஆனால் எத்தனை வகைகளில் பேட்டிங் ஆர்டரைத் தீர்மானிக்கலாம் தெரியுமா? பதினோரு பேர் கொண்ட அணி. அதில் பத்துப் பேர் அவுட் ஆகும் வரை ஆட வேண்டும் என்றால் மொத்தம் எத்தனை வகை பேட்டிங் ஆர்டர் இருக்கிறது என்று தெரியுமா? எங்கே கொஞ்சம் யோசிக்க முயற்சி செய்யுங்கள். இந்தக் கேள்விக்கு உண்மையான விடை என்ன தெரியுமா? 36,28,800. அதாவது முப்பத்தாறு லட்சத்தி சொச்சம் வழிகளில் பேட்டிங் ஆர்டரைத் தீர்மானிக்கலாம். என்ன அதிர்ச்சியாக இருக்கிறதா?



அந்த அதிர்ச்சி தீர்வதற்குள் இப்படி சிந்தித்துப் பாருங்கள். நாம் வாழ்வில் சந்திக்கும் பல பிரச்னைகளுக்கு இப்படி லட்சக் கணக்கான மாற்றுத் தீர்வுகள் இருக்கின்றன. ஆனால் நாம் எல்லா மாற்று வழிகளையும் யோசிக்காமல் எல்லாருக்கும் பழக்கப்பட்ட ஒன்றிரண்டு வழிகளை வைத்துக் கொண்டு

1


சுஜாதா பாஷையில் 'ஜல்லி அடித்துக்' கொண்டு இருக்கிறோம். ப்ளஸ் டூ படிக்கும் மாணவ-மாணவிகளின் லட்சியம் என்ன என்று கேட்டுப் பாருங்கள். டாக்டராக வேண்டும் என்ஜினீயர் ஆக வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்பார்கள். செய்யும் தொழிலைத் தேர்ந்தெடுக்க இரண்டு வழிகள்தானா இருக்கின்றன? எத்தனை ஆயிரம் ஆயிரம் தொழில் வகைகள் இருக்கின்றன? 'நான் தோட்டக் கலை விற்பன்னராகப் போகிறேன்' என்று ஏன் யாரும் ஆசைப்படுவதில்லை? ஆடைகளை வடிவமைக்கும் ஃபேஷன் டிசைனராக யாரும் ஏன் ஆசைப்படுவதில்லை? பலருக்கு மாற்று வழிகள் இருக்கிறது என்பதே தெரியாது.



அடுத்த முறை ஒரு பெரிய பிரச்னை சம்பந்தமாக முடிவெடுக்கும் போது ஒரு நிமிடம் தாமதியுங்கள். எல்லா மாற்று வழிகளையும் ஆராய்ந்து விட்டோமா என்று உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள். பாதிப் பிரச்னைகள் கலபமாகத் தீர்ந்துவிடும்.

வரலொட்டி ரெங்கசாமி

'அகழ்வாரைத் தாங்கும் நிலம்' என்ற வள்ளுவர் வாக்கை எல்லையில்லாமல் சோதித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்... சென்னை நகரில் ஆழ்துளைக் கிணறுகளுக்கான 'ரிக் வேதம்' ஓயாமல் ஒலிக்கிறது. நிறுத்தி யோசிக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதை உணர வேண்டும்...



• உள்வாங்கிய தண்டவாளம்

• சந்திரமண்டல பரப்பிலிருந்து பூமி.



ஜூலை மூன்றாம் வாரத்தில் செய்திகளில் இடம் பெற்றவை தஞ்சை மாவட்டத்தில் சில இடங்களில் நிலத்தில் காணப்பட்ட 'திடீர்' வெடிப்புக்கள். பட்டுக்கோட்டை அருகில் பதினாறு அடி நீளம், 4 அங்குல அகலத்துக்குக் கருங்கல் ஜல்லி போட்ட சாலையே வாய்பிளந்திருக்கிறது என்கிறார்கள்.

இதுபோல், ஆழ்துளைக் கிணறு தோண்டுகிற சென்னையிலும் மற்ற இடங்களிலும் எப்போது தரை பிளக்குமோ என்று யாரும் கவலைப்படுவதாய்த் தெரியவில்லை.

நிலம் உள் வாங்குவது என்பதை ஓர் உலகளாவியப் பிரச்னையாக, இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே ஆராய்ச்சியாளர்கள் கவனிக்கத் தொடங்கிவிட்டார்கள். Land Subsidence என்கிற பெயரில் இதை ஓர் உலகளாவிய சுற்றுச் சூழல் ஆபத்து என்று சொல்கிறார்கள்.

இப்படி நிலம் உள்வாங்குவது என்பது முக்கியமாக மூன்று காரணங்களால் ஏற்படுகிறது.

1. நில நடுக்கங்கள், எரிமலை அதிர்வுகள் போன்ற இயற்கைச் சீற்றங்களால் அடி நிலக் கட்டுக் குலைவு உண்டாகி, நிலம் உள் வாங்கும்.

2. சரிவரக் கெட்டிப்படாத மண், மேடுகளின்மீது தண்ணீர் பாய்கிறபோது, மண் நனைந்து இறுகி தரை பள்ளமாகி விடும். இதை 'ஹைடிரோகாம்பாக்ஷன்' என்கிறார்கள். கனமான கட்டடங்கள் அமைவதாலும், கனமான பொறியியல் ராட்சத இயந்திரங்கள் இயங்கி அதிர்வதாலும்கூட இப்படி ஏற்படும்.

3. இது மனிதச் சேட்டைகளால் ஏற்படுவது. நிலத்தடிநீர், எண்ணெய் வளம் என்று அபரிமிதமாக உறிஞ்சுவதாலும், நிலத்தடி வாயுக்களை மேலே கொண்டு வருவதாலும் நிலம் உள்வாங்கக் கூடும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நாகைப் பட்டினம், பட்டுக்கோட்டை சுற்றுவட்டாரங்களில் தரையைத் துளைத்து எண்ணெய் எடுக்கிறார்கள். ஆங்காங்கே வெளிப்பட்டுப் பற்றி எரிகிற வாயுவும் கண்களில் படும். 'பொன்னியின் செல்வ'னில் பூங்குழலி காட்டுகிற கொள்ளி வாய்ப் பிசாசு நினைவுக்கு வரும். தமிழ் நாட்டை துபாய் ஆக்கப் போவதாய் யாரோ சொன்னார்களே?

சமீபத்தில் பட்டுக் கோட்டையிலும் மற்றொரு இடத்திலும் காணப்பட்ட நில வெடிப்புக்கும் இந்த நரிமணம் எண்ணெய்க் கிணறுகளுக்கும் தொடர்பு இருக்குமோ என்னவோ. நிலவியல் நிபுணர்கள் சொல்லட்டும்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் 'யுனெஸ்கோ' வெளியிடான 'நேச்சர் அண்ட் ரிஸோர்ஸஸ்' என்னும் இதழில் இப்பொருளில் மிக விரிவான ஆய்வுக் கட்டுரை எழுதியிருந்தார்கள். ஓர் ஆழ் துளைக் கிணறுக்கு அருகில் மற்றொன்று தோண்டப்படுகிறபோது ஏற்படக் கூடிய விளைவை அழகாய்ப் படம் போட்டு விளக்கியிருந்தார்கள்.

பூமிக்கு அடியிலிருந்து நிலக்கரியோ, கந்தகமோ, உப்பு வகைகளோ எண்ணெய் வளமோ எதைத் தோண்டி எடுத்தாலும் அங்கே பள்ளம் உண்டாகிவிடுகிறது. பல நேரங்களில் சுரங்கங்களுக்கு உள்ளேயே ஏற்படுகிற நிலச்சரிவுகளைப் பற்றிப் படிக்கிறோம். மேலே சமதளமாகக் காணப்படுகிற நிலமும் இப்படி உள்வாங்குகிறது.

நியூயார்க் நகரின் லா கார்டியா விமான தளம், இருபத்தைந்து ஆண்டுகள் செயல்பட்ட பிறகு இரண்டு மீட்டர் ஆழத்துக்குத் தரையை உள்ளே இழுத்துக் கொண்டிருக்கிறது. அபரிமிதமான எடை புழங்கியது காரணம் என்கிறார்கள். நகர நெரிசல்களால், மிக அதிகமான வாகனப் போக்குவரத்தாலும் நிலம் உள் வாங்கும்.

நிலக்கரிச் சுரங்கங்களின் காரணமாக ஜெர்மனி, கிரேட் பிரிட்டன், நைஜீரியா, தென் ஆப்பிரிக்காவின் மற்ற இடங்கள், ஆஸ்திரேலியா போன்ற பகுதிகளில் பூமி உள்ளே போயிருக்கிறது. யுகோஸ்லாவியா நகரம் ஒன்றிலும் இங்கிலாந்தின் செஷையர் மாவட்டத்திலும்கூட நிலம் உள்வாங்கியிருக்கிறது. இதற்குக் காரணம் நிலத்தடி உப்பை வெளியே எடுத்தது தான்.



நிலத்தடி நீர்க் கொள்ளை!

கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் கடல் மட்டத்துக்குக் கீழே நிலம் உள்வாங்குகிற வாய்ப்பு அதிகம் என்கிறார்கள். இதன் விளைவாகக் கட்டடங்கள் இடிந்து நாசமாவது மட்டுமில்லை. பாலங்கள் சேதமடையும், ரெயில் தண்டவாளங்கள்கூட வளைந்து நெளியும் அபாயம் உண்டு.

வேளாண்மைக்காக அதிக நீரை நிலத்தடியிலிருந்து பயன்படுத்திய காரணத்தினால் மட்டும் கலிபோர்னியா நகரில் பல இடங்களில் தரை இறங்கியுள்ளது. இதே போல் மெக்ஸிகோ நகரமும் ஒன்பது மீட்டர்நிலப் புதைவைக் கண்டது. 1970 முதல் மெக்ஸிகோ நகரின் மையப் பகுதிகளில் நிலத்தடி நீரை மேலேற்றுவதையே தடை செய்திருக்கிறார்கள். தவிர நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதற்காக வெளியிலிருந்து தண்ணீரை உட் செலுத்தும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

மிக நல்ல உதாரணமாகக் காட்டப்படுகிறது ஜப்பானில் தரையைக் குடைந்து நீர் எடுத்ததன் விளைவுகள்தான். 1981 வாக்கில் 59 இடங்களில் நிலம் உள்வாங்கியிருப்பது தெரிந்தது. பெரும்பாலானவை தொழிற்சாலைப் பகுதிகள். குடியிருப்புக்கு ஏற்றதான நிலப்பகுதியில் 12 சத விகித நிலம் 9,520 சதுர கிலோ மீட்டர் இப்படி இறங்கியதாய்க் கணக்கிட்டார்கள்.

> **“சுருட்டுவதை விட்டு விட்டுக் கடல் நீரைக் குடி நீராக்குவது போன்ற பணிகளுக்குத் ‘தியாகம்’ செய்யலாமே.”**

சென்னையில் நாள்தோறும் வளர்ந்து வருகிற கட்டுமானங்களும், கிராமங்களைக் காலி செய்து கொண்டு தினம் தினம் குடியேறுகிற மக்கள் தொகையும், தண்ணீரைப் பற்றிக் கவலையே படாமல் பெருகி வரும் பெரிய பெரிய தொழில் கூடங்களும் நம்மை எங்கே கொண்டு போய் விடும்? சென்னை போன்ற நெருக்கடியான மாநகரில் தெருவுக்குப் பத்து இடத்தில் ஆழ்துளைக் கிணறுகளைத் தோண்டுகிற முயற்சிகளின் விளைவு எதில் கொண்டு போய் விடும்?

அரசியல்வாதிகள் ‘சுருட்டுகிற’ தொகையே பல ஆயிரம் கோடிகள் என்கிறார்கள். கொஞ்சம் எதிர்கால நோக்கோடு, நெஞ்சில் ஈரம் தேக்கி, சுருட்டுவதை விட்டு விட்டுக் கடல் நீரைக் குடி நீராக்குவது போன்ற பணிகளுக்குத் ‘தியாகம்’ செய்யலாமே. கடல் நீரில் குடிநீர் மட்டுமில்லை, மின் ஆற்றலும் சேர்ந்தே கிடைக்கும்.

சென்னையின் தாகத்தை நிரந்தரமாகத் தணிப்பதற்கு இது ஒன்றே வழி!

- சுப்ர. பாலன்

"இலக்கம் பதினொன்று, சிவன்கோயில் வீதி, தி.நகர், சென்னை பதினேழு என்ற முகவரியிலிருந்து வந்திருக்கும் புஷ்பாவை மேடைக்கு அழைக்கிறோம்."

"நீங்கள் பாட வேண்டியது க அல்ல கா., குறிலல்ல நெடில்!"

– தமிழகம் வசப்பட்டிருக்கும் இந்தக் குரல்காரர் பற்றிய அறிமுகம் அவசியமில்லாதது. யெஸ். பி.எச். அப்துல்ஹமீதுதான்!

சன் டீ.வி.யில் பாட்டுக்குப் பாட்டு! ராஜ் டீ.வியில் ராஜகீதம்; ஜெயா டீ.வியில் 'ஆனந்த ராகம்' என்று தொடர்ந்து கொண்டிருக்கும் பி.எச். அப்துல் ஹமீதின் குரல் பயணம் சாட்டிலைட் ரேடியோ கனவில் நிற்கிறது!

"என்னதான் டீ.வி. சேனல்கள் பெருகி வந்தாலும் வானொலிக்கான சிறப்பு பெரியது. எல்லாவற்றையும் விட செவி வழி முந்திக்கொண்டு நிற்பது அதுதான். ஆனால் இந்தியாவில் வானொலி முக்கியப்படவில்லை.

"இலங்கைத் தமிழர்கள் இப்போது பல்வேறு நாடுகளில் வசித்து வருகின்றனர். அதில் இலங்கை வானொலியில் என் மூலமாக ஒலிபரப்புத் துறையில் பயிற்சி பெற்றவர்கள் பலரும் இருக்கிறார்கள். தமிழர்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்க வானொலி சிறந்த ஊடகம் என்று கருதுகிறார்கள். வெளிநாடுகளிலேயே பிறந்து வளர்ந்த புதிய சந்ததியினர் தமிழை மறக்காமல் இருக்க, ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தார்கள். அதன் பயனாக இருபத்தி நான்கு மணி நேரம் தமிழ் ஒலிபரப்புச் செய்யும் விதத்தில் சாட்டிலைட் வானொலி தொடங்கலாம் என்ற எண்ணம் வந்தது. அதற்கான முயற்சிகளில் இறங்கிக் கொண்டிருக்கிறேன். இந்த வசதி கிடைத்தால் தமிழர்கள் ஒரே நேரத்தில் ஒரே நிகழ்ச்சியை உலகம் முழுவதும் கேட்க முடியும்."

"கனவு நனவாக வாழ்த்துகள். பாட்டாலே புகழ் பெறுபவர்கள் இருக்கிறார்கள். பாடல் நிகழ்ச்சிகளை வழங்கும் அறிவிப்பாளரான நீங்கள் குரலாலே பிரபலமடைந்திருக்கிறீர்கள். இசை மீது காதல் எப்படி?

"நான் பள்ளியில் படிக்கும்போது ஓரளவு கர்நாடக





இசை கற்றிருக்கிறேன். சிறு வயதிலேயே இலங்கை வானொலியில் பணியாற்றும் வாய்ப்பும் கிடைத்தது. அப்போது வானொலி நிலையத்தில் அனைத்து அம்சங்களிலும் பரிச்சயம் வேண்டுமென்ற

அக்கறை எனக்கு இருந்தது. அறிவிப்பாளர் என்று மட்டும் என்னை நிறுத்திக் கொள்ளாமல் நாடக நிகழ்ச்சி, பரீட்சார்த்த முறையில் இசை நிகழ்ச்சிகளைப் பண்ணினேன். நான் வந்த பிறகுதான் 'மெல்லிசை' என்ற வடிவத்தை இலங்கை வானொலியில் ஒலிபரப்ப ஏற்பாடு செய்தேன். தமிழில் 'பாப்' இசை நிகழ்ச்சியையும் இலங்கை வானொலிதான் அறிமுகப்படுத்தியது.



நித்திக் கனகரத்தினம் என்ற சிறந்த பாடகர்கள் கிடைத்தார்கள்.

''பிறகு 'பாட்டுக்கு பாட்டு' நிகழ்ச்சியை அறிமுகப்படுத்தினேன். இதெல்லாம் இசை மீது எனக்கிருந்த காதலால்தான்.''

பழைய தியாகராஜ பாகவதர் பாட்டிலிருந்து நேற்றைய 'பல்லாங்குழியில் வட்டம் பார்த்தேன்' பாடல் வரை, எழுதியவர், இசையமைத்தவர் என்பதிலிருந்து எல்லாவற்றையும் எப்படி மனப்பாடமாக வைத்திருக்கிறீர்கள்.

''மற்றவர்களின் தவறுகளைக் கண்டு பிடிப்பதுதான் இலகுவான விஷயம் என்று நான் வேடிக்கையாகக் குறிப்பிடுவதுண்டு. அது மாதிரிதான் இதுவும்.

''1967-ம் ஆண்டு இலங்கை வானொலியில் நான் சேர்ந்தபோது ஆறு மாத காலம் பயிற்சியளித்தார்கள். அங்கு இசைத்தட்டுக் களஞ்சியம் இருக்கிறது. மிகப் பெரிய களஞ்சியம் அது. தினமும் நான்கு மணி நேரம் அந்த இசைத் தட்டுகளைப் பதிவேட்டில் எழுதிப் பதிய வேண்டும் என்பது என் பணி. பாடல்களை எழுதிப் பதியும்போது என்னையறியாமலே அவை என் மனத்தில் பதிந்துபோயின என்று நினைக்கிறேன். புதிய பாடல்களைப் பொறுத்தவரை நன்றாக பிரபலமான பாடல்கள்தான் காதில் விழும். அப்படி அடிக்கடி விழு[illegible] பாடல்களை ஞாபகத்திலிருந்து மீட்டு எடுப்பதுதான் நினைவுத்திறன். இ[illegible] எல்லோருக்குமே இருக்கிறது. என்னிடம்

அரட்டைக் கலவை!

'Popular' என்ற ஆங்கில வார்த்தையிலிருந்துதான் pop என்ற வார்த்தை தோன்றியது. அதை நியாயப்படுத்த, ஏதாவது ஒரு நல்ல செய்தி சொல்லக் கூடிய ஜனரஞ்சகத் தாளக் கட்டுடன் கூடிய பாடலை 'பாப்' இசை என்று ஒலி பரப்பினோம். இதன்மூலம் சிலோன் மனோகர் (சின்ன மாமியே...)

மட்டுமே இருக்கிற சிறப்பாக இதை நான் கருதவில்லை. நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். ஆனால் சின்ன சின்ன விஷயங்கள்கூட எனக்கு மறக்கும் நிலைதான் அதிகம் என்பது பலருக்குத் தெரியாது.

'தெனாலி'யில் நடித்தீர்கள். மீண்டும் நடிப்புக்கு...

அது ஒரு சுகமான அனுபவம். ஒருநாள் இலங்கையில் என் வீட்டிற்குச் சென்ற போது நடிகர் கமல்ஹாசன் தொலைபேசியில் பேசியதாக என் மனைவி சொன்னார். கிண்டலுக்குத்தான் சொல்கிறார் என நினைத்தேன். பிறகு கமலே பேசினார். 'எனக்குத் தமிழ் கற்றுக் கொடுக்க வேண்டும்' என்றார். 'தமிழா? கமலுக்கா?; என்று வியப்புற்றேன். பிறகுதான் 'இலங்கைத் தமிழ்' என்றார். இலங்கையில் 'யாழ்ப்பாணத் தமிழ், மட்டகளப்புத் தமிழ், மலைநாட்டுத் தமிழ், தென்னிலங்கைத் தமிழ் என்றிருக்கிறது. உங்களுக்கு எந்தத் தமிழ் வேண்டும்?' என்றேன். அவர் யாழ்ப்பாணத் தமிழ் என்றார். 'சரி' என்று இறங்கினேன். நானே தயாரித்த ஒரு நாடகத்தில் யாழ்ப்பாண நடிகர்கள் பங்கேற்ற ஒலிப்பேழை ஒன்று என்னிடம் இருந்தது. அதைக் கமலிடம் கொடுத்து, 'இதைக் கேட்டுப் பரிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள். பிறகு நான் சொல்லுவது பொருத்தமாக இருக்கும்' என்றேன். மாலையில் ஒலிப்பேழை கொடுத்தேன். மறுநாள் காலையில் அதைக் கேட்டுவிட்டு நானே வியக்கும் விதமாக என்னிடம் இலங்கைத் தமிழில் பேசினார்! எதையும் கிரகித்துக் கொள்ளக் கூடிய அவரது ஆற்றல் என்னைக் கவர்ந்தது. பிறகு இலங்கைத் தமிழ் சொல்லிக் கொடுத்தேன். படத்தில் நடிக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். சம்மதித்தேன். அந்தப் படத்தின் பாடல்களிலும் இலங்கைத் தமிழ் வருமாறு சில மாற்றங்களைச் செய்திருக்கிறேன்.

ஏற்கெனவே நான் எழுதி, இயக்கிய நகைச்சுவை நாடகத் தொடரான 'கோமாளிகள்' திரைப்படமாகியபோது அதில் நடித்திருக்கிறேன். இலங்கையில் தயாரிக்கப்பட்ட இந்தப்படம் இலங்கையில் அதிகமான நாட்கள் ஓடிய படம்.

சரி, தற்கால தமிழ்ப்பாடல்களின் போக்கு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

எப்போதும், எந்த நிமிடமும் சலிக்காத விஷயம் இசை மட்டும்தான். ஆனால் நாம் விரும்பியோ விரும்பாமலோ பலவித கலாசார கலப்பில் இருக்கிறோம். இது காலத்தின் கட்டாயம். அந்தக் காலத்தில் திரைப்பாடல்களை எடுத்துக் கொண்டால் கூட்டுக் கருத்துப் பரிமாற்றமாகவே இருக்கும். அதனால்தான் அவை சாகா வரம் பெற்றன. யந்திரத்தனமாக வெளிவரும் இப்போதைய பாடல்களில் மிகச் சில மட்டுமே காலத்தை வென்று மக்கள் மனத்தில் இடம் பிடிக்கின்றன. அப்படி இடம் பிடிக்கும் பாடலைக்கூட எல்லா டீ.வி சேனல்களும், வெளியிலும் அடிக்கடி ஒலிபரப்பி சலிப்புத்தன்மையை ஏற்படுத்தி விடுகிறார்கள்.

— ஏக்ஜி

படங்கள்: ஜரிஸ்

திடீர்ப் பரிசுப் போட்டி — 15 முடிவு:

'இந்தியா வரும் முஷாரஃப்க்கு என்ன பரிசு கொடுக்கலாம்' என்று வாசகர்களைக் கேட்டிருந்தோம்.



ஏராளமான வாசகர்கள் புதுசு புதுசாகப் பரிசுகளைச் சொல்லியிருந்தார்கள். இருந்தாலும் ராகவ்.மகேஷ் என்ற வாசகர் எழுதிய 'பஞ்ச்' ரூ.100 பரிசு பெறுகிறது:

*இந்தியா வரும் முஷாரஃப்புக்கு பட்டுப் புடைவையின் **பார்டரை** மட்டும் வெட்டிப் பரிசளித்தால் **எல்லையில்லா** மகிழ்ச்சியடைவார்.*

தஞ்சை. ராகவ். மகேஷ்,
71-பி, கிரி ரோடு, சீனிவாசபுரம்,
தஞ்சாவூர் — 9.



வாழும் கல்கி கதாபாத்திரங்களைப் பற்றி கேட்டாலும் கேட்டோம். வந்து குவிந்துவிட்டன கடிதங்கள்! கண்ணை மூடிக்கொண்டு ஒரு கடிதத்தை உருவி யெடுத்தால்... அயனாவரம் பூங்குழலி!

பொன்னியின் செல்வனில் வரும் கோடிக்கரை நாயகி பூங்குழலி துணிச்சல் மிக்கவள். புரட்சி எண்ணம் கொண்டவள். அயனாவரம் பூங்குழலி எப்படி? வந்தியத்தேவனோடு, ஸாரி... புகைப்படக்காரரோடு படையெடுத்தோம் அயனாவரத்துக்கு.

"பூங்குழலின்னு பெயர் வைத்ததனாலேயோ என்னவோ அந்தக் கேரக்டருக்கான குணங்கள் இவளிடமும் அப்படியே இருக்கு. துணிச்சல், பரபரப்பு, ஓரளவுக்குப் பாடவும் செய்வாள் அந்தப் பூங்குழலி மாதிரியே..." சர்டிபிகேட் கொடுத்தார் இந்தப் பூங்குழலியின் அம்மா கலைச்செல்வி.

சென்னை சைதாபேட்டையிலுள்ள தனியார் கல்லூரி ஒன்றில் இரண்டாமாண்டு பி.சி.ஏ படிக்கும் பூங்குழலி, ஒரு சில லைட் மியூசிக் குழுக்களில் இப்போது பாடி வருகிறார்.

"**நா**ன் பச்சையப்பன் கல்லூரியில் படிச்சிட்டிருந்த காலம். 1971-இருக்கலாம்னு நினைக்கிறேன். பொன்னியின் செல்வனை யதேச்சையாகத்தான் படிக்க நேர்ந்தது. கதைக்கு உள்ளே போனவன் அது முடிந்த பிறகுதான் மீண்டேன். எனக்கு ரொம்ப பிடித்த நாவல் பொன்னியின் செல்வன். அப்பவே முடிவு பண்ணினேன். கல்யாணமாகி பெண் குழந்தை பிறந்தால் பூங்குழலிங்கற பெயரை வைக்கணும்னு. அது என் இரண்டாவது மகள் பிறந்தப்போ நடந்தது"





என்று ஃப்ளாஷ்பேக்கில் சென்றுவிட்டு வந்து சொன்னார் பூங்குழலியின் தந்தை தேவமணி.

முப்பது வருட கல்கி வாசகர்களான இவர்கள் வீட்டில் கல்கி எழுதிய பெரும்பாலான நாவல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

"இப்போதும் மனத்துக்கு ஏதாவது கஷ்டம் வந்தால் கல்கி நாவலில் மூழ்கிடுவேன்" என்கிறார் தேவமணி.

"உங்களுக்குப் பெயர் தந்த நாயகி பற்றி ஏதாவது தெரியுமா?" என்று தெரியத்தனமாய்ப் பூங்குழலியிடம் கேட்டு வைக்க, அவ்வளவுதான், பொறிந்துவிட்டார்!

"என்ன சார் இப்படிக் கேட்டுட்டீங்க. என் பெயருக்கான நாயகியைத் தெரியுமான்னு

கேட்டதே தப்பு!" - கறுப்பு கவுன் போடாமலேயே அவர் வாதாட ஆரம்பிக்க, கேட்டதை வாபஸ் வாங்கினோம், அவசரமாக.

"நான் ஸ்கூல்ல படிக்க ஆரம்பித்த உடனேயே என் அப்பாவும் அம்மாவும் பொ.செ. நாவலைப் படிக்கக் கொடுத்திருக்காங்க. இந்த நாவல்ல வர்ற பூங்குழலியோட பெயரைத்தான் எனக்கு வைச்சிருக்குன்னு அவங்க சொன்னப் போ நான் நெகிழ்ந்து போயிட்டேன். மனசுக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது. ஏன்னா, பூங்குழலி, வந்தியத்தேவனாலேயே புத்திசாலிப் பெண் என்று பாராட்டப்பட்டவள். பொன்னியின் செல்வரை ஆபத்து காலத்துல காப்பாற்றியவள், தனது இனிய பாடலால் சோகத்தையும் உணர்வுகளையும் வெளிப்படுத்திய விதம் பூங்குழலிக்கே உரிய விஷயம்; அப்படிப்பட்ட ஒரு கேரக்டர் பெயரை வைச்சதுல ரொம்ப பெருமைப்படறேன் நான்."



• அப்பா தேவமணி, அம்மா கலையரசி, சகோதரி திவ்யாவுடன் பூங்குழலி

வைர விழா நாயகி!

பூங்குழலி மாதிரியே பாடவும் வேண்டும் என்பதற்காக இவரை கர்நாடக இசைப் பயிற்சியும் பெற வைத்தார்களாம் பெற்றோர்கள்.

"ஓரளவு இசை படிச்சேன். அப்புறம் படிப்புக்கு இடைஞ்சலா இருக்கேன்னு நானே பாட்டை நிறுத்திட்டுப் படிப்புக்கு வந்துட்டேன்" என்று சொல்லும் பூங்குழலிக்கு எதிர்காலத்தில் சிறந்த பாடகியாக வரவேண்டுமென்பதே ஆசையாம்!

கல்லூரியில் பேச்சு, கட்டுரை, பாட்டுப் போட்டிகளிலும் கலந்துகொண்டு ஏகப்பட்ட பரிசுகளைக் குவித்திருக்கிறார் இவர். படிப்பிலும் கெட்டிதானாம்!


கல்கியில், 'வாழும் கதாபாத்திரங்கள்' செய்தியைப் பார்த்ததும் என்ன நினைத்தீர்கள்?

"இந்தச் செய்தியை முதலில் பார்த்தது அப்பாதான். உடனே சந்தோஷத்தில் எல்லோரிடமும் சொன்னார். அடுத்த சில நிமிடங்களிலேயே இது பற்றிய தகவலை கல்கி இதழுக்கு எழுத ஆரம்பித்துவிட்டார். குட்டியூண்டு செய்தியா போடுவீங்கன்னு எதிர்பார்த்தேன். இப்படி ஃபோட்டோவெல்லாம் எடுப்பீங்கன்னு எதிர்பார்க்கலை" என்றவரின் முகத்தில் டன் டன்னாகப் பெருமிதம்.

"முப்பது வருட கல்கி வாசகர்களான எங்களைப் பற்றியும் செய்தி வெளியிடறதுலதான் முழு மன திருப்தி இருக்கு. கல்கி கல்கிதான்" என்று வீட்டிலிருந்த எல்லோரும் சேர்ந்து, நமக்கே வைரக் கிரீடம் சூட்ட ஆரம்பிக்க, அவசரமாக விடைபெற்றோம்.

— சலாம்ஜி

படங்கள்: ஐரிஸ்



↑ மெகா ஸ்பீட் கார்!

அமெரிக்காவைச் சேர்ந்த ஆன்ட் ரேக்ரீன் என்பவர் வடிவமைத்துள்ள இந்த கார் மணிக்கு 1240கி.மீ. வேகத்தில் சென்று சாதனை படைத்துள்ளது. முழுக்க முழுக்க அலுமினியத்தில் செய்யப்பட்ட இதை,'ரோல்ஸ்ராய்' காரின் 4 மோட்டார்கள் இயக்குகின்றன. இப்போதைக்குச் சாலையில் ஓட இந்தக் காருக்கு அனுமதி கிடையாதாம்!

— பாரிஸ் பார்த்தசாரதி

நோ கல்யாணம்!

நைஜீரியாவில் அந்நாட்டு தேசிய கீதம் உங்களுக்குத் தெரியவில்லை என்றால், நீங்கள் கல்யாணம் செய்து கொள்ள முடியாது! திருமணப் பதிவு அலுவலகத்தில் தங்கள் திருமணத்தைப் பதிவு செய்வதற்கு முன் மணமக்கள் இருவரும் கோரஸாக தேசிய கீதத்தைக் கட்டாயம் பாட வேண்டும் என்பது அந்நாட்டுச் சட்டம்!

— பா. குணா



தேன்கூடு



என் சகோதரன் மணிவண்ணன் அமெரிக்காவின் பாஸ்டனில் குடி இருக்கிறான். ஒரு நாள் ஜிம்மில் எக்ஸர்ஸைஸ் செய்துவிட்டு அப்பார்ட்மெண்ட் திரும்பியவனின் கையிலிருந்த தங்க ப்ரேஸ்லெட் மிஸ்ஸிங். ஜிம்மின் நோட்டீஸ் போர்டில் விவரம் எழுதி வைத்தான். இருபது நாட்கள் கழித்து அவனது தங்க ப்ரேஸ்லெட் கிடைத்தது. நடந்தது இதுதான்: இவன் சென்றதும் அந்த ஜிம்மிற்கு வந்த ஒருவர் கீழே கிடந்த ப்ரேஸ்லெட்டை எடுத்து விவரம் விசாரித்தார். யாரும் சரிவர கூறவில்லை. தமது பாண்ட் பாக்கெட்டில் பத்திரப்படுத்திய அவர் அன்றே எகிப்து நாடு சென்று விட்டார். அங்கிருந்து தமது பாண்ட் பாக்கெட்டிலிருந்த தங்க ப்ரேஸ்லெட் பற்றி அமெரிக்காவில் இருக்கும் மனைவிக்குத் தகவல் தந்தார். அவரது மனைவியும் அந்த சமயத்தில் எகிப்துக்கு வேறு வேலையாகச் செல்ல நேர்ந்தது. அவர் திரும்பிய பொழுது மறக்காமல் அந்த தங்க ப்ரேஸ்லெட்டை எடுத்து வந்து ஜிம்மில் ஒப்படைக்க அது பத்திரமாக என் சகோதரன் கைக்கு வந்தது! என்ன நேர்மை பார்த்தீர்களா?


— வாசுதேவன்.

நிறம் மாறும் நீர்!

தெற்கு ஆப்ரிக்காவில் ஒரு ஏரி இருக்கிறது. அதனுடைய தண்ணீரின் நிறம் பருவத்திற்கேற்ப தன்னைத்தானே மாற்றிக் கொள்கிறது. ஜூன் மாதத்தில் இந்த ஏரித் தண்ணீரின் நிறம் பச்சையாக இருக்கும். ஆகஸ்டு-செப்டம்பரில் அந்த ஏரித் தண்ணீர் பால்போல் வெள்ளை நிறத்துக்கு மாறும். நவம்பர்- டிசம்பரில் அந்த ஏரித் தண்ணீரின் நிறம் நீலம் ஆகிவிடும். வருடத்தில் மற்ற மாதங்களில் அந்த ஏரித் தண்ணீர் சாதாரணமாக இருக்கும். எல்லாவற்றையும் விட மிக ஆச்சர்யமான விஷயம் என்னவென்றால், அந்தத் தண்ணீர் எப்போதும் தெளிவாகவும் சுத்தமாகவும் இருக்கிறது. அதோடு அதன் தரம் மாறாமல் இருக்கிறது.

ஆதாரம்: 'காதம்பரி' இந்தி மாத இதழ்


தகவல்: 'சித்ரகலா ஸ்ரீதரன்'



"மூப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன் 'சுமைதாங்கி' படம் வந்தது. அப்போது பாளையங்கோட்டை புனித சவேரியார் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். விடுதி வார்டனுக்குத் தெரியாமல் இப்படத்திற்குச் சென்று, இரவில் பஸ் வசதி இல்லாததால் பேட்டையிலிருந்து பாளையங்கோட்டைக்கு நடந்து வந்தேன். வார்டனை ஏமாற்றிவிட்டு திரைப்படத்திற்குப் போனது வார்டனுக்குத் தெரிந்து விடவே, என்னை விடுதியை விட்டுப் போகச் சொன்னதுடன் தேர்வு எழுத அனுமதிக்க மாட்டேன் என்றும் சொல்லி விட்டார். நான் கல்லூரி தாளாளரைச் சந்தித்து என்னைத் தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும் என்று கேட்டேன். அவர் என்ன நினைத்தாரோ, என்னைத் தேர்வு எழுத அனுமதித்து விட்டார்!

– கல்லூரி விழா ஒன்றில் வைகோ.

தகவல்: டி.எல். ரெட்டி, வேலிடுபட்டி



ஓடும் ரயிலில் அழகு நிலையம்!


பெண்களுக்கான 'நடமாடும் அழகு நிபுணர்கள்' தோன்றி விட்டனர் மும்பை நகரில்! வேலை நிமித்தமாக காரியாலயங்களுக்கு இரயிலில் பயணம் செய்யும் பெண்களை அந்த இரயிலிலேயே சந்தித்து, அவர்களுக்கு அழகூட்டும் பணியை இவர்கள் செய்கின்றனர்! 'பக்கா'வான 'ப்யூட்டி பார்ல'ரில் உள்ளது போன்ற அனைத்து சாதனங்களையும் இந்த நடமாடும் நிபுணர்களிடம் காண முடியும்!

– ஆர். மார்க்கண்டன்

ரயில் இல்லாத நாடு!

ஆப்கானிஸ்தானில் சுமார் இரண்டு கோடி மக்கள் வாழ்கின்றனர். இது தமிழ் நாட்டைப் போல் ஐந்து மடங்கு பெரியதாகும். ஆனால் மக்கள் தொகையில் தமிழகத்தைப் போல் பாதி மடங்கு கூட இல்லை. மலைகள் நிறைந்திருப்பதால் இந்நாட்டில் இரயில் பாதைகள் அமைக்க முடியாமல் போனதால், ரெயிலே காணாத நாடுகளில் இதுவும் ஒன்றாகிவிட்டது.

– கே. ராஜா



வயிற்றைப் பிடித்துக் கொண்டு நடு வீட்டுக்குள் புரண்டுகொண்டிருந்தான் கொம்பையா. உயிரைச் சுருட்டி இழுப்பது மாதிரி இருந்தது வலி. கைகளை வயிற்றில் வைத்துப் பிசைந்து கொண்டு அவன் உருளுவதைப் பார்த்தால் ரணத்தின் வேதனை புரியும். இடுப்பை இறுக்கியிருந்த லுங்கியை அவிழ்த்துவிட்டான் வலி குறையுமென்று... ம்ஹூம்! மாறாக அதிகரித்தது. "ம்மா... ம்மா..." என மெதுவாக முனகினான். இப்படியொரு வலியை அவன் இதற்கு முன் அனுபவித்ததில்லை.

வீட்டின் பின்புற மண் சுவரில் சாணத்தை வட்டமாக்கிக் கறுப்பு நிலா மாதிரி தட்டிவிட்டு உள்ளே வந்த மாடத்தியை "அம்மா... ம்மா..." என்ற முனகல் நிறுத்தியது.

"ஏல... என்னல.. வயித்தைப் புடிச்சுக்கிட்டு உருளுத... வலியால...?"

"ம்.. ஆமா..!" என்று முகத்தை இறுக்கிக் கொண்டு சொன்னான் அவன்.

"சொன்னேன்... கேட்டியா... எடுபட்ட பயலே, சூட்டு சட்டையைப் போட்டுட்டு நம்மத் தெருவுக்குள்ள அலையாதேன்னு சொன்னேன், கேட்டியா நீ! இருக்கறவன் கண்ணெல்லாம் கொள்ளிக் கண்ணு. கஞ்சிக்கு வழியத்தவ மவனைப் பாத்தியா? சூட்டு போட்டுட்டுப் போறதேன்னு வயிறு எரிஞ்சிருப்பானுவோ கேடு கெட்ட பயலுவோ..." என்று பேசிக் கொண்டே அடுப்பங்கறைக்குள் நுழைந்தாள் மாடத்தி.

அவள் இப்படித்தான். அவளின் ஜாதிக்காரர்கள் எல்லோருமே அவளுக்கு எமனாக இருப்பதுபோலவும்,



ஓவியம்: பி.ஆர். ராஜன்

எல்லோருமே அவளை வெறுப்பது போலவும் ஒரு நினைப்பு. இதை ஆமோதிப்பது மாதிரி அவர்களின் பேச்சும் இருக்கும்.

ஆற்றோர தென்னை மரங்களிலிருந்து காற்றில் ஆடி, மணலில் விழுந்து கிடந்த தென்னம் மட்டைகளைப் பொறுக்கிக்

கொதி

ஜெ. ஏக்நாத் ராஜ்

கொண்டிருந்த ஒரு மாலையில் இப்படித்தான் பத்தாடி மகன் கேட்டான்.

"என்ன மாடத்தியக்கா... மட்டையெல்லாம் பொறக்கு தாப்ல இருக்கு..."

"என்ன செய்யச் சொல்லுதே... வெறவுக்கு ஆவும்லா..."

"ஆமா, கேக்கேன்னு கோபப்படாத, நீயே வயித்துப் பாட்டுக்குக் கஷ்டப் பட்டுட்டு இருக்கே. இந்த லட்சணத்துல உன் மவனைப் படிக்க வச்சு என்னத்தைப் பண்ணப் போற? பேசாம ரெண்டு ஆடு மாட்டை வாங்கி மேய்க்கச் சொன்னாலாவது பால், அது இதுன்னு வருமானம் வந்துட்டிருக்கும். படிச்சு என்னத்தைக் கிழிக்கப் போறான். இவ்ளோ கஷ்டத்துக்கு மேல..."


மாடத்திக்கு 'விசுக்'கென்று பொத்துக் கொண்டு வந்து விட்டது. கண்களில் எரிந்த நெருப்புக்கிடையே அவனை ஏறிட்டாள்.

"போதும்யா உன் யோசனை, 'என்னமோ சொன்னானாம் கதையில, எலி லவுக்கைக் கேட்டதாம் சபையில'ங்கற மாதிரிலா பேசுதே... வாயில என்னமாத்தான் வருது. என் கஷ்டத்துக்கு உன் வீட்லயா வந்து கஞ்சிக்கு நிக்கேன். நல்ல மரியாதையா பேசாம போ... யோசனை சொல்ல வந்துட்டான் யோசனை!"

அவன் சாதாரணமாகக் கேட்டிருந்தாலும்கூட மாடத்தியைப் பொறுத்தவரை இது கௌரவப் பிரச்னையாகி விட்டது. அன்று ஆரம்பித்த வைராக்கியம்தான். நாற்று நடவு, களையெடுப்பு, எருவு தட்டுதல் போன்ற சகல வேலைகளுக்கும் தன்னை ஆட்படுத்திக் கொண்டு மகனைப் படிக்க வைப்பதில் குறியாய் இருந்தாள் மாடத்தி. இதற்காக அவள் இழந்தவை அதிகமாகவே இருந்தது.

வலி விடுவதாயில்லை. ஏதோ உள்ளுக்குள்ளிருந்து குடலைச் சுண்டி சுண்டி இழுப்பதாய்ப்பட்டது. மீண்டும், "அம்மா அம்மா..." என முனகினான்.

"பொறுல... முனங்கிட்டு கெடக்காத... நான் சொன்னதைக் கேட்டிருந்தா இப்படி ஆயிருக்குமா? உங்கப்பன் இப்படித்தான் சொன்னதைக் கேட்காம போயி, என்னை மூளியாக்கினாரு. அவரை எங்கன்னு நீ வந்து வாய்ச்சிருக்கே... பொறு வாரேன். இதுக்குக் கொதி பிடிச்சாதான் சரிவரும்..." என்று பேசிக் கொண்டே ஒரு தாம்பாளத்தையும் சொம்பையும் எடுத்தாள். தாம்பாளம் நிறைய தண்ணீர். ஒரு வெள்ளைத் துணியை எடுத்து அதன் ஒரு பக்கம் மூன்று பட்டைகள் போல் துணியின் பாதிவரை கிழித்தாள். ஒரு பட்டையில் கரியாலும், மற்றொன்றில் மஞ்சளாலும், மூன்றாவதில் சுண்ணாம்பாலும் கோடு கிழித்தாள். படுத்திருந்தவனை உட்கார வைத்து, தலையிலிருந்து கால்வரை அந்தத் துணியைத் தடவினாள். அதில் அவன் மூன்றுமுறை துப்பினான். இப்படிச் செய்யும்போது இருவரும் பேசக்



"ஸ்டேஷன் நோட்டீஸ் போர்டுல AP, TM,TG... 30-40-35 ன்னு போட்டிருக்காங்களே... என்ன ரயில் அதெல்லாம்?"

"நீங்க வேற! அதெல்லாம் ஊழியர்களோட இனிஷியல். இவங்கலாம் 30-40-35 நிமிஷம் லேட்டா வருவாங்களாம்...!

— வி. ரேவதி

கூடாது என்பது விதியாம். மௌனம்! வலியைத் தாங்க முடியாமல் வந்த முனகலையும் அவன் அடக்கியாக வேண்டியிருந்தது.

மாடத்தி அந்த வெள்ளைத் துணியில் ஒரு பக்கம் தீ பற்ற வைத்தாள். எரியத் தொடங்கியதும் அதைச் செம்புக்குள் போட்டாள். செம்பை இப்போது தாம்பாளத்திலிருக்கும் தண்ணீரில் கவிழ்த்தாள். தாம்பாளத் தண்ணீர் முழுவதும் செம்புக்குள் அடைக்கலமாக 'கொர் கொர்' என்று ஒரு வித சப்தத்தை எழுப்பிக் கொண்டிருந்தது.

"அடக் கூறு கெட்ட பயலே... பாத்தியா... 'ஏழை சொல்லை எறப்பாளிக் கேட்காது'ங்கற மாதிரி இருந்தியே... இப்ப பாரு. இவ்வளவு கொதிக்குதே செம்பு... இது பூரா தெருக்காரன் கண்ணு. அவனுக நாசமாப் போக... உருப்படுவானுகளா...? என் புள்ளை படிக்கறது எந்தப் பயலுக்கும் பிடிக்கலையே... இனிமேலாவது தெரிஞ்சு நடந்துக்கோ ராசா" என்றவள் ஒப்பாரி வைக்கவே ஆரம்பித்துவிட்டாள்.

அவள் இது மாதிரி ஏதாவது செய்யும் தருணங்களில் கொம்பையாவுக்கு எரிச்சல் வரும். சின்னக் கத்தலில் தனது எரிச்சலை வெளிப்படுத்துவான். இன்று அமைதி காத்தான். அந்த அமைதிக்கு வேறு காரணம் இருந்தது.

"செத்த வலிக்கும்.... பெறவு அவ்வளவுதான். வலி போயிரும். கண்ணை மூடிட்டுத் தூங்கு. நான் வயித்துப் பாப்பா வீடு வரைப் போயிட்டு வந்திடுதேன்."

கிளம்பினாள் மாடத்தி.

கதவு திறந்து கிடந்த வீட்டில் அனாயாசமாகப் புகுந்து வந்து கொண்டிருந்தது காற்று. இந்தக் காற்று இதமாகத்தான் இருந்தது அவனுக்கு. இலேசாக வலி விட்டு விட்டு எடுக்க, எழ முயன்றான் அவன். அப்போதுதான் வீட்டின் முன் பக்க மண் சுவரில் சைக்கிள் சாத்தும் சப்தம் கேட்டது.

'வீட்ல அம்மா இருக்காளா?' என்று சைகையாலேயே கேட்டுக் கொண்டு வந்தவன் கொம்பையாவின் நண்பன் மாரி முத்து.

'இல்லை' என்பதாய் இவன் தலையாட்ட, மடித்துக் கட்டிய லுங்கியை அவிழ்த்து விட்டபடியே கீழே உட்கார்ந்தான் அவன்.

"ஏல... நேத்து நாம திருடித் தின்ன கோழி, சீக்குக் கோழியாம்ல. எனக்கு ஒண்ணுமில்லை. நம்ம ராசுகண்ணுவுக்கு ஒரே வயித்து வலியாம். புரண்டுட்டுக் கிடக்கான். அவன் அப்பாட்ட இந்தப் பய உளறிட்டான் நேத்தைய விஷயத்தை. உன்னையும் என்னையும் பார்த்தா அவன் அப்பா இதைக் கேட்பாரு... அது சரி, உனக்கு ஒண்ணும் ஆகலியே...?"

"ஆகலியேவா... வலில துடிச்சிட்டு இருக்கேன். தெரியலை!"

"உன் அம்மா ஏதும் கேட்டாளா?"

"புது பேண்ட் சட்டையைப் போட்டுட்டு நேத்து தெருவுல அலைஞ்சதுனாலதான் தெருக்காரன் கண்ணுபட்டு இப்படி ஆச்சன்னு சொல்லி, கொதி போட்டா, நான் வாயைத் தெறக்கலை."

இவர்கள் பேசிக் கொண்டிருந்தபோதே திரும்பினாள் மாடத்தி.

"எப்பா வா... உன் சேக்காளிக்கு வயித்து வலியாம் கேட்டியா...?" என்று அவன் நண்பனிடம் கேட்டுவிட்டு, கொம்பையா பக்கம் திரும்பினாள்.

"இப்ப எப்படி இருக்குல?"

"வலி இல்லை" என்றான் அவன்.

வயிற்றுவலிக்கான காரணத்தைத் தோழனிடம் சொல்லிக் கொண்டிருந்தாள் மாடத்தி.

"சூட்டு சட்டையைப் போட்டுட்டு தெருவுக்குள்ள..."

எதிரில் இவள் வீட்டுக் கோழி ஒன்று சென்று கொண்டிருந்தது. ○

ஸ்ரீ வாஸ்து ஶாந்தி மஹா யக்ஞ ப்ரஸாதம்



அனேக நமஸ்காரங்கள்

இப்பவும் ஸ்ரீ காஞ்சி ஆசார்யாள் அனுக்ரஹத்தால் ஆசார்யாள் டில்லி வந்திருந்த போது ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ வாஸ்து ஶாந்தி மஹா யக்ஞம் மிகச்சிறப்பாக நடந்தேறியது. 21/06/2001 சூரிய க்ரஹண தினத்தில் ஆரம்பித்து 05/07/2001 சந்திர க்ரஹண தினம் இரவு க்ரஹணம் முடியும்வரை ஹரித்வாரிலிருந்து கொண்டு வரப் பட்ட புனிதமான கங்கை ஜலத்தில் மிக உயர்வான பூஸூக்தம், வாஸ்து ஸூக்தம் மற்றும் நவக்ரஹ வேத மந்திரங்கள் ஜபிக்கப்பட்டன. பிறகு மூன்று நாட்களுக்கு ஹோமங்களும் நடத்தப்பட்டன. இந்த மந்திரம் உரு ஏற்றப்பட்ட புனிதமான கங்கை ஜலம் ஒவ்வொருவருக்கும் கிடைத்து அவர்கள் குடும்பத்திலிருந்து நவக்ரஹ தோஷங்கள், வீடுகளிலிருந்து (சொந்தவீடாக இருந்தலும் சரி வாடகை வீடாக இருந்தாலும் சரி) வாஸ்து தோஷங்களும் விலகி மக்கள் க்ஷேமமாக இருக்க இந்த ப்ரஸாதத்தை எல்லோருக்கும் அனுப்பிக் கொண்டிருக்கிறோம்.

இந்த ப்ரஸாதத்துடன் பூஸூக்தம், வாஸ்து ஸூக்தம் மற்றும் நவக்ரஹ வேத மந்திரங்கள் அடங்கிய ஒரு அருமையான ஆடியோ கேஸட்டும் அனுப்புகிறோம். இவை கிடைக்க ரூபாய் 36+(கொரியர் செலவிற்க்கு) 15 = 51/- க்கு Your Family Friend என்ற பெயருக்கு D.D/M.O அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த ப்ரஸாத வினியோக கைங்கர்யத்தில் தங்கள் குடும்பத்தைத் தவிர இரண்டாவதாக ஒரு குடும்பத்திற்கோ நபருக்கோ ப்ரஸாதம் அனுப்ப ரூபாய் 51/- வாங்கி சேர்த்து அனுப்பும் அன்பர்களுக்கு மட்டும் இரண்டு குடும்பங்களிலிருந்தும் ஒவ்வொரு நபருக்கோ அல்லது ஒரே குடும்பத்திலிருந்து இரண்டு நபர்களுக்கோ ப்ரஸாதத்துடன் துல்யமாக ஜாதகம் கணித்து தலா மூன்று கேள்விகளுக்கு தெளிவான பதிலும் எந்தக்கட்டணமும் இல்லாமல் இலவசமாக எழுதி அனுப்பப்படும். ஜபிக்கப்பட்ட ஜலம் தீர்ந்துவிட்டால் பணம் பெற்றுக் கொள்வது நிருத்தப்பட்டு திருப்பிவிடப்படும். ப்ரஸாதம் கிடைக்க மற்றும் ஜாதகம் கணிக்க பெயர், பிறந்த தேதி, நேரம், இடம் இவற்றுடன் உங்கள் தெளிவான முகவரியையும் எங்களுக்கு எழுதவும். G.K.Seetharaman, Your Family Friend, 142, Zamrudpur, New Delhi-110048.

புது டில்லியில் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஸ்ரீ வேத வித்யா குருகுலம் வேதபாடசாலை நடந்து வருகிறது. இதில் மூன்று ஆண்டுகள், எட்டு ஆண்டுகள் என்று இரண்டு விதமான பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டு முற்றிலும் இலவசமாகச் சொல்லித்தரப்படுகின்றது. இதில் சேர்ந்து படிக்கும் மாணவர்களுக்கு இடம், உணவு, உடை ஆகியவை முற்றிலும் இலவசமாக அளிக்கப்படுகிறது. மாணவர்களுக்கு யஜுர் வேதத்துடன் ஜோதிஷம், கம்யூட்டர் கல்வியும் அளிக்கப்படுகிறது. 26.06.2001 அன்று மூன்றாண்டு பாடத் திட்டத்தில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா நடந்தது.



இந்தப் பாடசாலையில் ஆண்டு தோறும் ஜூலை மாதத்தில் 12 வயதிற்கு மேற்பட்ட 24 வயதிற்கு உட்பட்ட மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இதில் சேர விரும்பும் மாணவர்கள் Your Family Friend, 142, Zamrudpur New Delhi.110048. Ph:- 6219385, 6428796, என்ற முகவரிக்கு தொடர்பு கொண்டு (சுய விலாசமிட்ட கவரில் ரூபாய் 6/-க்கு தபால் தலை ஒட்டி) விண்ணப்பிக்கலாம்

வட்டமேஜை

வசீகரித்த ஓவியம்!

✉ என்னதான் பலமான பல்வேறு அமைப்புகளுடன் கட்டுக் குலையாத தொண்டர்களைக் கொண்ட கட்சியாக இருந்தாலும், கலைஞர் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாத ஒரு வெற்றிடம் தி.மு.கவில் இருந்து வருகிறது என்பதையும், உடனடியாக இதைச் சரி செய்யாவிடில் கட்சியின் இலட்சியங்கள் எதிர்காலத்தில் சிதிலமாகிப் போகும் என்பதையும் தெளிவாக அலசி எச்சரித்திருந்தது 'தடுமாறிய அறிவாலயம்!' கட்டுரை.

கபிஸ்தலம், எஸ். இராஜேந்திரன்

✉ மும்தாஜ் யாசினின் 'ஓங்கிய கை' சிறுகதை, குடும்பத்தில் நிலவும் பல்வேறு எண்ண ஓட்டங்களை வெளிப்படுத்தியது.

சென்னை, சி. மகேஷ்

✉ ஜெயலலிதாவின் ஆட்சி நீடிப்பதற்கு மத்திய அரசு மட்டும் காரணமில்லை. ஊழலுக்குச் சாமரம் வீசும் காங்கிரசும் கம்யூனிஸ்ட்களும் மூலகாரணம் என்பதை நாடே அறியும். சட்டசபைகளைக் கலைப்பதில் கின்னஸ் சாதனை செய்த காங்கிரஸ் கட்சி தமிழகத்துக்காக முதலைக் கண்ணீர் வடிக்கிறது.

தஞ்சாவூர், வளர்மதி ஆசைத்தம்பி.

✉ 'கவலைக் கருக்களை வளர்க்காத இரவு எங்கே கிடைக்கும்?' என முடியும் 'நல்ல இரவு எங்கே கிடைக்கும்?' கவிதையின் வரிகள் மனத்தில் ஆழப்பதிந்தன.

தேனி, பாலசுப்ரமணியன்

✉ வழக்கறிஞர் அருள் மொழியின் கருத்து, இன்றைய சூழலுக்கு ஏற்புடையதாக உள்ளது. எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அதற்குப் போலீஸ் துணை போவதாக உள்ளது.

நாகூர், எஸ்.அப்துல்லா அஹமது

✉ 'நில், கவனி, வெற்றி கொள்' பகுதியில் பிரசுரமான 'தாழ்ப்பாள் ரகசியம்' இன்றைய இயந்திர உலகில் ஒவ்வொரு மனிதனும் படித்து தன் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய, வெற்றிப் படிக்கு வழி காட்டும் ரகசிய பாதை.

திருச்சி, உஷா முத்துராமன்

✉ அரைக் குடம் வியர்வை, அரைக் குடம் தண்ணீர் தமிழகத்தின் தண்ணீர் பிரச்னையை, நகைச்சுவை கலந்த சோகத்தோடு கதையாய்த் தந்திருந்த விதம் பாராட்டுக்குரியது.

சென்னை, சுந்தரி சுந்தரம்

✉ பாடல் வெளியாகி 'ஹிட்' ஆவதற்கு முன்பே, சரியாகக் கணித்து, பாடியவரின் ('நில்' - புஷ்பா ஸ்ரீராம்) பயோடேட்டாவைத் தந்து அசத்தி விட்டீர்களே!

சென்னை, என். ரஜினி



✉ வந்தியத் தேவனுக்கு 'கல்கி'யே வாழ்த்து விடை தருவதாக அமைந்துள்ள ஓவியம் வசீகரித்தது!

திருவானைக்காவல், எஸ்.கௌரிலக்ஷ்மி

✉ நீங்கள் சொல்வது மாதிரி பார்த்தால் 4 ½ ஆண்டுகளுக்குப்பின் தானே தேர்தல் வரப் போகுது. அதற்கிடையே எத்தனை முறை தன்மானச் செம்மல் (ராமதாஸ்) தாவுவாரோ? எனக்கென்னவோ அய்யய்யாடாய்த் தானுள்ளது.

கருப்பம்புலம், வசந்தாகாந்த்

✉ 'மக்கள் சேவையைவிட வேறென்ன மகத்துவம் இருக்க முடியும்' என்று கூறும் சமூக சேவகியும், நியமன எம்.எல்.ஏ.வுமான திருமதி. சான்ட்ராவின் நல்ல மனம் மற்ற எம்.எல்.ஏ.க்களுக்கும் வர வேண்டும்.

மதுரை, வீ.பா.கிருஷ்ணன்

ஆர்ச்சருக்கு வந்த சோதனை!

"நான் ஏன் ஜெயிலில் இருக்கிறேன்? என்று விவரமாகச் சொல்லட்டுமா?

-பிரபல ஆங்கில நாவலாசிரியர் ஜெஃப்ரி ஆர்ச்சர் எழுதிய ஒரு நாவலின் முதல் அத்தியாயம் இப்படித்தான் ஆரம்பிக்கும். ஆனால் இன்று அதேபோல ஆரம்பித்து, சுயபுராணமே எழுதும்படி ஆகிவிட்டது ஜெஃப்ரி ஆர்ச்சருக்கு. ஆம்! பிரிட்டிஷ் நீதிமன்றம், ஆர்ச்சருக்கு நாலு வருட ஜெயில் தண்டனை அளித்துள்ளது.

ஆர்ச்சரின் நாவல் போலவே விறுவிறுப்புக்கு இந்தக் கேஸிலும் துளிக்கூட பஞ்சமில்லை! இன்று லண்டனில் 'டாக் ஆஃப் தி டவுன்' இந்த சமாசாரம்தான்!

இந்தக் கேஸ் பற்றி பதினாறு வருடம் பின்னோக்கிய ஒரு பிளாஷ்பேக்.

அப்போது, ஜெஃப்ரி ஆர்ச்சர், லண்டன் ஓட்டல் ஒன்றில் மோனிகா (அட! இங்கேயும் ஒரு மோனிகாவா?) என்கிற பெண்ணுடன் தங்கியிருந்தார் என்று லண்டனிலிருந்து வெளிவரும் 'டெய்லி ஸ்டார்' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டது. பிரபல எழுத்தாளராக மட்டுமின்றி, டோரி கட்சியிலும் முக்கியஸ்தராக இருந்த ஆர்ச்சர், தன்னைப் பற்றி, அவதூறாக டெய்லி ஸ்டார் பத்திரிகை செய்தி வெளியிட்டு, அவமதித்து விட்டதாகச் சொல்லி, மானநஷ்ட வழக்கு போட்டார்.

அந்த வழக்கு நடந்தபோது, டெய்லி ஸ்டார் பத்திரிகை அபாண்டமாய்க் குற்றம் சொல்லிய குறிப்பிட்ட தினத்தில், டெட் பிரான்சிஸ் என்ற டெலிவிஷன் புரொட்யூசருடன் தாம் டின்னர் சாப்பிட்டுக் கொண்டிருந்ததாகச் சாட்சிகளைக் கோர்ட்டில் சமர்ப்பித்தார். ஆர்ச்சரின் மனைவியும் தமது கணவரது 'பதிவிரத' குணத்துக்குச் சர்டிபிகேட் கொடுத்தார். ஆர்ச்சர் வழக்கை ஜெயித்தார். டெய்லி ஸ்டார் பத்திரிகை, ஆர்ச்சருக்கு ஐந்து? பவுண்டு நஷ்டஈடு தரவும் உத்தரவாகியது.

இத்துடன் கதை முடியவில்லை. எதிர்பாராத திருப்பம் ஒன்று நிகழ்ந்தது. குறிப்பிட்ட தினத்தில், ஆர்ச்சர் தம்முடன் டின்னர் சாப்பிட்டார் என்று சாட்சி சொன்ன டி.வி. புரொட்யூசர் டெட் பிரான்சிஸ், திடீரென சமீபத்தில் பல்டி அடித்துவிட்டார். உண்மையில், ஆர்ச்சர் அந்த குறிப்பிட்ட நாளில் தம்முடன் டின்னர் சாப்பிடவில்லை. அது பொய். ஜோடிக்கப்பட்ட சாட்சி என்று 'நியூஸ் அஃப் தி வோர்ல்டு' என்ற பத்திரிகைக்குப் பேட்டியளித்து விட்டார். விஷயம் விபரீதமாகிப் போனது. தமக்கு நிறைய பணம் கொடுத்து, இப்படிக் கோர்ட்டில் சொல்லும்படி ஆர்ச்சர் சொன்னதாக பிரான்சிஸ் குட்டை உடைத்துவிட்டார்!

திடீரென்று பிரான்ஸிஸ் பல்டியடிக்க என்ன காரணம்? "மேயர் பதவிக்கு ஆர்ச்சர் வர முயற்சிப் செய்வதாகத் தெரிந்தது. இப்படிக் கோர்ட்டில் பொய்யான சாட்சி சொல்லி, நீதிமன்றத்தையே ஏமாற்றிவிட்ட ஒருவர் மேயர் ஆவதில் எனக்கு உடன்பாடில்லை! எனவேதான் உண்மையை, வெளிப்படையாகப்போட்டு உடைத்தேன்" என்கிறார் பிரான்ஸிஸ்.

இந்த திடீர் பல்டிதான், ஆர்ச்சரைக் கம்பி எண்ண வைத்து விட்டது. லண்டன்வாசிகள் இப்போது அடிக்கிற கமெண்ட் என்ன தெரியுமா? 'தமது ஜெயில் அனுபவத்தையே ஒரு நாவலாக எழுதி, கோடிக் கணக்கில் சம்பாதித்துவிடுவார். ஆர்ச்சரா? கொக்கா?'

— எஸ். சந்திரமௌலி



PRABHALA PRABHALA PRABHALA PRABHALA PRABHALA PRABHALA PRABHALA

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி

ரூ. 5000 முதல் பரிசு பெறும் கதை



'எம்மோவ்... மாசாணம் வந்திருக்கேன்' என்று கருதிக்கூட்டி முற்றத்தில் குரல் கேட்டால் போதும். வீட்டிலுள்ள பொம்பளைகள் அவசரம் அவசரமாய் எழுந்து, பானைக்குள் கைவிட்டு இரண்டு குத்துப் பருக்கைகளை அள்ளி, பாத்திரத்தில் போட்டுக்கொண்டு வந்து மாசாணம் வைத்திருக்கும் குத்துப் போணிக்குள் அல்லது பித்தளைச் சட்டிக்குள் கொட்டி விட்டுப் போவார்கள். இனி அடுத்த வீட்டுக்கு அவரின் நடை போகும். குரல் கேட்கும்... 'எம்மோவ்... மாசாணம் வந்திருக்கேன்.'

ஒட்டடைக் குச்சி போல நோஞ்சான் தேகம். பாதிக்குப் பாதி நரைத்த தலை. எப்போதும் அதே வளர்த்தியுடன் காட்சி தரும் சன்ன மயிர். வயசுக்கு ஏற்றாற்போல சன்னமாய்ச் சுருக்கு விழுந்த தோல். இடுப்பில் கட்டியிருக்கும் நாலு முழ வேட்டி எப்போதும் அழுக்காய்த்தான் தெரியும். மேலுக்குச் சட்டை போட்டது கிடையாது. வாலிப வயசுக்குப் பிறகு அதற்கும் விடுதலை கொடுத்தாயிற்று. தலையில் மட்டும் எப்போதும் மடித்துக் கட்டியிருக்கும் தலைப்பாகைத் தெரியும். இடுப்பில் செருகியிருக்கும் வேட்டி முடிப்பில் பொட்டலம்போல ஒரு பொடி மட்டையைச் சுருட்டி வைத்

ஊர்ச்சோறு

அபிமானி



இருப்பார். அவருக்கு வாய் அரிக்கும்போதெல்லாம் மட்டையை எடுத்து விரித்து இரண்டு இலைக்கு நுள்ளிப் பாந்தமாகப் பற்களில் தேய்த்துக் கொண்டால்தான் சுதாரிப்புக் கிடைக்கிறது. ஒவ்வொரு வீடாய் ஏறி இறங்குவதற்கு உற்சாகம் வருகிறது.

எல்லா வீடுகளிலுமே உடனே சோறு கிடைத்து விடாது. சில வீடுகளில் அப்போதுதான் உலையேற்றி அரிசி போட்டிருப்பார்கள். அது போன்ற வீடுகளில் அவரின் குரல் வந்த மறுகணமே, 'செத்தும் நேரம் கழிச்சி வாப்பா... இப்பதாம் ஒல வச்சிருக்கேன்' என்ற பதிலே சுரத்துக் குறைந்து கேட்கும். ரொம்பவும் சடவுப் பட்டுப் போணியைத் தூக்கிக் கொண்டு அடுத்த வீட்டுக்கு நடை போடுவார் மாசாணம். மனசுக்குள் அச்சலாத்தியாய் இருக்கும் அவருக்கு.

பல குடிசைகளும் சில ஓட்டு வீடுகளுமாய்க் கொண்ட அந்தத் தெருவிலுள்ள ஐம்பது சொச்சம் வீடுகளுக்கும் சென்று சென்று சோறு வாங்குவதற்குள் மாசாணத்துக்குப் பொசமுட்டிக் கொண்டு வந்து விடும். எல்லா வீடுகளிலுமே சோற்றுப்

பருக்கைகளாய்க் கிடைத்து விடாது என்பதே உண்மையாயிருந்தது. சில வீடுகளில் சோளக் கஞ்சியும், சில வீடுகளில் கேப்பைக் கூழும் கூடக் கிடைக்கும். எதையும் வேண்டாம் என்று மறுப்பது தொழில் தர்மமாகாது என்றே அவருக்கு உள்மனம் சொல்லும். அவர்களிடம் இருப்பதுதானே தமக்கும் கிடைக்கும் என்று சமாதானப்பட்டு, மனசு நிறைந்து கொள்வார் அவர். அவை எல்லாமே தன் ஒரே பாத்திரத்திற்குள் கிடந்து அலம்புவதைப் பொருட்படுத்தாமல் நடைபோடுவார். வீட்டுக்குப் போனதும் மருமகக்காரியைத் துவையல் அரைக்கச் சொல்லி, எல்லாவற்றையும் மொத்தமாய்த் தண்ணீர் விட்டுக் கரைத்துப் பேரப்பிள்ளை, மருமகள், மகன் சகிதம் தனித்தனிப் பாத்திரங்களில் ஊற்றிக் குடிக்கத் தருவார். தொட்டுக் கொள்ளும் துவையல் சற்று எரிப்பாக இருந்தால் கஞ்சிக்குக் கச்சிதமாக இருக்கும்.

வேறு என்ன செய்ய. அந்த ஊர்ச் சோற்றை நம்பித்தான் அவரின் குடும்பமே வாழ்ந்து கொண்டிருந்தது. அவரின் பாட்டனார் காலத்திலிருந்தே அந்தத் தெரு அவர்களின் வெளுப்புக்குப் பாத்தியப் பட்டிருந்தது. தெருக்காரர்களின் அழுக்குகளை எல்லாம் வாரத்திற்கு ஒருமுறை மூட்டை கட்டி வாங்கிக் கொண்டு வந்து, வெள்ளாவி வைத்து, இரண்டு மூன்று பொதிகளாய்க் கட்டி கழுதைகள் மேல் ஏற்றி, தூரத் தொலைவெட்டியிலுள்ள அனுமன் நதிப் படுகைக்குச் சென்று, அடித்துத் துவைத்துக் காய வைத்து, இரண்டொரு நாளில் மீண்டும் அவற்றை அந்தத் தெருவுக்கே கொண்டு வந்து குறி பார்த்து வீடு வீடாய்த் தந்துவிட்டுப் போக வேண்டும். அவருடன் அவரின் மகனும் மருமகக்காரியும் கூடமாட நின்று ஒத்தாசைப் பண்ணினால்தான் வெளுப்பு வேலைகள் நடக்கும் என்ற நிலையே நீடித்தது. வயசான காலத்தில் அவர் மட்டுமே தனிக்க நின்று ஒன்றையும் செய்ய முடியாததாகத் தோன்றியது. பத்துப் பதினோரு வருசத்துக்கு முன்னால் வயிறு வீங்கிச் செத்துப் போன அவரின் பொஞ்சாதிக்காரி பாலம்மா இருந்தவரைக்கும் அவரின் ஆவுதுணைக்கு வேற ஆள் தேவையில்லாமல் இருந்தது. இரண்டு பேருமே சேர்ந்து நாலு பொதித் துணி என்றாலும் தாமசம் காட்டாமல் வெளுத்துக் கொண்டு வெரசலாய் வீடு வந்து சேர்வார்கள். இன்றைக்கு ஒத்திக்கு ஒருத்தனாயுள்ள அவரின் மகன்காரனையும், மூன்று வருசத்துக்கு முன்னக் கூட்டி வாக்கப்பட்டுக் கொண்டு வந்து, இன்று இரண்டு வயசில் ஒரு புள்ளைக்குத் தாயான அவரின் மருமகக்காரியையும்தான் நம்ப வேண்டியிருக்கிறது. என்றைக்காவது வெளுப்பு இல்லாத நாட்களில் மகனும் மருமகக்காரியும் காட்டுச் சோலிகளுக்குப் போய்க் காசு கொண்டு வருவதில் அவர்களின் குழம்புக்கோ அல்லது துவையலுக்கோ தேவையான சாமான்கள் வாங்கிக் கொள்ள முடிகிறது. ஊர்ச்சோறு வாங்கிக் கொண்டு மாசாணம் தாமசமாக வருகிற இரவுகளில், வீட்டிலுள்ளவர்களின் இளம் பசியை ஆற்றிக் கொள்ள அந்தக் காசுகளாலேதான் காரியமாகிறது.

எத்தனையோ தடவை அவரின் மகன்காரன்கூட அவரிடம் சொல்லியிருக்கிறான்:

"இந்தப் பொழைப்பெல்லாம் வேணாம்பா... கழுதைகளைக் கட்டி அழுது இட்டு... அடுத்தவங்க அழுக்குத் துணியத் தொவச்சிக் குடுத்துச் சோறு வாங்கித் தின்னுக்கிட்டு! ஊர் நாட்டப் போல பேசாம மொதலாளிமாருங்க வயக்காட்ல சோலிப் பாத்துக் கூலி வாங்கிச் சாப்டுவோம்."

அவனின் வார்த்தைகளுக்கு மாசாணமும் பதிலடைந்து விடுவார்.

"கிருசிக்கெட்டத்தனமாப் பேசாதல... அவியத் துணியத் தொவைக்கோம், சோறு வாங்கிச் சாப்டுதோம். பாரம்பரியமாப் பாத்துட்டு வர்ற தொழிலைத் திடுதிப்புன்னு

"போரில் தோற்றது பெருத்த அவமானம் அமைச்சரே!"

"அதைவிடப் பெரிய அவமானம் இருக்கிறது மன்னா...!"

"என்ன அது?"

"தாங்கள் புறமுதுகிட்டு ஓடறதை வீடியோ வேற எடுத்து வச்சிருக்கான் நம்ம எதிரி!"

— திருச்செங்கோடு ப. கந்தசாமி



நிப்பாட்டச் சொன்னா முடியுமால?"

அந்தத் தெருக்காரர்களிடமிருந்து வெறும் சோறு மட்டும வாங்கிச் சாப்பிடவில்லை என்பது மாசாணத்துக்குத் தெரியும். ஆறு மாசங்களுக்கு ஒரு தடவை வீட்டுக்குத் தலா ஆறுபடி நெல்லும், ஐம்பது ரூபாயும் வாங்கிக் கொண்டிருந்தார். காலம் மாற, அவர் வாங்கிய கூலியின் அளவும் மாறி, கூடிக் கொண்டிருந்தது. ஆனாலும் அது அவரின் வாழ்க்கைத் தரத்தைக் கூட்ட முடியாதிருந்தது உண்மையே. வாய்க்கும் வயித்துக்கும் சரிமானமாகி விடுகிறது. அதனால்தான் இதுவரைக்கும் ஒரு ஓட்டுக் கூரைக்கும் இரண்டு கழுதைகளுக்கும் மீறி அவரால் வசதியைப் பெருக்கிக் கொள்ள முடியாதிருந்தது. வீட்டு முற்றத்தின் கிழக்கு ஓரத்தில் 'ஆவ்'வென்று வாய் பிளந்து நிற்கும் வெள்ளாவி அடுப்பே அவரின் வாழ்க்கையை விழுங்கி விட்டதுபோலத் தோன்றும். சாணி தெளித்த முற்றத்தில் பறக்கும் பொருக்குகள் தேகத்தில் பட்டுவிட்டால் சொரக் சொரக் கென்று குத்தித் தொலைக்கும். மேலெங்கும் கம்பளிப்பூச்சி ஊர்வது போல அரிச்சலெடுக்கும். ஓட்டுக் கூரைக்கு அடுத்து சின்னதாய்க் கட்டியிருந்த ஓலைக் குடிசைக்குள்தான் முந்திய நாட்கள் எடுத்து வந்திருந்த அழுக்குத் துணிகள் அம்பாரமாய்க் குவிந்து கிடக்கும். இன்னும் இரண்டொரு நாளில் அவை வெள்ளாவிக்கு ஏறி ஆற்றுக்குப் போக வேண்டும்.

ஆற்றில் தண்ணீர் இல்லாத நாட்களில் தான் அவரின் பாடு பெரும்பாடாகிப் போனது. பாழாய்ப் போன அந்த அனுமன் நதி, வருசத்துக்கு ஆறு மாதம் வறண்டு போனது. மழைக்காலத்தில் மட்டும் வெள்ளக்காட்டில் மிதந்துவிட்டு, கோடையில் மணலாய் விரிந்து கிடந்தது. அது போன்ற இக்கட்டான சமயங்களில் கழுதைகளில் பொதி ஏற்றிக் கொண்டு வாய்க்கால் எங்கே, வரப்பு எங்கே என்று தேடிப்போக வேண்டியதிருந்தது மாசாணத்துக்கு. அதுவும், 'ஏய் மாசாணம்... கண்ட கண்ட அழுக்கத் தொவச்சிவுட்டு பயிர நாசமாக்கிராத' என்கிற மொதலாளிமார்களின் மிரட்டலுக்குப் பயந்துகொண்டே. என்ன செய்ய முடியும் அவரால். தாமசமாகிப் போனால் தெருக்காரர்கள் சண்டைக்கு வருகிறார்கள். 'என்ன நாறப் பொழப்பு' என்று சில நேரங்களில் அவரின் மனசு



"மாப்பிள்ளை வானிலை அறிவிப்பாளரா இருக்காராம்..."

"அதுக்காக கல்யாண பத்திரிகையில திருமணம் நடக்கலாம் அல்லது நடக்காமலும் போகலாம்னு அச்சடிச்சிருக்கிறது நல்லால்லீங்க..."

– குமார்ஜி

●●●●●●●●●●●●●●●●●●●●●

நொம்பலப் படுவதும் உண்டு. தன்னால் வேறு வேலை என்ன செய்ய முடியும் என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டே சமாதானம் அடைந்து போவார். அது போன்ற வேதனையான சமயங்களில் அவரின் பொடி மட்டைதான் ஆறுதல் படுத்தும். இரண்டு இணுக்கு எடுத்து பல்லுக்கடியில் தேய்த்துக் கொண்டால் போதும். பழைய உற்சாகம் கிளம்பி விடும்.

"எம்மோவ் மாசாணம் வந்திருக்கேன்."

இதுதான் கடைசி வீடு. முற்றத்தில் நின்று குரல் கொடுத்தார் மாசாணம். அநேகமாய் அந்தத் தெருவில் எல்லா வீடுகளிலுமே சோறு வாங்கி முடித்திருந்தார். முக்கால்வாசிப் பானை நிறைந்திருந்தது.

அது முக்கு வீடு என்பதால் தெரு விளக்கின் வெளிச்சத்திலிருந்து விடுபட்டுக் கிடந்தது. சுற்றிலும் இருட்டின் இறுகலான முற்றுகை. தெருவில் சனங்களின் அணக்கம்கூட சுத்தமாய் ஓய்ந்திருந்தது போலத் தோன்றியது. நேரம் ஒன்பது மணிக்கு மேல் ஆகியிருக்க வேண்டும். இந்நேரம் அவரின் வீட்டில் எல்லோரும் பசியால் துடித்துக் கொண்டிருக்கலாம் என்றே நினைப்போடியது அவருக்கு. அவரின் பேரப்பயலை நினைத்துதான் ரொம்பவும் வேதனைப் பட்டார். பசி தாளாமல் என்ன வரத்து வருகிறானோ என்றிருந்தது அவருக்கு.

அழுது முகம் வீங்கிப் போய் விடலாம் அவன். சீக்கிரமாய் வீட்டுக்குப் போய்விட வேண்டும். அங்கிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில்தான் அவரின் வீடிருந்தது. மேப் பொறந்த சாதிக்காரர்களின் தெருக்களையும் தார்ச் சாலையையும் கடந்து போக வேண்டும். சிக்கல் சிரமமில்லாத பாதை.

"எம்மோவ்..!"

மீண்டும் குரல் கொடுத்தார் மாசாணம். அவருக்கு அவசரம். வீட்டுக்குப் போகும் அவசரம்.

இப்போதுதான், கையில் குழந்தையுடன் முற்றத்துக்கு வந்தாள் மூக்கம்மாள். அடுப்படியில் கிடந்து அல்லாடியிருப்பாள் போல. வேர்த்து வெச வெசத்துப் போயிருந்தாள். அழுக்கு முந்தானையை உருவிக் கொண்டு வலது கையால் - இடது கையில் குழந்தை இருந்தது - நசநசத்த முகத்தைத் துடைத்து விட்டுக் கொண்டாள். அவளின் கையிலிருந்த குழந்தை, கண்ணீரும் சளியுமாய்க் கரைந்து கொண்டிருந்தது. அமைதியான சூழல் கலவரப்பட்டது போன்ற நிலை.



"பேதியில போ.. அடுப்பு... எரிவேனாங்கிது... இந்தச் சனியன் வேற அழுதுக் கரைஞ்சிக்கிட்டு உசுர வாங்குது."

இடுப்பில் வைத்திருந்த குழந்தையின் முதுகில் 'சுளீர்' என்று ஓர் அறை விட்டாள் மூக்கம்மாள். குழந்தை இன்னும் அகோந்திரமாய் அழுதது.

"எதுக்குமா அது அழுது?"- என்றான் மாசாணம்.

"சவம் எதுக்கு அழும்? பசிக்கிதாம்... நா என்ன, பானையில வச்சிக்கிட்டா அதுக்குக் குடுக்க மாட்டேங்கிதேன்."

"அவுங்க அப்பா எங்கம்மா?"

"மொதலாளி வூட்டுக்குப் போச்சிது... அப்பவே போச்சிது... இன்னும் காணல... என்ன சோலியா அனுப்பி வச்சிருக்காவளோ மொதலாளி."

அங்கிருந்து நடந்து போகிற தூரத்தில் அவர்களின் 'மொதலாளி வூடு' இருந்தது. பகல் முழுதும் மூக்கம்மாளும் அவளின் புருசக்காரனும் மொதலாளியின் வயலில் மிளகாய்ச் செடிக்குக் களை பறித்த கூலி கேட்கப் போயிருந்தான் புருசக்காரன். அந்திக் கருக்கலில் போயிருந்தவனை மொதலாளி ஏதாவது அவசரச் சோலியாய் அனுப்பி வைத்திருக்கலாம். அதனால்தான் அவன் வர இத்தனை தாமசம் என்று அர்த்தப்படுத்திக் கொண்டாள் மூக்கம்மாள்.

"நீத் தண்ணி ஏதாச்சுமிருந்தா குடுக்க வேண்டியதுதானம்மா."

"அட நீயொண்ணு... செத்தம் மின்னாடிதான் நானே கரையேறி வந்து ஒலக் கூட்டியிருக்கிதேம்... பழையது மிஞ்சிச் சிரழிய நாங்க என்ன குபேரப் பரம்பரையா? நீதான் பேகுதியே பொசமுட்டிப் போயி."

செல்லமாக மாசாணத்தைக் கோபித்துக் கொண்டாள்.

"அவ்ளவுதான... நீங்க எறக்கி வச்சிட்டுப்போங்க குழந்தையை... அழுகய நிறுத்துதா இல்லியானுபாப்பம்."

"இந்தா இந்தச் சனியன் கண்ணுலப் பொடியப் போடு... அப்பதான் அழப்பாணியை நிப்பாட்டும் அது... நல்ல வெளமெடுத்தப் பய."

சாணித்தான் பறந்த முற்றத்தின் இருட்டில் பின்னையை 'ணங்'கென்று வைத்துவிட்டு வீட்டுக்குள் போனாள் மூக்கம்மாள். கூரை வேய்ந்த வீடு. தாழ்ந்த வாசல். குனிந்துதான் போக வேண்டியிருந்தது அவளுக்கு. புருசக்காரன் வருவதற்குள்ளாகவே சோறு இறக்கித் தயாராக வைத்திருக்க வேண்டும் என்ற அக்கிசி இருந்தது அவளுக்கு. பகல் முழுதும், பட்டையாய் உரித்த வேனல் வெயிலில் மிளகாய்ச் செடிகளுக்கு மத்தியில் நின்று குனிந்ததலை நிமிராமல் என்னமாய்க் களை பறித்திருந்தான் அவன்!

பிச்சிப் பூக்களாய் நுரைகள் பொங்கிச் சோறு கொதித்தது. அகப்பையை எடுத்துப் பானைக்குள் துழாவி, பருக்கைகளை

நுள்ளிச் சோதித்தாள் மூக்கம்மாள். இன்னும் ஒரு கொதி கொதித்தால் பருக்கைகள் பக்குவமாய் வெந்து விடும் என்பது புரிந்தது.

நன்றாக வெந்த பிறகு, நீர் வடித்து பானையை இறக்கி, தரையில் வைத்தாள். சற்று ஆவி போனதும், அவசரம் அவசர மாய்த் தட்டு எடுத்து இரண்டு அகப்பைப் பருக்கைகளை அள்ளிப் போட்டுக் கொண்டு வெளிவந்தாள்.

இப்போதுதான் அவளின் மனசுக்கே தட்டியது. மாசாணத்திடம் ஒப்படைத்து விட்டு வந்த குழந்தை இதுவரை ஒரு கீச்சு சத்தம்கூடப் போடாமல் அமைதி காத்துக் கொண்டிருந்ததன் அதிசயம் உறுத்தியது. என்னாயிற்று குழந்தைக்கு? என்ன செய்திருப்பான் மாசாணம்?

இறுகிக் கிடந்த இருட்டில் அவள் கண்ட காட்சி அவளின் மனசை வாளால் அறுத்தது. தேகத்தைப் பதைபதைக்க வைத்தது. அருவருப்பில் முகம் சுளித்துக் கொண்டாள்.

தரையில் அமர்ந்த வண்ணம் குழந் தையைத் தன் மடிமேல் தூக்கி வைத்து, தனது பானைக்குள்ளிருந்த பருக்கைகளை அள்ளியள்ளி அதன் வாய்க்குள் திணித்துக் கொண்டிருந்தார் மாசாணம். பசியில் ஆலாய்ப் பறந்திருந்த குழந்தை 'ஆவ்ஆவ்' என்று வாய் திறந்து வாங்கித் தின்றது பருக்கைகளை. வயிறு நிரம்பிய திருப்தியில் அது அழுகையை நிறுத்தியிருந்ததே உண்மையாயிருந்தது.


அக்கினிப் பிழம்பானாள் மூக்கம்மாள். சோற்றுப் பருக்கைகள் நிரம்பிய தட்டை வெரசலாய்த் தரையில் வைத்துவிட்டு விறு விறுவென்று மாசாணத்திடம் ஓடி வந்தாள். அவரது மடியிலிருந்த குழந்தையைப் படக்கென்று பிடுங்கிக் கொண்டாள். வாய் வெடவெடத்தது அவளுக்கு.

''என்ன வேல பாக்கித நீ...! முட்டாத்தனமான வேல... ஊர்ச் சோத்தத் திங்கத அளவுக்கு எம்புள்ள ஒண்ணும் விதியத்துப் போயிரல... இந்த மாதிரி இனி என்னிக்கும் பண்ணாத, தெரிஞ்சிதா?''

''பசிக்கித கொழந்தைக்குப் பசியமத் துறது குத்தமாம்மா?''

''நல்லாத்தான் பேசுதியே, 'குத்தமா குத்தமில்லியானுட்டு'?''

மாசாணத்தை முறைத்தாள் மூக் கம்மாள். அதே மூச்சில் குழந்தையையும் வெறித்தாள். பருக்கைகள் பதிபோன



''விஷயம் ரொம்ப ஓவரா போயிட் டிருக்கு?''

''எப்படி சொல்றே?''

''ரிப்பன் பில்டிங் கட்டினதில் எல்லாம் ஊழல் நடந்திருக்க வாய்ப்பில்லைன்னு எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் கேட்க மாட்டேங்கிறாங்க...!''

— புளியரை கணேசன்

கவலையில் அழுது கரைந்துகொண் டிருந்தது குழந்தை.

''சனியன்... இதனாலத்தான் இந்தக் கண்றாவி எல்லாம்... செத்தாவது கொல யுதா?''


சுரீர் சுரீர் என்று அதன் முதுகில் இரண்டு அறைவிட்டாள் மூக்கம்மாள். அவை தன்மேல் விழ வேண்டிய அறை களாகப் புரிந்துகொண்டார் மாசாணம். ஆத்தலாய்த் தரையை விட்டு எழுந்து பானையைத் தூக்கிக் கொண்டார்.

''கொழந்தையப் போட்டு அடிக்காதிய... பச்ச மதல... அதுக்கு என்ன தெரியும்.''

முற்றத்தைவிட்டு மெதுவாக வெளி யேறினார். தளர்வான நடை... எதையோ யோசித்துக் கொண்டு அவர் நடப்பது போலிருந்தது.

தான் தட்டு நிறையப் போட்டுக் கொண்டு வந்திருந்த பருக்கைகளை எடுத் துக் கொள்ளாமல் மாசாணம் வெளியேறிப் போவதை நினைத்துப் பார்த்தாள் மூக் கம்மாள். தான் பேசிய கனபரத்தில் மதி மறந்து போகிறானோ என்றிருந்தது அவளுக்கு. அவனைக் கூப்பிட்டுக் கொடுக் கலாமா என்று ஒருகணம் யோசித்தாள். ஆனாலும் தயக்கமாயிருந்தது அவளுக்கு.

மாசாணம் மறதியில் ஒன்றும் போக வில்லை என்பது அவருக்கு மட்டுமே தெரிந்திருந்தது. ○



ஆப்செண்ட்டான ணைலழகடுகள்!

“ஹாய்... உங்க நேரத்தைக் கொஞ்சம் எடுத்துக்கலாமா?” என்று முன்பெல்லாம் யாராவது கேட்டால், ‘ஐயோ ‘ஆம்வே’யா?’ என்று அலறி அடித்துக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தோம். இப்போது மும்பையில் ஆம்வே சுத்திகரிப்பு சாதனங்கள் விற்பவரின் இடத்தை, “ஜப்பான் லைஃப்” பிடித்துக்கொண்டிருக்கிறது. முதுகு வலி, மூட்டுவலியிலிருந்து, கான்ஸர், எய்ட்ஸ் வரை எல்லா வியாதிகளையும் போக்கும் அபூர்வ மாக்னெடிக் படுக்கையைப் பற்றிய புராணத்தை நான் முழுதும் அவிழ்த்து விடுகிறார்கள். விலை? ‘ஜஸ்ட் ஒன் லாக்’தான்! ‘போய்ட்டு வாம்மா’ என்கிறீர்களா?

லட்சங்களை லட்சியம் செய்யாமல், ‘ஜப்பான் லைஃபை’ ‘என்ஜாய்’ பண்ண மும்பையில் ஆளில்லையா என்ன? மேயர் ஹரீஷ்வர் பாடீலை எடுத்துக்கொள்ளுங்களேன். மூன்று பேரைத் துணைக்கழைத்துக்கொண்டு, ஜப்பானில் நடக்கும் உலக மேயர்கள் கான்ஃபரன்ஸுக்குப் போவதாக இருந்தார். செலவு...?... ஜஸ்ட் மூணரை லட்சங்களுக்குக் கொஞ்சம் கூட! “ஹையோ... கஜானா காலியாகிக் கிடக்கிறதே? கார்ப்பரேஷன் தொழிலாளர்கள் வேறு, எக்ஸ் க்ரேஷியா கொடுக்கா விட்டால் ‘ஸ்ட்ரைக்’ என்று பயமுறுத்துகிறார்களே? அதில் இந்தத் தண்டச் செலவு வேறா?” எனப் பத்திரிகைகள் குய்யோ முறையோ என்று அடித்துக்கொள்ள, ‘சரி... சொந்தச் செலவில் போகிறோம்” என்றார் மேயர்.

கைக்காசு என்றதும் மற்றவர்கள் பிய்த்துக் கொள்ள, மேயர் மட்டும் விடாக் கொண்டராய் நின்றார். அங்கே போய் அஹிம்சை பற்றிய ஆங்கிலச் சொற்பொழிவாற்றப் போகிறாராமே? முன்னாள் நகரத் தந்தை ஒருவர், “ஹைட்ராலிக் என்ஜினியர்” என்பதற்குப் பதில் ஹைட்ராலில் என்ஜினியர் என்று தன் ‘ஆங்கிலப் புலமையை’க் காட்டி, கமிஷனர் சாஹேப்பை மூர்ச்சையாக்கினாரே... அதேபோல இவர் தன் அஹிம்சைப் பேச்சால் ஏனையோரை ஹிம்சைப்படுத்தாதிருந்தால் சரி; போனால் போகட்டும் என்று மும்பைக்காரர்கள் விட்டு விட்டார்கள்!

ஆனால் எல்லா விஷயங்களையும்



• ஜப்பான் போகும் மேயர்

இப்படிப் போனால் போகட்டும் என்று விட்டு விட முடிவதில்லையே? உதாரணத் திற்கு, ஹிர்த்திக்ரோஷனின் "பைசெப்ஸ்" - அந்த திரண்டு உருண்ட தோள்களும் விம்மிப் புடைத்த கரங்களும்தானே ஐயா வின்பால் கோடிக்கணக்கான கன்னியரைக் கிறங்க வைக்கும் உபகர(ண)ங்கள்?

சில நாட்களாக ஹிர்த்திக் ஷூட்டிங்கில் பிஸியாயிருந்ததால் 'ஜிம்' பக்கமே போகவில்லையாம். விளைவு? கையி லும் தோளிலும் அந்த மலை முகடு கள் ஆப்செண்ட்! கரவலியைக் காட் டாத ஹிர்த்திக்கிற்குக் கரவொலி கிடைக்காதே என்று அவரை இயக் குனர்களே குண்டுக்கட்டாக 'ஜிம்'முக் குத் தூக்கிப் போய்விட்டார்கள். இப் போது மறுபடியும் உருண்டு திரண்டிருக் கிறராம்!

• ஸ்டாருக்கு போகும் டீ.வி. ஸ்டார்



சில சமயம், போனால் போகட்டும் என்று நாம் கழற்றி விட்டாலும் வேறு யாராவது அதை 'ஓஹோ' என்று தூக்கி வைத்துக்கொண்டாடுவார்கள்... பாருங் களேன்... 'ஸோனி'க்காரர்கள் தன் நிகழ்ச் சிக்கு முக்கியத்துவமளிக்கவில்லை என்ற குமுறலில், மூவர்ஸ் அண்ட்ஷேகர்ஸிலிருந்து வெளியேறிய சேகர் சுமனை, 'ஸ்டார்' (ப்ளஸ்)காரர்கள் லபக்கி விட்டார்கள். இந் நிகழ்ச்சியைச் சேகரே தயாரிக்கப் போவ தால் பிரச்னை எழாது என்கிறார்கள். 'ஸிம்ப்ளி சேகர்' என்ற இந்நிகழ்ச்சியில் முத லில் இடம் பெறப் போவது, சேகர் அடிக் கடி. கிண்டலடிக்கும் லாலு பிரசாத்தும் ராப்ரி தேவியுமாம்! ஸிம்ப்ளி சூப்பராக இருக்குமோ?

ஏமாற்றுக்காரர்கள் அதிகம் நிறைந்த பொல்லாத உலகில், குழந்தைகளை, அதுவும் பெண்களை போனால் போகட்டும் போடா என்பது மாதிரி போகிற போக்கில் விட்டால் ஆபத்து என்று ரொம்பவும் கவ லைப்படுபவர் - வேறு யாருமில்லை; நம்ம நீனா குப்தாம்மாதான்! டீன் ஏஜுக்குத் தாவத் துடிக்கும் தன் (விவ்ரிச்சர்ட்ஸின்) மகள், 12 வயது மஸா பாவின் மீது மீடியா வின் பார்வை படாமல் பொத்திப் பாதுகாக் கிறார். அம்மாவின் கவலை எல்லாம் டீன் ஏஜ் ப்ராப்ளம்ஸ் என்பதால்.



• மகளுடன் நீனாகுப்தா

இனி வர இருக்கும் இவரின் டெலி தொடர் களிலும் (ஸோன்பரி) அதே பிரச் னைகளைக் காணலாம்.

அது சரி, என்ன இந்த வாரம் மசாலா வில் ஒரே 'போனால் போட்டும் போடா' பாட்டாக இருக்கிறதே என்கிறீர்களா? என்ன செய்வது? இந்தப் பாட்டுக்கு உயிரூட்டிய நடி கர் திலகமே போய்விட்ட செய்தி ரொம்பவும் உலுக்கி விட்டதே? திரை உலகால் அந்த இழப்பை 'போனால் போகட்டும் போடா' என்று விட்டு விட முடியுமா, என்ன?

— ஜெ.ஆர்.

குறையொன்றுமில்லை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

தர்க்க சாஸ்திரத்தில் பானையும் வஸ்திரமும் திரும்பத் திரும்ப வரும். நெசவுத் தொழிலாளியும் பானைத் தொழிலாளியும் வந்து கொண்டேயிருப்பார்கள்.

வஸ்திரம் நெய்ய வேண்டுமானால் ஓர் இழை இப்படி ஓடுகிறது. இன்னொரு இழை அப்படி ஓடுகிறது! அந்த மாதிரி, இந்தப் பிரபஞ்சம் மொத்தமும் - சேதன, அசேதனம் என்கிற இரண்டால் கோக்கப்பட்டிருப்பதை உபநிஷத் ரொம்ப அழகாகச் சொல்கிறது.

பானைத் தொழிலாளி மண்ணைப் பிசைந்து, சக்கரத்தில் வைத்துச் சுற்றி, தண்டத்தினால் பானையை உருவாக்குகிறார். உருவாக்கி, பானையை எடுத்து வைக்கிறார்.

இது பானை என்று சொல்கிறோம்; பானை இங்கே இருக்கிறது என்று சொல்கிறோம்.

இப்போது பானை இருக்கிறது. பார்த்துக் கொண்டேயிருக்கிறபோது இருக்கிறது. ஆனால், இதற்கு முன்பு அந்தப் பானை இருந்ததோ என்றால், இல்லையே!

சரி, இப்போது பானை நன்றாக எதிரிலே இருக்கிறது. ஒரு குழந்தை வருகிறது. கையிலே தடியோடு வருகிறது. ஓங்கி அந்தப் பானையை அடிக்கிறது. சுக்கு நூறாகப் போய் விடுகிறது பானை! இப்போது பானை இருக்கிறதா என்றால், இல்லையே! வேறு வடிவத்திலே அது இருக்கிறது - ஓட்டாஞ்சல்லியாக இருக்கிறது. பானை என்கிற வடிவத்திலே அது பூர்வத்திலும் இல்லை. மண்ணாக இருந்தது; அடியோடு இல்லை என்று சொல்ல முடியாது. சாஸ்திர ரீதியாக ஆராய்ந்து பார்த்தால் இல்லை என்பதே கிடையாது. வேறுவிதமாக அது இருந்திருக்கிறது.

அப்படியானால், அழிவு என்பது என்ன...?

அழிவு என்றால் அடியோடு இல்லாமல் போவது அழிவு அல்ல. இருக்கிற நிலையிலிருந்து மாறுபட்ட நிலைதான் அழிவு.

வஸ்திரத்தினுடைய அழிவு, நூல்! நூலினுடைய அழிவு பஞ்சு.

மண்ணினுடைய அழிவு பானை; பானையினுடைய அழிவு ஓட்டாஞ்சல்லி, அதனுடைய அழிவு, இன்னும் சின்னதான அணு; அதனுடைய அழிவு பரமாணு! - இப்படி போய்க்கொண்டேயிருக்கும்.

ஆகையினாலே, ஒரு வஸ்துவை அடியோடு இல்லை என்று ஸ்தாபகம் பண்ண முடியாது.

இன்னொருவிதமாக அது மாறியிருக்கிறது என்பதையும் - எவ்விதமாக அது மாறியிருக்கிறது என்பதையும் நாம் உணர வேண்டும்.

இப்படி மாறிப் போவதால் எய்துகிற நிலையை ப்ராக பாவம் என்று தர்க்க சாஸ்திரத்தில் சொல்வார்கள்.

கடிகாரம் ஒன்று இருக்கிறது; அது இருக்கிற இடத்தில் நான் இருக்க வேண்டும்; நான் இருக்கிற இடத்தில் அது இருக்க வேண்டும்... இப்படி அதனதன் இடத்தில் இல்லாமல் போவதை அன்னியோன்ய பாவம் என்று சொல்வதுண்டு.

இல்லாத ஒன்றைச் சொல்வது அத்யந்தா பாவம் என்பார்கள் - 'குதிரைக் கொம்பாச்சே!' என்கிறோம். குதிரைக்குக் கொம்பு உண்டா? கிடையாது! இப்படி இல்லாததைக் கற்பித்துச் சொல்வது அத்யந்தா பாவம்.

இப்படி எல்லா வஸ்துக்களுக்கும், இருக்கிற நிலை என்பதும் இல்லாத நிலை என்

பதும் மாறி மாறி வருகின்றன. தர்க்க சாஸ்திரம் படித்தவர்கள் இந்த நிலைகளை ஆராய்ந்து அத்யந்தா பாவமோ, ப்ராக பாவமோ, அந்நியோன்யா பாவமோ கண்டுபிடிக்கலாம்.

ஆனால் பகவான் விஷயத்திலே இந்த அபாவங்கள் எதுவும் பொருந்தவே பொருந்தாது. இதற்கெல்லாம் அப்பார்ப்பட்டவன் அவன்!

தேசத்தினால் அவனை அளக்க முடியுமா? ஒரு வஸ்துவிலே அவன் இருந்தால் அளக்கலாம். ஆனால் அவன் ஒரு வஸ்துவிலே இல்லையே!

காலத்தினால் அவனை அளக்க முடியாது; வஸ்துவினால் அளக்க முடியாது. சர்வ வஸ்துவிலும் இருக்கிறான்.

அதை எந்த அவ



பத்மவாசன்...

தாரத்தில் காட்டினான் என்று கேட்டால், நரசிம்ஹ அவதாரத்தில்தான்.

'நாரசிம்ஹ வபு ஸ்ரீமான்' என்று முதலில் நரசிம்ஹ அவதாரத்தை பீஷ்மாச்சார்யார் கொண்டாடுகிறார்.

இந்த விஷயங்களை நல்ல முறையிலே காட்டிய அவதாரம் நரசிம்ஹ அவதாரம் தான்– தேசத்தினாலோ, காலத்தினாலோ, வஸ்துவினாலோ அளக்க முடியாதவன் பரமாத்மா என்று அந்த அவதாரம் காட்டுகிறது.

கீதையின் இரண்டாவது அத்தியாயத்திலேயும் பரமாத்மா இதை ரொம்ப அழகாகச் சொல்கிறான்:

"பூர்வத்திலே, இதற்கு முந்தைய காலத்திலே, நீ இல்லாமல் இல்லை; நானும் இல்லாமல் இல்லை. இப்போது நானும் இருக்கிறேன்; நீயும் இருக்கிறாய். வருங் காலத்தில் நானும் இல்லாமல் இருக்க மாட்டேன்; நீயும் இல்லாமல் இருக்க மாட்டாய்..."

– இதை ஏன் நீட்டிச் சொல்கிறான் பரமாத்மா...?

சொல்கிற விஷயத்தை திரடமாய், வலியுறுத்திச் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்கிறான்.

பகவான் வாக்குபடியே இந்த ஆத்ம வஸ்துவுக்கு அழிவில்லாத காரணத்தினாலே, அணுவாக இருந்தாலும் சரி, அழிவுடையவனாக இருந்தாலும் சரி, ஆத்மா அழியாது. சரீரம் அழியும்.

"சரீரம் அழியும், அழியக்கூடிய சரீரத்தைக் காட்டிலும் வேறான ஆத்மா நீ. அதை நீ உணர வேண்டும்..." என்கிறான்.

இதிலே அவனுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம் என்றால், பகவான் சகல இடங்களிலும் வியாபித்திருக்கிறான். ஜீவாத்மா அப்படி வியாபித்து இருக்க முடியாது. இவன் அணு; **அவன்** சர்வவியாபி. பகவான் சர்வக்ஞனாய் இருக்கிறான்; இவன் ஜீவாத்மா சங்கோச ஞானமுடையவனாய் இருக்கிறான். பிறவியிலேயே கர்ம பந்தனாக இருப்பதனாலே ஞானமானது குறைந்திருக்கிறது இவனுக்கு... பரிமிதமான, வரையறுக்கப்பட்ட ஞானத்தோடு இருக்கிறான். அதனால்தான் சுவாமி நம்மாழ்வார் 'மாசூணாய் மலருடம்பாய்' என்று குறிப்பிட்டார்.

எம் பெருமான் அப்படி இல்லை. அவனுக்கு மலர்தல் குவிதல் என்பதே கிடையாது. ஆனால் நம்முடைய ஞானத்துக்கு மலர்தல் – குவிதல் என்பது உண்டு. நம்முடைய சங்கோச – விகாசங்களுக்கு உட்பட்டது. ஒருநாள் நன்றாக இருக்கும் இந்த ஞானம். ஒருநாள் ஒன்றுமே கிரஹிக்காது. ஒருநாள் நல்ல வேதாந்த விஷயங்களில் புத்தி போகும். ஒரு நாள் வேதாந்தமே பிடிக்காது; சாமான்ய விஷயத்தில்தான் புத்தி போகும். ஏன் இந்த மாறாட்டம்? புத்தி ஏன் மாறுகிறது? ஏன் இந்தக் குழப்பம்...?

ஏனென்றால், த்ரிகுணாத்மகமான பிரக்ருதி இது. இதிலே நாம் வாசம் பண்ணிக் கொண்டிருக்கிறோம். அது மட்டுமில்லை; இதிலே சத்வகுணம், ரஜோ குணம், தமோ குணம் மூன்றும் பூரணமாக இருப்பதனாலே அந்தந்த குணங்களை விருத்தி பண்ணக்கூடிய பதார்த்தங்களை நாம் சாப்பிடுகிறோம். சில பதார்த்தங்களைச் சாப்பிட்டால் சத்வ குணம் விருத்தியாகும். சிலதைச் சாப்பிட்டால் ரஜோ குணம்; வேறு சிலதைச் சாப்பிட்டால் தமோ குணம்.

ஒரு நல்ல விஷயம் ஒருத்தருக்குப் புரிபட மாட்டேனென்கிறது. ஞான சங்கோசம் உடையவராய் அவர் இருக்கிறார். எதனாலே அப்படி இருக்கிறார் என்று பார்த்தோமானால் அவரிடத்திலே தமோ குணம் அதிகமாக இருக்கிறது. அவர் என்ன சாப்பிடுகிறார் என்பதைப் பார்க்க வேண்டும். தமோ குணத்துக்கு உண்டான பதார்த்தங்களை அவர் சாப்பிட்டாரானால் அந்தக் குணமே விருத்தியாகும். தூக்கம், கலகம் – இப்படியே புத்தி போய்க்கொண்டிருக்கும் தமோ குணத்திலே.

ரஜோ குணத்தில், இதரர்களை த்வேஷித்து, எப்போது பார்த்தாலும் குற்றம் சொல்லிக் கொண்டு, பகைமை பாராட்டிக் கொண்டு இருக்க நேரும்.

ஸத்வ குணமானது – அப்படியே, கொண்டாடும்படியான நிலையிலே, எல்லாரையும் ஸ்தோத்திரம் பண்ணிக் கொண்டு, ஆனந்தமாக பகவானை அநு

அருள்வாக்கு!



இந்திரியத்தால் ஸந்தோஷம் என்கிறபோது, வெளியிலே உள்ளவற்றை அநுபோகம் பண்ணுவதால்தான் இது கிடைக்கிறது. வெளியிலே இருப்பதை, எப்படி எப்போதும் நம்மிடம் தக்க வைத்துக் கொள்ள முடியும்? அது கையை விட்டுப் போனாலும் போகும்தான். காம தேனுவும், கல்பக விருக்ஷமும், ஐராவதமும், இந்திராணியுமேகூட இந்திரன் கையை விட்டுப் போய், அவன் தனியாகத் தவித்த

ஸந்தர்ப்பங்கள் இருந்திருக்கின்றன. ஆகை பால், வெளியிலிருப்பதை பண்ணுகிற (சார்ந்திருக்கிற) தேவலோக இந்திரிய வெளக்யம் நிஜத்தில் சாச்வதமேயில்லை. வெளி-உள் என்று எதுவுமே இல்லாமல் ஆத்மாவிலேயே, ஸ்தித பிரக்ஞன் என்று பகவான் (கீதையில்) சொன்னது போல் ஆணி அடித்த மாதிரி ஊன்றிவிடுகிற வனுக்குத்தான் ஸதானந்தம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

பலிக்கும்படியான சத் விஷயங்களை கிரஹிக்கும்படியான நல்ல ஞானம் தரும். ஸத்வ குணத்தில்தான் இது ஏற்படும். அதனால்தான் சாத்விக ஆகாரத்தை இட்டு வளர்க்க வேண்டும், குழந்தைகளுக்கு. இல்லையானால் ஸ்ம்ருதி பலம் போய்விடும்.

குழந்தை நன்றாகத்தான் படிக்கிறான். ஒருத்தர் சொல்கிறார் – "ராத்திரி – பகல் அவன் சிரமப்படுவதைப் பார்த்தால், காலையில் எழுந்து படிக்கலாம்; போய்ப் படுத்துக் கொள் என்றுகூட சொல்லத் தோன்றுகிறது. அப்படி சிரத்தையாகக் குழந்தை படிக்கிறது. ஆனால், அங்கே போய் உட்கார்ந்தால், அடியோடு எல்லா விஷயமும் மறந்து போய்விடுகிறது. ஒரு விஷயமும் வரமாட்டேனென்கிறது. மார்க்கே வரமாட்டேனென்கிறது..."

அப்படியானால் என்ன பண்ண வேண்டும்? சாத்விகமான பதார்த்தத்தை அந்தக் குழந்தைக்குக் கொடுக்க வேண்டும்.

குழந்தை நல்ல பலமாயிருக்க வேண்டும் என்று வேறு வேறு பதார்த்தங்களைக் கொடுத்தால், அது இருப்பதையும் மறக் கடித்து விடும்!

ஆகவே, சாத்விக குணமிருந்தால்தான் ஸ்மிருதி பலம் வரும். சாத்விக ஆகாரம் உண்டால்தான் தாரண சக்தி – தரிக்கிற சக்தி வரும். ஆகாரத்திலே அ-நியமம் வந்து விட்டதானால் படித்ததெல்லாம் மறந்து போய் விடும். எத்தனை நேரம் யோசனை பண்ணினாலும் ஞாபகம் வராது.

ஆதலால் ஆகாரமானது புத்தியைக் கெடுத்து, அதற்கொரு சங்கோசத்தை உண்டு பண்ணக் கூடியது.

ஜீவாத்மாக்களான நம்முடைய நிலை இதுதான். ஆனால், பகவானுக்கு அந்த நிலை இல்லை. பூத பவ்ய பவத் பிரபு: என்றால் காலத்தினால் அவனை அளக்க முடியாது. எக்காலத்திலும் அவன் இருந்து கொண்டே யிருக்கிறான்.

ஆகையினால்தான் **சத்யம் ஞானம் அனந்தம் பிரும்மா** என்றது உபநிஷத்.

சத்யம் என்றால் விகாரமற்றது என்று அர்த்தம். நமக்கு எத்தனையோ விகாரம் இன்றைக்கு இருந்தமாதிரி நாளை இருப்ப தில்லை.

ஆனால் பகவான் விகார சூன்யன். இதைத்தான் **சத்யம்** என்று வேதம் சொல் கிறது.

இதையேதான் விஷ்ணு புராணத்திலே

அவிகாராய சுத்தாய நித்யாய
பரமாத்மனே
சதைக ரூப ரூபாய விஷ்ணவே
சர்வ ஜிஷ்ணவே

என்றது.

– பராசர மஹிரிஷி இரண்டாவது அத்தியாயத்தை இப்படித்தான் ஆரம்பிக் கிறார் விஷ்ணு புராணத்திலே –

அவிகாராய – விகாரமற்றவன் பரமாத்மா

சுத்தாய – எப்பொழுதும் சுத்தி அவ னிடத்திலே. எந்த இடத்திலே இருந்தாலும் அவன் சுத்தமாய் இருக்கிறான். எல்லா பதார்த்தங்களிலேயும் அவன் இருக்கிறான். கோவில் கோபுரத்தில் இருக்கிறான்; விக்ரஹத்துக்குள் இருக்கிறான், சாமான்ய மான நம்மிடத்தில் இருக்கிறான்; அங்கங்கே இருக்கிற குண– தோஷங்கள் அவனிடத் திலே ஏறுகிறதா என்றால், கிடையாது! இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்ட நிலை யிலே சுத்தனாய் அவன் இருக்கிறான். குணமும் அவனிடத்தில் சேருவதில்லை; தோஷமும் சேருவதில்லை.

ஆதலால்தான் சுத்தாய என்றது அவனை.

நித்யாய என்பதற்கு என்ன பொருள்...? எத்தனையோ யுகங்கள் மாறிக்கொண்டே யிருக்கின்றன. யுகங்கள் மாறினாலும் தான் மாறாதவன் அவன் –

இதைத்தான் ஆழ்வார்

ஆலமா மரத்தின் இலைமேல் ஒரு
பாலகனாய்
ஞாலம் ஏழும் உண்டான் அரங்கத்து
அரவின் அணையன்
கோலமா மணி ஆரமும் முத்துத்
தாமமும் முடிவு இல்லது ஓர் எழில்
நீலமேனி ஐயோ! நிறைகொண்டது என்
நெஞ்சினையே!

இந்தப் பாசுரத்திலே வருகிற 'ஐயோ' வைப் பற்றித் தனியே சொல்ல வேண்டும்.

(வளரும்)

வைரவிழாவாயிற்றே! வைரம் பற்றிய செய்தி வேண்டாமா? அதான்!

வைரம் வாங்கத் தெரியணும்!





தங்கம் வாங்குவது போல் வைரத்தை அவ்வளவு சுலபமாக வாங்கிவிட முடியாது என்கிறார்கள்.

"வைரம் வாங்கும்போது நாலு C-க்களை மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். முதல் C-Colour. வெள்ளையாக இருக்க வேண்டும். இரண்டாவது C-Clarity. தோஷமில்லாததாக, அதாவது கறுப்புப் புள்ளிகளோ, விரிசலோ இல்லாததாக இருக்க வேண்டும். மூன்றாவது C-Carat. அதாவது வெய்ட் (கனம்): கனம் அதிகமாக அதிகமாக, விலையும் கூடிக் கொண்டே போகும். நாலாவது C-Cut. இப்போதெல்லாம் மார்டன் கட் என்கிறார்கள். வைரத்தின் மேல் பாகத்தில் (facets) 36 பகுதிகளும், அடி பாகத்தில் 24 பகுதிகளும் இருக்க வேண்டும். இந்த நாலு அம்சங்களை அடிப்படையாக வைத்து வைரம் வாங்கினால் திருப்தியாக இருக்கும்" என்கிறார் ஆபர் டி.பி ஜுவல்லரி அதிபர் நவீன்.

சூரத்தில் டயமண்ட் கட்டிங், பாலிஷிங் தவிர, முறையாக ஜெம்மாலஜி படித்து, சர்ட்டிஃபிகேட்டும் வாங்கியவர் இந்த நவீன்.

அதென்ன ஜெம்மாலஜி?

ஒவ்வொரு மாதத்தில் பிறந்தவருக்கு ஒவ்வொரு வகை வைரம்தான் அணிய வேண்டும் என்று இருக்கிறதாம். உதாரணமாக மே மாதம் பிறந்தவர் எமரால்டுதான் அணிய வேண்டுமாம். அதுதான் அவர்களுக்கு அதிர்ஷ்டத்தை அளிக்கும். அதை 'லக்கி ஸ்டோன்' என்கிறார் நவீன்.

முன்பெல்லாம் வைரம் 'நோட்டம் பார்ப்பவர்கள்' இருந்தார்களே?

"இப்போதும் அப்படிக் கிராமப்புறங்களில் அல்லது டவுன்களில் இருக்கலாம். ஆனால் முன்பு மாதிரி அல்லாமல், இப்போது வெகு சிறிய அளவில் வைரம் வருகிறதே! அத்தனை நுணுக்கமாக அவர்களால் இப்போது பார்க்க முடியும் என்று தோன்றவில்லை."

சில குடும்பங்களில் வைரம் வாங்கிய பிறகு நல்லதோ, கெட்டதோ நடந்து விடுகிறதாமே...?

"இதற்கெல்லாம் விஞ்ஞான ரீதியான ஆதாரம் எதுவும் கிடையாது. நம்பிக்கைதான் காரணம். முதலில் சொன்ன 4 - C்க்களைப் பார்த்து வாங்கினால் பாதிப்பு இருக்காது. அதனால்தான் விற்கும்போதுகூட, எங்களைப் போன்ற வியாபாரிகள் ஒரு மாதம் வைத்துக் கொண்டு பாருங்கள். பிறகு உங்களுக்குத் திருப்திப்படவில்லை என்றால் நீங்கள் திருப்பிக் கொண்டு வாருங்கள் என்று சொல்லுகிறோம்..." என்கிறார்.

— சாருகேசி

''எனக்கா வாய்ப்பூட்டு?''

- இளங்கோவனுடன் ஒரு நறுக் பேட்டி!

அ.தி.மு.க.வுடன் உள்ள உறவை சற்று உரசிப் பார்க்கும் விதமாக யாராவது பேசினால் வழக்கமாக அவர்களைக் கைகழுவி விடும் காங்கிரஸ் மேலிடம், வழக்கத்திற்கு மாறாக ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுக்குத் துணை நின்றிருக்கிறது. காங்கிரஸ் மேலிடம் மேலும் 'சர்ச்சைக்குரிய' விஷயங்களைப் பேச வேண்டாம்' என்று இளங்கோவனுக்கு வாய்ப் பூட்டு போட்டிருப்பதாகச் செய்திகள் வந்த நிலையில் அவரைச் சந்தித்தோம்.



''திராவிட இயக்கங்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டிய காலம் வந்து விட்டது'' என்று பேசியதுதானே அ.தி.மு.க கோபத்துக்குக் காரணம்.''

''தி.மு.க, அ.தி.மு.க என்று மாறி, மாறி திராவிட இயக்கங்கள் தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கும் நிலையில், அவர்களை அனுப்பாமல் நாங்கள் எப்படி காமராஜ் ஆட்சியைக் கொண்டு வர முடியும்? பா.ம.க.வினர்கூட 2001ல் பாண்டிச்சேரி, 2006ல் தமிழ்நாடு' என்று சொல்லி வந்தார்களே, அது சிரிப்பதற்கு உண்டான ஒரு விஷயமாக இருந்தாலும், அவர்கள் விருப்பங்களைச் சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறதே. மேலும் என்னுடைய பேச்சுக்குத் தி.மு.க.விடமிருந்து எந்தவித எதிர்ப்பும் வரவில்லையே!

''மேலிடம் இப்போது உங்களுக்கு வாய்ப் பூட்டு போட்டிருப்பதாகச் சொல்கிறார்களே!''

''வாய்ப்பூட்டா? எனக்கா? என் கருத்துகளைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருப்பேன். தமிழ்நாட்டில் காங்கிரஸுக்கு மீண்டும் ஒரு மகத்தான செல்வாக்கைக் கொண்டு வரும் வகையில் என் செயல்பாடுகள் அமையும். ஆகஸ்ட் மாதத்தில் சில முக்கியப் பிரமுகர்கள் காங்கிரஸில் இணையப் போகிறார்கள். உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்னால் சோனியா தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்யவிருக்கிறார். தோழமைக் கட்சிகள் வலுவாக இருந்தால்தானே ஆளும் கட்சிக்கும் நல்லது. அதைப் புரிந்துகொள்ளாமல் எங்களைத் தாக்குவது கொஞ்சமும் சரியல்ல. கலைஞர் கைதைத் தொடர்ந்து தமிழக அரசுக்கு ஏற்பட இருந்த ஆபத்தைத் தடுத்து நிறுத்தியது காங்கிரஸ்தான். எனவே எங்களை யாரும் அலட்சியமாக நினைக்கக் கூடாது. எங்கள் பொதுச்செயலாளர் குலாம் நபி ஆசாத் தெளிவாகவே இது பற்றிச் சொல்லியிருக்கிறார். இப்போது சம்பந்தப் பட்டவர்கள் இதைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

''உங்களுக்கு உள்ளாட்சித் தேர்தலில் திருப்தியளிக்கும் விதத்தில் இடங்கள் ஒதுக்கா விட்டால்...?

''இதுபற்றி இப்போது பேசுவது சரியல்ல என்றாலும் அந்த ஒதுக்கீடு திருப்தியளிக்கவில்லை என்றால் 'தனித்தே போட்டியிடலாம்' என்று மேலிடத்தில் வேண்டுகோள் வைப்போம்.

''அஇ.அதிமுகவுடன் நடந்த அறிக்கைப் போரில், உங்கள் தாயார்கூட உங்களைத் தாக்கி அறிக்கை விட்டாரே!''

''அ.தி.மு.க பிரமுகர்களின் அறிக்கைகளைப் பொறுத்தமட்டில், அவற்றில் கையெழுத்து போடும் பொறுப்பு மட்டுமே சம்பந்தப்பட்டவர்களுக்கு உண்டு என்று என் நண்பர்கள் சொல்வதால் அந்த அறிக்கையில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம்'' என்று நினைக்கிறேன்.

சந்திப்பு: ப்ரியன்
படம்: ராஜன்

துரோணர்

'அழகான ஆண், அழகான பெண் என்று நாம் முடிவு எடுக்கும் பெரும்பாலான வர்களை உற்றுநோக்கினால், பொதுவான இலக்கணத்துக்குள் அவர்கள் வருவார்கள்...

அழகான கண்கள், நீரோட்டமுள்ள பெரிய கண்கள் அமைந்திருக்க வேண்டும். இரண்டு கண்களுக்கு இடையேயுள்ள இடைவெளி, ஒரு கண் அளவே இருக்க வேண்டும்.

கூர்மையான எடுப்பான மூக்கு அமைந் திருக்க வேண்டும். நேராக நிற்கும்போது நாசித்துவாரம் தெரியாமல் மூக்கின் நுனி சற்றே கவிழ்ந்திருக்க வேண்டும்.

புருவத்திலிருந்து மூக்கின் நீளம் எந்த அளவுக்கு இருக்கிறதோ, அதே அளவு, புரு வத்தின் மேல் நெற்றியின் அளவும், மூக்கின் கீழே தாடை வரை உள்ள அளவும் இருக்க வேண்டும்.

வலது பக்கமாக மென்று சாப்பிடும் பழக்க முள்ளவர்களுக்கு வலது தாடை பெரி தாக இருக்கும். இடதுபக்கம் பயன் படுத்துவோருக்கு இடது தாடை பெரிதாக இருக்கும். உதடுகள் சிறிதாக இருக்க வேண்டும்.



தலைக்கும் மார்புக்கும் இடையே உள்ள கழுத்துப் பகுதியின் நீளம், கோடு விழாத கழுத்துச் சதை முக்கியம்.

ராமர், லட்சுமணர் ஓவி யங்களில் இருப்பது போல அளவான மார்பும், திரண்ட புஜங்களும், குறுகிய வயிறும் இருத் தல் வேண்டும்.

கைவிரல்கள், ஓவி யர் எஸ். ராஜம் படைப்புகளில் உள்ளது போல கூராக இருந்திட வேண்டும்.

ஒட்டுமொத்தமாக 75% ஆண்மையும் 25% பெண்மையும் கலந்து இருக்கின்ற ஆண் மகனே, அதிக மக்களைக் கவருவான் என்பது இலக்கணம். விதிவிலக்கை விட்டுவிடலாம்.

மேலே சொன்ன தகுதிகளைப் பெரும் பாலும் சிவாஜியின் ஆரம்பப் படங்களில் நாம் காண முடியும்.

சிவாஜியின் மிகப் பெரிய சொத்து அவரு டைய வீரியமுள்ள, உயிர்ப்புள்ள கண்கள் தான். அந்தக் கண்களை வைத்துத்தான் பரிவை, பாசத்தை, பயத்தை, கோபத்தை, அழு கையை, ஆச்சர்யத்தை, அப்பாவித்தனத்தை, ஏக்கத்தை, ஏமாற்றத்தை, வீரத்தை, விவேகத்தை - அவர் அதிகமாக வெளிப்படுத்தினார்.

'பாச மலர்' - படத்தில் 'மலர்களைப் போல் தங்கை உறங்குகிறாள்' என்ற பாடல் வரிகள் துவங்குமுன், பால் தம்ளர் கையில் ஏந்தி வந்த வர், கண்ணுறங்கும் தங்கை யைப் பார்த்து, வட்டக் கருவிழியில் இலேசாக, நீர் தேக்கி, பாசத்தை வெளிப்படுத்துவார்.

'சாம்ராட் அசோகன்' - நாடகத்தில், மனத் தளவில் இருந்திய அசோக



மன்னன் உணர்வு களை, பொங்கியெழும் கோப விழிகள், தூக்கிய புருவங் கள் - கொஞ்சம் கொஞ்சமாக மாறி இலேசாக நீர் கட்டி, படிப்படியாக சாந்த நிலை அடைவதை - அற்புதமாக வெளிப்படுத்தியிருப்பார்.

'உடல் உனக்கு உள்ள மல்ல, உன்னைத்தான் நான் மணந்து கொள்



ஏகலைவ

வேன்' என்று 'பாகப் பிரிவினை'யில் சரோஜா தேவி சொல்ல, பக்கவாதம் வந்த கையை ஒருமுறை பார்த்துவிட்டு, 'இந்தப் பரிதாபத்துக்குரியவன் மேல் ஆசைப்படுகிறாயா' என்று பரிதாபம், அடி மனத்தில் ஆனந்தம், அவளுக்கு நன்றி கூறுதல் அனைத்தையும் சில நொடி கண்ணசைவில் காட்டுவார்.

'பாவ மன்னிப்பு' படத்தில், எம்.வி. ராஜம்மா தான் தன்னைப் பெற்ற அன்னை என்று அறியாத சிவாஜி, ஒரு காட்சியில் நன்றிப் பெருக்கால் 'அம்மா... அம்மா... அம்மா' என்று பாசத்தை, நன்றியை, கண்களில் தேக்கி அழுது கொண்டே சிரிப்பார்...





புத்தரின் சாந்தத்தையும் அந்தக் கண்கள் வெளிப்படுத்தும், போதையுடன் தன்னாடும் குடிகாரனையும் அந்தக் கண்கள் வெளிப்படுத்தும் - அப்படி ஓர் ஆற்றல் மிக்க விழிகள் அவை.

அழகான சிறிய உதடுகள் அவருக்கு. சிரித்தால் கன்னங்களில் எலுமிச்சம் பழம் போல, கன்னக் கதுப்புகள், சிரிப்புக்கு அழகூட்டும்.

இடதுபக்கமுள்ள சிங்கப்பல், கவர்ச்சியைக் கூட்டும்.

தமிழை அவரைப் போல் உச்சரித்த நடிகர்கள் இதுவரை பிறக்கவில்லை.

'அய்யோ' ஏமாந்தேன். எத்தனையோ கஷ்டப்பட்டு, கடல் கடந்து வந்தேன். கல்யாணி! காலையிலே உன்னைக் காணலாம், அத்தானைக் காணலாம், அப்பாவைக் காணலாம் என்று ஆசை அலைமோதிக் கிடந்தேனே. நெஞ்சிலே நஞ்சை அள்ளிக் கொட்டி விட்டான். கொஞ்சிக் குலவிக் கொடுமை செய்து விட்டான். வஞ்சகி!' - என்று 'பராசக்தி'யில் ஆட்டக்காரியிடம் உடைமைகளை இழந்த அப்பாவியாகப் பேசுவது.

'காதலுக்கு ஓர் எடுத்துக்காட்டே. கவிஞர்களும் தொடுத்திட இயலாக் கற்பனை ஆரமே! சிரித்துச் செழித்த உன் சிங்கார முகத்தை எரித்துக் கெடுக்க வேண்டாமென்று கல் கொட்டி மூடினரோ கல்லினும் வலிய மனமுடையோர்!' என்று 'இல்லறஜோதி'யில் காதலியைப் பறிகொடுத்த சலீமின் கதறல்.

'நீலவானிலே செந்நிறப் பிழம்பு' அந்த வட்ட ஒளியின் பெயர் சூரியன். சுட்டெரிக்கும் செஞ்சுடர் அது. அதுதான் நீரின் நெற்றியிலே இட்ட, இந்த வட்டமான ரத்த நிறப் பொட்டு' - என்று 'கட்டபொம்மனில்' மனைவியிடம் போர் முழக்கமிடுவது.

'கைவீசம்மா கைவீசு, கடைக்குப் போகலாம் கைவீசு' என்று நொறுங்கிய இதயத்துடன், உடைந்த குரலில் 'பாச மலர்' கடைசிக் காட்சியில் நடிப்பது.

'கலைவாணி! கருணாகரி! கல்விக்க...! சொல்லின் செல்வி! கற்றவர் போற்றும் கலாதேவி! வித்தை படித்தோர் வணங்கும் வேதவல்லி! காவிய நாயகர்கள் போற்றும் கலையுலகின் நாயகியே!' - என்று பெருமையுடன் சரஸ்வதியைப் போற்றித் துதிப்பது...

கொங்குதேர் வாழ்க்கை

அஞ்சிறைத்தும்பி!

காமம் செப்பாது கண்டது மொழிமோ!

பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்

செறிஎயிற் றரிவை கூந்தலின்

நறியவும் உளவோ நீ அறியும் பூவே -

என்ற பல்லை உடைக்கும் சங்க இலக்கியப்

சிவகுமார்

பாடலை 'திருவிளையாடல்' சிவன் வேடத்தில் உச்சரிப்பது - இப்படித் தமிழ் மொழியில், அவரளவுக்கு அதிகப்படியான எண்ணிக் கையில் தமிழ் வார்த்தைகளைப் பேசி நடித்த நடிகர் வேறு யாருமே இருக்க முடியாது.

ஒரு நடிகன், வேஷம் கட்டுவதிலேயே 50% மார்க் வாங்கி விட வேண்டும் என்று சொல் வார். விதவிதமான வேடம் அணிந்து பார்ப் பதில் அவருக்கு அடங்காத வெறி உண்டு. சரித்திர நாயகர்களாக இருந்தாலும் சரி, புராண வேடங்களாக இருந்தாலும் சரி, சமூகத்தில் காணும் வித்தியாசமான மனி தரின் வேடமாக இருந்தாலும் சரி அதை ஆதாரபூர்வமாகச் செய்து பார்க்கப் பெரிதும் முயற்சி எடுத்துக் கொள்வார்.

கட்டபொம்மன், கர்ணன், ராஜராஜ சோழன், அரிச்சந்திரன், ஜகாங்கிர் என ராஜா வேடம் போடும்போது - உடைகள், கிரீடம், முகத்தின் தோற்றம், தாடி, மீசை, புருவம் இவற்றிலும், தலை முடியிலும் மாற்றங்களைத் தெளிவாகச் செய்வார்.

அது போல ராமன், இராவணன், கிருஷ் ணன், நாரதர் என்று புராண வேடங்கள் ஏற் கும்போதும், தேர்ந்த நாடகத் துறை உடை யலங்கார நிபுணர்களை வைத்துக் கொண்டு காதில் அணியும் தோடு, ராமர், பரசுராமர், அர்ஜுனன் - கையில் உள்ள ஆயுதங்களை எல்லாம் சரிபார்ப்பார்.

'பாடி லேங்வேஜ்' என்று சொல்கிற உடல் மொழி அவருக்கு முதல் படத்திலேயே சரளமாக வந்து விட்டதை 'கல்லைத்தான் மண்ணைத்தான் காச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா' என்று நடிக்கும் ஒரே காட்சியை 'பராசக்தி' படத்தில் பார்த்தாலே புரிந்து விடும்.

சிவாஜி வேடத்தில் அவர் நடித்ததை நாம் பார்த்திருக்கிறோம். அந்த தலைப்பாகை, தாடையிலிருந்து நீண்ட தாடி, சிக்கென்ற ராஜ உடை, நீண்டவாள் இவற்றுடன் நீண்ட வசனத்தை அங்கஅசைவுகளோடு பேசி, சிங்க நடையோடு அவர் நடித்ததை இன்னொருவர் முயன்று பார்க்கட்டும்?!

சங்கிலியால் கட்டிச் சபையில் இழுத்து வர புலிபோல் ஒரு நடை நடந்து வருவார்.

மரமேறும் சாமுண்டி கிராமணியாய் 'காவல் தெய்வத்தில்' கைதட்டல் பெறவே ஒரு நடை நடப்பார்.

'போனால் போகட்டும் போடா' - பாடலின் இசைக்கேற்ப, தாளத்துக்கேற்ப ஒரு நடை நடப்பார்.

'சட்டி சுட்டதடா, கைவிட்டதடா' பாட லுக்கு ஒரு வித்தியாசமான 'வாக்கிங் ஸ்டிக்' - ஊன்றிய நடை.

அப்பர் சுவாமிகளாக - 'திருவருட் செல் வரில்' முதிர்ந்த பெரியவர் நடை.

'வெற்றிவேல், வீரவேல்; சுற்றிவந்த பகை வர் தம்மை தோள் நடுங்க வைத்த எங்கள் சக்திவேல்' - என்ற 'கந்தன் கருணை' பாடலில் முழங்கும் போர் முரசுக்கு இசைவாக ஒரு கம்பீர நடை.

கவிதைகளில் ஒரு தாளம், ரிதம் இருப்பது போல பேசும் வசனங்களில் ஒரு ரிதம், நடக் கும் நடையில் ஒரு தாளம் இருக்கிறது என் பதை அடிக்கடி சொல்வார்.

> ''எப்பப்ப நீங்க ஜாமீன்ல வெளிய வர்றீங்களோ அப்ப எல்லாம் உங்க மேல புது கேஸ் போட்டு அரெஸ்ட் பண்ணச் சொல்லி மேலிடத்து உத்தரவு...!''
>
> - அவ்வை கே. சஞ்சீவிபாரதி

அவருடைய நினைவாற்றல், கிரஹிக்கும் சக்தி அபாரமானது. காட்சிக்கான வசனங் களை, மற்றவர்களைப் படிக்கச் சொல்லிக் கேட்டு மனப்பாடம் செய்து கொண்டு நடிப் பதில் அவரை விட வேறு யார் செய்ய முடியும்?

நடிக்கின்ற எந்தக் காட்சியிலும் உணர்ச்சி யின் உச்சத்தைத் தொடும் சிவாஜி, அடிக்கிற காட்சிகளில் பாசாங்கு செய்ய மாட்டார். பட் டையைக் கழற்றி விடுவார்.

'உயர்ந்த மனிதன்' உச்சகட்டக் காட்சியில், திருட்டுப் பழி சுமத்தப்பட்ட என்னை, பிரம் பால் அடிக்கும் காட்சியில் பிரம்பு நாலாய்த் தெறிக்கும் அளவுக்கு விளாசித் தள்ளி விட் டார்!

அவரைக் கட்டுப்படுத்த சௌகார் ஜானகி யும் பாரதியும் எவ்வளவோ முயன்று சட் டையை எல்லாம் கிழித்துக் கூச்சல் போட்ட னர்.

இன்றும் அந்தக் காட்சியைப் பார்த்து கலங்காதவர் இருக்க முடியாது.

ஜெமினியின் 'விளையாட்டுப் பிள்ளை' படத்தில், ஒரு காட்சியில் பத்மினி கன்னத்தில் ஓர் அறை விட்டார். காது தோடு கழன்று ஓடி, அடுத்த படப்பிடிப்பு தளத்தில் விழுந்து விட்டது.

'ஷாட்' முடிந்ததும், பத்மினி ஐந்து நிமிடம் அனுமதி பெற்று வெளியே போனார்.

போனவர் ஐந்து நிமிடம் உள்ளே வர வில்லை. என்ன நடந்தது என்று பார்க்க உதவி இயக்குநர் சென்றார். அந்தப் படப் பிடிப்புத் தளத்துக்குள் நாற்காலியில் உட்கார்ந்து, முகம்



சிவக்க, உதடுகள் துடிக்க, கண்களில் நீர் பெருக்கியவாறு இருந்தவரைப் பார்த்துப் பதறிப் போய் 'என்னம்மா'என்று கேட்டார்.

'ஒன்றுமில்லை. வலி தாங்க முடியவில்லை. முழுசா அழுதிட்டு வந்திடறேன். ஐந்து நிமிடம் பொறுத்துக்குங்க!' என்றாராம் பத்மினி!

படப்பிடிப்புக்கு உரிய நேரத்தில் வருவதில் அவர்தான் எங்களுக்கு முன்னுதாரணம். 'திருவருட்செல்வர்' படத்தில் அதிகாலை சூரியன் உதிக்கையில், அப்பரும், திருஞானசம்பந்தரும் பாடும் காட்சியைப் படமாக்க, இரவு 12 மணிக்கு, அப்பரின் வயதான தோற்றத்திற்கு ஒப்பனை செய்ய ஆரம்பித்து, மூன்று மணிக்கு முடித்து அதிகாலை நான்கு மணிக்கு கோவளம் கடற்கரைக்கு நேரே போய்விட்டார்.

'ராஜராஜசோழன்' – படப்பிடிப்பு. வாகஸ்டுடியோவில் தஞ்சை பெரிய கோயிலின், ஒரிஜினல் அளவில் 'செட்' போட்டிருந்தார்கள்.

அதிகாலை ஏழு மணிக்குப் படப்பிடிப்பு. சிவாஜி, ஒரு அடி உயரமுள்ள அலங்கார கொண்டையுடன், திருப்பாச்சி அரிவாள் மீசையுடன், ஆடை அலங்காரங்களுடன் படப்பிடிப்பு நடந்த இடத்துக்குக் கம்பீரமாக நடந்து வந்தார்.

நான், அவருக்கு அரை மணி நேரம் முன்னதாக 'ஸ்பாட்டு'க்குப் போயிருந்தேன். எனக்கு 'ஷாட்' வைத்து எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

சிவாஜிக்குக் கோபம், ஆத்திரம். 'என்னடா! நான் ரயில்ல வந்தா, நீ பிளேன்ல வர்றியா?' என்று என்னைப் பார்த்துக் கேட்டார்.

'நடிப்பிலதான் கிட்டவே நெருங்க முடியல. இந்த மாதிரி விஷயங்கள்லயாவது உங்களோட போட்டிப் போடலாம்னுதான்' என்றேன்.

உடனே கோபம் மறைந்து, ஹா... ஹா...ஹா... என்று சிரித்தவாறு, 'வா... வா, நல்லா முன்னுக்கு வா' என்றார்.

உண்மையில் அவர் சாப்பாட்டுப் பிரியர். அசைவம், காடை, கவுதாரி, புறா, சிக்கன் விரும்பிச் சாப்பிடுவார். ஒருநாள் என்னைப் பார்த்து, 'என்னடா சிவா! சைவமாயிட்டியாமே! எப்போதிலிருந்து?' என்று கேட்டார்.

'1988 ஜனவரி 1-ந் தேதியிலிருந்து' என்று சொன்னேன். எப்படிடா உன்னால முடியுது? நான் அசைவம் இல்லேன்னா செத்துப் போயிடுவேன்' என்றார்.

அப்படிப்பட்டவருக்கு, கடைசி நாட்களில், உடல்நலம் கருதி, வெறும் கஞ்சி மட்டுமே தரப்பட்டது.

'சிறு வயசில, நல்லா பசிச்சது. ஆனா சாப்பிட முடியலே. காரணம் வறுமை. நல்லா சம்பாதிச்சப்பவும் திருப்தியா சாப்பிட முடியலை. ஹீரோ உடம்பைக் காப்பாத்தணுமே, அதனால.

''இன்னிக்குத் தேவையான பணமும் இருக்கு. ஓய்வும் இருக்கு. ஆனாலும் சாப்பிட முடியலை. டாக்டர்கள் சாப்பிடக்கூடாதுன்னு சொல்லிட்டாங்க– என் நிலைமையைப் பார்த்தியா'' என்று சோகமாகச் சொன்னாராம். இன்றைக்கு அந்தக் கலைச் சூரியன் அஸ்தமனமாகி விட்டான்...

உலகில் எந்த ஒரு நடிகனும் ஒரே நாளில் மூன்று வித வேடங்கள் ஏற்று நடித்ததில்லை.

டென்காமெண்ட்மெண்ட்ஸ் - பென்ஹர், லாரன்ஸ் ஆஃப் அரேபியா, ஓமர்முக்தார், காந்தி - போன்ற எந்தப் படத்து ஹீரோவும் மூன்று ஆண்டுகள் ஐந்து ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் ஒரு படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டு அந்தப் படம் முடிந்த பின்னரே அடுத்த படம், வேடம் பற்றிச் சிந்திப்பார்கள்.

ஆனால் சிவாஜி, காலையில் ரிக்ஷாக்காரன் வேடம் போட்டு நரைத்த தாடியும், பரட்டைத் தலையும், கிழிந்த கோட்டுமாய் கைரிக்ஷா இழுத்து நடிப்பார். பிற்பகல் மகாவிஷ்ணு வேடம் போட்டு பாடல் காட்சியில் நடிப்பார். இரவு அந்த வேடத்தைக் கலைத்து விட்டு, பளபளப்பாக மின்னும் கோட்டும் சூட்டுமாக, 'சொர்க்கம்' படத்தில் நடிப்பார்... ஹாலிவுட்டில் எந்த நடிகரும் இப்படிச் செய்திருக்க வாய்ப்பு இல்லை.

பேராசை பிடித்த, அந்தக் கலைஞன், சிங்கமாய்க் கலையுலகில் உலவியவன், lions share என்று சொல்வது போல இரையின் பெரும்பங்கை எடுத்துக் கொண்டு, எல்லா விதமான வேடங்களையும் தானே போட்டு நடித்து விட்டான். அடுத்த தலைமுறைகளுக்குக் குறிப்பிட்டுச் சொல்ல எந்த வேடங்களையும் அவர் விட்டு வைக்கவில்லை.

நாங்கள் எந்த வேடம் போட்டு நடித்தாலும், அவர் நடித்த, அந்த வேடங்களைத் தாங்கிய படங்களை முன்மாதிரியாக ஒருமுறை பார்த்துக் கொள்கிறோம்.

அந்த யுககலைஞன் ஹாலிவுட்டில் பிறக்காதது அவரது துரதிர்ஷ்டம். தமிழ்நாட்டில் பிறந்தது நம் அதிர்ஷ்டம். ○

எம்.எல்.ஏ பதவியைத் தூக்கி எறியத் தயார்!

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பா.ம.க. சேர்வது குறித்து திருமாவளவனிடம் கேட்டோம்.

"பா.ம.க.வுக்கு ஈடான சந்தர்ப்ப வாதத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் வாஜ்பாய்! தமிழகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளர்களை, குறிப்பாக தி.மு.க. மற்றும் எங்கள் இயக்கத்தினரைத் தோற்கடிக்க கடுமையாகப் பாடுபட்ட கட்சி பா.ம.க. ஆனால் அதையும் மீறி ஒன்றுபட்ட தென்னாற்காடு மாவட்டத்தில் ஐந்து இடங்களில் எங்கள்



கூட்டணி வெற்றி பெற்றது. பா.ம.க.வை தேசிய ஜனநாயகக் கூட்டணியில் சேர்க்கக் கூடாது என்பதைச் சொல்ல தமிழக பா.ஜ.க.வுக்குத் தைரியமில்லை. அதற்கு நாக்கிருக்கிறது. ஆனால் வாய் இல்லை.

"எங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள்மீது வன்முறையை ஏவாமல், அவர்களது குடிசைகளைக் கொளுத்தாமலிருப்பதாக உத்திரவாதம் தருவாரா டாக்டர் ராமதாஸ்? அது அவரால் முடியாது. எனவே தான் சொல்கிறோம். பா.ம.க. இருக்கும் அணியில் நாங்கள் இருக்க முடியாது.

"உண்மையில் சொல்லப் போனால் நாங்கள், தேசிய தே.ஜ.கூ.யில் இல்லை. நாங்கள் தி.மு.க.வின் தோழமை கட்சிதான். பா.ம.க.வைத் தே.ஜ.கூ.யில் உடனடியாக சேர்க்க வேண்டிய அவசியம் நிச்சயம் கலைஞருக்கு இல்லை.

"பா.ம.க.வையும் தே.ஜ. கூட்டணியில் சேர்த்துக் கொண்டால், சட்டமன்றத்தில் அ.தி.மு.க.வை எதிர்த்துப் போராட வலுவான அணி உருவாகும் என்ற வாதத்தை என்னால் ஏற்க முடியாது. இப்போது அ.தி.மு.க.வை எதிர்த்து வெளியில் வந்து விட்ட பா.ம.க. இனி சில காலம் (?) அ.தி.மு.க.வில் சேர முடியாது. இந்த நிலையில் சட்டமன்றத்தில், அது விரும்புகிறதோ இல்லையோ, ஆளும் கட்சியை எதிர்த்துத் தான் செயல்பட்டாக வேண்டும். எனவே, தி.மு.க. அணியில் இணைந்தால்தான் ஜெயலலிதாவுக்கு எதிராக போராட ஒரு அணி உருவாகும் என்பது சரியல்ல.

"கலைஞர் எங்கள் சட்டையை எடுத்துக் கொண்டார். வேட்டியையும் உருவி விடுவார்' என்று சொன்னவர்தான் ராமதாஸ். இன்று எந்த முகத்துடன் தி.மு.க. கதவைத் தட்டுகிறார்.

"நாங்கள் முழு மூச்சுடன் எதிர்த்தும் பா.ம.க. தமிழக தே.ஜ. கூட்டணியில் வந்தால் நீங்கள் அ.தி.மு.க. அணிக்குச் சென்று விடுவீர்களா? என்று கேட்கிறார்கள். எங்களுக்கு அ.தி.மு.க. மீது எந்த ஈடுபாடும் கிடையாது. கடந்த இரண்டு மாத கால ஜெயலலிதா ஆட்சி, மக்கள் விரோத ஆட்சி என்பதில் எங்களுக்குச் சந்தேகமில்லை. அதை எதிர்த்துப் போராடுவதில் தி.மு.க.வுக்கு முழுவேகத்துடன் தோள் கொடுக்க எங்கள் அமைப்பு தயாராக இருக்கிறது.

"எங்கள் விருப்பத்துக்கு மாறாக மூத்த தலைவரான கலைஞர் எந்த முடிவையும் எடுக்க மாட்டார் என்று நம்புகிறோம். அப்படி ஏதேனும் நடந்தால் எங்கள் இயக்கத்தினருடன் கலந்து பேசி எங்கள் முடிவை அறிவிப்போம். உதயசூரியன் சின்னத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்பதற்காக எங்கள் மக்களுக்கு விரோதான முடிவுகளை ஏற்றுக் கொள்ள முடியாது. எங்கள் முடிவுக்கு எம்.எல்.ஏ. பதவி ஒரு தடையாக இருக்கும் பட்சத்தில் அதைத் தூக்கி எறியவும் தயங்கமாட்டேன்." ஒரே மூச்சில் சொல்லி முடித்தார் திருமாவளவன்.

சந்திப்பு : **கௌசி**

படம் : **ராஜன்**

அதிசயங்கள் நிகழ்த்தும் அற்புத மருத்துவர்

கர்ப்பப்பை ஆபரேஷன் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றாச்சு!



வயிற்று வலிக்காக சென்னையில் உள்ள ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் 3 ஆண்டு வைத்தியம் பார்த்தபின் கர்ப்பப்பையை எடுத்துவிடச் சொன்னார்கள். ரப்பானி வைத்தியசாலாவில் 3 மாதம் மருந்து சாப்பிட்டதில் சரியாப் போச்சு. கர்ப்பப்பையை எடுக்க தேவையில்லை என்று அதே ஆஸ்பத்திரியில் சொல்லிவிட்டார்கள் என்கிறார் போரூர், அண்ணாசாலையைச் சேர்ந்த கோவிந்தராஜின் மனைவி **G.** செல்வி.


அறுவை சிகிச்சை இல்லாமலேயே இதய நோய் குணமான அதிசயம்!

முத்திரியாபேகம், அந்தோனி பிள்ளை தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை – 59.




எனக்கு இதயத்தில் அடைப்பும் வலியும் அடிக்கடி வந்ததால் நான் சில ஆண்டுகளாக மயக்கம் மற்றும் உடல்பலவீனத்தால் அவதியுற்றேன். இதனால் சென்னையில் உள்ள ஒரு பிரபல மருத்துவ மனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். ஆனால் அங்கு என்னை சோதனை செய்து என் இதயத்தில் ஒரு மேஜர் ஆப்பரேசன் செய்ய வேண்டும் என்று கூறிவிட்டார்கள். இதனால் என் மனம் மிகவும் வேதனைப்பட்டு சில நண்பர்கள் மூலம் **ரப்பானி வைத்யசாலா** சென்றேன். இங்கு எனக்கு நல்ல சிகிச்சை கிடைத்ததின் மூலம் என் நோய் படிப்படியாக இப்போது குறைந்துவிட்டது. நான் இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

மலட்டுத் தன்மை என்பதே இல்லாமல் போச்சு!



குழந்தை இல்லை என்று நாங்கள் ஏறாத ஆஸ்பத்திரி வாசல்கள் இல்லை. பிறகு பலரின் ஆலோசனையைக் கேட்டு ரப்பானி வைத்தியசாலாவிற்கு வந்து தொடர்ந்து மருந்து சாப்பிட்டதில் குழந்தை பெற்று தனது மன மகிழ்ச்சியை அனைவருக்கும் தெரிவிக்கின்றனர். சென்னை தேனாம்பேட்டையைச் சேர்ந்த ஜெயசங்கர்–மாரியம்மாள் தம்பதி.

பக்கவாத நோய் பளிச்சென்று தீர்ந்தது!



பல ஆண்டுகளாக பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு செயலற்று இருந்த நான் ரப்பானி வைத்யசாலா **டாக்டர் ஹக்கீம் S.A. சையத் சத்தார்** அவர்களிடம் சிகிச்சை பெற்றபின் இரண்டே மாதங்களில் பூரண குணமடைந்தேன் என்று காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் தெருவில் வசிக்கும் திரு கே. கட்சீஸ்வரன் தெரிவிக்கிறார்.

மருந்தில்லை என்ற சோரியாஸிஸ் மாயமாய் மறைந்து போச்சு!



நான் கடந்த சில வருடங்களாக உடம்பில் அரிப்பு ஏற்பட்டு சோரியாசிஸ் என்ற நோயாலும், கடுமையான மூட்டு வலியாலும் பாதிக்கப்பட்டேன். பல சிகிச்சைகளும் எனக்கு பலன் தராமல் ரப்பானி வைத்தியசாலாவில் காண்பித்தேன். தொடர்ச்சியாக சில மாதங்கள் அங்கு பெற்ற சிகிச்சையின் பலனாக என் பிரச்சனைகள் அனைத்தும் தீர்ந்தது தெரிவிக்கிறார் திருமதி பத்மா ஸ்வாமிநாதன், ரெய்ன் ரிச் அபார்ட்மெண்ட்ஸ், மௌனசாமி மடம் தெரு, வெங்கடபுரம், சென்னை – 53.

மேலும் கை கால் வாதம், மூளை வளர்ச்சி குறைவு, லிவர் பெயிலியர், மூலம், நரம்புத் தளர்ச்சி, ஆண்மைக் குறைவு, யானைக்கால் வியாதி, காக்காய் வலிப்பு போன்ற சகல வியாதிகளுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது.)

மாதந்தோறும்
Dr. சையத் சத்தாரின்
யுனானி மருத்துவ மாத
இதழ் கடைகளில் கேட்டு
வாங்குங்கள்

டாக்டர் ஹக்கீம் S.A. சையத் சத்தார்
ரப்பானி வைத்ய சாலா

73/1, டாக்டர் பெசன்ட் ரோடு,
மீர்சாகிப்பேட்டை மார்க்கெட் அருகில்,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.
போன்: 8510969, 8410874





ஆட்டம் கண்ட நம்பிக்கை!

'யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியாகூட தனியார் நிதிநிறுவனங்களைப் போல் நம்மை ஏமாற்றி விட்டதே!' என்று சிறு முதலீட்டாளர்கள் தலையில் கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தனைக்கும், சிறு முதலீட்டாளர்களின் பாதுகாப்புக்கென்றே துவங்கப்பட்ட நிறுவனம் தான் யூ.டி.ஐ என்னும் யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா. பங்குச் சந்தையின் பெரிய முதலைகளுடன் மோத முடியாதவர்கள் யூ.டி.ஐ பங்குகளான யூனிட்களை வாங்கலாம். அரசு அங்கீகரிக்கப்பட்ட அமைப்பான யூ.டி.ஐ. அந்தப் பணத்தைப் பங்குச் சந்தையில் கவனமாக முதலீடு செய்து, லாபம் சம்பாதித்து, யூனிட்கள் வாங்கியவர்களுக்கு வருடாந்தர டிவிடன்ட் அளித்துவிடும். 25 முதல் 28 சதவிகிதம் வரையிலான கணிசமான டிவிடன்ட் சென்ற 10 வருஷங்களில் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் 1964 இல் யூ.டி.ஐ தோற்றுவிக்கப்பட்டது முதல் இதுதான் நடந்து வந்தது. ஆனால் இந்த ஆண்டு டிவிடன்ட் தடாலென்று பத்து சதவிகிதமாகக் குறைந்து விட்டது.

இதற்கு என்ன காரணம் என்று பார்த்தால், இன்னொரு 'ஹர்ஷத் மேத்தா ரக' கோல்மால் வெளிப்பட்டு பயமுறுத்துகிறது.

சிறு முதலீட்டாளர்களின் முதலீட்டைக் கொண்டு திருப்தி அடையாமல் யூ.டி.ஐ. யுஎஸ்-64 என்ற திட்டத்தின் கீழ் யூனிட்களைப் பெரிய நிறுவனங்களுக்கு விற்க ஆரம்பித்தது. பெரிய நிறுவனங்களிடமிருந்து கூடுதல் பணம் பெற்றது போதாதென்று பாதுகாப்பற்ற பல நிறுவனங்களில் அந்தப் பணத்தை முதலீடும் செய்தது! இந்திய பங்குச் சந்தையில் ஏற்பட்ட சரிவானது அனேகமாக அனைத்து நிறுவனங்களையும் பாதிக்க, அந்தப் பாதிப்பின் எதிரொலி யூ.டி.ஐயிலும் உணரப்பட்டது.

முதலீடான மக்கள் பணம் போதுமான லாபத்தைப் பெற்றுத் தராது என்று புரிந்துபோனதும் பெரிய தொகைகளை முதலீடு செய்த நிறுவனங்கள் உஷாராகி விட்டன. தாங்கள் வாங்கிய யூனிட்டுகளை யூ.டி.ஐ.யிடமே திரும்ப விற்று நஷ்டப்படாமல் தப்பிவிட்டன!

விளைவு...? சிறு முதலீட்டாளர்களுக்கு நியாயமான டிவிடன்ட் வழங்கக்கூட யூ.டி.ஐ.யிடம் பணமில்லை. இதனால்தான் டிவிடன்ட் சதவிகிதமும் இவ்வாண்டு பாதிக்குப் பாதி குறைந்துவிட்டது.

அது மட்டுமல்ல, இன்னும் ஆறு மாத காலத்துக்குப் புதிய யூனிட்கள் விற்பதில்லை என்றும் விற்கப்பட்ட யூனிட்களைத் திரும்ப வாங்கிக் கொள்ளப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளது யூ.டி.ஐ.


சராசரி இந்திய முதலீட்டாளர் முகத்தில் இதைக் காட்டிலும் சுலபமாகக் கரி பூச முடியாது. டிவிடன்டும் குறைந்துபோய் யூனிட்களின் மதிப்பும் குறைந்துபோய் அவற்றை விற்கவும் முடியாமல் தவிக்கிறார்கள்.

பெரிய முதலீட்டாளர்கள் மட்டும் எப்படியோ விஷயத்தை முன்கூட்டியே அறிந்து தாங்கள் போட்ட பணத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டு விட்டார்கள்.

மிகுந்த போராட்டத்துக்குப் பிறகு, மூவாயிரம் யூனிட்கள் வரை வைத்துள்ளவர்களுக்குப் பணத்தைத் திருப்பித் தர ஒப்புக் கொண்டிருக்கிறது அரசு. ஆனால் இவர்களுக்கு யூனிட் ஒன்றுக்குப் பத்து ரூபாய்தான் கிடைக்கும். இதே யூனிட்கள் கடந்த ஏப்ரலில் ரூ.14.25 பெறுமானத்துக்கு விற்கப்பட்டன. ஆக, 3000 யூனிட்கள் வைத்துள்ளவர்களுக்குக் குறைந்த நஷ்டம் 4.25 x 3000 - அதாவது 12,750 ரூபாய்!

யூ.டி.ஐ தலைவர் சுப்ரமணியம் ராஜினாமா செய்தபின் அவர் வீட்டில் 'ரெய்ட்' நடத்தப்பட்டு கைதாகியிருக்கிறார். ஆனால், இந்த ஊழல் 1994லேயே முளைவிட்டது என்றும் இதில் பிள்ளையார் சுழி போட்டது ரிலையன்ஸ் நிறுவனம்தான் என்றும் அதிர்ச்சி தரும் செய்திகள் வெளியாகியுள்ளன. இப்போது அரசு எடுத்துள்ள நடவடிக்கை தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்கும் கதைதான் என்கிறார்கள்!

— வி.கோபாலன்


"டேய் இதுக்கெல்லாமாடா வக்கீல் நோட்டீஸ்?"
"பின்ன? நீங்க பூகோளம்னு அறுக்கிற அறுவை என் மூளையை எக்கச்சக்கமா பாதிக்குது. ஸோ கோர்ட்ல சந்திப்போம் சார்!"
"எங்க அண்ணன் தெஹல்கா. காம்ல வேலை செய்யறார்னு எத்தனை முறை சொன்னேன்...?"
"அதுக்கென்ன இப்ப?"
"நீங்க வேற எந்தெந்த பொண்ணுகளோட சுத்தறீங்கங்கிறத மைக்ரோ வீடியோல பாருங்க!"
நவீன்
ஹரிஸ்சந்திரா
கன்ஸல்டன்ட்ஸ்
இவ்விடம் பொய் வழக்குகள் ஜோடிக்க, போலி சாட்சியங்கள் தயாரிக்க சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.



"பையனுக்குப் பொண்ணைப் பிடிச்சுப் போயிருக்கு. மத்த விஷயங்கள் பேசப்போறோம்... இரண்டு தரப்பு பெரிய மனுஷங்க வந்தாச்சா? இரண்டு தரப்பு வீடியோ காமிராவும் ரெடியா? இரண்டு தரப்பு வக்கீல்களும் ஆஜரா?"



"எதுக்குதான் பொதுநல வழக்கு போடறதுன்னு இல்லையா..?"

"என்னாச்சு...?"

"ஆடிக்குப் புது மனைவிமாரெல்லாம் பிறந்த வீட்டுக்குப் போகக் கூடாதுன்னு பெட்டிஷன் போட்டிருக்கார் நோட்டீஸ் நாகராஜன்."

டேப் ரிகார்டர்: காசு மேல காசு வந்து...
நீதிபதி: என்னய்யா! சாட்சி சமர்ப்பிக்கறேன்னு கிண்டலா பண்றே...?
வக்கீல்: டேப் மாறிப்போச்சு! எதிர்க்கட்சிக்காரங்க செஞ்ச சதி!



அக்னிசர்மா பக்கம்
ஆகஸ்ட் 1 முதல் 7 வரை



மேஷம் : சுதாகரன் விவகாரத்தில் 'டேப்' கிளப்பிய அதிரடித் திருப்பம் போல, உங்கள் கிரக சஞ்சாரத்திலும் சுக்ரன், புதன், ராகு ஆகியோர் பல நல்ல திருப்பங்களை அளிக்கிறார்கள். இதனால் தொட்டதெல்லாம் துலங்கும். வெளி நாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும். தகவல் தொடர்புத் துறைக்காரங்களாயிருந்தால், யோகமான காலம். ஆனால், குரு பகவான், 3-ம் எண்ணில் மக்கர் செய்வதால், ஸ்பெகுலேஷன் துறைகளில் கையைச் சுட்டுக்குவீங்க... உஷார்!



ரிஷபம் : ரேஷன் கடைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் திறக்கப்படுவதற்குக் கிடைத்திருக்கும் ஏகோபித்த வரவேற்பு போல, உங்கள் எண்ணங்களுக்கும் திட்டங்களுக்கும் ராசிநாதனின் ஆசீர்வாதம் பரிபூரணமாகக் கிட்டும். அதை நூலாகப் பிடித்துக்கொண்டு, கோலாகலம் செஞ்சுட மாட்டீங்களா என்ன...? குடும்பத்தில் மகிழ்ச்சி, திருப்தியான பண நடமாட்டம், மாணவர்களுக்கு வெற்றி என சகலமும் சுபிட்சமான பலன்கள்தான். அதையும் மீறி சிறு சிறு சங்கடங்கள் தோன்றி உபத்திரவம் செய்தால், ராகு, கேது ப்ரீதி செய்து இரண்டு அரவங்களையும் அமைதிப்படுத்துக!



மிதுனம் : இளங்கோவனுக்கு அன்னை சோனியா காட்டிய பச்சைக் கொடி போல, சஞ்சாரம் செய்யும் மிஸ்டர் செவ்வாய், உங்களுக்கு க்ரீன் சிக்னல் கொடுத்து விட்டதால், நீங்கள் துணிச்சலாய் பல நல்ல விஷயங்களைச் செய்வீர்கள். நண்பர்கள், உறவினர்கள் 'நாங்க இருக்கோம்' என்பார்கள். பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்களுக்குப் பெயர் ப்ளஸ் ஆதாயம் என த்ரீ இன் ஒன் காலம். மாணவர்கள் மேல் படிப்புக்கு வெளிநாடு செல்ல சந்தர்ப்பம் வரும்.




கடகம் : யூ.டி.ஐ. பங்கு விற்பனை முடக்கம் போல, திடீரென்று முடக்கப்பட்டுக் கிடந்த உங்கள் திறமையும் திட்ட நுணுக்கங்களும், இனி மெள்ள மெள்ள சிறகடிக்கும். மனத்துக்கு இனிய சம்பவங்கள் நடக்கும். பெண்களுக்கு உற்சாகமான சூழ்நிலை நிலவும். எதிரிகள் அடங்கிப் போவார்கள். உழைப்பு வீண் போகாது. ஜென்ம ராசியில் சூரிய பகவான் கொஞ்சம் சூடாக இருப்பதால், உஷ்ண சம்பந்தமான நோய்கள் ஏற்படும். உஷார்! தீயப்பழக்கம், தீயவர்களின் தொடர்பு ஆகியவற்றுக்குச் சிறிதும் இடம் தரக் கூடாது. கவனம் தேவை.



சிம்மம் : மஞ்சள் வண்ணர் குருஜி, பதினொன்றாம் கட்டத்தில், சக்திமானாகத் திகழ்வதால் நீங்களும் சூப்பர்மேன் போல திறமையுடன் காரியங்கள் செய்து அசத்தலாம். பொருளாதார நிலையில் எக்கச்சக்க வளர்ச்சி இருக்கும். சட்டைப் பை, டம்பப் பை, பீரோ, பண அலமாரி, வங்கிக் கணக்கு எல்லாமே போஷாக்குக் காண்பிக்கும். 'வைட்டமின் ப' இருக்கும் போது குடும்பத்தில் உல்லாசத்துக்குக் கேட்கணுமா? சொந்தக் குரலில் பாடி அசத்தியிருக்கும் ஹ்ருத்திக்ரோஷன் போல, நீங்களும் சுபராகம் பாடி மகிழலாம்.



கன்னி : உள்ளாட்சித் தேர்தல் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தாலும், உங்களோட ராசியில் சூரியன் ஓயாமல் ஹெல்ப் லைன்ல வந்துக்கிட்டு இருப்பதால், உங்களுக்கு இது அம்சமான வாரம்தான். விளையாட்டு விநோதங்களில் சக்ஸஸ்! பண வரவோ எக்சல்! அதனால் நீங்க எப்பவுமே ஹேப்பி ப்ளஸ்... வியாபாரிகளுக்கு நல்ல வளர்ச்சி. கலைத் துறைக்காரங்களுக்கும் அமோகமான ராசி தரும். அரசு விவகாரங்கள் அனுகூலமாக இருக்கு.




துலாம் : குரு 9ல் இருக்காரு... சும்மா இருந்தாலும் பரவாயில்லை, உங்க ராசியை வேறே வாஞ்சையா பார்க்கறாரு... ராசி நாதன் மட்டுமென்ன? அவரும் 9ல் இருக்காரே! ஒண்ணுக்குள்ள ஒண்ணுன்னு ஆயிட்ட பிறகு, அதிர்ஷ்டம் போஸ்டில் வந்து சேராதா என்ன? மக்களால் பாக்கியம். மகப்பேறு உண்டாகும். தாய், தந்தை நலம் நன்றாகவே இருக்கும். பதவி உயர்வு வரும். 2ல் செவ்வாய், 8ல் சனி என்பதால், ஏதாவது பிரச்னை வாட்டி எடுக்கும்தான். கண்டுக்காதீங்க... தான தருமம் பண்ணி, கிரக வழிபாடு செஞ்சு வந்தாலே, மனசுல தெம்பு வந்துடும்.

நடக்குமென்பார்; நடக்கும்!



விருச்சிகம் : செவ்வாய் ராசி நாதன் ஜென்மராசியால் சின்ன தாய் ஒரு உலா வந்தாலே மதிப்பு, கௌரவம், அந்தஸ்து என பெரிய ஆளாயிடுவீங்க... இப்ப ரோலர் கோஸ்டர்லியே ஸ்பீடா ரவுண்டு அடிப்பதால், வெற்றிவாகை சூடும் நாள் வந்தாச்சு... எடுத்த காரியங்களில் திறமையுடன் ஈடுபட்டு 'நம்பர் ஒன்' ரேங்க் கிடைக்கும். எதிரிகள் 'சலாம்' போட்டு விலகிக் கொள்வார்கள். கணவன் – மனைவிக்குள்ள லேசாய் 'கசமுசா' உண்டாகலாம். லாவகமாக சமாளியுங்க. விட்டுக் கொடுத்துப் போனா விவகாரம், அந்த அளவுக்குக் காரமா போகாது.



தனுசு : பிரிந்துப் போன மைக்கேல் ஜாக்ஸன் சகோதரர்கள் மீண்டும் இணைந்து இசை நிகழ்ச்சி நடத்தவிருப்பது போல, ராசி அதிருப்தி குரு 7ல் நிற்க, கூடவே எல்லா கிரகங்களும் ஒற்றுமை கீதம் முழங்குவதால், உங்களுக்குப் பல நிலைகளிலும் ஏறுமுகம்தான். பணவரவு விசிலடிக்கச் சொல்லும். உறவினர்கள் தாங்கோ தாங்கு என தாங்குவார்கள். குடும்பத்தில் சுப காரியம் நடக்கும். பச்சை மாவிலைத் தோரணம் தயார் பண்ணிக்குங்க.



மகரம் : 'டூ வீலரில் செல்லும் போது செல்ஃபோனில் பேசத் தடை' என்று வேண்டுமானால் தடை போடலாமே தவிர, உங்க வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் எப்படிங்க தடை போட முடியும்? ஏன்னா, காலம் அந்த அளவுக்குக் கனிஞ்சு வந்திருக்கு. எதிரிகளே வலிய வந்து, முஷ்ரப் போல கைக்குலுக்கி, விருந்து சாப்பிட்டுப் போவாங்க. கலைத் துறைக்காரங்களுக்குக் கிளாமர் கூடும். பெண்களுக்கு உற்சாகமான வாரம். கூட்டுத் தொழில் தன லாபம் கொட்டும். பணம், கொடுக்கல் வகையறாவில் ஏமாற்றப்படலாம்.



கும்பம் : என்னடா எடுத்த எடுப்புலியே புதன் 5ல் இருக்காரேன்னு ஆயாசப்படாதீங்க. ஐந்தில் இருந்தாலும் அவர் ஆட்சியாக இருப்பதால், நலம் புரிவார். அருள் தருவார். அரசு விவகாரங்கள் அனுகூலமாகும். குடிநீர்ப் பஞ்சத்தைக் கண்டு கொள்ளாத முதல்வர் போல, நீங்களும் எதிர்ப்புகளைக் கண்டுக்காதீங்க. மனை, நிலம், ரியல் எஸ்டேட், வாகனம் வகைகளில் லாபம் கொழிக்கும். பெண்களுக்கு எல்லா நாளுமே இனிய நாள்தான்.



மீனம் : நீங்க ஏதாவது திட்டம் போடுங்க. அது எவ்வளவு 'காமா சோமா'னு இருந்தாலும், சூப்பரா வர்க்-அவுட் ஆகுதா இல்லியானு பாருங்க. ஏன்னா, புதன், சுக்ரன், சனி, கேது நாலு பேரும் நல்ல திருப்தியான நிலையில் திரிஞ்சுக்கிட்டு இருக்காங்க. மாணவர்கள் நிலை உயரப் பெறும். விற்பனைப் பிரதிநிதிகள், தரகர்கள், கமிஷன் ஏஜெண்ட்டுகள் அனுகூலம் அடைவார்கள். வாகன இனம் லாபம் காட்டும். 'ஜெ' தானமா கொடுத்திருக்கிற யானையைப் பார்க்க குருவாயூர்ல அலை மோதுற கூட்டம் மாதிரி, உங்க வாழ்க்கையிலும் சாதனை அலைகள் சந்தோஷமாய் மோதப் போகுது.... காத்துன்ன போதே...



விருச்சிக ராசிக்காரரான 'கிருஷ்ணதாசி' சுஜாவுக்கு நம்பர் ஒன் ரேங் கிடைக்குமாம்!

படம் : ஜரிஸ்

மாறனுக்குத் தூது விடும் போலீஸ் அதிகாரிகள்!



● கலைஞர் கைது தொடர்பாக நடந்த சம்பவங்கள் பற்றி விசாரிப்பதற்குத் தமிழக அரசு ராமன் கமிஷனை நியமித்திருந்தாலும் அதன் அறிக்கையை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்காமல், சில போலீஸ் அதிகாரிகள் மீது நேரடி நடவடிக்கை எடுக்க மத்திய அரசு தயாராகி வருகிறது. அந்தச் சமயத்தில் கொஞ்சம் 'திறமையாக'ச் செயல்பட்ட அதிகாரிகள் வடகிழக்கு மற்றும் காஷ்மீர் பகுதிகளுக்குச் சட்டம் - ஒழுங்கைக் காக்க அனுப்பி வைக்கப்படுவார்களாம். முதல் கட்டமாக கமிஷனர் முத்துக்கருப்பன் மாற்றப்பட்டிருக்கிறார். இது போன்ற ஒரு நடவடிக்கை வருவதை மோப்பம் பிடித்த அதிகாரிகள் மத்திய அமைச்சர் மாறனுக்குத் தூது விட்டிருக்கிறார்களாம்.

● 1991-96 கால கட்டத்தில் சட்டமன்றத்தில் ஜெயலலிதாவுக்கு ஆதரவாகச் செயல்பட்ட உறுப்பினர்களுக்கு செல்லமாக 'ஜெ. காங்கிரஸ்' என்று பெயரிட்டு அழைத்தார்கள். அது போன்ற ஜெ. காங்கிரஸ் குழு இப்போதும் உருவாகிவிட்டது. ஏழு உறுப்பினர்கள் கொண்ட காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களில் போளூர் வரதன் மற்றும் யசோதா ஆகிய இருவரும் 'ஜெ.காங்கிரஸ்' என்று செல்லமாக அழைக்கப்படுகிறார்கள். இந்த இருவருக்கும் அரசு மட்டத்தில் எல்லா காரியங்களும் சுமுகமாகவும், சுலபமாகவும் நிறைவேற வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா எழுதப்படாத உத்தரவுகளை அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறாராம்.

● த.மா.கா தடுமாற்றத்தில் இருக்கிறது. புதிய நிர்வாகிகள் போடப்படுவார்கள் என்று சொல்லி ஒரு மாதம் ஆகியும் யாருக்கும் போஸ்டிங் போடப்படவில்லை. கடுமையான போட்டிதான் இதற்குக் காரணமாம். கோவிந்தவாசன்தான் தீர்மானிப்பார் என்று அவரை முற்றுகையிடுகிறார்கள் த.மா.கா பிரமுகர்கள். ஆனால் அவரோ என்னிடம் வராதீர்கள். "ஜி.ஆரைப் (ரங்கசாமி மூப்பனார்) பாருங்கள்" என்று துரத்தி விடுகிறாராம்... இந்த நிலையில் மூப்பனார், சிகிச்சைக்காக ஒரு மாத காலம் பெங்களூரில் தங்கியிருக்கப் போகிறாராம்.

● பா.ம.கவை உடைக்கும் வேலையில் அ.தி.மு.க தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. ஆளும் கட்சிக் கூட்டணியை விட்டு தே.ஜ.கூ.யில் கட்சி இணைந்ததில் பா.ம.க சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சற்று வருத்தம். அவர்கள் வருத்தத்திற்குக் காரணம். 'இனி அரசாங்க அலுவல்களில் தங்கள் சிபாரிசு எடுபடாது' என்பதுதானாம். "ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர்கூட நாங்கள் சொல்வதை இனி கேட்க மாட்டார்" என்று நம்மிடம் பகிர்ந்துகொண்டார் ஒரு எம்.எல்.ஏ. அவர்களது எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொண்ட ஆளும்கட்சி, அவர்களுக்கு வலை வீசுகிறதாம். வரும் பட்ஜெட் கூட்டத் தொடரில் பா.ம.க தலைமைக்கு அதிர்ச்சியளிக்கும்படியான சில விவகாரங்கள் நடக்கலாம் என்கிறார்கள்.

— **சஞ்சயன்**

படங்கள்: **சௌரா**

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



கல்கி
5.8.2001 கல்கி இதழுடன் இணைப்பு
வைரவிழா காணும் கல்கி
வெள்ளி விழா காணும்
சக்தி மசாலா
இணைந்து வழங்கும்
செட்டிநாடு சமையல்
குறிப்புகள்
ஆச்சி
கைமணம்!

"என்னதான் எண்ணெயும் வெண்ணெயும் கொட்டிச் சமைச்சாலும் கமகமன்னு ருசியாவே இருக்க மாட்டேங்குதே!" என்ற புலம்பல் உங்கள் வீட்டில் கேட்கிறதா..?



• ரேவதி ஷண்முகம்

கவலைப்படாதீங்க.

உங்களுக்குக் கரண்டி நீட்டி உதவவே, நாங்க திருமதி. ரேவதி ஷண்முகத்தை அழைத்து வந்திருக்கோம்.

ரேவதி ஷண்முகம் 'மங்கையர் சாய்ஸ்' டீ.வி. நிகழ்ச்சியின் குக்கரி க்வீன்... 'ஷ்ருஷ்டி கேட்டரிங் சர்வீஸ்' நடத்தி வருபவர். கவிஞர் கண்ணதாசனின் மகள்.

"கல்யாணமான புதுசுல எனக்குச் சமையலில் ஆனா ஆவன்னாகூட தெரியாது. புகுந்த வீட்டிலேயோ என் மாமனார், கணவர் எல்லாருமே வக்கணையா ரசிச்சு சாப்பிடறவங்க. முதலில் வேண்டா வெறுப்பாகத்தான் சமைக்க ஆரம்பிச்சேன். என்னோட சமையலை எல்லாரும் புகழ்ந்து பாராட்டவே, நாளடைவில் எனக்கே தனி

மணக்க மணக்க சமையல் இருந்தா மனசு முழுக்க

ஆர்வம் வந்துடுச்சு. வெரைட்டியா சமைக்க ஆரம்பிச்சேன். அக்கம்பக்கத்துல இருந்து 'எப்படி செய்யறீங்க'ன்னு விசாரிப்புகள் வந்தன. அப்படியே உறவுக்காரங்க வீட்டுக்குப் 'பார்ட்டி ஆர்டர்ஸ்' கிடைக்கவும், கேட்டரிங் சர்வீஸ் ஆரம்பிச்சுட்டேன்'' என்கிறார் ரேவதி.

'கல்கி' இலவச இணைப்புக்காக, ரேவதி ஷண்முகத்திடமிருந்து திரட்டி, புரட்டி, சுட்டுக் கொண்டு வந்த சில செட்டி நாடு அயிட்டங்களின் ரெசிபிகள்... இதோ.



இனிப்பிலிருந்து ஆரம்பிப்போமா?

கவுனி அரிசி

என்னெல்லாம் தேவை?

கவுனி அரிசி : 2 ஆழாக்கு
சர்க்கரை : ருசிக்கேற்ப
முற்றிய தேங்காய் : 1 மூடி
நெய் : 3 டேபிள் ஸ்பூன்

எப்படித் தயாரிப்பது?

கவுனி அரிசியைக் கழுவி, ஐந்து தம்ளர் தண்ணீரில் சுமார் ஒரு மணிநேரம் ஊற வைக்கவும். பின்னர், அந்தத் தண்ணீருடனேயே, கவுனி அரிசியை, குக்கரில் வைத்து மூடி., அடுப்பில் வைக்கவும். இரண்டு விஸில் வந்ததும், தீயைக் குறைத்து ஐந்து நிமிடம் முதல் பத்து நிமிடம் வரை, ஸிம்மில் வைத்திருந்து இறக்கவும். ப்ரெஷர் அடங்கியதும், குக்கரைத் திறந்து, சர்க்கரை, நெய், துருவிய தேங்காய் சேர்த்து, சூடாகப் பரிமாறவும்.



✱ செட்டிநாட்டில் நடக்கும், எந்தவொரு விசேஷத்திலும் கவுனி அரிசிக்குத்தான் கிரீடம்.

✱ கவுனி அரிசி கடைகளில் கிடைக்கும். (புட்டரிசி அல்ல). கருஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். விலை அதிகம்தான். சுவை? அதற்கு

வாழ்க்கைன்னா நவரசம் வேணும்! நல்ல ரசம்

எவ்வளவு வேண்டுமானாலும் தரலாமே.

✱ சர்க்கரைச் சேர்க்கும்பொழுது, சற்று அதிகமாகவே இருக்கட்டும். நேரமாக ஆக, சர்க்கரையை இழுத்துக் கொள்வதால், தித்திப்பு சற்று குறையும்.



சூப்பி

பெயர் என்னவோ போல் இருந்தாலும், செட்டி நாட்டின் ஹை கிளாஸ் சூப் இது.

என்னென்லாம் தேவை?

துவரம்பருப்பு வேக வைத்த நீர் : 2 தம்ளர்
வெங்காயம் : 1
தக்காளி : 1
ப. மிளகாய் : 2
பட்டை : 1 துண்டு
பிரியாணி இலை : 1
எண்ணெய் : தாளிக்க
பால் : ¼ தம்ளர்

பூண்டு : 2 பல்
உப்பு : தேவையான அளவு



எப்படித் தயாரிப்பது?

தக்காளி, வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். பச்சை மிளகாயை இரண்டாகக் கீறவும்.

குக்கரில் எண்ணெயைக் காய வைத்து, பட்டை, இலை தாளித்து, வெங்காயம், பச்சை மிளகாய், தக்காளி சேர்த்து சிறிது வதக்கி, பருப்பு நீர், உப்பு சேர்த்து குக்கரை மூடி அடுப்பில் வைக்கவும்.

ஒரு விஸில் வந்ததும், கொதி நிலையிலேயே பூண்டு தட்டிப் போட்டு, குக்கரை மூடி வைக்கவும். இறுதியில் பாலைச் சேர்த்து, கலந்து, வடிகட்டிப்

ஓட்டல் பிரியாணி மாதிரியே

பரிமாறவும்.

* இதில் கண்டைக்காய், பீன்ஸ், காலிஃப்ளவர் போன்ற காய்கறிகளைச் சேர்த்தும் செய்யலாம்.

மாங்காய் வற்றல் ரசம்

மாங்காய் சீசனில், உப்புக் கண்டம் போட்டு வெயிலில் இட்டு, சுத்தமான பாட்டிலில் வைத்துக் கொண்டால், தேவைப்பட்டபோது, மணக்கும் மாங்காய் ரசம் தயாரிக்கலாம்.

என்னென்லாம் தேவை?

துவரம்பருப்பு : ¼ கோப்பை

மாங்காய் வற்றல் : 6

வெங்காயம் : 1

தக்காளி : 1

புளி : சிறிய துண்டு

மிளகு : ½ தேக்கரண்டி.

சீரகம் : ½ தேக்கரண்டி.



பூண்டு : 6 பல்
காய்ந்த மிளகாய் : 2
மஞ்சள் தூள் : ¼ தேக்கரண்டி
உப்பு : தேவைக்கு



எண்ணெய் :
2 தேக்கரண்டி
கடுகு : ½ தேக்கரண்டி
வெந்தயம் : ¼ தேக்கரண்டி
கறிவேப்பிலை, கொத்த மல்லி தழை : சிறிது

எப்படித் தயாரிப்பது?

துவரம் பருப்பைக் குழையாமல், மலர வேக வைக்கவும். மாங்காய் வற்றலை, ½ தம்ளர் கொதிக்கும் நீரில், ஐந்து நிமிடம் ஊற வைக்கவும். வெங்காயம், தக்காளியைப்

பொடியாக நறுக்கவும். புளியை ½ தம்ளர் தண்ணீரில் கரைத்து வடிகட்டவும்.

மிளகு, சீரகத்தை ஒன்றிரண்டாகப் பொடித்து, பூண்டைத் தட்டிக் கொள்ளவும்.


இரண்டு தம்ளர் தண்ணீர்விட்டு, பருப்பு, வெங்காயம், தக்காளி, மாங்காய் வற்றல் சேர்த்து வேக விடவும். வெங்காயம் வெந்ததும், புளித் தண்ணீரை ஊற்றி, பச்சை வாசனை போக கொதிக்க விடவும். (சிறு தீயிலேயே வைத்து கொதிக்க விடவும்)



ஒரு கடாயில் எண்ணெய் விட்டு, காயவைத்து, கடுகு, வெந்தயம் தாளித்து, காய்ந்த மிளகாய் கிள்ளிச் சேர்த்து, கடைசியில் பொடித்த மிளகு, சீரகம், தட்டிய பூண்டு, கறிவேப்பிலை சேர்த்து, சிறிது வறுத்து ரசத்தில் சேர்க்கவும்.

கடைசியில் கொத்தமல்லி தழை சேர்த்து, சூடாகப் பரிமாறவும்.

* மாங்காய் வற்றலில் உப்பு ஏற்கெனவே இருப்பதால், உப்பு சேர்க்கும்பொழுது பார்த்து சேர்க்கவும்.
* புளிப்பான மாங்காயாக இருந்தால், புளியைக் குறைத்துக் கொள்ளவும்.



வாழைத் தண்டு கூட்டு


இதன் இன்னொரு பெயர் இளமைக் கூட்டு! வாழைத் தண்டு போல உடலைத் தளதளவென வைத்திருக்குமே.

என்னெல்லாம் தேவை?

வாழைத் தண்டு : 1
பாசிப்பருப்பு : ½ கப்
வெங்காயம் : 1
பச்சைமிளகாய் : 3


அசைவ உணவுகளுக்கும்

உப்பு : ருசிக்கு
சீரகம் : ½ தேக்கரண்டி
கறிவேப்பிலை : சிறிது
நெய் : 2 தேக்கரண்டி
பால் : 2 டேபிள் கரண்டி



எப்படித் தயாரிப்பது?

வாழைத் தண்டை நார் நீக்கி, பொடியாக நறுக்கி, மோர் கலந்த நீரில் போட்டு வைக்கவும்.



பாசிப் பருப்பை மலர வேக விடவும். வெந்த பருப்பில் வாழைத் தண்டு, பொடியாக நறுக்கிய வெங்காயம், இரண்டாகக் கீறிய பச்சை மிளகாய், உப்பு சேர்த்து வேக விடவும். கடைசியில், சீரகத்தைக் கையால் தேய்த்து, பால் சேர்த்து, கறிவேப்பிலைக் கிள்ளிப் போடவும். பரிமாறும் முன்பு, மறக்காமல் நெய் ஊற்றிக் கலந்து விடவும்.


* **பருப்பு வேகும்போது, இதற்கு மஞ்சள் தூள் சேர்ப்பதில்லை.**
* **முற்றாத வாழைத்தண்டு, மேலும் சுவை சேர்க்கும்.**

சுண்டைக்காய் பச்சடி

சுண்டைக்காய் சமாசாரமென்றாலும், மிகவும் சுவையான அயிட்டம். இதற்காகவே பல செட்டிநாடு வீடுகளில் சுண்டைக்காய்ச் செடி வளர்ப்பார்கள்.

என்னெல்லாம் தேவை?

துவரம்பருப்பு : ½ கப்
சுண்டைக்காய் : 1 கப்
வெங்காயம் : 1



தக்காளி : 1
பச்சை மிளகாய் : 4
புளி : சிறிய துண்டு
எண்ணெய் : 2 மேஜைக் கரண்டி
கடுகு : ½ தேக்கரண்டி
உளுந்து : ½ தேக்கரண்டி
சோம்பு : ¼ தேக்கரண்டி
மஞ்சள் தூள் : 1 சிட்டிகை
உப்பு : தேவையான அளவு

எப்படித் தயாரிப்பது?

சுண்டைக்காய்களை இரண்டாக நறுக்கி, தண்ணீரில் போட்டு வைக்கவும். இல்லாவிட்டால் கறுத்து, பச்சடியின் நிறமே மாறி விடும்.



துவரம்பருப்பை, மஞ்சள்தூள் சேர்த்து மலர வேக விடவும். வெங்காயம், தக்காளி பொடியாக நறுக்கி, பச்சை மிளகாயை இரண்டாகக் கீறவும்.

புளியைச் சிறிது தண்ணீரில் கரைத்து வடிகட்டவும். எண்ணெய் காய வைத்து, கடுகு, உளுந்து, சோம்பு, தாளித்து வெங்காயம் பச்சைமிளகாய் வதக்கவும்.

சுண்டைக்காயை வதக்கி, சேர்த்து, உப்பு, புளி நீர் விட்டுக் கொதிக்க விடவும். இறுதியாக துவரம் பருப்பு சேர்த்து, கலந்து பரிமாறவும்.


★ **சுண்டைக்காய், பிஞ்சாக இருக்க வேண்டும்.**

கீரை மண்டி

முளைக் கீரை, அரைக்கீரை, மணத்தக்காளி, அகத்திக்கீரை இவற்றில் ஏதாவது

மத்ததெல்லாம் இதுக்கப்புறந்தான். அடடா! மொறுமொறுன்னு என்ன ருசி!

ஒன்றைச் சேர்த்து செய்யலாம். 'மண்டி' இருந்தால் 'உண்டி' பெருக்கும் என்பது செட்டி நாட்டுப் உணவு மொழி. ஒரு வாய் கூட சாப்பிட செய்வதால் இப்படிச் சொல் கிறார்கள்.



என்னெல்லாம் தேவை?

கீரை : 1 கட்டு
சின்ன வெங்காயம் 10
பூண்டு : 10
பச்சை மிளகாய் : 3
அரிசி கழுவிய தண்ணீர் : 2 தம்ளர்
தேங்காய்ப் பால் : ½ தம்ளர்
கடுகு : ½ தேக்கரண்டி
வெந்தயம் : ¼ தேக்கரண்டி
காய்ந்த மிளகாய் : 2
எண்ணெய் : 2 தேக்கரண்டி

உப்பு : தேவையானது

எப்படித் தயாரிப்பது ?



கீரையைச் சுத்தம் செய்து, சற்று பெரிதாக நறுக்கவும். பூண்டு தோலுரித்து இரண்டாக நறுக்கவும். பச்சை மிளகாயை மூன்று, நான்கு துண்டுகளாக்கவும். எண்ணெய் காய வைத்து, கடுகு, வெந்தயம், காய்ந்த மிளகாய் தாளித்து, வெங்காயம், பச்சை மிளகாய், பூண்டு சேர்த்து வதக்கவும்.

சற்று வதங்கியதும், அரிசி கழுவிய தண்ணீர் சேர்த்துக் கொதிக்க விடவும். நீர் கொதிக்க ஆரம்பித்ததும் சுத்தம் செய்த கீரையை, தேவையான உப்பு சேர்த்து, சிறு தீயில் வேக விடவும்.

கீரை வெந்ததும் கடைசியில் தேங்காய்ப் பாலை ஊற்றி, கிளறவும்.


- **காய்ந்த மிளகாயைக் கிள்ளிப் போடாமல், முழுதாகவே பயன்படுத்த வேண்டும்.**
- **தேங்காய்ப் பாலை ஊற்றி, கொதிக்க விடக் கூடாது. திரிந்து விடும் என்பதால் கிளறிவிட்டு.**

இறக்கி வைத்தபின் விடவும்.

★ அரிசி கழுவிய நீர், தேங்காய்ப் பால் சேருவதால் வயிற்றுப் புண்ணை ஆற்றும். நல்ல சத்துணவும்கூட.

செட்டி நாடு அவியல்

செட்டி நாட்டு விருந்து என்றால், இந்த அவியல் கண்டிப்பாக இருக்கும். குருமா போல நல்ல மணமாக இருக்கும். இந்த அவியல் 'சைட் டிஷ்' ஆக இருந்தால், இட்லி, தோசை கணக்கில்லாமல் உள்ளே போகும்.



என்னென்லாம் தேவை?

கத்தரிக்காய் : 150 கிராம்
உருளைக்கிழங்கு : 2
வெங்காயம் : 1
தக்காளி : 1
தேங்காய் : 1 மூடி
பச்சைமிளகாய் : 5
பூண்டு : 3 பல்
சோம்பு : 1 தேக்கரண்டி

பொட்டுக்கடலை : 1 மேஜைக்கரண்டி

எண்ணெய் : 3 கரண்டி.

பட்டை : 1 துண்டு

உப்பு : ருசிக்கு

எப்படித் தயாரிப்பது?



கத்தரிக்காய், உருளைக் கிழங்கு, வெங்காயம், தக்காளி ஆகியவற்றைப் பொடியாக நறுக்கவும்.

தேங்காயைத் துருவி, அத்துடன் பச்சை மிளகாய், சோம்பு, பொட்டுக்கடலை, பூண்டு ஆகியவற்றை ஒன்றாக வைத்து, மைய அரைக்கவும்.

எண்ணெய் காய வைத்து, பட்டையைத் தாளித்து, வெங்காயம் சேர்த்து வதக்கவும். அதில் நறுக்கிய காய்கறிகளுடன், தக்காளி, தேவையான உப்பு சேர்த்து, காய்கறி வேகும் வரை சிறு தீயில் வைத்துக் கிளறவும்.


அரைத்து வைத்துள்ள மசாலாவை, நன்றாகக் கரைத்து ஊற்றி, கொதிக்கவிட்டு இறக்கவும். ருசியான அவியல் தயார்.

மிளகாய்த்தூள், மல்லித் தூள், மிளகுத்தூள், சீரகப் பொடி, சோம்புப் பொடி.

* பொட்டுக்கடலை சேர்ப்பதனால் சீக்கிரமே கெட்டியாகிவிடும். அதனால் தேவையான நீர் சேர்த்து, பார்த்து கொதிக்க விட வேண்டும்.

பலாக்காய் கோளா உருண்டை

பலாக்காய் சீஸன் வந்தால், செட்டி நாட்டு வீடுகளில் கோளா உருண்டை கமகமக்கும். விதை முற்றாத பிஞ்சு பலாக் காயாக தேர்வு செய்வதில்தான் இருக்குது ருசியின் ரகசியம்.



என்னென்லாம் தேவை?

பிஞ்சு பலாக்காய் : 1 (சிறியதாக)
உடைத்த கடலை : ¾ ஆழாக்கு
சின்ன வெங்காயம் : 6
பூண்டு : 6 பல்
பச்சை மிளகாய் : 3
காய்ந்த மிளகாய் : 3
தேங்காய் துருவல் : 2 மேஜைக்கரண்டி
சோம்பு : 1 தேக்கரண்டி

ஆத்துக்காரி ஊருக்குப் போனா என்ன? இதோ அவசரத் தேவைக்கு ரெடி.


பட்டை : 1 துண்டு

லவங்கம் : 2

கொத்துமல்லி தழை : சிறிது

உப்பு : ருசிக்கு

எண்ணெய் : பொரித்தெடுக்க



எப்படித் தயாரிப்பது?

பலாக்காயின் மேல் தோலை கனமாக சீவிவிட்டு, உள்ளிருக்கும் சதைப் பற்றான பகுதியைச் சிறு துண்டுகளாக்கவும். உப்பு நீர் சேர்த்து நன்கு வேகவிட்டு, நீரை வடித்து விடவும்.

உடைத்த கடலையை மிக்ஸியிலிட்டு நைஸ் பவுடராக்கவும். எண்ணெய், உப்பு நீங்கலாக மற்ற பொருட்களை ஒன்றாக அரைக்கவும்.

வேகவைத்த பலாக்காய் துண்டுகளையும் சேர்த்து அரைக்கவும். அரைத்த விழுதில் உடைத்த கடலை மாவு, தேவையான உப்பு சேர்த்து, பிசைந்து சிறு உருண்டைகளாக உருட்டி எண்ணெயிலிட்டு பொரித்தெடுக்கவும்.

★ பிசைந்த மாவு, சப்பாத்தி மாவு பதத்தில் இருக்க வேண்டும்.

சக்தி பருப்புப் பொடி, பூண்டுப் பொடி, கறிவேப்பிலைப் பொடி!

✱ எண்ணெய் புகைய காயக் கூடாது.

✱ எண்ணெயில் போடும்போது, உருண்டை உதிர்ந்தால், இன்னும் சிறிது உடைத்த கடலை மாவு சேர்க்கலாம்.

கார சட்னி

செட்டிநாட்டுக் காலை உணவு



வகைகள் சிறப்பாக அமைவதற்குக் கார ணமே கார சட்னியின் மணம், குணம், சுவைதான். அம்மியில் இழுத்து வைச்சு அரைக்கும் பக்குவம், மிக்ஸியில் வராது என்பது உண்மைதான்.

என்னென்லாம் தேவை?


சின்ன வெங்காயம் : 1 கிண்ணம்
தக்காளி : 1
புளி : 1 துண்டு
காய்ந்த மிளகாய் : 6 - 8 வரை
உப்பு : ருசிக்கு
எண்ணெய் : 2 கரண்டி
கடுகு : ¼ தேக்கரண்டி
உளுந்து : ½ தேக்கரண்டி
கறிவேப்பிலை : சிறிது

எப்படித் தயாரிப்பது?

சின்ன வெங்காயத்தைத் தோலுரித்துக்

கொண்டு, அதனுடன் தக்காளி, காய்ந்த மிளகாய், உப்பு, புளி, சேர்த்து நைஸாக அரைத்துக் கொள்ளவும்.

எண்ணெய் காயவைத்து, கடுகு, உளுந்து, கறிவேப்பிலை தாளித்து, சட்னியில் சேர்க்கவும். சோற்றில் பிசைந்தோ, இட்லி, தோசையுடன் சாப்பிடவோ, எச்சில் ஊற வைக்கும் சட்னி தயார்.



வெஜிடபிள் பொங்கல்

சாதா பொங்கலே சொக்க வைக்கும். வெஜிடபிள் பொங்கல்னா, ஆஹா, பாராட்டு நிச்சயம்! செஞ்சு அசத்துங்க!

என்னெல்லாம் தேவை?

பச்சரிசி : 1 ஆழாக்கு
பாசிப் பருப்பு : ½ ஆழாக்கு
காரட் : 1 (சிறியதாக)



பீன்ஸ் : 5
பட்டாணி : கைப்பிடி அளவு
வெங்காயம் : 1
தக்காளி : 1
பச்சைமிளகாய் : 2
இஞ்சி : 1 துண்டு
எண்ணெய் : 2 மேஜைக் கரண்டி
மிளகு : ½ தேக்கரண்டி
சீரகம் : ½ தேக்கரண்டி
பட்டை : 1 துண்டு
வெங்காயம்

நெய் : 2 மேஜைக் கரண்டி
முந்திரி : 10
உப்பு : ருசிக்கு
கறிவேப்பிலை : சிறிது

எப்படித் தயாரிப்பது?

அரிசியுடன், பாசிப் பருப்பு கலந்து கழுவி, 3 ½ தம்ளர் தண்ணீர் தேவையான

உப்பு, 1 சிட்டிகை சீரகம் சேர்த்து நன்கு வேக விடவும். வெந்த அரிசி, பருப்பை ஒரு கரண்டியால் நன்கு மசித்து கலந்து கொள்ளவும்.

காரட், பீன்ஸ், வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய், இஞ்சி ஆகியவற்றை மிகவும் பொடியாக நறுக்கவும். எண்ணெய் காய வைத்து, மிளகு, சீரகம், பட்டை, லவங்கம் தாளித்து, வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி, காய்கறிகள், முந்திரி ஆகியவற்றை நன்கு வதக்கவும். இந்தக் காய்கறிக்குத் தேவையான உப்பு மட்டும் காய்கறியுடன் சேர்க்கவும். காய்கறி வெந்ததும் கடைசியில் கறி வேப்பிலை, தக்காளி சேர்த்து இரண்டு நிமிடம் கிளறி, பொங்கலில் சேர்க்கவும். கடைசியில், நெய் ஊற்றி, மணக்க மணக்க பரிமாறவும்.



✱ இந்தப் பொங்கலுடன் தேங்காய் சட்னி, அவியல் சூப்பர் காம்பினேஷனாக அமையும்.

கந்தரப்பம்

'**க**ந்தரப்பம்' என்று பெயர் வைப்பதைவிட, 'சூப்பரப்பம்' என்று பெயர் சூட்டியிருக்கலாம். செட்டிநாடு உணவில் வெகு பிரசித்தி. அரைக்க

குழம்புக்கு சக்தி வத்தல் புளிக்குழம்பு பொடி!

சோம்பல் படாதீங்க. அருமையான டிஷ்ஷை மிஸ் பண்ணிடுவீங்க.



என்னெல்லாம் தேவை?

பச்சரிசி : 2 ஆழாக்கு

உளுந்து : ¼ ஆழாக்கு

கடலைப் பருப்பு : 1 மேஜைக்கரண்டி

பாசிப்பருப்பு : 1 மேஜைக்கரண்டி

வெந்தயம் : 1 மேஜைக்கரண்டி

வெல்லம் : 2 ½ ஆழாக்கு

தேங்காய் துருவல் : 4 மேஜைக்கரண்டி

ஏலக்காய் : 4

எண்ணெய் : பொரித்தெடுக்க

எப்படித் தயாரிப்பது?

அரிசி, பருப்பு, வெந்தயம் ஆகியவற்றை நன்றாகக் கலந்து, கழுவி, ஊற வைக்கவும்.

ஊறியதும், கிரைண்டரிலிட்டு, தேங்காய்த் துருவலுடன் சேர்த்து அரைக்கவும்.

வெல்லத்தைப் பொடித்துப் போட்டு, ¼ தம்ளர் தண்ணீர் சேர்த்து, வெல்லம் கரையும் வரை, கொதிக்கவிட்டு, இறக்கி வடிகட்டி, நன்கு ஆற வைக்கவும்.

மாவை எடுக்குமுன், அதில் ஏலக்காயை உரித்துப் போட்டு இரண்டு சுற்று சுற்றி, பின்னர் வெல்லத் தண்ணீரைச் சேர்த்து ஆட்டி எடுக்கவும்.



எண்ணெய் காய வைத்து, அரைத்து வைத்துள்ள மாவில் ஒரு கரண்டி எடுத்து நிதானமாக விடவும்.

சுற்றிலும் எண்ணெயைத் தூற்றிவிடவும். ஒரு பக்கம் வெந்ததும், மறுபுறம் திருப்பி விட்டு, சிவக்க வேகவிடவும்.

✱ **இந்த மாவை, முதல் நாளே ஆட்டி, பிரிஜ்ஜில் வைத்து, மறு நாள் சற்று முன்னாலேயே எடுத்து வெளியில் வைத்திருந்து, குளிர்ச்சி தணிந்ததும், பொரித்தெடுக்கலாம்.**

✱ **நிதானமான தீயில் மட்டுமே வேக விடவும். அவசரப்பட்டால், அப்பம் சரியாக வேகாது. சுவை**



மட்டுப்படும்.

குழிப் பணியாரம்

செட்டிநாட்டு விருந்தில் குழிப் பணியாரம் குதூகலம் தரும் உணவு வகை. பச்சரிசி, புழுங்கலரிசி எல்லாமே தரமாக இருந்தால் சுவை ஆஹா, ஓஹோதான்.

என்னென்ன தேவை:

பச்சரிசி - 2 ஆழாக்கு
புழுங்கலரிசி - 2 ஆழாக்கு
முழுஉளுந்து - 1 ஆழாக்கு
ஜவ்வரிசி - ½ ஆழாக்கு
வெந்தயம் - 1 தேக்கரண்டி
வெங்காயம் - 2
பச்சைமிளகாய் - 4
கறிவேப்பிலை - சிறிது
தேங்காய்த் துருவல் - 4 தேக்கரண்டி

சமைச்சதுக்குப் பிறகு சபாஷ் நிச்சயம்!


எண்ணெய் - 1 தேக்கரண்டி

கடுகு- ½ தேக்கரண்டி


உளுத்தம் பருப்பு - ½ தேக்கரண்டி

எப்படித் தயாரிப்பது?

அரிசி, உளுந்து, வெந்தயம் ஒன்றாகக் கலந்து கழுவி இரண்டு மணி நேரம் ஊற வைக்கவும். ஊறியதை கிரைண்டரில் நைஸாக அரைக்கவும். அரைக்கும் பொழுது ஜவ்வரிசியைப் பத்து நிமிடம் ஊற வைத்து அதனுடன் சேர்த்து நைஸாக அரைக்கவும். அரைத்த மாவை உப்பு சேர்த்துக் கரைத்து, ஐந்து அல்லது ஆறு மணி நேரம் புளிக்க வைக்கவும். வெங்காயம், பச்சைமிளகாய், கறிவேப்பிலை பொடியாக நறுக்கவும். எண்ணெயைக் காய வைத்து கடுகு, உளுந்து, தாளித்து வெங்காயம்,



சக்தி குழம்பு மிளகாய் பொடி!



பச்சை மிளகாய் கறிவேப்பிலை, ஒரு சிட்டிகை உப்பு சேர்த்து வதக்கவும். வதக்கியதை மாவில் சேர்க்கவும். துருவிய தேங்காயையும் சேர்க்கவும். நன்கு கலக்கவும். குழி பணியாரச் சட்டியைக் காய வைத்து, ஒவ்வொரு குழியிலும் சிறிது எண்ணெயைக் காய வைத்து மாவை குழிகளில் ஊற்றவும். ஒரு புறம் வெந்ததும் மறுபுறம் திருப்பி விட்டு வேக விட்டு எடுத்து, தேங்காய் சட்னியுடன் பரிமாறவும்.

- **அரைத்த மாவு, இட்லி மாவு பதத்தில் இருக்க வேண்டும்.**
- **மாவுக்குழிகளில் வழிய வழிய மாவு ஊற்றக் கூடாது. முக்கால் அளவு வரும்படி ஊற்றவும்.**

சீப்பு சீடை

மிகவும் ருசியான சமாசாரங்களில் இதுவும் ஒன்று. கொஞ்சம் 'நச்சு' பிடிச்ச

ஒன்...டு....த்ரீ... எடுத்துப் பிசைஞ்சு எண்ணெய்ல

வேலை. பொறுமையாகச் செய்தால் நாளெல்லாம் சுவைக்கலாமே!

என்னென்ன தேவை:



பச்சரிசி - 4 ஆழாக்கு
உளுந்து - 1 ஆழாக்கு
பாசிப்பருப்பு - ½ ஆழாக்கு
தேங்காய் (முற்றியது) - 1
உப்பு - தேவையான அளவு
எண்ணெய்- தேவையான அளவு
நெய் - 2 தேக்கரண்டி

எப்படித் தயாரிப்பது?

அரிசியைக் கழுவி வெயிலில் நன்கு காய வைக்கவும். உளுந்தையும், பாசி பருப்பையும் தனித்தனியாக சிறு தீயில் சிவக்காமல் (தொட்டால் சுருக்கென்று சுட வேண்டும்) வறுக்கவும். அரிசி, பருப்பு எல்லாம் ஒன்றாகக் கலந்து மிஷினில் கொடுத்து நைஸ் மாவாக அரைக்கவும். பின்னர் அதனைச் சலித்துக் கொள்ளவும். பாதியளவு மாவெடுத்து அதில் ஒரு தேக்கரண்டி நெய் சேர்த்து வைக்கவும். தேங்காயில் பாதி எடுத்து மிக்ஸியில் அடித்து பால் பிழிந்துக் கொள்ளவும். தண்ணீரும் பாலுமாக சுமார் மூன்று தம்ளர்

இருக்க வேண்டும். அதில் உப்பு சேர்த்து அடுப்பில் வைத்து சற்று சூடானதும் இறக்கி மாவில் சேர்த்து நன்கு சப்பாத்திமாவு பக்குவத்தில் பிசைந்துக் கொள்ளவும். (தண்ணீர் போதவில்லையென்றால் சிறிது தண்ணீரைச் சுட வைத்துச் சேர்க்கவும்.) சீப்பு சீடை கட்டையில் மாவு வைத்து நீளமாக ரிப்பன் போல பிழிந்து விடவும். கத்தியால் 2 அங்குல துண்டுகளாக வெட்டவும். வெட்டிய துண்டுகளை இரு முனைகளும் சேர ஒட்டவும். நிறைய செய்து வைத்துக் கொண்டு எண்ணெயைக் காய வைத்து எண்ணெய்க் கடாய் நிறைய போட்டுப் பொரித்தெடுக்கவும். (இது வேகும் பொழுது புரட்டி விட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அப்பொழுதுதான் இருபுறமும் நன்கு வேகும்.)

✱ செட்டியார் வீடுகளில் சீப்பு சீடைக் கட்டை இருக்கும். இது ரிப்பன் பக்கோடா அச்சு போல இருக்கும். ஒரு பக்கம் நேர் கோடாகவும், எதிர்ப்பக்கம் பல்லுபல்லாகவும் இருக்கும்.

ஆடி கும்மாயம்

ஆடி மாதம் வந்தாலே பண்டிகைகள் தொடராக வரும். இலை நுனிக்கு ஆடி கும்மாயம் அசத்தும் இனிப்பு ரகம்.

என்னென்ன தேவை:

முழு உளுந்து - 1 ஆழாக்கு
பச்சரிசி - 1 தேக்கரண்டி

தாய்மார்களே, மறந்துடாதீங்க! ருசியான

கருப்பட்டி (அ) வெல்லம் – 1½ ஆழாக்கு

நெய் – ¼ ஆழாக்கு

எப்படித் தயாரிப்பது?



உளுந்தையும், பச்சரியையும் தனித்தனியாக சிவக்க வறுக்கவும். வறுத்ததை நைஸாக, மாவாக, அரைக்கவும். கருப்பட்டி அல்லது வெல்லத்தை 1½ தம்ளர் தண்ணீரில் கரைத்து வடிகட்டவும். வடிகட்டிய வெல்லத் தண்ணீரில் மாவைக் கொட்டிக் கரைத்துக் கொள்ளவும். ஒரு கனமான பாத்திரத்தில் பாதியளவு நெய்யை விட்டு, சூடேறியதும் கரைத்து வைத்துள்ள மாவைக் கொட்டி சிறு தீயில் வைத்துக் கிளறவும். கிளறிக் கொண்டே மீதமுள்ள நெய்யைச் சிறிது சிறிதாக சேர்க்க, மாவு நன்கு வெந்து கையில் ஒட்டாமல் வரும் பக்குவத்தில் இறக்கவும்.

- **சிவக்க வறுக்கும்போது, சிறு தீயில், நிதானமாக வறுக்கவும்.**
- **கல் இயந்திரத்தில் திரித்தால் 'டேஸ்டே' தனிதான்!**

தொகுப்பு : **அனுராதா சேகர்**

படங்கள் : **யோகா**

சமையலுக்கு சக்தி மசாலா பொடிகள்!


Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2001 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka. Supplement to the Kalki issue Dated 5.8.2001

ஜெயச்சந்திரன் டெக்ஸ்டைல்ஸ்

வழங்கும்

GENUINE DISCOUNT SALE

ஆடிக் கழிவு



உண்மையான தள்ளுபடி விற்பனை

உயர்தர மில்களில் இருந்து தரமான துணிகளை மொத்தமாக கொள்முதல் செய்து உண்மையான தள்ளுபடி விலையில் விற்பனை செய்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பாலிஸ்டர் பூனம் சேலைகள் ரூ.41	ரெடிமேட் சர்ட்டுகள் ரூ.35
ஜென்ட்ஸ் பேண்ட்ஸ் ரூ.90	பிளவுஸ் பிட்டுகள் ரூ.7

பாலிகாட்டன் சேலைகள்	ரூ.85.00
சர்ட்டிங்குகள்	ரூ.12.00
சூட்டிங்குகள்	ரூ.48.00
டி.சர்ட்டுகள்	ரூ.45.00
வேஷ்டிகள்	ரூ.40.00
ஜென்ட்ஸ் ஜட்டிகள்	ரூ. 9.00
சுவர் கடிகாரங்கள்	ரூ.39.00
அலாரம் டைம்பீஸ்கள்	ரூ.25.00

Bata

LIBERTY

action



வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க உயர்ரக ஷூ மற்றும் பேஷன் காலணிகள் மாடியில் தனிப்பிரிவாக இயங்குகிறது.

காஞ்சிபுரம் முகூர்த்த பட்டுப்புடவை நியாயமான விலையில் கிடைக்கும்.

ஞாயிறு விற்பனை உண்டு.

ஜெயச்சந்திரன் டெக்ஸ்டைல்ஸ்

27, ரங்கநாதன் தெரு, (மாம்பலம் ரயில் நிலையம் அருகில்), தி.நகர், சென்னை - 600 017 ✆ 4339971, 4334660

• பட்டுப்புடவைகள் • அனைத்து முன்னணி மில்களின் சேலைகள் • சூட்டிங் • சர்ட்டிங் • ரெடிமேட் வகைகள்


வாங்கி
விட்டீர்களா?
சரவணா ஸ்டோர்ஸ்
வார இதழ்
தீபம், பெண்மலர்,
கதைமலர், சினிமா
மாத இதழ்கள்
சரவணா ஸ்டோர்ஸ்
வைரங்கள்-தங்க நகைகள்-பட்டுப் புடவைகள்-பாத்திரங்கள்-இனிப்பகம்
ரெங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை-17.